2. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ii) மொழிப் பிரச்சினையின் மீதான விவாதம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *பேரவைத் தலைவர் அவர்களே—*

" 1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தையும், அதைச் சார்ந்த தீர்மானத்தையும் இந்திய நாடாளு மன்றம் நிறைவேற்றியதின் விளைவாக இம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் நிலைமை குறித்து ஆய்வு செய்தல் வேண்டும் ".

என்ற தீர்மானத்தை அவைமுன் விவாதத்திற்கு வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *இந்தத் தீர்மானத்திற்குத் திருத்தத் தீர்மானங்கள் கொடுப்பவர்கள் இன்று பிற்பகல் ஒரு மணி வரை கொடுக்கலாம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந் தாலும், அந்தத் தீர்மானங்களே இப்பொழுதே பேரவையின் முன்னால் வைக்க உறுப்பினர்கள் விரும்பினால், அப்படியே செய்யலாம்.*

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I move—

Add the following at the end :

" and on such consideration the Assembly views with grave concern the outbreak of language agitation in the various parts of the country undermining the very unity and integrity of the country and setting at naught the democratic processes to which we as a nation are committed in the solution of our national problems and therefore the Assembly calls upon the Government of India to constitute a high-level committee including representatives of all political parties, to consider the problems relating to the Union Official Language, and particularly to formulate proposals to set at rest the apprehensions in the minds of the non-Hindi people with regard to the imposition of Hindi and the disadvantages which the non-Hindi people are likely to suffer by the implementation of the language resolution passed recently by the Parliament in regard to recruitment to Union Services. "

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, I have pleasure in seconding the amendment moved by the Hon. Leader of the Opposition.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : *கனம் சபாநாயகர் அவர்களே, என் பெயரில் இருக்கும் பின்வரும் திருத்தத்தை நான் முன்மொழி கிறேன்—*

இறுதியில் கீழ்க்காணும் சொற்றொடர்களை இணைக்கவும் :

" அவ்வாறு நிலைமையைப் பரிசீலித்த பிறகு, ஜனநாயகத்தை வளர்ப்பதற்கும், நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சிக்கும், மொழி ஒரு சாதனமாக இருக்க வேண்டும் என்ற நோக்குடன் அணுகினால்தான் மொழிப் பிரச்சி னைக்குத் தீர்வுகாண இயலும் என்று இச்சபை கருதுகிறது. மேல்

1968 சனவரி 23] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

மேலும் தொடர்ந்த பிரதேசத்தில் தங்களுக்கே உரித்தான பழக்க வழக்கங்களையும் பண்பையும் கொண்ட பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட இந்நாட்டில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த சுதந்திரப் போராட்டத்தில் உருவான நாட்டில் ஒற்றுமையைப் பேணிப் பாதுகாத்து மேலும் கெட்டிப்படுத்துவதற்கு, இந்நாட்டில் வழங்கும் எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்தை எல்லா மட்டங்களிலும் நல்குவது அத்தியாவசியம் என்பது இச்சபையின் திடமான கருத்து.

இதற்காக வேண்டி, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று இச்சபை வற்புறுத்துகிறது:—

1. அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித்திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிறமொழிகளுக்கு கீழ் நிலை அளிக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா இந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில், திருத்தப்பட வேண்டும்.

2. அரசியல் சட்டத்தின் 8-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தும் மத்திய அரசினர் மொழிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள், அரசியல் சட்டத்தின் 8-வது ஷெட்யூலில் உள்ள மொழிகளில் நடப்பதற்கும், ஏக காலத்தில் மொழிபெயர்ப்புக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

4. மத்திய சர்க்காரின் மசோதாக்கள், சட்டங்கள், உத்திரவுகள் போன்றவைகளெல்லாம் 8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள எல்லா மொழிகளிலும் பிரசுரிக்கப்பட வேண்டும்.

5. மத்திய அரசின் பணிமனைகள் இருக்கும் மாநிலங்களில் அந்தந்த மாநில மொழியிலேயே மக்களுடன் தொடர்பு வைத்துப் பணியாற்ற வேண்டும்.

6. மாநில அரசுகள் மத்திய அரசுக்கு தத்தம் மாநில மொழியிலேயே கடிதம் எழுதுவதற்கும், அம்மொழியிலேயே பதில் பெறுவதற்கும் உரிமை வழங்க வேண்டும்.

7. ஒவ்வொரு பிரஜைக்கும் தன் தாய்மொழியில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதற்கும், பதில் பெறுவதற்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

8. 8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும், மத்திய அரசு சமமாக நிதி வசதிகளை வழங்க வேண்டும்.

9. எல்லா மாநிலங்களிலும் கல்வி நிலையங்களில் உயர் மட்டம் வரையிலும் அந்தந்த மாநிலத்து மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்.

10. அதே போன்று அந்தந்த மாநிலத்து மொழியே மாநிலங்களில் நிர்வாக மொழியாகவும், உயர்நீதி மன்றம் வரை நீதிமொழியாகவும் இருக்கவேண்டும்.

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

இவை யாவும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் முழுமையாக அமுலாக தீரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

11. மொழிவழி சிறுபான்மையினருக்கு உயர் தொடக்கக் கல்வி வரை தங்கள் தாய் மொழியிலேயே கல்வி பயில்வதற்கு உத்திரவாதம் அளிக்கப்படவேண்டும்.

12. மும்மொழித் திட்டம் என்பது பயனற்றது, நடை முறைச் சாத்தியமற்றது என்பதனை அனுபவம் தெளிவாக்கி விட்டது. மீண்டும் அதை வற்புறுத்துவது பயனற்றது.

13. அதே சமயத்தில் உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரி களிலும், தாய்மொழியைத் தவிர இதர இந்திய மொழிகளையும், ஆங்கிலம் அல்லது வேறு நவீன மொழிகளையும் மாணவர்கள் இஷ்டப்பூர்வமாகக் கற்பதற்கு வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

இத்தகைய ஏற்பாடுகள் செய்து முடித்தபிறகு, இந்திய மக்கள் எதாவது ஒரு இந்திய மொழியை குரோத மனப்பான்மையும், வெறுப்புணர்ச்சியும் இல்லாமல், நடைமுறை சாத்தியத்தையும் பயனையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான சுமுகமான நிலை ஏற்படும் என்று இச்சபை கருதுகிறது.

பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசினர் மொழித் திருத்தச் சட்டம், இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் மத்திய அரசின் மொழியாக இருக்கும் என்பதனை ஏற்றுக் கொண்ட போதிலும், அச்சட்டத்தின் 3-வது பிரிவின் (4)-வது உட்பிரிவு மத்திய அரசின் ஒரு இலாகாவில் அல்லது பகுதியில் இந்தியை ஏக அலுவல் மொழியாக சர்க்காரின் உத்தரவுகள் மூலம் ஆக்குவதற்கு மத்திய சர்க்காருக்கு அதிகாரம் அளித்திருக்கிறது. இவ்வதிகாரம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

மேலும் இதனோடுகூட பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தில் மத்திய சர்க்காரில் உத்தியோகத்திற்குச் சேர்வதற்கு இந்தி அல்லது ஆங்கிலத்தில் ஞானம் இருக்க வேண்டும் என்று கூறுவது இந்தி பேசாத மக்களின் மீது அதிகமான பளுவைச் சுமத்துகிறது. இந்த ஏற்றத் தாழ்வை இச்சபை நிராகரிக்கிறது.

எனவே, மத்திய சர்க்காரில் உத்தியோகத்திற்கு சேர்வதற்கு அரசியல் சட்டத்தின் 8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள மொழி கள், ஆங்கிலம் ஆகியவற்றின் ஏதாவது ஒரு மொழியில் ஞானம் இருந்தால் போதும் என்பதை மத்திய அரசு ஏற்கவேண்டும்.

இந்த வகையில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமல், இந்திக்கு அளிக்கப்பட்டுள்ள பிரத்தியேக அந்தஸ்தை நீடிப்ப தற்குச் செய்யப்படும் முயற்சிகளும் ஆங்கிலத்திற்கு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கல்வி, நிதி, நிர்வாகம் ஆகிய துறைகளில் இருந்த ஸ்தானத்தை நீடிப்பதற்காகச் செய்யப்படும் முயற்சிகளும் நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்று இச்சபை கருதுகிறது."

1968 சனவரி 23]

திரு. என். சங்கரய்யா : திரு. ஏ. பாலசுப்பிரமணியன் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I move—

Add the following at the end :

" and on such consideration this House considers that Part XVII of the Constitution of India be deleted indefinitely, failing which a suspension of the operation of the XVII Chapter must be made by suitable enactment of the Parliament and English alone must be the link language of India, as only then can we expect proper protection for Tamil language and the people of Tamilnad This House is clearly for a two-language formula. "

THIRU K. CHEEMAICHAMY : I second the amendment, Sir.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன், இறுதியில் கீழ்க்காணும் சொற் றொடர்களை இணைக்கவும் :—

" 1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தையும், அதைச் சார்ந்த தீர்மானத்தையும் இந்திய நாடாளுமன்றம் நிறை வேற்றியதன் விளைவாக இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் நிலைமை குறித்து ஆய்வு செய்த தமிழ்நாடு சட்ட பேரவை—

இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறு தியைப் பூர்த்தி செய்யும் வகையில் மேற்படி திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பினும், சட்டத்தினைச் சார்ந்த தீர்மானம் எந்தப் பகுதி மக்களின் ஐயத்தை நீக்கவும், பரஸ்பரம் நல்லெண் ணத்தை வளர்க்கவும் நாட்டின் ஒருமைப் பாட்டினைக் காக்கவும் ஆகக் கொண்டு வரப்பட்டதோ அதற்கு விரோதமாக, இந்தி பேசாத பகுதி மக்களிடையே இந்தி திணிக்கப்படுவது மேலும் தீவிரமாக்கப்படும் என்னும் அச்சத்தை உண்டு பண்ணுவதாக அமைந்து உள்ளதால் தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டுவதுடன் ஆட்சிமொழி திருத்தச் சட்டத்தை மீண்டும் புனர்ப் பரிசீலனை செய்ய வேண்டுமாய் மத்திய அரசிற்கு பரிந்துரை செய்கிறது."

திரு. கோ. பாரதிமோகன் : தலைவர் அவர்களே, நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : பிறகு நான் பேசும்போது, என்னு டைய திருத்தத்தை சபைமுன் வைக்க விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, நானும் என்னுடைய திருத்தத்தை பேசும்போது சபைமுன் வைக்கிறேன்.

DR. HABIBULLAH BAIG : Sir, I move the following amendment to the motion moved by the Hon. Minister for Education :

Add the following at the end :

"and on such consideration the House earnestly urges upon the Government of India to take speedy steps to have the present

Official Languages (Amendment) Act, 1968, and also the resolution adopted along with the said Act repealed by the Parliament of India at the earliest possible date and to bring before the Parliament the Bill No. 158 of 1967 in its original form."

திரு. எம். அப்துல் கபூர் சாஹிப் : நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

THIRU G. BHUVARAHAN : Mr. Speaker, Sir, I move—

Add the following at the end;

"and after such consideration the Assembly resolves to constitute an all-party committee to formulate concrete proposals to solve the problem relating to the Union official language, particularly to remove the unequal burden which has been cast upon the non-Hindi people by the said resolution with regard to recruitment to Union Services."

THIRU B. MAHADEVAN : I second the amendment moved by the hon. Member Thiru G. Bhuvarahan.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரும், கம்யூனிஸ்ட்டுக் கட்சித் தலைவரும், அவர்கள் கொடுக்க விரும்பும் திருத்தத் தீர்மானங்களை அவர்கள் பேசும்போது தெரிவிப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இன்று பிற்பகல் 1 மணிக்குள் அவர்கள் அந்தத் திருத்தத் தீர்மானங்களை சட்டப் பேரவை அலுவலகத்தில் செயலாளர் அவர்களிடம் சேர்ப்பித்தாக வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : பின்வரும் என்னுடைய திருத்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

இறுதியில் கீழ்க்காணும் சொற்றொடர்களை இணைக்கவும் :

"பிரதேச மொழிகளில் ஒன்றான இந்தி மொழி ஆங்கிலத்திற்குப் பதிலாக மத்தியில் ஆட்சி மொழியாவதற்கு முன் பாத்தியதை அளிப்பதும், அதற்கு ஏற்படும் செலவுக்கு மத்திய அரசே பொறுப்பேற்பதும் பிரதேச மொழிகளிடையே பாரபட்சம் காட்டுவது ஆகாதோடு, நாளடைவில் மற்ற பிரதேச மொழிகள் மீது ஆதிக்கம் செலுத்த இந்தி மொழிக்கு வாய்ப்பளிப்பதாகுமென்று இம்மன்றம் அஞ்சுகின்றது. அதனால் கீழ்வரும் இரண்டு திட்டங்களை மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்கிறது :

1. தமிழ் மொழியும், மற்ற பிரதேச மொழிகளும் அதனதன் பிரதேசத்தில் ஆட்சிமொழியாகவும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகவும், நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாகவும் அடுத்துள்ள ஐந்தாண்டுகளில் வருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும், அதுவரை மத்தியில் ஆட்சிமொழி அந்தஸ்துடன் ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்றும் இம்மன்றம் தமிழக, இந்திய அரசுகளை வற்புறுத்துகின்றது.

1968 சனவரி 23] [திரு. ம. பொ. சிவஞானம்]

2. மத்தியில் அதிகாரங்கள் தேவைக்கு அதிகமாகக் குவிக்கப் பட்டிருப்பதால் இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதே நிலையில் இந்தி ஆட்சிமொழியாகுமானால், அதுவும் ஒரு ஆதிக்க மொழியாக விளங்குமென்று இம்மன்றம் அஞ்சுகின்றது. இதுவே மொழிச் சிக்கல் தீரத் தடையாக இருப்பதால், பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று பொறுப்புக்களே மத்தியில் விட்டு, மற்ற அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு மாற்றித் தருமாறும், அதன்பின், அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ் உள்ளிட்ட 14 மொழிகளையும் மத்தியில் ஆட்சிமொழிகளாக்குமாறு இம்மன்றம் மத்திய அரசைக் கோருவதுடன், அதற்கு ஆவன செய்யுமாறு தமிழக அரசை இம்மன்றம் கோருகின்றது."

திரு. ஆ. கு. சுப்பையா : இத் திருத்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்வரும் திருத்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

தீர்மானத்தின் முடிவில் கீழ்க்கண்ட சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்—

" அத்தகைய ஆய்வுக்குப் பிறகு கீழ்க்கண்டபடி பேரவை முடிவு செய்கிறது :—

பல்வேறு மொழி—பண்பாடு-நாகரீகங்களைக் கொண்ட இந்தியாவில், ஒரு வட்டார மொழியை மட்டும் ஆட்சி மொழியாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து, ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமை கொள்ளச் செய்திடும் என்று உணரப்படுவதால்,

தமிழும், மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அது வரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு திருத்தப்படவேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது.

இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள மொழிச் சட்டம் இந்த இலட்சியத்துக்கு ஒத்ததாக அமையவில்லை என்று கருதுவதுடன், இந்தியா பிளவுபடவும் அரசாங்க நிர்வாகத்தில் இருப்பவர்களிடையே, வெறுப்பு, குழப்பம், வேதனைகள் மலிந்த இரு பிரிவுகளை உண்டாக்கிவிடவும் வகை செய்கிறது என்று கருதுவதோடு, முதலில் குறிப்பிட்ட மொழி உரிமை இலட்சியம் நிறைவேறுவதற்கான முறையில் தொடர்ந்து வலியுறுத்தி வருவது எனத் தீர்மானிக்கிறது.

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதியையும், சங்கடத்தையும், புதிய பளுவையும் உண்டாக்குகிறபடியால், அந்தத் தீர்மானம் அமுலாக்கப்படக் கூடாது என்பதில் பல் ஆசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்து தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசு உடனடியாக அந்தத் தீர்மானத்தை நீக்கி வைத்து இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடமும், பளுவும் ஏற்படாத ஒரு முறையை வகுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது.

மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதியினருக்கு பளுவையும், சங்கடத்தையும் தருவதுடன், மும்மொழித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துவதன் மூலம் இந்தித் திணிப்பை நடத்தி, இறுதியில் இந்தியையே ஆட்சிமொழியாக ஆக்கிவிடுவது என்ற நோக்கத்துடன் அமைந்திருக்கிறது என்று இந்த மன்றம் கருதுகிறது.

மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் எற்க மறுக்கிறது.

மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல் படுத்த மறுக்கிற வகையிலும் தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும்,

தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது. (ஆரவாரம்)

என்.சி.சி. முதலிய அணிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் இந்தி ஆணைச் சொற்களை நீக்கிவிடுவது என்றும், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்தால், என்.சி.சி. போன்ற அணிகளைக் கலைத்துவிடவும் இந்த மன்றம் தீர்மானிக்கிறது." (ஆரவாரம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் கூட்டம் இன்று மாலை தொடர்ந்து நடைபெறும் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்திருப்பதற்கொப்ப, இப்பொழுது மூன்மொழிந்து வழி மொழியப்பட்டுள்ள திருத்தத் தீர்மானங்களின் சுவடுகள் உறுப் பினர்களுக்கு மாலைக் கூட்டத்துக்கு முன் வழங்கப்படும் என்று நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொண்டுவந்துள்ள தீர் மானமும், அதனையொட்டிப் பல்வேறு கட்சிகளின் சார்பாகவும், அரசினரின் சார்பாகவும், வைக்கப்பட்டுள்ள திருத்தங்களும் இப் பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

1968 சனவரி 23] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மொழிப் பிரச்சினை எந்த அளவுக்கு எல்லோருடைய உள்ளத்தையும் பற்றி நிற்கின்ற ஒரு உணர்ச்சிகரமான பிரச்சினை என்பதை நாடு இப்பொழுது உணர்ந்திருக்கிறது. காரணம், மற்ற எந்தப் பிரச்சினைகளுக்கும் மொழி நிலைக்களனாக அமைந்திருக்கிற காரணத்தால், ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் அது பற்றி நிற்கிறது. அது உணர்ச்சி வழியாக வெளிப்படுகிற தன்மையில், ஒவ்வொருவரும் தங்களுடைய உணர்ச்சியையும் உரிமையையும் காப்பாற்றிக் கொள்ளுகிற வகையில், மொழிப் பிரச்சினையை அணுகிவருகிறார்கள்.

இந்த நாட்டிலே மட்டுமல்லாமல், உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலேயும் கூட, மொழிக்குத் தங்களுடைய முழு உரிமையையும் உயிரையும் வைத்து, உணர்ச்சிகரமான முறையிலேதான் மொழிப் பிரச்சினையை அணுகி வருகிறார்கள். இந்தப் பிரச்சினை இல்லாத நாடே இல்லை என்று நாம் சொல்லலாம். பிரிட்டனிலே கூட, வெல்ஷ், ஆங்கிலம், ஸ்காட்ச் மொழிகளைக் குறித்த பிரச்சினை, இவ்வளவு நாட்கள் ஆகியும், இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் போன்றே, கனடா நாட்டிலும் இருந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தில் பல நாடுகளிலும் இருந்து கொண்டுவருகின்றது. பல்வேறு மொழிகளைக் கொண்ட ரஷ்யாவும் கூட, அதைத் தீர்ப்பதிலே ஈடுபட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் விட அதிகமாக, தாய்மொழிகளை அதிகமாகக் கொண்டிருக்கிற இந்தியாவில், ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய மொழிக்கு ஆக்கம் தேடிக் கொள்ளுவதற்கும், தங்களுடைய மொழியின் உரிமை எந்த அளவிற்கும் பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தில் அதைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கும் ஆன முயற்சியில் ஈடுபடுவது இயற்கையாகும்.

அந்த முறையிலேதான், இந்த மொழிப் பிரச்சினையை, உள்ளத்தைப்பற்றி நிற்கின்ற இந்தப் பிரச்சினையை, வெளியே இருக்கும் பல்வேறு பிரச்சினைகளோடு ஆராய்ந்து, தக்க முடிவு எடுத்து, அந்தப் பிரச்சினைபற்றிய குறைபாட்டை நீக்கி, நிறைவுபடச் செய்து, அதைச் சரிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், மொழி உள்ளத்திலே இடம் பெற்று, உணர்ச்சி வழியிலே அமைந்திருக்கின்ற காரணத்தால், உணர்ச்சிக்கும், உள்ளத்திற்கும் பாங்கிற்கும் மதிப்பு அளித்த நிறைவேற்றப்பட்டாலொழிய, இந்தச் சிக்கல் தீராது என்பதை நம்முடைய நாட்டினுடைய நடைமுறையிலே நாம் கண்டுகொண்டு வருகின்றோம். இந்த மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்குப் பலரும் பல்வேறு சமயங்களில், பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இன்னும் இந்தச் சிக்கல் தீர்க்கப்படாத வகையிலேதான் இருந்துகொண்டு வருகிற தன்மையை நாம் காணுகின்றோம். அதற்கு அடிப்படைக் காரணம், அவரவர்களுடைய உணர்ச்சியையும், அவரவர்களுடைய விருப்பத்தையும் மதித்து, அதற்கேற்றபடி, எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படாததுதான் என்பதை நாம் நன்றாக அறிந்து கொள்ளுகிறோம். இன்னும் ஆட்சி மொழிப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 சனவரி 23

பிரச்சினையைப் பொறுத்து ஏற்பட்டிருக்கிற பல்வேறு நிலைமைகளையும் நாம் காண்கிறோம். பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த முடிவுகள் ஒத்த கருத்தின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை. இந்த நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு, நாட்டுக்கான பல்வேறு மொழிப் பிரச்சினையை ஆராயும் வகையில், ஆட்சி மொழி எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி தீர்மானிக்கின்ற நிலைமையில், அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்ற நிலைமையில், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தி பேசுகிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆகவே, ஒருமித்த மனப்பான்மை என்ற அடிப்படையில் இந்த ஆட்சி மொழிச் சட்டத்தை—ஆட்சி மொழிப் பிரிவை—அரசியல் நிர்ணய சட்டத்தில் சேர்த்திருப்பதாக வரலாறு நமக்கு அறிவுறுத்தலில்லை. அதுவும், அரசியல் நிர்ணய சட்டத்தை உருவாக்குகின்ற பொறுப்பிலே இருந்த காங்கிரஸ் கட்சியும்கூட, பாராளுமன்றக் கூட்டத்தில்கூட ஆட்சி மொழிப் பிரச்னை வந்த நேரத்திலே கூட, இந்தி பேசுகின்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பக்கமும், இந்தி பேசாத மாநிலத்தை சேர்ந்தவர்கள் ஒரு பக்கமும் அமர்ந்து முடிவுகள் எடுக்கும்போதுகூட, அப்பொழுது கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய காலஞ்சென்ற பாபு இராஜேந்திர பிரசாத் அவர்களுடைய வாக்கின் மூலமாக அது வெற்றி பெறுகின்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, கட்சிக் கட்டுப்பாட்டுடன் அத்தனைபேரும் ஆதரவளித்து, ஆட்சிமொழியாக ஆக்குகின்ற நிலைமை ஏற்பட்டது என்பதை வரலாற்று விவரங்களையெல்லாம் அறிந்தவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறபோது சாதாரணமாக ஒரு கருத்து விவாதிக்கப்பட்டு, இரண்டு பிரிவினர் பிரிந்து சம அளவாக இருப்பார்களேயானால், அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறவர், தான் வழிக்கின்ற வாக்கினை, என்னவே இருந்து வருகிற ஒரு நிலைக்குத்தான் அளிக்க வேண்டுமே தவிர, தன்னுடைய 'காஸ்ட்டிங் வோட்டை' புதிய மாறுபட்ட நிலைக்கு அளிப்பது மரபு அல்ல என்ற முறை இருக்கிறது. அந்த மரபு மாறிய வகையிலேதான் வெற்றி பெற்று, அரசியல் சட்டத்திலே இடம் பெறுகின்ற இந்தியே இந்தியாவின் அட்சிமொழியாகும் என்றும், அதுவும் தேவநாகரி வடிவத்தில் இருக்குமென்றும், பதினைந்து ஆண்டுகள் கழித்து அதுவே முழுமுதல் அட்சி மொழியாக இருக்கும் என்ற நிலைமை ஏற்பட்டதன் காரணமாக, நாட்டிலே அதுபற்றிய கருத்து வேறுபாடுகள் பலப்பல வகையிலே எடுத்துவைக்கப்பட்டு, அதை மாற்றுவதற்கு முயற்சிகளும் பல வகையிலே நடைபெற்றுக்கொண்டு வந்தன என்பதை நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளி

முற் பகல் 11-30

1968 சனவரி 23] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

லிருந்தும், பல்வேறு குறிப்புகளிலிருந்தும், தீர்மானங்கள், மாநாடுகள் ஆகியவற்றிலிருந்தும் நாம் மிகத் தெளிவாக அறிந்து கொள்கின்றோம்.

இந்தியே, இந்தியாவின் ஆட்சிமொழியாக மாறுமேயானால் அதன் காரணமாக ஏற்படுகின்ற விளைவுகள் என்ன என்னவாக இருக்கும் என்று ஒவ்வொரு துறையினரும் தங்கள் தங்களுடைய நிலைமைகளிலிருந்து ஆராயந்து பார்த்தார்கள். மாணவர்கள் தங்களுடைய நிலைமையிலிருந்து ஆராய்ந்து பார்த்தார்கள். பேராசிரியர்கள் தங்களுடைய நிலைமையிலிருந்து ஆராய்ந்தனர். பல்கலைக் கழகத் துணைவேந்தர்களும், கல்வாரி முதல்வர்களும் தங்கள் தங்களுடைய நிலைமைகளிலிருந்து ஆராய்ந்து பார்த்தனர். உலக வாணிகத்தில் ஈடுபட்டிருக்கும் வணிக வேந்தர்களும், வணிகப் பெருமக்களும் தங்கள் தங்கள் நிலையிலிருந்து ஆராய்ந்து பார்த்தனர். அறிவியல் அறிஞர்களும், ஆராய்ச்சி வல்லுநர்களும் தங்கள் தங்களுடைய நிலைகளிலேயிருந்து ஆராய்ந்து பார்த்தனர். ஆங்காங்கு இருக்கின்ற பொதுமக்களும் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அரசியலே நடத்திச் செல்ல, பாடத்திட்டங்களைப் போதிக்க, பயிற்சி மொழியாகக் கொண்டுவர, இவை போன்றவற்றிற்கெல்லாம் முடிவு எடுக்கும் போது தங்கள் தங்களுடைய மாநில மொழிக்கு, வட்டார மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே தங்கள் கருத்துக்களை எடுத்து முன்வைத்தார்கள். 'இந்தி தான் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கும்; பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதுவே முழுக்க, முழுக்க ஆட்சிமொழியாக மாறும்' என்ற கருத்துக்கு இடம் ஏற்பட்டதால், இக்கருத்துக்கு மாறுபட்டவர்களும், வேறுபட்டவர்களும், மூரண்பட்டவர்களும் பலவகையிலே அதற்கு எதிர்ப்புக் கருத்துக்களை உருவாக்கி வளர்த்து வந்ததன் காரணமாகவும், இந்தி பேசாத மாநில மக்களிடத்திலே இந்நிலைமை பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதன் காரணமாகவும், அதன்படி இந்தி பேசாத மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக அரசியல் சட்டத்தினால் ஆக்கப்படுவார்கள் என்ற எண்ணம் எங்கு பார்த்தாலும் ஏற்பட்டு, அதன் காரணமாக அச்சமும், பயமும், பீதியும் ஏற்பட்டன. அந்த நிலைமையிலேதான் இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தி பேசாத மாநில மக்களுடைய சங்கடங்களையும் மற்ற நிலைமைகளையும் உணர்ந்தறிந்து, இந்தியாவின் ஒற்றுமையையும் மனதில் வைத்துக்கொண்டு, "இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்ற காலம் வரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும். அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக எந்தக் கட்டத்திலும், எந்த முறையிலும் இந்தி திணிக்கப்பட மாட்டாது" என்று பல சமயங்களிலே விளக்கம் தரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பத்திரிகை நிருபர்களுக்கும், பாராளுமன்றக் கூட்டங்களிலும் சிலபல சமயங்களில் தன்னுடைய கருத்தை வலியுறுத்தி வந்தார். "இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 சனவரி 23

நீடிக்கும்" என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். இதனால் இந்தி ஆட்சி மொழியாக ஆவதன் மூலமாக ஏற்படுகின்ற சங்கடங்களைத் தீர்க்க முடியும். அந்த வகையில் நல்லதோர் சூழ் நிலை ஏற்படுத்த முடியும்.

பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய வாக்குறுதி சட்டமாக ஆக்கப்பட்டாலொழிய, அதை மக்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அந்த அடிப்படையிலேதான் அதற்குச் சட்ட வடிவம் தருதல் வேண்டும். இல்லாவிட்டால், வாக்குறுதி புறக்கணிக்கப் பட்டுவிடும். இந்தியப் பேரரசும், பல்வேறு துறையினரும் மறை முகமாகவும், நேர்முகமாகவும் இந்தியைத் திணிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவார்கள் என்று பொதுமக்கள் அச்சமும் பீதியும் கொண் டுள்ளதால், பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய வாக்குறுதியைச் சட்ட வடிவத்தில் கொண்டுவரவேண்டுமென்று வலியுறுத்து கிறார்கள். சட்ட வடிவமாகக் கொண்டுவரப்பட வேண்டுமென்ற கருத்து பல வகைகளிலே பலரால் வற்புறுத்தப்பட்டு வந்திருக் கிறது. பண்டித ஜவஹர்லால் அவர்களுடைய வாக்குறுதியைச் சட்ட வடிவமாகக் கொண்டுவருகிற முறையில் 1967-ல் கொண்டு வரப்பட்ட நிலைமையில் அதற்குப் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டது, தீர்மானம் கொண்டுவந்து, எற்கனவே இருந்த நிலை மையைவிட இன்னும் அதிகமான பீதியை உண்டாக்குக்கக நிலை யில் இந்தி பேசாத மாநில மக்களுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் நிலைமை ஏற்பட்டுள்ளது. பல திருத்தங்களும், தீர்மானங்களும் சேர்ந்து உருவான ஆட்சிமொழிச் சட்டம் இந்தி பேசாத மக்கள் எல்லோருக்கும் திருப்தியளிக்காத நிலைமையை உண்டாக்கியது. எற்கனவே இருந்ததைவிட குழப்பமான, இன்னும் சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலையில் திட்ட வட்டமான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடுடைய வர்களாக நாம் இருக்கிறோம்.

இந்தி பேசாத மாநிலங்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், பத்திரிகை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எல்லோருமே, இந்த ஆட்சிமொழிச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட திருத்தங்களும், தீர்மானங்களும் நிருப் தியளிக்கின்ற வகையில் இல்லையென்பதைத் தெரிவித்திருக் கிறார்கள். எல்லா அரசியல் கட்சிகளும் தெரிவித்திருக்கின்றன. தமிழகத்திலுள்ள பலதரப்பட்ட மக்களும் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையில், தமிழக மக்களுடைய கருத்துக்களை ஒருமித்து அனுப்புகின்ற முயற்சி எடுக்கப்படுவதன் காரணமாக, இதற்கு நல்லதோர் தீர்வு காணவேண்டுமென்ற முறையில்தான் இந்தச் சட்டப் போவை மிக அவசரமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள 3¾ கோடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்த்திருக்கின்ற இந்தப் போவை தக்கதோர் முடிவெடுத்து, அதை நிறைவேற்ற முயற்சி செய்வதன் மூலமாக ஒரு அமைதியான, நிலையான, உறுதியான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். அந்த அடிப்படையிலேதான்

1968 சனவரி 23] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. திருத்தங்கள் அரசினர் சார்பாகவும், எதிர்கட்சி சார்பாகவும் தரப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி விவாதித்து நல்லதோர் முடிவை நாம் எடுத்தாக வேண்டும்.

சாதாரணமாக தாய்மொழி நம்மிடத்தில் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்தித் தருகிறது. தாய்மொழி நிலை ஒன்று, வட்டார மொழி நிலை ஒன்று, பயிற்சிமொழி நிலை ஒன்று, ஆட்சி மொழி நிலை ஒன்று. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாய்மொழியைப் பொறுத்தவரையில் பிரச்சினை இல்லை; அது எல்லோருக்கும் ஒத்த முடிவாக அமைந்திருக்கிறது. வட்டார மொழி தமிழகத்தான் இருக்கிறது. வளர்ந்தோங்கி வருகின்ற மொழி அறிவும், என்றென்றும் இருந்து வருகின்ற ஆறறிவும் அறிவும் பெற்றிருக்கின்ற தமிழ், தமிழகத்தின் வட்டார மொழி என்பதில் பிரச்சினை இல்லை. மாநில ஆட்சி மொழியைப் பொறுத்தவரையில், தமிழ்தான் தமிழகத்தின் ஆட்சி மொழி என்ற பிரச்சினையிலும் எவ்வித மாறுபாடும், வேறுபாடும் யாருக்கும் ஏற்படவில்லை. மத்திய அரசைப் பொறுத்தவரையில், இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்ற பிரச்சினை வரும்போதுதான் சிக்கல்களும், பல்வேறு கருத்துக்களும் ஏற்படுகின்றன. இந்தியாவினுடைய ஆட்சி மொழி எதுவாக இருக்க வேண்டுமென்பதில் சிக்கல்கள் தோன்றுகின்றன. இந்தியா பல மொழிகள் பேசப்படுகின்ற ஒரு துணைக்கண்டம். இதில் 584 மொழிகள் "லாங்குவேஜஸ் அண்டு டயலெக்ட்ஸ்" இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அவற்றில் குறிப்பிடத்தகுந்தவை 179 மொழிகளாகும். அதிலும் இலக்கண இலக்கிய வளம் பெற்று, நல்ல கட்டுக்கோப்புடன் பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்ற மாநில அடிப்படையில் இயங்கப்படுவதாக இருக்கும் மொழிகள் 14 உள்ளன. இந்தப் பதினான்கு மொழிகளும் இந்தியாவில் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய மொழிகளாகக் கருதப்படுகின்றன. அவற்றைத்தவிர, அட்டவணையில் சேர்க்கப்படாத மொழிகள் இன்னும் பல இருக்கின்றன. அவற்றையும் தேசிய மொழிகளாக, அட்டவணையில் சேர்க்க வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அந்தந்த மாநில மக்கள் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறார்கள். எல்லா மாநில மக்களும் தங்கள் தங்கள் மொழியை ஆட்சிமொழியாக வளர்க்கின்ற முறையில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

அது மட்டுமல்ல. உலகத்தில் இருக்கிற இதைவிடப் பின்தங்கிய மொழிகள், இலக்கண இலக்கிய வரம்புகள் குறைந்த மொழிகள், ஒரு நூற்றாண்டுக்குள்ளே எழுந்த மொழிகள் ஆட்சிமொழியாகும் நிலையைப் பெறுகின்றதைப் பார்க்கும்போது, மிகப் பழங்காலந் தொட்டே வளர்ந்து வந்திருக்கிற நம் மொழிகள், இலக்கிய இலக்கண வரம்புகளை செம்மையாகப் பெற்றுள்ள நம் மொழிகள், பரந்து பரந்து விரிந்து கிடக்கிற நம் மொழிகள் ஆட்சிமொழிகளாக வாழ முடியும் என்ற தன்னம்பிக்கை எல்லாத் துறைகளிலும் வளர்ந்து வருகிறது. இத்தகைய தன்மை, இத்தகைய உணர்வு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 சனவரி 23

எங்கும் ஏற்பட்டிருக்கிறது. நூறுண்டுக் காலத்திற்குள் தோன்றிய ஜப்பான் மொழி அறிவியல் துறை அனைத்தறிவையும் எடுத்துத் தருகின்ற வகையில் தன்னைத்தானே வலிவுபடுத்திக்கொண்டதாக, தன்னைத்தானே வளப்படுத்திக்கொண்டதாக உலகத்துப் பிற மொழிகளில் உள்ள அறிவியல் துறை அனைத்தையும் எடுத்துச் சொல்லும் வலிவை உடையதாக வியக்கத்தக்க அளவுக்கு வளர்ந்து வந்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது நம் மொழிகள் அதை விடக் கற்பதற்கு எளிமை, இலக்கிய இலக்கண வரம்புடன் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிற மொழிகள், மேலும் மேலும் நல்ல வளர்ச்சி அடையத்தக்க தன்மை கொண்டதான நம் மொழிகள், இந்த நாட்டு மொழிகள், திராவிடக் குழு மொழிகள், வங்க மொழி, மராட்டி மொழி ஆகிய எல்லா இந்திய மொழிகளுமே ஆட்சிமொழிகளாக இருக்கக்கூடிய தகுதியைப் பெற்றவைதான் என்கிற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஒரு வட்டார மொழியை இந்தியாவின் பொதுமொழியாகத் திணிக்கின்ற தன்மை எதிர்க்கப்படுகிறது. இதற்கு முன்பாகவே ஒரு வட்டார மொழிக்கு தனிமதிப்பு, தனிச் சலுகை அளிக்கப்படாமல் பதினைந்து தேசிய மொழிகளுக்கும் சம மதிப்பு, சமச் சலுகை அளிக்கப்படவேண்டும் என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தைத்தான் இன்றையதினம் பலர் தங்கள் திருத்தங்களின் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

நம்முடைய தேசிய மொழிகள் பதினைந்தும் இந்திய ஆட்சி மொழியாக வருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்படுகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இந்திய அரசின் ஆட்சிமொழியாக இருந்தாகவேண்டும்; நமது பொது மொழியாக, தொடர்பு மொழியாக இருந்தாகவேண்டும். இன்றையதினம் இந்தியாவில் இருக்கிற எந்த மொழியாக இருந்தாலும் உலகத் தொடர்பைக் கொள்வதற்கு ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்கவேண்டும். உலக வணிகத் தொடர்பைக் கொள்வதற்கு ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்கவேண்டும். பல்வேறு துறைகளில் அறிவியல் கருத்துக்களைப் பெறுவதற்கு ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்கவேண்டும். பொறியியல், நிலவியல், விலங்கியல், மருத்துவ இயல் ஆகிய எல்லாத்துறைகளிலுமே ஆங்கிலத்தின் துணையைக் கொண்டிருக்கவேண்டும். ஆக, இந்திய மொழிகளில் எந்த மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும் கட்டாயம் ஆங்கிலம் படித்துத்தான் தீரவேண்டும், ஆங்கிலத்தின் துணையைக் கொண்டே பல்வேறு துறைகளிலும் தங்கள் தங்கள் தாய்மொழியை வளர்த்துக்கொண்டாகவேண்டும் என்கிற நிலைமை இருக்கிற காரணத்தினால் சரியாகவோ, தப்பாகவோ இந்த நாட்டின் தொடர்பு மொழியாக இன்றையதினம் ஆங்கிலம்தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஆங்கிலமே இருந்தாக வேண்டும். ஆங்கிலம் இங்கிலாந்து நாட்டிலே தோன்றியதாக இருக்கலாம். இங்கிலாந்தில் இருந்து அமெரிக்கா சென்று குடியேறினர்கள் என்பதால் இன்றைக்கு அமெரிக்காவில் ஆங்கிலம்

1968 சனவரி 23] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பேசப்படுகிறது. கனடாவில் உள்ளவர்கள் பேசும்மொழி ஆங்கிலம். ஆங்கிலேயர்கள் ஆஸ்ட்ரேலியாவில் குடியேறினர்கள் என்பதனால் ஆஸ்ட்ரேலியாவில் உள்ளவர்கள் பேசும்மொழி ஆங்கிலம். தென் னப்பிரிக்காவில் உள்ளவர்கள் பேசும்மொழி ஆங்கிலம். இந்தியா வினும் சராசரியாக எல்லாக் குக்கிராமங்களில் உள்ள சிலருக் காவது தெரிந்திருக்கிற மொழி ஆங்கிலம்தான். இந்தி மொழி பேசுகின்றவர்கள் அதிகம் என்றாலும் ஒரு குறிப்பிட்ட இடங்களில் தான் கும்பலாக உள்ளவர்கள் பேசும் மொழியாக அது இருக்கிறது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்திய மொழி ஆங்கிலம்தான். இந்த ஒற்றுமை காக்கப்படவேண்டும் என்றால் ஆங்கிலம் தொடர்ந்து தொடர்பு மொழியாக இருந்தாக வேண்டும். நம்முடைய தாய் மொழி தமிழ்தான். நம்முடைய வட்டார மொழியும் தமிழ்தான். ஆகவே நமது தமிழக அரசின் நிர்வாக மொழியும் தமிழ்தான். அதில் எவ்விதச் சிக்கலும் இல்லை. இந்திய அரசின் நிர்வாக மொழியாக நம்முடைய தேசிய மொழிகளாக உள்ள பதினைந்து மொழிகளும் அமைந்தாகவேண்டும். இந்தப் பதினைந்து மொழி களும் செரிமோனியல் அபிஷியல் லாங்வேஜாக, ஆட்சிமொழி களாக இடம் பெறுகின்ற வகையில் ஒன்றுபட்டாகவேண்டும். அது வரை ஆங்கிலம் ஒன்றுதான் நிர்வாக மொழி என்கிற நிலை இருந்தாக வேண்டும்.

இன்றைக்குப் பாராளுமன்றத்திலே ஆட்சிமொழிச் சட்டத் திருத்தமும், அதையொட்டிய தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருப் பது ஒரு புதுச் சிக்கலை உண்டாக்கியிருக்கிறது. அதுபற்றி மன்ற உறுப்பினர்கள் விவாதிக்கவேண்டும் என்பதற்காகவே நான் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இதற்குப் பல திருத் தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அரசின் மொழிக்கொள்கை என்ன, அதன் அடிப்படையில் இந்த அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதுபற்றி எல்லாம் கேட்கப் பட்டது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் ஒரு திருத் தம் கொடுத்துள்ளார்கள். நான் கொண்டு வந்துள்ள தீர்மானமும் மற்றவர்கள் கொடுத்துள்ள திருத்தங்களும் அவையின் விவாதத் திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மன்ற உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவிக்கின்ற கருத்துக்களின் மூலமாக, இந்த அரசு எடுத்துக் கொள்ளும் முடிவுகளையும் மாநில மக்களின் கருத்துக்கள் பிரதி பலிக்கும் என்ற வகையில் இந்த விவாதம் நல்ல பயனை அளிக்கும் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வர்களுக்கு மொத்தம் ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

[1968 சனவரி 29

*திரு. கோ. பூவராகன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய மன்றத்திலே கல்வி அமைச்சர் அவர்கள், "1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருந்த) சட்டத்தையும் அதைச் சார்ந்த தீர்மானத்தையும் இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றியதன் விளைவாக இம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் நிலைமை குறித்து விவாதிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்திற்கு நமது முதல் அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பாகவும், மற்றக் கட்சிகளின் சார்பாகவும் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாகவே எல்லாக் கட்சியினருமே ஒத்துக் கொள்ளக்கூடியது ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்பது. இங்குள்ள கட்சிகளிடையே மற்றவற்றைப்பற்றி எவ்வித கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்பது தான். நம்முடைய நாடு விடுதலைபெற்ற பிறகு நம்முடைய மொழிக்கொள்கைப்பற்றி ஒருவகையான ஏற்பாட்டைச் செய்துகொண்டோம். அதுபற்றி அவ்வப்போது நமது தலைவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினால் தமிழ்நாடு சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில் இந்த மொழிக்கொள்கை சம்பந்தமாக அவ்வப்போது நடந்த விவாதங்கள், அதில் கலந்துகொண்டவர்கள், இன்று ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள், எதிர்க்கட்சியில் முக்கியஸ்தர்களாக மான் இருந்தவர்கள் என்ன என்ன கருத்துக்களைத் தெரிவித்தார்கள் என்பதை இந்தச் சமயத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற தி.மு.க. கட்சி ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னாலே 1957-ஆம் ஆண்டிலே இந்தியே அறவே கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் 1957-ஆம் ஆண்டிற்குப் பிறகு 1958-லே அவர்கள் சொன்னது இரண்டு மொழியும் இருக்க வேண்டும், ஆங்கிலமும் இந்தியும் இருக்கவேண்டும் என்பது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதன்பிறகு 1963-ம் ஆண்டிலே தீர்மானம் போட்டார்கள். பதினைந்து மொழிகளும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்று. அதற்குப் பிறகு அவர்களுடைய கட்சிப் பத்திரிகைகளிலே, நம் நாடு, திராவிடநாடு போன்றவற்றிலே சட்ட மன்றத்திலே இரு மொழி, மும்மொழிக் கொள்கைபற்றி விவாதித்தபொழுது அதிலே மறக்கிய பங்கு தி.மு.க-வுக்கும் உண்டு என்ற தலையங்கமாக வந்திருக்கிறது. ஆனால் இப்போழுது அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்தபிறகு நண்பர் திரு. கே. விஜயகம் அவர்கள் ஒரு வினாவை எழுப்பினார்கள். மூன்று மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறீர்களா அல்லது இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறீர்

1968 சனவரி 23] [திரு. கோ. பூவராகன்]

களா என்று கேட்டார்கள். அப்பொழுது முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் "மூன்று மொழித் திட்டத்தை இந்தச் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்பது இன்னும் நிர்மானம் ஆகவில்லை. சர்க்காரிலே இடம், பெற்றிருக்கிறவர்கள் தனிப்பட்ட கருத்தாக இரண்டு மொழிகள் இருந்தால் போதும் என்று பேசியிருக்கிறார்கள். தனிப்பட்ட கருத்தும் சர்க்கார் கருத்தும் பல வேளைகளில் ஒன்றுகப் போவதுண்டு. இதிலே, இரண்டும் ஒன்று படவில்லை. சர்க்கார் மும்மொழித் திட்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. மும்மொழித் திட்டம் நம்மால் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு நேர்மையான முறையில் எல்லா இடங்களிலும் நிறை வேற்றப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவது இப்போதுள்ள சர்க்காருடைய போக்கு" என்று. இதிலே சொல்லியிருக்கிறார்கள் சர்க்கார் இதை வலியுறுத்துவதற்குக் கட்டுப்பட்டிருக்கிறது என்று. அதற்கு முன்னாலே 1958-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலே மொழிப் பிரச்சினைபற்றிப் பேசியிருக்கிறார்கள். "இன்றைய தினம் நிலைமையிருக்கிற முக்கியமான சட்டம், சென்னை மாநில சர்க்கார் தயாரித்திருக்கிற அறிக்கையைப் பற்றியதாகும். 'ஜெனரல் எக்ரிமெண்ட்' அதாவது பொது உடன்பாடு வேண்டுமென்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் அந்தக் கமிட்டியிலே கலந்துகொண்டு, அந்த அறிக்கைக்கு ஒப்பமும் அளித்திருக்கிறேன். ஆனால், அது தவறான முறையில் வியாக்கியானம் செய்யப்பட்டும், தப்பான முறையிலே பயன்படுத்தப் பட்டும் வருவதைப் பார்த்த என்னுடைய கொள்கையையும், கழகத் தினுடைய கொள்கையையும் விளக்கவேண்டிய அவசியம் எற்பட்டிருக்கிறது, எங்கள் கழகத்தின் சார்பிலே தரப்பட்டுள்ள நிருத்தங்கள், இந்த அறிக்கையை வலியுறுத்துவதற்காகவே அன்றி, வலுவற்றதாக ஆக்குவதற்கல்ல." என்று பேசியிருக்கிறார்கள். விவாதத்தின்போது இருமொழிகள் கொடர்ந்து இருக்கவேண்டுமென்று (ப்ரொலாங்டு பைலிங்குவலிசம்) சொல்லியிருக்கிறார்கள். மும்மொழித் திட்டமும் அவர்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மொழிக் கொள்கைப்பற்றி அவ்வப்போது சமயத்திற்குத் தகுந்தவாறு பேசப்பட்டுவருவதை நாம் பார்க்கிறோம். இப் பொழுது அண்மையில் நடந்த தமிழ் மாநாட்டிலே பேசும்பொழுது தமிழே உலகத் தொடர்பு மொழியாக ஆகவேண்டுமென்று சொன்னார்கள். அதை நாம் ஆட்சேபிக்கவில்லை. கல்வித் துறையிலும், சட்டத் துறையிலேயும் இன்னும் மற்றத் துறைகளிலும் தமிழே வர வேண்டுமென்ற கருத்தை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அதற்கு ஆட்சேபணையே இல்லை. அண்டை மாநிலங்களோடும், தேசத் தோடும் ஒன்றுபட்டு இருக்கவேண்டுமென்ற கருத்தையும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள், நம்முடைய நாடு ஒன்றாக இருக்கவேண்டும் அதற்கு ஆட்சேபணை இருக்கமுடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை கவனித்துப் பார்க்கவேண்டும். 1957--ஆம் ஆண்டிற்கு முன்னாலேயும் பின்னாலேயும் என்ன என்ன

[திரு. கோ. பூவராகன்] [1968 சனவரி 23

கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள், 1967-ஆம் ஆண்டிலே என்ன கருத்தை சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். நம்முடைய கல்வித் துறை அமைச்சர் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் என்ன மொழி வைத்துக்கொள்ளவேண்டுமென்பது பற்றி ஒரு அறிக்கை தயாரித்து மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதியை சட்ட மன்றத் தலைவரின் அனுமதியின் பேரிலே படிக்கிறேன்.

"The note circulated by the Education Ministry used the word '*link languages*'. It is obviously impossible to develop too many link languages, i.e., languages which will be spoken or understood by all the States in India. At present, English is the only language which satisfies this definition of a link language. It is quite possible that in the fullness of time, perhaps after a century or two, Hindi may take the place of English as a link language. It is definitely not correct to say that "in practice. Hindi is already largely in use as a link language for the country". It is not possible to visualise any other language in India becoming a link language. It is, therefore, necessary, firstly, to retain English as a link language or an All-India language and, secondly to develop in due course Hindi as the other link language or All-India language, without exercising any compulsion on non-Hindi States, in a manner which will not put the Dravidian Groups in a disadvantageous position.' என்று அந்த அறிக்கையிலே இருக்கிறது. இதே முறையிலேதான் பாராளுமன்றத்திலேயும் தி.மு.க. சார்பாக உள்ளவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தி கட்டாயப்படுத்தப் படாவிட்டால் ஆட்சேபிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. மனோகரன் கூட சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ராஜ்ய சபாவிலே இருந்தபொழுது, இந்தியைக் கட்டாயப்படுத்தவில்லையென்றால், இந்தியைப் படித்துக் கொள்ளுங்கள் என்று தமிழ்நாட்டிலே பிரசாரம் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்த விவாதம் சுவையாக இருக்கவேண்டுமென்பதற்காகக் குறுக்கிடுகிறேன், மறுக்கவேண்டுமென்பதற்காக அல்ல. நான் ராஜ்ய சபையிலே, இந்தி கட்டாயப்படுத்தப்படாவிட்டால் வரவேற்கிறேன் என்ற முறையிலே பேசியதாகச் சொன்னார்கள். அது ராஜ்ய சபை பேச்சு அல்ல. பத்திரிகை நிருபர்கள் என்னிடத்திலே வந்து கேட்டபொழுது இந்தி கட்டாயப்படுத்தப்படாவிட்டால், ஆட்சி மொழியிலிருந்து அது அகற்றப்பட்டால், இந்திக்கு எந்தவிதமான சலுகைகளும் அளிக்கப்படாமல் இருந்தால், அதைப் பிரசாரம் செய்கிறேன் என்று, அவர்கள் இதை சாலஞ்ஜ்-ஆக எற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டபொழுது "I take up the challenge" என்று சொன்னேன்.

திரு. கோ. பூவராகன்: திரு. மனோகரன் அவர்களும் அப்படித் தான் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும் அதை யொட்டித்தான் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 'இந்தி ஆட்சி மொழியிலிருந்து அகற்றப்பட்டால். . .' என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : முதலமைச்சர் அவர்கள் ஆட்சிமொழியிலிருந்து அகற்றப்பட்டால் என்ற கொள்கையை இப்பொழுதான் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தி ஆட்சிமொழி அந்தஸ்தைப் பெறுவதற்குச் சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்ற நேருஜியின் வாக்குறுதியைச் சட்டமாக்க வேண்டுமென்று ஆக்கினேம். அந்தச் சட்டத்தை முதலமைச்சர் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் அதோடு வந்த தீர்மானத்தை அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. திடீரென்று கூட்டப்பட்டிருக்கிற இந்தக் கூட்டத்தில் . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் பூவராகன் அவர்கள் ஐந்தாண்டுகள் அமைச்சராக இருந்தவர்கள். அவர்களுடைய வார்த்தைக்குச் சமூகத்திலே இடம் கிடைக்கும். ஆகவே தவறான கருத்துக்களை அவர்கள் சொல்லும்பொழுது குறுக்கிட வேண்டியிருக்கிறது. நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டத்தை வரவேற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் எங்களுடைய லட்சியத்திற்கு அது ஏற்றதாக இல்லையென்று.

திரு. கோ. பூவராகன்: டெல்லியிலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கருத்தை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். எந்தக் கருத்தையும் மாற்றிக் கொள்வதுபோல் இப்பொழுதும் இதையும் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது சம்பந்தமாக பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்; பிரதம மந்திரியிடமும் சொல்லியிருக்கிறேன். ஆட்சி மொழிச் சட்டம் வந்தால் ஒத்துக்கொள்வீர்களா என்று கேட்டார்கள். கழகத்தின் கருத்துப்படி தமிழ்நாடு அதை ஒத்துக்கொள்ளாது என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் 'sizable section of Tamil Nad may be sativier என்று சொன்னேன். சைசபிள் என்பது தங்களையும் குறிப்பிடும்.

திரு. கோ. பூவராகன் : என்னுடைய திருத்தத் தீர்மானத்திலே அது இருக்கிறது. எல்லோரையும் கலந்துதான் முடிவுசெய்யப்படவேண்டும். இது ஒரு தனிப்பட்ட கட்சியினுடைய பிரச்னை அல்ல. எல்லோரும் சேர்ந்து முடிவுசெய்யப்பட வேண்டியது. இப்பொழுது இந்த கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. இங்கே 15 நிமிஷத்திலே பேசி இந்த மொழிப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியும் என்று சொல்லிவிட முடியாது.

இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்னால் என்ன தீர்மானம், எப்படிக் கொண்டு வருவது என்பதைப் பற்றியெல்லாம் அரசாங்கத் தரப்பில் யோசனை செய்யாமல் கூட்டத்தைக் கூட்டிவிட்டார் நண்பகல் 12-00

[திரு. கோ. பூவராகன்] [1968 சனவரி 28

கள். திடீரென்று தீர்மானத்தைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தீர்மானத்தை இன்றைய தினம் வைத்திருப்பதாக அறிகிறேன். இதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு மேலே இருந்து யாரோ ஒருவர் வழி வகை செய்து தருவதாகப் பொது மக்களிடையே பரவலான கருத்து நிலவுகிறது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எனக்கு மேலே இருந்து ஒருவர் சொல்லுகிறார் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது (தலையைக்காட்டி) இங்கேதான். (ஆரவாரம்)

திரு. கோ. பூவராகன் : மேலே இருப்பதைத் தூண்டி விடுவதற்குச் சூத்திரதாரி ஒருவர் இருக்கிறார் என்னு—நான் சொல்ல வில்லை—படித்தவர்கள், அறிஞர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். அது எப்படியிருந்தாலும், இந்தக் கூட்டத்தை இவ்வளவு அவசர மாகக் கூட்டி இவ்வளவு குறுகிய காலத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றி முடிவு எடுக்க வேண்டிய நிலையைப் பார்க்கும்போது சரி யான முறையில் இது அமைத்திருக்கிறதா என்று முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதை நல்ல முறையில் பரிசிலனை செய்து உகந்த வழி வகைகளைக் காணவேண்டும். அந்த வகையிலேதான் என்னுடைய திருத்தத் தீர்மானத்தைக் கொடுத் திருக்கிறேன். ஆனால் இங்கு தரப்பட்டுள்ள அரசாங்கத் தீர் மானத்தைப் பார்க்கும்போது 'இந்தி வேண்டியதில்லை' ஆங்கிலமும் தமிழும் இருந்தால் போதும் என்ற நிலைதான் தெரிகிறது. இது நம்முடைய நாடு மட்டும் தனியாக இருந்து விட்டால் போதும்; மத்திய அரசாங்கத் தொடர்பு வேண்டியதில்லை' என்ற நிலைக்குக் கொண்டு போய்விடுமோ என்று எண்ண வேண்டிய நிலை ஏற்பட் டிருக்கிறது.

மத்திய அரசு இயற்றியிருக்கின்ற விதிகளிலே சாதக பாதகங் கள் இருக்கலாம். அதனால் ஏற்படக்கூடிய பாதகங்களை நீக்கிக் கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன, வாய்ப்புக்கள் இருக் கின்றன. வாய்ப்புக்கள் எல்லாம் போயவிட்டன என்று சொல்ல முடியாது. மைசூர் மாநில முதல்வர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்கள் 'பாதகங்கள் இருந் தால் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லியிருக்கிறார் கள். மற்றும் பல தலைவர்களும் அந்தக் கருத்தைச் சொல்லியிருக் கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் இருக்கின்ற முக்கியஸ்தர்கள், கட்சியில் இருப்பவர் கள், படித்த பேராசிரியர்கள், மற்றும் யார் யார் மொழிக் கொள்கையை வழி வகுக்க யோசனை சொல்லுவார்களோ அவர் களுடைய எண்ணங்களையெல்லாம் அறிந்து கொண்டு அதற்குப் பிறகு பக்கத்தில் இருக்கும் இந்தி பேசாத தென்னக மாநிலங் களோடு தொடர்பு கொண்டு கலந்து பேசி, மூன்றாவது படியாக தென் மாநிலங்கள் தவிர வட மாநிலங்களில் இந்தி பேசாத மாநிலங்கள் தவிர வட மாநிலங்களில் இந்தி பேசாத மாநிலங் களோடு தொடர்பு ஒருமித்த கருத்துக் கொண்டு நல்ல முறையில் வழிவகை காண முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால்

1968 சனவரி 23] [திரு. கோ. பூவராகன்]

அந்த முறையில் ஈடுபடாமல், நம்முடைய மாநிலத்தைப் பொருத்த மட்டில தம்மும்ஆ ங்கிலமும் பாதும், மறறவாகள் எபபடி வேண்டுமானுமம வைத்துக் கொள்ளட்டுமம எனற முறையில் இன்று தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அவர்கள் டெல்லிக்குச் சென்றால் தேசிய ஒற்றுமையில் நம்பிக்கை யுள்ளவர்கள், அக்கறையுள்ளவாகள் என்ற முறையில் பேசுகிறார் கள். ஆனால் தமிழ் நாட்டில் பேசும்போது பேச்சு மாறுவதைப் பார்க்கிறோம். எது எப்படி இருந்தாலும நாட்டின் ஒற்றுமை யைக் காப்பாற்றுகின்ற பொறுப்பைப் பார்க்கும்போது, மற்ற இந்தி பேசாத மாநிலங்களின் கருத்தையும் அறிந்து, ஏற்படக் கூடிய பாதகங்களைக் களைவதற்கு நல்ல முறையில் முயற்சி எடுத்துக் கொண்டால் நல்ல வெற்றி கிடைக்குமென்ற நம்பிககை எங்களுக்கு இருக்கிறது, முதலமைச்சர் அவாகளுககும அந்த நம்பிககை இருககும். அதை விட்டு ஏதோ காரணததால, ஆஙகில மும், தமிழும கறறால போதும, வேறு மொழி கறக வேணடியதலல என்று கூறுவது மேலும் குழப்பமான சூழ்நிலையை உருவாக்கு வதாகத்தான் அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் அமைதியான சூழ்நிலை அமைய வேண்டுமென்ற நலல நோககதோடு கொடுத தருக்கும் தீர்மானமாக இது அமையவில்லை. இது வேறு வகமாகப போயக கொண்டிருகிறது. இது மதறய அரசாஙகத்தையமல பழிபோட வேண்டுமென்ற நிலையிலேயே அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக, சமீபத்தில் உலகத் தமிழ் மாநாடு நடத்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். தபால் தலை வெளியிட்டதைப் பொருத்தவரை, இங்கிருநது எப்படி அனுப்பினார்களோ அப்படியே போட்டதாக மதறய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 'திருக்குறள்' என்ற எழுத்துக்கள் தமிழிலே இருக்கின்றன. 'தமழநாடு' என்பது இருகிறது. ஒரு மாதத்திற்கு முன்னாலே அதன் மாதிரி வெளியிடப்பட்டிருக் கிறது. அது முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரவில்லை என்று சொல்ல முடியாது. தினம் தினம் முக்கியமான குறிப்புகளை எல்லா அமைச்சர்களுக்கும் அரசாங்கத் துறையில் தயாரித்து அனுப்புகிறார்கள். இங்கிருந்து அனுப்பும்போது அதிலே ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தால் அதைத் திருத்தி மறுபடியும் அனுப்பி யிருக்கலாம். மத்திய அமைச்சர் சொல்வதைப் பார்க்கும்போது 'முதலமைச்சர் அவர்கள் எப்படி அனுப்பினார்களோ அதிலே ஒரு சிறிதும் மாற்றம் செய்யாமல் வெளியிட்டிருக்கிறோம்' என்று கூறு கிறார்கள். இங்கேயே நமக்கு அழைப்புகள், மற்றவைகள் அனுப் பும்போது, தமிழிலே 'தமிழ் நாடு' என்றும் ஆங்கிலத்திலே 'மெட் ரஸ் ஸ்டேட்' என்றும் போட்டு அனுப்புகிறார்கள். ஸ்டாம்பிலே 'தமிழ்நாடு' என்று போட்டதை 'மெட்ரஸ் ஸ்டேட்' என்று அவர்கள் மாற்றவில்லை. அதிலே இந்தியிலே எழுதப்பட்டிருந்தது கூட 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதின் மொழி பெயர்ப்பு அல்ல. 'இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு' என்றுதான் இந்தி

[திரு. கோ. பூவராகன்] [1968 சனவரி 23

யில் போட்டிருந்தார்கள். இதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இந்த மொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்தில் இருந்த போது, நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் முதலமைச்சர் அவர் களுடைய கருத்துக்களை அறிய வேண்டுமென்பதற்காகத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது தொடர்பு கொள்ளாமல் வேறு விதமாக சாக்குப்போக்குச் சொல்லிவிட்டார்கள் என்ற நிலை உலவி வருவதைப் பார்க்கிறோம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த மொழிச் சட்டம் சம்பந்தமாக என்னிடத்தில் கருத்தறிய வேண்டுமென்று பிரதம மந்திரி அவர்கள் முயற்சி எடுத்ததும் இல்லை, அப்படி எடுத்த முயற்சியை நான் தட்டிக் கழித்ததும் இல்லை. வேறு பல பிரச்சினை களைப்பற்றித் தொலைபேசி மூலமாகப் பேசிக் கொண்டோம்.

திரு. கோ. பூவராகன் : எது எப்படியிருப்பினும், தமிழகத் தைப் பொருத்தவரை இருக்கக்கூடிய ஒரு பொதுவான கருத்தை அறியும் வகையில் அன்றையதினமே அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கலாம். இந்தச் சட்ட மன்றத்தைக் கூட்டியிருக்க லாம். அன்றையதினமே முதலமைச்சர் அவர்கள் சட்டசபைக் கூட்டத்தைக் கூட்டி விளக்கத்தைக் கொடுத்து அந்தச் சட்டத்திலே இருந்த பாதகமான திருத்தங்களுக்கு எதிர்ப்பு சொல்லியிருப்பார்களேயானால் அந்தச் சட்டம்கூட நல்ல முறையில் அமைந்திருக்கக்கூடும்.

இன்றையதினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக் கிற சட்டத்தைப் பொருத்த வரையிலே, கட்சிப் போக்கிலே எப்படிச் சொல்லிக் கொண்டிருந்தாலும் பொதுவாக எல்லோருக் கும் திருப்திதான். அதையொட்டி வந்த தீர்மானம் சரியான முறை யில் இல்லாமல் பாதகமாக உள்ளது. அதைத் திருத்த வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் போக்கவேண்டும். அதற்கு தனிப்பட்ட கட்சியோ, தனி நபரோ மட்டும் முயற்சி எடுத்துக் கொண்டால் போதாது. எல்லாத் தரப்புக் கருத்துக்களையும் அறிந்து முடிவு எடுக்கவேண்டும். அந்த வகையிலே எங்களு டைய கட்சியின் சார்பில் நானும், திரு. கருத்திருமன் அவர்களும் திருத்தத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். இந்தத் தீர்மானங் களிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை விட்டு விடவில்லை. அரசாங்கத்திற்கு யோசனை கூறக்கூடிய அளவில் சுமுகமான முறையிலே எங்களுடைய தீர்மானங்கள் அமைந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இரண்டு தீர்மானங் களும் நல்ல நோக்கத்தோடு தரப்பட்டதாகச் சொன்னார்கள். இரண்டு தீர்மானங்களுக்கிடையே சிறு வித்தியாசம் இருக்கிறது. முதல் தீர்மானத்திலே எல்லாக் கட்சியையும் சார்ந்தவர்களைக் கொண்ட ஹை லெவல் கமிட்டியை இந்திய அரசு கூட்ட வேண்டு

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

மென்றிருக்கிறது. இரண்டாவது தீர்மானத்தில் அத்தகைய ஒரு கமிட்டியை நாங்கள் கூட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். இந்த இரண்டிற்குள்ளே அவர்கள் ஒத்துப் போவார்களா?

திரு. கோ. பூவராகன்: இந்தத் இரண்டு தீர்மானங்களும், மத்திய அரசு என்னென்ன காரியங்களில் ஈடுபடவேண்டும், மாநில அரசு என்னென்ன காரியங்களில் ஈடுபடவேண்டும் என்று கூறியிருக்கிறோம். அவர்கள் மட்டும் முயற்சி எடுத்தால் போதாது . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: சொல்லப்பட்டிருக்கிற பிரச்னை, அத்தீர்மானத்தின் மூலம் ஏற்படக் கூடிய பாதகங்களை, சங்கடங்களை நீக்க எல்லாக் கட்சிகளையும் ஒன்று கலக்க வேண்டும் என்பது தீர்மானத்தின் அடிப்படை. அதற்காக ஒரு 'ஹை லெவல் கமிட்டி' அமைக்கவேண்டுமென்பது, இந்திய அரசு அதை அமைக்கவேண்டுமென்பது எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய தீர்மானம். **'This House'** என்று தாங்கள் சொல்கிறீர்கள். இதிலுள்ள வித்தியாசத்தை நீக்கிக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. கோ. பூவராகன்: இதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை. மத்திய அரசாங்கம் எல்லா மாநிலங்களிலும், இந்தி பேசாத மக்களுக்கு அதிலுள்ள சங்கடங்களை அறிந்து கொள்வதற்கு ஒரு உயர் தரக் கமிட்டியை நியமிக்கவேண்டுமென்பது. அவர்கள் அதை பரிசீலித்து முடிவு எடுக்கவேண்டுமென்பதாகும், என் தீர்மானம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இங்குள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து அதில் முக்கியஸ்தர்கள் எல்லாம் பங்கு கொண்டு அதன்மீது பேசி முடிவு எடுத்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிப்பது என்பது என் தீர்மானம். நான் கொண்டு வந்திருக்கும் தீர்மானம் மத்திய அரசு அமைக்க இருக்கிற கமிட்டிக்கு உதவியாக இருக்குமே தவிர வேறுவிதமாக இருக்க முடியாது. இந்த இரண்டு தீர்மானங்களும் ஒன்றோடொன்று இணைந்திருக்கும் தீர்மானங்களாகும், இவை பிரிந்திருக்கும் தீர்மானங்கள் அல்ல. இவற்றில் நிறைய ஒற்றுமை இருக்கிறது. நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இன்றுள்ள பிரச்னை, முதல் அமைச்சர் அவர்கள் இதில் நல்ல வழி வகை காணவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் முயற்சி எடுப்பார்கள் என்றும், எல்லாத் தலைவர்களும் கூடிப் பேசி இந்தியால் ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை தீர்த்து தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும், அதற்கான வழி வகைகளைக் காணவேண்டுமென்றும் எல்லோருடைய ஆலோசனைகளையும் கேட்டு அந்த ஆலோசனைகளின்படி, ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு தமிழும் ஆங்கிலமும் நீடித்தால் போதும், இந்தி வேண்டியதில்லை என்று, தீர்மானம் கொண்டு வந்திருப்பதை வற்புறுத்தக் கூடாது என்றும் எங்கள் தீர்மானத்தை நல்லமுறையில் ஏற்றுக் கொண்டு இதற்கு வழிவகை காணவேண்டுமென்றும் கூறி இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

[1968 சனவரி 23

திரு. இராம. அரங்கண்ணல்: ஆன் ஏ பாயிண்ட் ஆஃப் இன்பர் மேஷன். தமிழகத்து மாணவர்கள் இந்தி படிக்கவேண்டுமா, வேண்டாமா? எது காங்கிரஸ் கட்சியின் கொள்கை என்று திரு. பூவராகன் அவர்கள் கருதுகிறார்கள்? (பதில் இல்லை.)

திரு. பி. கே. மூக்கையா தேவர்: தலைவர் அவர்களே, இந்த சபையில் நம் மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின்மீதும் அதற்கு திருத்தமாகக் கொண்டு வந்திருக்கிற திருத்தங்களின் மீதும் குறிப்பாக எங்கள் தரப்பபிலிருந்து டாக்டர் ஓராண்டே அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தின்மீதும் சில வார்த்தைகள் கூற லாமென்று விரும்புகிறேன். இந்தக் கூட்டம் இந்திய நாட்டின் சரித்திரத்திலேயே மிக முக்கியமானதொரு கூட்டமாக கருதப் படுகிறது. இந்தியா ஒரே இந்தியாவாகத்தான் இருக்கவேண்டும். அதற்காகத்தான் நம் முன்னோர்கள் பலரும் தங்கள் உடல், பொருள், ஆவி சகலத்தையும் தியாகம் செய்து அவர்கள் தியாகத் தின் மீது கட்டப்பட்டதுதான் இப்போதிருக்கிற ஆட்சி, மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கிற ஆட்சி. இப்போது நடக்கிற அந்த ஆட்சியை அமைக்க எவ்வளவு தியாகங்கள் புரிந்தோமோ அதைக்காட்டிலும் அதிகம் தியாகம் செய்து இன்று நாட்டைக் காக்கவேண்டிய ஒரு கடமையில், ஒரு நிர்பந்தத்தில் நாம் வைக் கப்பட்டிருக்கிறோம். அந்நியர்கள் வந்து இந்த நாட்டைப் பிடித்து வியாபாரிகளாக வந்த அவர்கள் அரசியல்வாதிகளாகி உலகத்திலேயே தாங்கள்தான் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்டுவதற்கு முன்னால் இந்த நாடு பல பாஷைகள், பல பழக்க வழக்கங்கள், பல கலாசாரங்கள் நிரம்பிய நாடாக இருந்த காலத்தில் இதை ஒழுங்கு படுத்த அந்நியர்களுக்கு ஏறக் குறைய 90 ஆண்டுகள் ஆயிற்று. அப்படி 90 ஆண்டுகளாக எல்லா வற்றையும் ஒன்றுதிரட்டி, ஒருமுகப்படுத்திய அந்த நிலையில் ஏக இந்தியா என்ற நிலையை "யூனிட்டி இன் டைவர்சிடி" என்ற நிலை யை வெள்ளையரே உருவாக்கித் தந்தார்கள். அப்படி உருவாக்கப் பட்டதன் பிறகு நாமே நம் நாட்டை ஆளவேண்டும் என்ற நிலையை உருவாக்கி அதற்காக போராட்டங்கள் நடத்தி, வெள்ளையனே விரட்டுவதற்காக இந்த நாட்டு மக்கள் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளை களைப் போல் இருந்தார்கள். 1947 ஆகஸ்ட் மாதம் 14-ம் தேதி இரவு வரையில் இந்த நாடு ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளாக, பல பாஷைகள், பல கலாசாரங்கள், பல பழக்க வழக்கங்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் இப்படி பல்வேறு முறையிருந்தா லும் அக்கூனே பேர்களும் ஒருமுகப்பட்டவர்களாக இருந்தார்கள். அந்த நிலையில் இந்த நாட்டை ஒரு சுதந்திர நாடாக அக்க பாடு பட்டு அதை உருவாக்கிக் கொடுத்தார்கள். யாரிடத்தில் அந்தப் பொறுப்பைக் கொடுத்தோமோ அவர்கள், அந்தப் பொறுப்பை பெற்றவர்கள், அந்த வாய்ப்பைப் பெற்றவர்கள் இந்த நாட்டை கட்டிக் காப்பதற்குப் பதிலாக, சுதந்திரத்தைப் பேணிக் காப்பு தற்குப் பதிலாக, ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக சாமி முன் உடைத்த தேங்காய் எப்படியிருக்குமோ அதேபோல் சில் சில்லாகிக்

1968 சனவரி 23] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

கொண்டு வருகிற காட்சியை இன்று நாம் பார்க்கிறோம். இன்று நாம் கடைசியாக பேசுகிற நிலையில் மிகவும் வயிற்றெரிச்சலோடு இந்த நாடு நல்ல முறையில் ஒரு நல்ல நாடாக இருக்குமா என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இன்றையப் போக்கைப் பார்க்கும் போது இதில் நம் முதல் அமைச்சர் அவர்கள், ராஜாஜி போன்ற வர்கள், தேசிய சக்தி வாய்ந்தவர்கள் அத்தனை பேர்களின் பொறுமை காரணமாக இன்று நாடு நாடாக இருக்கிறது. இல்லா விட்டில் பல நாடுகளாகியிருக்கும். அதை சம்பந்தில் பார்த்தோம். இதற்கு முன்னாலெல்லாம் எச்சரித்தபோது, அப்போது சொல்கிற போது வெறும் வார்த்தை என்று நினைத்தவர்கள், வெறும் தீர்மானங்கள் என்று நினைத்தவர்கள், அவர்கள் சிறுடை-களை வைத்து பார்க்கும்போது மூன்று நான்கு தினங்கள் கமிமகத்தில் மத்திய மாசாங்கம் இல்லை என்பது நன்றாகத் தெரிந்திருக்கும். நாட்டைப் பிரிக்கும் கொள்கைதான் முக்கியம். அதுதான் முச்சு பேச்சு, அதுதான் உயிர் லட்சியம். அதுதான் வாழ்நாளின் லட்சியம் என்று நாம் நினைத்திருந்தால் அப்படியாவதற்கு கொம்ப நாளாகியிருக்காது. அது அல்ல நம் கொள்கை. இந்த நாட்டில் பல லட்சியங்கள், பல கொள்கைகள் இருந்தபோதிலும் இந்த நாடு ஒரே நாடாக இருக்கவேண்டும். பாகிஸ்தான் கூட சேர்ந்து ஒரே நாடாக இருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டவர்கள் இன்று நாட்டில் இன்னும் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள்.

1947-ல் சுதந்திரம் கிடைக்கும்போது இந்த நாட்டு மக்கள் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளைப்போல் இருந்தார்கள். அதற்கு ஒரு வரலாற்றுக் முன்னால் அரசியல் நிர்ணய சபை உருவாக்கப் பட்டது. இந்த நாட்டிலுள்ள மக்கள் எல்லோருக்கும் சம வாய்ப்புக் கொடுக்கவேண்டும். எல்லா மக்களுக்கும் ஒரே நிலை வருக்கவேண்டும். எழை எளியவர்கள் என்றில்லாமல், மத பேதம் இல்லாமல் பாஷை வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் சம வாய்ப்பு, சம சந்தர்ப்பம் நல்ல முறையில் கிடைக்கவேண்டும். அவ்வளவு பேர்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற காரணத்தான் அரசியலமைப்புச் சட்டம் சட்ட மாக அக்கப்பட்டு அன்று கொண்டு வரப்பட்டது. அரசியல் நிர்ணய சபையில் அதை ஆராய்ந்து பார்க்கும்போதுள்ள நிலையையும், தற்போதைய நிலையையும் பார்த்தால் கால மாறுகல் எவ்வளவோ அகியிருக்கிறது. அரசியல் நிர்ணய சபை செய்தது தவறு என்று சொல்லக் கூடிய அளவில் கால மாற்றம் இன்று ஏற்பட்டிருக்கிறது. அந்த காலமாற்றத்தின் காரணமாகவும், அன்று ஆட்சியில் இருந்தவர்கள் செய்த பல தவறுகள், அவர்களின் பல கொள்கைகள், கால தாமதம், போன்றவைகள் நாட்டை விழுங்கும் நிலையில் உள்ளன. பாஷை மட்டுமல்ல, பல பிரச்சினைகள் நாட்டை கவ்விப் போக காத்திருக்கின்றன. அரசியல் நிர்ணய சபை அமைக்கப் படுவதற்குமுன் வெள்ளையன் போக வேண்டுமென்ற ஒரே நோக்கம்தான் முக்கியமாக இருந்த நோக்கில் ஒரு 'ஸைட் இஷ்யுவாக' அப்போமொழி தேசியமொழி என்ற நிலையில் இந்திக்கு ஒரு வோட் வித்தியாசத்தில் பெரிய மதிப்பு கொடுக்கப்பட்டது. இன்றையதினம் பார்க்கும்பொழுது இந்தியானது சாதாரண

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [1968 சனவரி 23

நிலையிலே உள்ள மக்கள் ஒத்துக்கொள்ள இயலாத நிலையில், குறிப்பிட்ட கூட்டம் மட்டும் பேசக்கூடிய நிலையில் இருக்கிறது. அந்த பாஷையைப் பேசுகின்றவர்கள் நாட்டை ஆள்கிறார்கள் என்ற தத்துவத்தைப் பார்க்கின்றோம். காலப்போக்கிலே எவ்வளவு வாய்ப்பை, எவ்வளவு வசதியை, எவ்வளவு அதிகாரத்தைப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவையும் செய்து, எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டுமோ அவ்வளவு பணத்தையும் செலவழித்து, அதற்குப்பிறகு பார்க்கும்பொழுது அது அந்தஸ்தை எட்டவில்லை. மக்களின் மனத்திலே பதியவில்லை. மக்கள் மனத்தில் வெறுப்பை உண்டாக்கியது. அந்நிய பாஷை என்ற அளவிற்கு மக்கள் அதை கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா ஒரு நாடு அதைப் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள். சென்ற சட்ட மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். மதிப்பிற்குரிய லோகியா போன்றவர்களிடம் எதிர்க்கட்சியிலுள்ள நாம் ஒன்றுபட்டு மக்களுக்கு நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டாமா ? இன்றைக்கு இந்த மொழிப்பிரச்சினையிலே நாடே துண்டுபட்டுப் போகக்கூடிய நிலையிருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

இங்கிருந்து கவர்னர்களாக வேலைபார்க்கச் செல்பவர்களைக்கூட வயிற்றுப்பிழைப்புக்காக வந்தவர்கள் என்று சொல்லும் அவமானத்தை நாம் நேரடியாகப் பார்த்தோம். யு.பி. தான் நாட்டை ஆண்டுகொண்டு தங்கள் பாஷையை திணிக்கப்பார்க்கிறார்கள். இதே பேரவையிலே கனம் பக்தவத்சலம் அவர்கள் இருந்தபொழுது இந்த விவகாரம் நிகழ்ந்தபொழுது மாணவர்கள் சுட்டுத் தள்ளப்பட்டதுபற்றி, பேசும்பொழுது, "பக்தவத்சலம் அவர்கள் சரிகட்டிப் பேசுகிறார்கள், இதற்குக் கிடைக்கக்கூடிய மரியாதையாக அவர்களுக்குக் கவர்னர் பதவி கிடைக்கும்" என்று கூறினேன். சட்டமன்றப் பேச்சு அங்கே இருக்கிறது. (கை தட்டல்) அடுத்த வரியைச் சொன்னேன், " மாணவர்களை முரடர்கள், முட்டாள்கள் என்று கூறினார்கள் ; அந்த மாணவர்கள் தணிந்து செயலாற்றியதன் விளைவாகத்தான் வடக்கே போகின்ற போது கனம் பக்தவத்சலம் அவர்களே என்று உட்கார வைத்துப் பேசுகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறேன். அதே நிலைதான் நீடித்திருக்கிறது. அதைவிட அதிகப்பட்டு இருக்கிறது.

திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள், இந்த மாதிரி ஒரு தீர்மானம்போட்டு, கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியின் மூலமாகச் செய்யலாம் என்று. கமிட்டி அமைக்கத் தேவையில்லை. திரு. நிஜலிங்கப்பா அவர்கள் காங்கிரஸ் தலைவர். மாநாடு நடந்து கொண்டிருக்கிறது, அதை நிறுத்துங்கள் என்று திரு. நிஜலிங்கப்பா தாழ்மையாக, 'ஹம்பிள் பெட்டிஷன்' என்பதுபோல் கூறினார்கள் அதை ஏனென்று கேட்க நாதியிருந்ததா ? இதற்கு மேல் ஒரு கமிட்டியால் எவ்வாறு முடியும்? திருமதி இந்திரா காந்தி அவர்களே திரு. காமராஜ் அவர்களுக்குப் பதிலாக

1968 சனவரி 23] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

தென்னூட்டிலிருந்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென் பதற்காக திரு. நிஜலிங்கப்பா அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவருடைய ஆளாகிய திரு. நிஜலிங்கப்பாவே கூறியும் கேட்க நாதியில்லாத நிலைமையைப் பார்க்கும்பொழுது நல்லெண்ணம் என்பது கடுகளவும் அவர்களுக்கில்லை என்பது தெளிவாகிறது. தேசம் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அந்த வெறிதான் இருக்கிறது. ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்ற எண்ணம் முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. உதாரணத் திற்கு ஒன்று சொல்லுகிறேன். சமீபத்தில் ஒரு மாணவர் என்னைக் கேட்டார். "நாங்கள் சிந்திய இரத்தத்தின் காரணமாகத்தானே நீங்கள் சட்ட மன்றத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அமைச்சரவை அமைத்திருக்கிறீர்கள். இந்த மொழிக்கொள்கை பற்றி உங்கள் திட்டவட்டமான கருத்து என்ன? ஏன் அதை வெளிப்படுத் தாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். நான் அந்த மாணவரிடம் "நீங்கள் கேட்பது உண்மைதான் என்று பாராட்டி விட்டு, இந்த அமைச்சரவை மாணவர்கள் கொட்டிய இரத்தத்தின் பயனுக, கொடுத்த உயிரின் பயனுகத்தான் ஏற்பட்டது. நீங்கள் கொட்டிய இரத்தத்தின் பலன் நம்மிடத்திலே அதிகார சக்தியாக அமைந்திருக்கிறது. அந்தச் சக்தியை நீங்கள் நல்லமுறையில் பயன்படுத்த வேண்டாமா?" என்றேன்.

மனிதனுக்கு பாம்பு விஷம் தீண்டினுல் என்னவாகும்? பாம்பின் விஷம் இருதயத்திற்குச் செல்லும். பிறகு பிராணன் பிரியும். அந்த நிலையில் சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். 25 ரூபாய் கூலியாகக் கொடுத்தால் இந்தியைப் படித்துவிடு வார்கள் என்று அலட்சியமாகச் சொல்லுகிறார்கள். மத்திய சர்க்காரிலே தமிழகத்தைச் சேர்ந்த 'எக்ஸைஸ் டிபார்ட் மெண்டிலே', 'இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்டிலே' பணியாற்று பவர்கள் 61-ஆம் வருஷத்திற்குள், 45 வயதை எட்டாவிட்டால் உடனே பரீட்சையை எழுதவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அது இப்பொழுது என்னிடத்திலே இல்லை. ரூமிலே இருக்கிறது. பாம்பின் விஷமாக இன்றையதினம் தமிழகத்தை, இந்தியைப் புகுத்தப்பட்டச் சட்டமானது கவ்விக்கொண்டிருக்கிறது. ஆகை யால்தான் நமது முதலமைச்சரவர்கள் அழகாகச் சொன்னார்கள், எத்தனை பேச்சுக்கள் இருந்தாலும் மாணவர்கள் கேட்கும் பொழுதும் திட்டவட்டமாக அவர்களுக்கு ஒன்றைக் கொடுங்கள் என்று. இரண்டு பாஷைகள்தான் இருக்கவேண்டுமென்றும், ஒன்று தாய்மொழியாகிய தமிழ். தாய் என்பதை யாரையும் கேட்டுக் சொல்லத் தேவையில்லை. தாய், தாய், தாய் என்று அழைக்க யாரையும் பர்மிஷன் கேட்கத்தேவையில்லை. இந்தத் தமிழ்மொழி தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலும், எலிமெண்டரி ஸ்கூல்களிலும் பரவியிருக்கும் அளவிற்கு அந்தமொழி சாரசரியாக பரவியிருக் கிறதா? ஒரு குறிப்பிட்ட கூட்டம், ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் பேசப்படும் கலப்புமொழியாக இருக்கும் ஒன்று இந்தி. நேரு போன்றவர்கள் பேசுகின்ற மொழியாக இருக்கிற காரணத்

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [1968 சனவரி 23

தினுல் அதை எல்லோருமே ஏற்றுக்கொள்ளவேண்டுமா? நாம் நலலதை நல்லது என்றும், கெட்டதைக் கெட்டது என்றும் சொல்கிறோம். ஆகையால்தான் இதை நாம் எதிர்க்கிறோம். நமக்கு இரண்டு பாஷைகள்தான் தேவை. ஒன்று தமிழ், மற்றொன்று ஆங்கிலம். தாய்மொழி தமிழ். இரண்டாவதான ஆங்கிலம் அகில இந்தியத் தொடர்பிற்காக.

நான்கு மாதங்களுக்கு முன்னுலே, கல்கத்தா, டெல்லி போன்ற இடங்களுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் சென்று சுற்றிப்பார்த்து விட்டு வந்த நேரத்தில் அகில இந்தியத் தலைவர்களில் கொஞ்சம் பேர் சொல்லியிருக்கிறார்கள்:

"Are you going to be an eye-witness to the whole scene, the chaotic condition that is prevailing in India? What is your answer?"

டெல்லி மன்றத்தில் திரு. மாரிசாமி அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். மதிப்புமிக்க நமது ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் இராஜாஜி அவர்களைச் சந்தித்து, முதலமைச்சர் அவர்களைப்பற்றி, "நான் முலதமைச்சரவாகன தேர்தல பார்க்கும் முன்னுல் சொம்ப கடுமையானவர், சொம்ப கோபக்காரர், வைகமானவர் போன்று இருப்பார் என்று நினைத்தேன். ஆனுல், நேரில் பார்க்கும்பொழுது காந்தியைப் பார்க்கும் ஞாபகம்தான உண்டாகிறது" என்று சொன்னர். (ஆரவாரம்) கூட்டத்திலும் பகிரங்கமாக,

"I accept your leadership, I am ready to follow you"

என்று கூறினர். யார்? திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், அவர் தமிழ்நாட்டுக்காரரா? அல்லது எந்தக் கட்சிக்கும் உரியவரா? அல்லது சாதாரண தியாகத்தைச் செய்தவரா? முதலமைச்சரவர் களைப்பற்றி பெருமைக்காக—அமைச்சர் பதவி கொடுப்பார்கள் என்பதற்காக—நான் இப்படி பேசவில்லை.

திரு. கே. வினுயகம்: அப்படிச் செய்யமாட்டார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: தேவையில்லாத வேலை. (ஆரவாரம்) அந்த அளவுக்கு உண்மையிலேயே அரசியல் அறிவும், ஜன்நாயக அறிவும் காத்து நிற்கக்கூடிய கட்சி இங்கே இருக்கிறது. இன்றையதினம் எல்லையிலே தொல்லையிருக்கிறது. இந்த இடத்தில் வந்துகூட கட்சியைத்தான் முக்கியமாக வைத்து இங்கு ஒரு கமிட்டி, அங்கு ஒரு கமிட்டிவேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியினர். எங்கு கமிட்டி போடப்போகிறார்களோ? எதற்காக? காலதாமதம் எதற்கு? நான் சொல்லியாக வேண்டிய காலம் வந்தாகி விட்டது. அதன் காரணமாகத்தான் சொல்லவும் வந்தாகி விட்டது. இந்திய தேசிய வரலாற்றை எடுத்துப்பார்க்கிறபொழுது அதிலே செய்யப் பட்டிருக்கிற தியாகம் உங்களுக்கு நினைவில் வரவில்லையா என்று கேட்கிறேன். இந்த தேசத்தைக் காப்பாற்றவேண்டும். தேசத்தில்

பிற்பகல் 12-30

1968 சனவரி 23] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

இருக்கிற அரசியல் கட்சிகளுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும். அதிலே இருக்கிற ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும். அப் பொழுதுதான் இங்கு எதிர்க்கட்சியாகவாவது இருக்க முடியும். (ஆரவாரம்). நீங்கள் உங்களுடைய கருத்தைத் திட்டவட்டமாகச் சொல்லுங்கள்; மாணவர்களுக்கு தெளிவாக உங்கள் திட்டத்தை —கொளகையை—சொல்லுங்கள என்று என்னுடைய சக உறுப் பினர் அவர்கள் பேசினார்கள். நான் ஒன்று சொல்லுகிறேன். இன்று திட்டவட்டமாக இருமொழிகள் என்று சொல்லியாகி விட்டது. சொல்லியதற்குபபிறகு நீங்கள் பார்த்துக் கொள் ளலாம். இந்த மந்திரி சபையைப் பார்க்கிறபொழுது பெருமை யாக இருக்கிறது. இந்த அமைச்சரவையிலே ஒருவரையும் தலைகனத்தோடு பார்க்க முடியவில்லை. அவர்களும் தலைகனத் தோடு பிரச்சினைகளைப் பார்க்கவில்லை. பிரச்சினைகளை அக்கறை யோடு கவனிக்கிறார்கள். பிரச்சினைகள் தீருகின்றனவா தீர வில்லையா என்பது வேறு பிரச்சினை. பிரச்சினைகளை அக்கறை யோடு கவனிக்கிறார்கள். அதுதான் ஒரு அரசியல் கட்சிக்கோ, அரசியல் வாதிக்கோ தேவை. பல்வேறு நெருக்கடியைக் கொடுத் துக்கொண்டிருக்கிறது மத்திய அரசாங்கம்.

காலையிலே நான் இராஜாஜியைப் பார்த்தேன். நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். இது சீர்கேடான காலம். அது தவிர்க்க முடியாது. இப்பொழுது அவர்கள் அரசாங்க உத்தியோகத்திற்கு உபத்திரவம் பண்ணமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அரசாங்கம் அவர்களுக்கு ஆயுத மாகக் கிடைத்து விட்டது. ஆகவே, ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு வீட்டில் நிறையத் தவளைகள் வந்துவிட்டால், அந்தத் தவளைகளை விரட்டுவதற்கு பாம்பைக் கொண்டு வந்துவிட்டு விடுவதைப் (ஆரவாரம்) போலத்தான் இருக்கிறது இது. இதை நான் சொல்லவில்லை. இராஜாஜி அவர் களே என்னிடத்தில் சொல்லியவைதான் இது. இன்று நாட்டிலே குழப்பம் இருக்கிறது. உபத்திரவம் இருக்கிறது. எல்லையிலே பாம்பு காத்திருக்கிறது. இன்னொன்றும் காத்திருக்கிறது இடையிலே.

மாணவர்கள் செய்த தியாகம் இருக்கிறதே அது சாதாரண தியாகம் அல்ல. மிகப் பெரிய தியாகம். இந்தியை எதிர்த்து நடந்த போரில் முதன் முதலில் கைதானவன் நான்தான். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேறு வழியில்லையென்றால் மாணவர்கள் தான் இதைத் தீர்க்க வேண்டுமென்று சொன்ன காரணத்தால் தான் நான் கைது செய்யப்பட்டேன். நம்முடைய சமூகத்தை எல்லாம் ஒரு மாதிரியாக எடுத்துக் காட்டுகிறார்கள். நாம் இன்று அதிகாரத்திலே இருக்கிறோம். அவர்கள் சங்கடத்திலே இருக் கிறார்கள். மாணவர்கள் தங்களை அரசியலிலே ஈடுபடுத்தி இந்த மாற்றத்தைப் போக்க முடியும். ஆனால், தேச ஒற்றுமையையும் நலனையும் பாதுகாப்பதற்கு இருக்கும் அவநம்பிக்கை இல்லாத

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [1968 சனவரி 23

நிலைமையில் அவர்கள் செய்ய வேண்டிய கடமையை நாங்களே செய்வோம் என்று ஏற்றுக் கொள்ளுவோம். அதற்குச் சிறை தண்டனையும் ஏற்றுக் கொள்ளுவோம்.

வடநாட்டிலே இருந்து ராணுவத்தை அழைத்து வந்தாலும்—ராணுவத்தைப்பற்றி எங்களுக்குத் தெரியும்—நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயார். இங்கே கோட்டைக்குள்ளேயே ராணுவத்தைச் சேர்ந்தவர் உண்ணாவிரதம் இருந்தது எங்களுக்குத் தெரியும். பாஷை அடிப்படையில்தான் ராணுவம் வைக்கப் பட்டிருக்கிறது. பாஷையினுடையவி வாதம் இல்லாமல் இல்லை. ராணுவத்தை அனுப்பிப் பார்த்தால் இங்கே அதை நடத்திச் செல்லுகிற முறையே மாறிப்போகும். அதற்கு மேலே எந்த ராணுவத்தை நினைத்துக்கொண்டு ராணுவம் சமாளித்து விடும் என்று கடற்கரையிலே சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. ஆகாயத்திலே பறந்து செல்லுகிற ஆகாய விமானத்திலிருந்து தவறி ஒரு அணுகுண்டு விழுந்தால் என்ன செய்வார்களோ தெரியவில்லை. இனி அந்த ராணுவத்தை வைத்து அல்லது வெறும் துப்பாக்கி வைத்து எதையும் சாதிக்க முடியாது. எண்ணங்களுக்கு மதிப்பளிப்பது என்ற ஆயுதத்தை வைத்துத்தான் நாட்டைப் பாதுகாக்க முடியும். மத்திய அரசாங்கம், தொல்லைப் பட்டுக் கொண்டிருக்கிற நாட்டு மக்களுடைய துன்பத்தைப் போக்குவதில் கவனம் செலுத்தவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன். ஆக, வேறு பலவற்றையெல்லாம் காட்டி, இந்தியைப் புகுத்திவிடலாம் என்று நினைத்தால் முடியாது. அதற்கு மேலாக உங்களுடைய பிரச்சினை என்ன இருக்கிறது என்று கேட்பார்கள். ஷேக் அப்துல்லா எத்தனை முறை விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் கொடைக்கானலிலும் மற்றுமுள்ள இடத்திலும் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தால், வினுகவே இருந்தது. அதைப் போலவே அண்ணா அவர்களும் என்னைப் போன்றவர்களும் இங்கு இருக்கிற அத்தனை அமைச்சர்களும் 15 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகள், சிறையிலேயே செத்தாலும் இதை எதிர்த்தே தீருவோம் என்பதை ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். (ஆரவாரம்). அப்படி நாங்கள் செத்தாலும், வெளியிலே வந்தாலும் பிரச்சினை தீராது. இந்தி வந்து விடாது. வரவிட மாட்டோம். இதை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். ஷேக் அப்துல்லா அவர்கள் எதற்கும் தயாராக இருக்கிறார்கள். அதைப்போல நாங்களும் எதற்கும் தயாராக இருக்கிறோம்.. ஆகவே, இப்பொழுது நிறைவேற்றிய தீர்மானத்தை அவர்கள் கை விட்டு விடுவார்களேயானால், கால தாமதம் இல்லாமல் அதை கை விட்டு விடுவார்களேயானால் அது தான் பிரச்சினையை தீர்க்க வழியாக இருக்கும். 'Delay means death' என்று ஆங்கில வார்த்தைகளிலே சொல்லப்படுவதைப் போல அவர்கள் இருக்கிறார்களே தவிர, அதற்கு மேலாக பரிகாரம் தேடாதவர்கள்தான் அங்கே இருக்கிறார்கள் என்பதை இந்த

1968 சனவரி 23] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நான் கொடுத்திருக்கிற தீர்மானத்தை லேசான வார்த்தையிலே அமைத்து விட்டேன்.

என்.சி.சி.-யிலே கட்டளைச் சொற்கள் எல்லாம் இங்கே இந்தியிலே சொல்லப்படுகின்றன. அந்த இந்தியிலே அவர்கள் சொல்லுவதை மாற்றிக் கொண்டால் நல்லது. இல்லை என்றால் அதை மாற்றி விடுவோம் என்று சொல்லிக்கொள்கிறேன். சுருக்கமாக, எத்தினைச் சுருக்கமாக இது சொல்லப்பட்டிருக்கிறது. ஒத்துழையாமை என்பது நம் தலைவர்கள் சொல்லிக் கொடுத்தது. ஒவ்வொரு முறையிலேயும் அதைப் பயன்படுத்தி இருக்கிறோம். நமது அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல் இன்றைக்கு இந்தியாவைப் பாதுகாப்பதற்கு நாம்தான் இருக்கிறோம். நம்மை யெல்லாம் 25 ரூபாய் கூலிக்காரன் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நமக்கு உள்ளம் இருக்கிறது. இருதயம் இருக்கிறது. இந்தப் பெருமை இந்தியாவுக்கு வந்த ஏக இந்தியாவினுடைய பெருமை பாதுகாக்கப்படவேண்டும். இன்று உடனடியாக அரசியல் சட்டத்திலே உள்ள இந்தப் பிரிவு நிறுத்தி வைக்கப்படவேண்டும். அதைச் செய்வார்களா ? அதைச் செய்வதற்கு இங்கே இருக்கிற உறுப்பினர்கள்—கட்சிப் பாகுபாடு பார்க்காமல்—இங்கேதான் தீர்மானம் போட்டு பெற வேண்டுமென்று கருதாமல், அங்கேயும் பெற வேண்டுமென்று கருத வேண்டுமென்றும் அதற்கான முயற்சியை இந்த நேரத்திலே அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்திலே ஆங்கிலம்தான் ஆட்சிமொழியாக மத்தியிலே இருக்க முடியும் என்று கூறியுள்ளார்கள். ஆங்கில பாஷைதான் பல ஆண்டுகளாக வழக்கத்திலிருந்து நிர்வாகத்திலே எல்லாக் காரியங்களிலும் அதுவேதான் வழங்க முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலம்தான் இருக்க முடியும் வேறு வழியே இல்லை என்ற அளவில் நிலைமைகள் இருக்கின்றன. எனவே ஆங்கிலம்தான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். நமது ம.பொ.சி. அவர்கள் சொன்னதைப்போல் பாரபட்சம் காட்டுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த 8 மாத ஆட்சியிலே தமிழினுடைய நிலவரம் உலகம் பூராவும் பரவி இருக்கிறது. உலகத் தமிழ் மாநாடு மூலம் தமிழினுடைய பெருமை உலகம் பூராவும் பரவி இருக்கிறது. இந்த நிலையில் அதற்கு சம வாய்ப்பும் வசதியும் அளிக்கப்படவேண்டுமானால் ' சஸ்பென்ஷன் ஆஃப் 17-த் சாப்டர் ' அதை உடனே செய்தாக வேண்டும். 17-வது பிரிவு மாற்றப்பட வேண்டியது மிகவும் அவசியம். ஒரு 10 வருடம் பொறுத்துப் பாருங்கள். தமிழ் கன்னி பாஷை. கன்னி என்றால் எல்லோரும் பிரியப்படுகிற, அழகு வாய்ந்த, அருள் வாய்ந்த எல்லோரும் விரும்புகிற பாஷை என்று பொருள். நமக்கு இருக்கிற நிலைமையை நாம் சொல்ல முடியாமல் இருக்க முடியாது. அதை மறுக்க முடியாது. அந்த நிலையை நீங்கள் உருவாக்கித் தந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தைரியமாக இன்று இருக்கிற சட்டத்தை உடனடியாக

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [1968 சனவரி 23

நிறுத்தியாக வேண்டும். அதற்கு இராஜாஜி அவர்கள் ஒத்தாசையாக இருக்கிறார்கள். அவர்கள் இதில் இவ்வளவு உறுதியாக இருப்பதற்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு என்ன வந்துவிட்டது ? மத்திய சபையிலே ஏதாவது பதவி கிடைக்கப் போகிறது என்று எதிர்பார்க்கிறார? அல்லது கவர்னர் பதவி போன்ற ஏதாவதொன்றுக்கு ஏதாவது 'சான்ஸ்' இருக்கிறதா? இப்பொழுது கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தையும் திருத்தத் தீர்மானத்தையும் நான் மனப்பூர்வமாக ஆதரித்து அதற்கான முறையிலே மத்திய அரசு மறுபடியும் இந்தியை ஆட்சி மொழியாக்கும் சட்டத்தை திரும்பப் பெறவில்லை யென்றால் எந்த விதப் போராட்டத்திற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தேசத்தின் ஒற்றுமை என்ற காரணத்தால், இந்து முஸ்லிம் என்ற பேதம் பாராமல், ஜாதிமத பேதம் இல்லாமல் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போன்றவர்கள் நடத்திய போராட்டம் போன்றவற்றில் எங்களால் ஈடுபட முடியும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. விஜயகம் : அன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிக்கேஷன், சார். இதுவரையிலே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை வெளிப்படுத்தினர். அது சுதந்திராக் கட்சியினுடைய கருத்தா—அதாவது, இந்தியா பூராவும் இருக்கிற சுதந்திராக் கட்சியினுடைய கருத்துக்களா ? அல்லது மாநிலத்திலே இருக்கிற சுதந்திராக் கட்சியினுடைய கருத்துக்களா ? அல்லது, இவருடைய கருத்துக்களா ? தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இதுவரை நீங்கள் தெரிவித்துக் கொண்டிருந்த கருத்து, இப்பொழுது தெரிவித்துக் கொண்டிருக்கிற. இனி தெரிவிக்கப்போகிற கருத்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் கருத்தா அல்லது மாநில கட்சியினுடைய கருத்தா, அல்லது சொந்தக் கருத்தா ? (ஆரவாரம்.)

* திரு. எ. பாலசுப்பிரமணியன் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் சொல்லப் போவது எனது கட்சியின்—அகில இந்தியக் கட்சியின்—கருத்து, அது எனது மாநிலக் கட்சியின் கருத்து, அது எனது கட்சியின் அனைத்து உறுப்பினர்களின் கருத்து. மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்ட முறையில் பேசவேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

நான் அவை முன் வைத்திருக்கும் திருத்தம் கொஞ்சம் விரிவானது, விவரமானது. காரணத்தோடுதான் அது அவ்வாறு வரையப்பட்டது. குழப்பத்திற்கு இடம் இருக்கலாகாது, நமது கருத்து என்ன என்று எல்லா இந்திய மக்களுக்கும் தெரிய வேண்டும், எல்லாத் தமிழக மக்களுக்கும் தெரியவேண்டும். இந்த அவையில் நான்கு பக்கங்களிலும் இருக்கிறவர்களுக்கும் குழப்பமில்லாமல் இருக்கவேண்டும் என்று அப்படி வரையப்பட்டிருக்கிறது.

1968 சனவரி 23] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

முதலில் ஒரு வார்த்தை—அந்தப் பக்கம் இருக்கிறவர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த விஷயத்தில் எல்லாக் கட்சிகளையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு காண முயற்சி எடுக்கப்பட்டிருக்குமாலை அது மிகவும் சிறப்பாக இருந்திருக்கும். ஏனென்றால், நான் கேட்ட மட்டில் எற்கனவே ஒரு முறை முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் பேசியது நினைவிலும் இருக்கிறது—இந்த விஷயத்தில் நாம் எல்லோரும் நெருங்கி வரவேண்டும். இடைவெளி அகிக இல்லை. இடைவெளி கம்பியாகத்தான் இருக்கிறது என்ற நிலைமை இருக்கிறது. இந்த இடைவெளியையும் காண்டக்கூடிய முறையில் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு கண்டு, மக்கிய அரசுக்குத் தெரிவிக்கிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்று குறிப்பிடுகிறேன். ஏனென்றால், இங்கு இருக்கக்கூடிய எந்த உறுப்பினராலும், அவர்களுடைய அந்தரங்கத்தில் என்ன கருதுகிறார்கள் என்று பார்த்தால், இந்தியாவில் தமிழுக்குத் தாழ்ந்த நிலை கொடுப்பதை இந்த அவையில் இருக்கிற எவரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். இந்த அவையில் இருக்கிற அனைவரும் அப்படி ஒருமித்த கருத்தோடு இருக்கும் முறையில் அப்படிப்பட்ட வருமித்த கருத்தை எற்படுத்தி மக்கிய அரசுக்குத் தெரிவித்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறேன்.

மொழிப் பிரச்னை சிக்கலானது—சிக்கலாக உக்கப்பட்டது. இயல்பாகச் சிக்கலானது அல்ல—சிக்கலாக உக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பொறுப்பு பொறுப்பு மக்கியில் உட்கியில் இருக்கின்றவர்கள்—தொடர்ந்து இருபது ஆண்டுகளாக உட்சியில் இருக்கிறவர்கள். இன்றைக்கு உணர்ச்சிவசப்பட்ட சூழ்நிலை எங்கும் நிலவுகிறது. அந்த உணர்ச்சிவசப்பட்ட சூழ்நிலையில் நாம் நிதானமாக, அவசரப்படாமல், உணர்ச்சிகளை அதிகப்படுத்தாமல் பரிசீலனை செய்து விஞ்ஞான ரீதியாகவும், எல்லா மக்களுக்கும் முழுமையான ஜனநாயக உரிமை வழங்கும் முறையிலும் அணுகினோமானால், கட்டாயமாக அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க முடிவுக்கு நாட்டைக் கொண்டுவர முடியும். ஒரு சாராருக்கு மட்டும் சில சலுகைகள், அல்லது வேறு சாராருக்குத் தாழ்ந்த நிலை என்பதற்கு இடம் அளிக்காமல், இந்தியாவில் இருக்கிற எல்லாத் தரப்பு மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளிக்கும் கொள்கையை, எல்லோருக்கும் முழு ஜனநாயக உரிமையை வழங்கும் கொள்கையை முன் வைத்தால் கட்டாயமாக அதன் அடிப்படையில் எல்லா மொழி பேசும் மக்களையும் ஒருமித்த கருத்துக்குக் கொண்டுவர முடியும் என்பது எனது கருத்து. நாம் சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகள் ஆகின்றன. இருபது ஆண்டுகள் கழித்து இந்த நாட்டுப் பிள்ளைகளுக்கு எந்த மொழியில் கல்வி சொல்லித் தர வேண்டும், நிர்வாகம் எந்த மொழியில் நடைபெறவேண்டும், நீதி மன்றம் எந்த மொழியில் நடைபெறவேண்டும் என்பது சர்ச்சைக்குரிய ஒரு விஷயமாக நம் நாட்டில்தான் இருக்கிறது. இது காங்காரர்களின் 20 ஆண்டு ஆட்சிக்கு ஒரு சர்ட்டிஃபிகேட் ஆகும். எந்த நாடும் சுதந்திரம் அடைந்தவுடன் அன்னிய மொழியைத் தூக்கி எறிந்துவிட்டு தன் மொழிக்கு உரிய இடத்தைக் கொடுப்ப

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

தைத்தான் பார்த்திருக்கிறோம். அதற்கு மாறாக இங்கு எந்த மொழியைச் சொல்லுவது, எந்த மொழியை நீதி மொழியாகக் கொள்வது, எந்த மொழியை நிர்வாக மொழியாகக் கொள்வது என்பது கேள்விக்குரிய விஷயமாக, சர்ச்சைக்குரிய விஷயமாக வைத்திருப்பதற்குப் பிரதானப் பொறுப்பை காங்கிரஸ் தான் ஏற்க வேண்டுமே தவிர வேறு அல்ல.

இந்தியா பல மொழிகளைக் கொண்ட நாடு; இந்தியா பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு. இவைகள் அடிப்படை உண்மைகள். அந்த உண்மைகளை அங்கீகரித்தாக வேண்டும். அதைவிட்டு விலகிச் சென்றால் சிக்கல் தான் ஏற்படும். மார்க்சீயப் புரட்சியின் வாயிலாக ஏற்பட்ட மாகிரி ஒரே மொழி, ஒரே தேசம், ஒரே அரசு என்ற முறையில்—சிங்கிள் நேஷன் ஸ்டேட்ஸ்—அப்படிப்பட்ட அமைப்பு இந்தியாவில் இல்லை. வரலாறு நீதியான வளர்ச்சியால் இந்தியா என்பது உருவானது அல்ல. இது ஃப்ரான்ஸ் போல் அல்ல, இத்தாலி போல் அல்ல, ஜெர்மனி போல் அல்ல— அங்கெல்லாம் ஒரு மொழி, ஒரு தேசம், ஒரு அரசு என்ற நிலை. ஆனால் கிழக்கு ஐரோப்பாவில் சில நாடுகளிலும், இந்தியா போன்ற ஆசிய நாடுகளிலும் பல மொழி பேசும் மக்கள், பல தேசிய இனங்கள், பல பண்பாட்டுச் சிறப்புக்களோடு வளர்ந்திருக்கும் மக்கள்— அப்படிப்பட்ட மக்களைத் கொண்ட கூட்டு அமைப்பாகச் சரித்திர நீதியான காரணங்களால் ஏற்பட்டன. அதோடு அன்னிய ஆதிக்கமும் அந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு அரசியல் நிர்வாக ஒருமைப்பாட்டை இந்தியாவில் ஏற்படுத்திரைகள். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான். நம் நாடு வெள்ளையன் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்றால், அதற்காகப் போராட்டம் நடத்த மொழிவழி மாநிலங்களும், மாநிலங்களுக்குச் சுயாட்சியும் இல்லாமல் இருப்பதால் தான் கஷ்டமாக இருக்கிறது என்று மகாத்மா காந்தி அவர்கள் வற்புறுத்தி அந்த நிலையை நாடு மேற்கொண்டது. மொழிவழி மாநிலங்கள், மாநில சுயாட்சி—இவை இரண்டையும் இன்றைக்கு ஆளும் கட்சி நன்கு பற்றி நிற்காததால்தான் நாட்டின் நிலைமை கவலைக்கிடமாக ஆகியது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகையால் தான் தேசிய விடுதலை இயக்கமே பாமர மக்கள் இயக்கமாக நடைபெறவேண்டுமானால் அந்தந்த மொழியில் நடைபெறவேண்டும் என்று கூறப்பட்டது. பாரதியார் தமிழில் பாடி தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, தேசிய உணர்ச்சியை வளர்த்தார். அந்த உணர்ச்சி ஹைக்கோர்ட் காரிடார்களில் உருவாக்கப்பட்ட தல்ல.

ஆங்கிலத்தை எடுத்துக்கொண்டால் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டோம். ஆனால் இந்திய மக்கள் வெள்ளைய ஏகாதிபத்தியத்தோடு போராடி சுதந்திரம் பெற்றார்கள் என்றால், அந்தப் போராட்டத்தில் கோடிக்கணக்கான மக்கள் பங்கு கொண்டவர்கள் என்றால், கோடிக்கணக்கான மக்களின் அவேசமாக அது வளர்ந்தது என்றால், அது அவனவன் மொழியில் வளர்ந்தது என்பதை மறுப்பதற்கில்லை, மறப்பதற்கில்லை. அப்படிப்பட்ட

1968 சனவரி 23] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

முறையில் இந்திய மக்கள் ஒற்றுமை, இந்திய ஒற்றுமை உருவானது. வெறும் நிர்வாக ஒற்றுமை என்பதற்கு மாறுக, இந்திய மக்கள் அனைவரும் சேர்ந்து பொது எதிரியை எதிர்த்து நடத்தும் போராட்டத்திலே, பின்னால் சமமாக ஒன்றுக வாழ்வோம், அனைவருக்கும் விடுதலை என்பதில் இந்திய மக்கள் ஒற்றுமை உருவானது. அப்படி உருவான ஒற்றுமையை எப்படிக் கட்டிக்காப்பது, அதை எப்படி வளர்ப்பது என்பது தான் நம் முன் உள்ள பிரச்னை. அதைச் செய்யும்போது எல்லா மக்களுக்கும் முழு ஜனநாயக உரிமையை வழங்கும் முறையில் எப்படிச் செய்வது என்பது பிரச்னை. அதைச் செயவதானால் அதற்கு ஒரு வழி தான் உண்டு. அது என்ன வழி என்றால், எல்லா மொழிகளுக்கும் சமத்துவமான நிலை என்பதை அங்கீகரிக்கக் கூடிய ஒரு வழிதான். இந்தியாவின் எல்லா மொழி களும் சம அளவில் வளம் பெறவேண்டும், எல்லாப் பகுதிகளும் பொருளாதாரத் துறையில் சம வளம் பெறவேண்டும், அரசியல் துறையில் வளம் பெறவேண்டும், கலாச்சாரத் துறையில் வளம் பெறவேண்டும். மொழி என்றால் உணர்ச்சி ததும்பும் பிரச்னை. மொழிகளின் சமத்துவத்தை ஏற்காதவர்கள்தான் இந்திய ஐக்கியத் திற்கு உலைவைக்கிறார்கள். உலை வைத்து வந்திருக்கிறார்கள் என்பது எங்கள் அழுத்தம் திருத்தமான கருத்து. இந்த விஷயத்தில் இங்கு பேசும்போது சிலர் ஆங்கிலமே நீடிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அதனுடைய ஆதிக்க நிலை நீடிக்க விரும்புகிறார் கள். ஆங்கிலம் பாட மொழியாக நீடிக்கவேண்டுமென்று சொன் னால் அதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆங்கிலம் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்ற கருத்து இங்கும் அங்குமாகச் சொல்லப்படு கிறது. அதற்கு எங்கள் உடன்பாடு இல்லை. ஆங்கிலத்தின் ஆதிக்க நிலை நீடிக்குமானால் அது இந்தியாவை உடைக்கும். ஆங்கிலத்தை விரும்பாத மக்கள் மீது அது திணிக்கப்பட்டால் என்ன செய்வது? பஞ்சாபி மொழியிலேயே பஞ்சாப் மாநிலம் மத்திய அரசோடு தொடர்பு கொள்ள வேண்டும், நாங்கள் வேறு மொழியைக் கற்க விரும்பவில்லை என்று கூறினால், அதே முறையில் வங்காளிகள் கூறினால், அதே முறையில் மராத்தியர்கள் கூறினால், கட்டாயம் ஆங்கிலத்தைப் படித்தாக வேண்டுமென்று அவர்கள்மீத் தடியை எடுத்து அடிப்பதா? அது சரியாக இருக்காது. ஆகவே தான் ஆங்கிலம் ஒரு கட்டாய மொழியாக அதை விரும்பாத மக்கள் மீது திணிக்கப்படும் ஒரு ஏற்பாடு இருந்தால், அந்த ஏற் பாடு இந்திய ஒற்றுமையை உடைக்கும். அது கூடாது என்பது என்னுடைய கருத்து. அதேபோல் அந்த இடத்தில் இந்தியைக் கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறார்கள். ஒரு சாரார் ஆளும் கட்சியை கையில் வைத்துக்கொண்டு, மத்திய அரசை கையில் வைத்துக்கொண்டு, தங்களாலான சகல வேலைகளையும் இதற்காகச் செய்து வருகிறார்கள். இன்றைக்கும் செய்து கொண் டிருக்கிறார்கள். இந்தி பாக்கி 13 மொழிகளின் மீது குதிரை சவாரி செய்யக்கூடிய நிலைமை ஏற்படக்கூடாது. தமிழ் நாட்டில் தமிழ் மொழி மீது எந்த மொழியும் குதிரை சவாரி செய்வதை நாம் அனுமதிக்க முடியாது. அதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. இந்தியாவிலுள்ள 14 மொழிகளும் சமமாக வளர்வ

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

கற்கு வசதிகள் அளிக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய செலவுகளை மத்திய சர்க்கார் செய்துகொடுக்கவேண்டும். இதற்கு மாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டால் கட்டாயமாக தகராறுகள் இருக்கும்.

நமது அரசியல் சட்டத்தில் இந்திக்கு தனிச் சிறப்பு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் அதை மாற்ற வேண்டும் என்று எங்கள் திருத்தம் வற்புறுத்துகிறது. அரசியல் சட்டத்தில் அதை பதியவைத்து விட்டார்கள். இந்திக்கு தனி உயர்ந்த இடம் (பிரிவிலெஜ்டு பொசிஷன்) கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் அனுமதிக்க முடியாது. அதை மாற்ற வேண்டும். அதைத் தான் எங்கள் திருத்தம் வற்புறுத்துகிறது. எந்த ஒரு மொழிக்கும் ஒரு தனிச் சலுகை இருக்கக்கூடாது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்பது மிகவும் அவசியமாக இருக்கிறது.

இன்றைக்கு ஆட்சி மொழி திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. அதிலே இருக்கக்கூடிய ஊனங்கள் நமக்குத் தெரியும். இருந்த போதிலும் ஏற்கனவே ஆங்கிலத்திற்கு இடம் இல்லாமல் இருந்த நிலைமையில், ஆங்கிலம் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் நீடித்து இருக்கும் என்ற சில நல்ல அம்சங்கள் கொண்ட சட்டமாக அது அமைந்திருந்தது. அந்த மசோதா பாராளுமன்றத்தின் மூன்பு வைக்கப்பட்ட காலத்தில் அதை வேறு பலர் எதிர்த்தார்கள். அது அரசியல் சட்டத்திற்கு விரோதம், இந்திக்குள்ள விசேஷ சலுகையை மசோதா மாற்றுகிறது, ஆகவே அதை பாராளு மன்றத்தில் வைப்பது அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்று சொல்லி அதை எதிர்த்தார்கள். நாமும் அந்தப் பக்கத்தில் இருக்கக்கூடிய ஆட்சியைச் சேர்ந்தவர்களும் ஒன்றுக நின்று அந்த மசோதா அறிமுகம் ஆவதற்கு உதவி செய்தோம். அதைப்பற்றி விவாதம் செய்தோம். அந்த சட்டத்தில் ஒரு குறைபாடு இருக்கிறது. அதில் மூன்றுவது பிரிவில் நான்காவது உப பிரிவின்கீழ் நிர்வாக உத்தரவுகள் மூலமாக தங்கள் இஷ்டப்படி ஏற்பாடு செய்துகொள்வதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. மற்றவர்களுக்கு குரோதம் இல்லாமல், விரோதம் இல்லாமல் செய்யவேண்டும் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் அந்த நம்பிக்கை நமக்கு இல்லை. மத்திய அரசு பாரபட்சம் இல்லாமல் எல்லா மாநில மொழிகளுக்கும் சமத்துவம் அளித்து நடக்கும் என்ற நம்பிக்கை நமக்குக் கிடையாது. அந்த அதிகாரம் அதிலே இருப்பதால், அந்தப் பிரிவை மாற்றி ஆகவேண்டும். அந்தப் பிரிவு இருக்கும் வரையில் அந்தச் சட்டத்தை நாம் ஒப்புக் கொள்ள முடியாது.

அதோடுகூடவே, இணைப்பு மொழி என்ற பிரச்சினை இருக்கிறது. நம்மைப் பொறுத்த மட்டில், 14 மொழிகளும் சம அந்தஸ்து பெற வேண்டும் என்று கூறுகிறோம். அப்படிப்பட்ட ஏற்பாடு வரும் வரையில், இடைக்காலத்தில் ஆங்கிலம் ஒரு துணை ஆட்சி மொழி யாக நீடிக்கும் என்பது தான் கருத்து, நீடிக்கவேண்டும் என்பது

1968 சனவரி 23] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

தான் நமது கருத்து. மக்கள் மத்தியிலே எது துணை ஆட்சி மொழியாக இருப்பது, இணைப்பு மொழியாக இருப்பது என்ற ஒரு கேள்வி. குறிப்பாக இந்தியாவிலே அப்படி ஒரு மொழி வேண்டியிருக்கிறதா என்ற கேள்வியை கேட்கிறார்கள். கடந்த காலத்தில் கட்டாயமாக ஒரு ஆட்சி மொழி வேண்டுமா என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 50, 55 ஆண்டுகளுக்கு முன்பு உலகத்தின் சகல பிரச்சினைகளுக்கும் வழிகாட்டிய லெனின் இதற்கும் வழியைக் கூறியிருக்கிறார்கள். கட்டாய ஆட்சி மொழி தேவையா என்பது கேள்வி "Is a compulsory official language necessary ?" தேவையில்லை என்று அவரே எழுதியிருக்கிறார். கட்டாய ஆட்சி மொழி என்ற ஒரு மொழி தேவையில்லை. 'You cannot drive a man to the Paradise with a cudgel'. தடியால் அடித்து சொர்க்க லோகத்திற்கு எவரையும் அனுப்ப முடியாது என்று சொல்லி யிருக்கிறார். இணைப்பு மொழி எப்படி உருவாவது? அதற்கும் பதில் சொல்லி யிருக்கிறார். ஜனநாயகம் வளர வளர, தொழில்கள் பெருக பெருக, மக்கள் வருவது போவது, போக்குவரத்து அதிகரிக்க அதிகரிக்க, வசதிகள் பெருகப் பெருக, தானுகவே வரலாற்றுப் போக்கில் எந்த மொழி பயனுள்ளதாக உள்ளதோ அது இணைப்பு மொழியாக அமையும். அது தான் சரி. அதற்கு மாறுக ஏதாவது ஒரு மொழிக்கு சிறப்பு இடம் அளித்து, அது கட்டாயமாக ஆக்கப் பட்டால் இந்தியாவுக்கு ஆபத்து, இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்து, இந்தியாவின் ஒற்றுமையை அது பாதுகாக்காது, இந்தியாவின் ஐக்கியத்தை அது உடைக்கும். எங்களைப் பொறுத்த வரையில் தானுகவே இணைப்பு மொழி மக்கள் விரும்பும் மொழி உருவாகும் வரையில், 14 மொழிகளும் மத்தியிலும், மாநிலங்களிலும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டும். அது வரையில் ஆங்கிலம் ஒரு துணை ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும்.

இடையே, அவசரமாக நமது அரசு செய்யவேண்டிய வேலைகள் இருக்கின்றன. ஆங்கிலத்தை அகற்றி, எல்லாத் துறைகளிலும் தமிழ் வந்து விடவேண்டும். எல்லாத் துறைகளிலும் அதற்கு வேண்டிய அவசர நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். நீதி, நிர்வாகம், கல்வி என்ற 3 நாற்காலிகள் தான். அந்த 3 நாற்காலிகளிலும் தமிழை அமர்த்திவிடவேண்டும். அந்த மூன்று நாற்காலிகளில் வேறு மொழி உட்கார அனுமதி கொடுக்கக்கூடாது. மற்ற மொழிகள் தனியாக வெளி இடத்தில் உட்காரலாமே தவிர, இந்த மூன்று நாற்காலிகளிலும் மற்ற மொழிகளுக்கு இடம் இல்லை. இந்த மூன்று நாற்காலிகளிலும் தமிழைத் - தவிர வேறு எந்த மொழிக்கும் இடமில்லை என்ற நிலையை ஏற்படுத்திவிட்டால், தமிழ் மக்களுக்கு பீதி இருக்காது, பயம் இருக்காது. நமது மாநிலத்திற்குள் வேறு எந்த மொழிக்கும் தனி இடம் கிடையாது என்ற உத்திரவாதம் நமக்கு இருக்கும். அதைச் செய்துவிட்டால் பெரிய அளவுக்கு கலக்கம் போய்விடும், பீதி குறைந்துவிடும். இதை அவசரமாகச் செய்யவேண்டும். தோழமைக் கட்சி ஆட்சிபுரியும் ஐந்தாண்டு காலத்திற்குள்ளேயே இந்த மூன்று நாற்காலிகளிலும்

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

தமிழை அமர்த்திவிடவேண்டும். இலங்கையில் ஏற்கனவே சிறு பான்மையாக இருக்கக்கூடிய தமிழ் மொழி பல இடங்களில் விழித்துக்கொண்டிருக்கிறது. அதற்குப் பல இடங்கள் கிடைத் திருக்கின்றன. அவர்கள் விரும்பி ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள், இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் தமிழைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்று இலங்கை அமைச்சர் அவர்கள் உலகத் தமிழ் மகாநாட்டில் எடுத்துரைத்தார்கள். நான் கேள்விப்படுகிறேன், அதற்கு வேண்டிய மொழி பெயர்ப்பு இங்கு வந்து பெற்றுக்கொண்டு போகிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாட்டை தமிழ் தாயகத் திலிருந்து பெற்றுக் கொண்டு போகிறார்கள். அதற்கு வேண்டிய கல்வி திறன், ஆய்வுத் திறன் தமிழகத்தில் இருக்கின்றது. அவர் களைக் கொண்டு துரிதமாக தமிழை அரியாசனத்தில் அமர்த்த வேண்டும். அதில் தாமதம் ஏற்படுகிறது என்ற பேச்சுக்கோ, ஐயப்பாட்டுக்கோ தமிழகத்தில் நாம் இடம் அளிக்கக்கூடாது.

இன்னொரு முக்கியமான விஷயம். இது குறித்து நான் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழகத்தில் சிறுபான்மை மொழி பேசக்கூடிய மக்கள் சில இடங்களில் இருக்கிறார்கள். தெலுங்கு பேசும் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் மொழியில் கல்வி பயில வேண்டிய ஏற்பாடுகள் செய்து தரவேண்டும். அவர்கள் மொழி ஒடுக்கப்படுகிறது என்ற பேச்சுக்கு இடம் இருக் கக்கூடாது. நான் முழுமையான ஜனநாயகவாதி; நமக்கு என்ன உரிமை கோருகிறோமோ, மற்றவர்களுக்கும் அதே உரிமை அளிக் கப்படவேண்டும். தமிழுக்கு என்ன உரிமை கோருகிறோமோ இந்திக்கும் அதே உரிமை உண்டு, வங்காள மொழிக்கும் உண்டு, பஞ்சாபி மொழிக்கும் உண்டு அந்த உரிமை, பகினன்கு மொழி களுக்கும் அந்த உரிமை உண்டு என்று ஒத்துக்கொள்ளக்கூடிய நேரத்தில், தமிழ் மாநிலத்திலுள்ள சிறு பான்மை மொழி யினருக்கு கல்வி வசதிகள் அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளோ செய்துதர வேண்டும். அதில் நாம் கவனம் செலுத்தவேண்டும். கசப்பு உணர்ச்சிக்கு இடம் அளிக்கக்கூடாது. மொழி எவ்வளவு உணர்ச்சி வசப்படக்கூடிய விஷயம் என்பதுபற்றி காலையில் மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்கள். சிறு பான்மையினருக்கு நியாயமான உரிமை வழங்குவதிலே நாம் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

இந்த நேரத்தில் பாராளுமன்றத்தில் ஆட்சி மொழி திருத்த சட்டத்தை ஓட்டி ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக் கிறார்கள். சட்டத்திலே உள்ள ஊனத்தைப்பற்றிக் குறிப்பிட்டேன். மூன்றாவது பிரிவிலே, நான்காவது உட்பிரிவு மத்திய சர்க்காருக்கு விதிகள் அமைக்கும் அதிகாரத்தை அளிக்கிறது. அதன் மூலம் அவர்கள் இந்தியைப் புகுத்துவதற்கு இடம் அளிக்கிறது. எவ்வளவு தான் இல்லை என்று சொன்னாலும் நமக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே, அந்த அதிகாரம் இருந்தால், அந்த சட்டம் சரியல்ல. அதைத் திருத்தவேண்டும். அதையொட்டி ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தில் இரண்டு அம்சங்

1968 சனவரி 23] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

கள் நாம் ஒப்புக்கொள்ளக்கூடியவையாக இல்லே. அவற்றை நிராகரிக்க வேண்டும். ஒன்று மும்மொழித் திட்டம். இது ஏமாற்று வித்தை. அங்கு இருப்பவர்கள் தமிழ் படிக்கப்போவதில்லே. உத்திரப் பிரதேசத்தில் இருப்பவர்கள், பஞ்சாபில் இருப்பவர்கள் எதற்குத் தமிழ் படிக்கப்போகிறார்கள்? இது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது தான். இரண்டு தமிழ்ப் பண்டிதர்களேயும், புலவர்களேயும் அங்கு கொண்டுபோய் விட்டால் மட்டும், அவர்கள் தமிழ் படித்துவிடுவார்களா ? அந்த மட்டில் மகிழ்ச்சி. இது தப்பு, உண்மை அல்ல, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது தான், தேவையில்லே. நம்மை இந்தி மொழி பயிலவைப்பதற்கு, ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு இது ஒரு சாகசம். ஆகவே, அதை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவர்களுக்கு அதனால் என்ன பிரயோசனம்? ஏன் படிக்கவேண்டும்? என்ன அவசியம்? பார்த்தால் தெரியும். அவர்கள் படிக்கமாட்டார்கள். நாம் மும்மொழி பயிலவேண்டும் என்ற சுமை நமக்குத் தேவையில்லே. அதனால் தான், இஷ்டபூர்வமாக எந்த மொழியைப் பயில எவர் விரும்பி னாலும் அதற்கு இடம் இருக்க வேண்டும் தமிழகத்தில். இந்தி படிக்க விரும்பினால், அதற்கு இடம் இருக்க வேண்டும். எந்த மொழியைப் பயில விரும்பினாலும், தக்க இடம் இருக்கவேண்டும். கட்டாயப்படுத்தும் நிலேயில் எந்த மொழிக்கும் இடம் இல்லே. ஆங்கிலம் படிக்க விரும்பினால், அதற்கு இடம் இருக்கவேண்டும். ஆங்கிலம் இந்தியாவில் ஓரளவு பழகி வந்துவிட்ட தோஷம் இருக்கிறது. நூற்றுக்கு மூன்று பேர்களுக்கு ஆங்கிலம் தெரியும். அதிலும் நூற்றுக்கு இரண்டு பேர்கள் அதிகமாகப் பேசக்கூடியவர்கள். பாதிப் பேருக்கு பட்லர் இங்கிலீஷ் தான் தெரியும் என்று நான் பணிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆங்கிலத்தின் இலக்கண இலக்கியங்களேப் புரிந்துகொண்டு அதைக் கையாளக் கூடியவர்கள் மிகச் சிலரே. ஆங்கிலத்தின் மூலமும் அறிவு பெறவாய்ப்பு இருப்பதால். அதை வேண்டாம் என்று தள்ளிவிடத் தேவையில்லே. ஆனல், ஆங்கிலம் போய்விட்டால் உலகமே அஸ்தமித்துப் போய்விடும் என்ற கருத்து எங்களுக்கு இல்லே. ஐப்பானியர்கள் ஆங்கிலத்தையா கற்றிருக்கிறார்கள் ? சீனக்காரன் ஆங்கிலத்தையா கற்றிருக்கிறன் ? சீனக்காரன், எட்டுக்கால் பூச்சியைப் போன்ற எழுத்தை வைத்துக்கொண்டு, உலகத்தில் அவன் எல்லோருக்கும் சரிஜோடி என்று வந்துவிட்டான். நம்மில் சிலர் விரும்பாமல் இருக்கலாம். ஆனல், நம் விருப்பத்திற்கும் அப்பால் சென்று சரித்திரம் செயலாற்றுகிறது; வரலாறு செயலாற்றுகிறது. நமக்குப் பின்னல் சுதந்திரம் பெற்றவன் முன்னுக்கு வந்து விட்டான். அவன் முன்னுக்கு வந்தது ஆங்கிலத்தின் மூலமாகவா? எட்டுக்கால் பூச்சியைப் போன்ற எழுத்துள்ள சீன மொழியைக் கொண்டுதான் தற்போதைய நிலேக்கு வந்திருக்கிறனேயொழிய வேறு மொழியைக் கொண்டு இந்த நிலேக்கு வரவில்லே. ருஷ்யாக்காரனும் பின்தங்கியிருந்தவன் தான். அப்படி இருந்தவன். இன்று உலகத்திலே முதல் ஸ்தானத்திற்கு வந்து, அமெரிக்காவிற்கு சரிஜோடியாக இருக்கிறன் என்றால். அதெல்லாம் அவன் மொழியினலேதான். ஆதி காலத்தில் இருந்த தமிழர்கள்

பி. ப. 1-00

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

ஆனாலும் சரி, வேறு மொழிகளைப் பேசுகிறவர்கள் ஆனாலும் சரி, அவர்கள் எல்லாரும் எதைக் கொண்டு விஞ்ஞானத்தில் முன்னேறினார்கள்? 1500-ம் வருஷத்திலேயே கலிலியோ, கோபர்நிகஸ் போன்றவர்கள் வான சாஸ்திரம் கற்றார்கள் என்றால், அதற்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், ஆரியபட்டன் பிரபஞ்சம் முழுவதும் கோளமானது என்று சொன்னான் என்றால், அதே போல் பாஸ்கரன் சிறந்து விளங்கினான் என்றால், அவர்களெல்லாம் ஆங்கிலத்தைக் கற்றிருந்ததாலா? இல்லை. அவர்கள் தங்கள் தங்கள் மொழிகளைக் கற்றிருந்ததன் காரணமாகத்தான் சிறப்புகளை அடைய முடிந்தது.

ஆகவே, நாம் நம்முடைய பதினைந்து மொழிகளின் மூலமாகத்தான் முன்னேற முடியும். அதற்கு இதர மொழிகளைத் துணையாகக் கொள்ளலாம். ஆங்கிலத்தின் சிறப்புகளைப்பற்றி நாம் அறியாதவர்கள் அல்லர். நம்மில் பலருக்கு ஆங்கிலத்தின் வளமும் நயமும் தெரியும். என்றாலும், மொழிப் பிரச்சினையை யார் நிலையில் நின்று அணுகவேண்டும்? இந்த நாட்டிலுள்ள குடியானவர்கள்—உழவர்கள், இந்த நாட்டிலுள்ள தொழிலாளிகள், இந்த நாட்டிலுள்ள மெஜாரிடியாக உள்ள பாமர மக்கள் நிலையிலிருந்து இந்தப் பிரச்சினையை நாம் அணுகவேண்டும். அவர்கள் நிலையிலிருந்து அணுகினால், இந்தியாவில் குடியானவர்கள், உழைப்பாளிகள், தொழிலாளிகள் ஆகியவர்களுடைய மொழியில்தான் அனைத்தும் நடைபெறவேண்டும், அவர்களுக்குப் புரியாத மொழியில் அல்ல என்ற முடிவுக்கு நாம் வர முடியும். ஆகவே, இந்திய ஐக்கியத்தை வலுப்படுத்த வேண்டும், இந்திய ஐக்கியத்தை வளர்க்கவேண்டும் என்றால், எல்லா மொழிகளும் சமம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் பதினைந்து மொழிகளிலும் பேசுவதா? என்று கேட்கிறார்கள். பேசினால் என்ன? பேசினால் என்ன குடி மூழ்கிப் போகும்? பல நாடுகளில் இன்றே பல மொழிகளில் பேசுகிறார்கள். என்ன குறை வந்துவிட்டது? ஐந்து கோடி ரூபாயோ, பத்து கோடி ரூபாயோ செலவு ஆனாலும், ஆகட்டும். ஐம்பது கோடி மக்களின் ஐக்கியத்திற்காகப் பத்து கோடி ரூபாய் செலவானாலும் ஆகட்டும். வேறு செலவுகளைக் குறையுங்கள். எத்தனையோ அகம்பாவச் செலவுகள், எத்தனையோ ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க இடம் உண்டு. பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி ரிபோர்ட்டை ஒவ்வொரு இலாக்காவாகப் படித்தால் போதும். ஆகவே, குறைக்கக்கூடியதைக் குறையுங்கள். ஐந்து கோடி ரூபாயோ, பத்து கோடி ரூபாயோ செலவானாலும் செலவு செய்யுங்கள். பதினைந்து மொழிகளுக்குமான எற்பாட்டை மத்தியிலே செய்யுங்கள். அது ஒன்றுதான் பரிகாரம். அதற்குக் குறுக்குவழி கண்டுபிடிக்க எந்த வகையில் முயன்றாலும், அதனால் கட்டாயமாகச் சிக்கல் நீடிக்கும், இந்திய ஐக்கியத்திற்கு ஆபத்து வரும். பல்வேறு சரித்திர நிர்ப்பந்தத்தின் காரணத்தால் வந்திருக்கக்கூடிய ஐக்கியம், ஏற்கனவே ஓரளவுக்குப் பலவீனப் பட்டிருக்கிறது, இருபது ஆண்டுக் காலமாக. மேலும் பலவீனப் படுத்தப்படும் அதற்கு இடம் அளிக்கக் கூடாது. உண்மையிலேயே

1968 சனவரி 23] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

இந்திய மக்களின் ஐக்கியத்தில் அக்கறை இருக்குமானால், 14 மொழிகளுக்கும் சமமான அந்தஸ்து அளிக்கப்படவேண்டும் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பதினான்கு மொழிகளுக்கும் சம அந்தஸ்து இல்லாமல், குறுக்கே வேறு எந்த ஏற்பாட்டுக்கும் நாம் இடம் அளிக்கக் கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை சொல்லி நான் முடிக்க விரும்புகிறேன். இந்த அவையிலிருந்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நாம் தரவேண்டிய வேண்டுகோள் இருக்கிறது. கொதிப்பான நிலைமை, பல்வேறுவிதமான உணர்ச்சிகள் இருக்கக்கூடிய நிலையில், இந்த அவையிலிருந்து கட்டாயமாக நாம் அனைவருமாகச் சேர்ந்து, இந்தியாவின் வேறு எந்த மொழிக்கும் தாழ்ந்த நிலையைத் தமிழுக்கு நாம் ஒப்புக்கொள்ளமாட்டோம், தமிழுக்குத் தாழ்ந்த நிலை என்பதைத் தமிழ்நாட்டில் உள்ள எந்தக் கட்சிக் காரர்களும் ஒருபொழுதும் அனுமதிக்கமாட்டார்கள் என்பதை நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்தியாவில் வேறு எந்த மொழிக்கு என்ன நிலை இருக்கிறதோ, அந்த நிலை தமிழுக்கும் இருக்கும் என்ற நிலையை உண்டாக்குவதற்கு பாராளுமன்றத்தின் மூலமாவும் மற்ற வழிகளின் மூலமாகவும் நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்வோம் என்று அவர்களுக்கு நாம் உறுதி அளிக்கவேண்டும். எங்கள் கட்சியின் சார்பாக அந்த உறுதியை அளிக்க நான் விரும்புகிறேன். அவ்வாறு சொல்லும்போது, மாணவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லவோ, தங்களுடைய உணர்ச்சிகளைக் காட்டிக்கொள்ளவோ உரிமை இல்லை என்று சொன்னதாக அவர்கள் கொள்ளக் கூடாது. அவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை, கருத்துக்களைச் சொல்ல உரிமை உண்டு. அதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், இந்த ஆண்டு படிப்பே மோசமாகக்கூடிய வகையில்—இந்த ஆண்டு கல்வியே பாழாகக்கூடிய வகையில்—ஒரு கியாகம் வேண்டுமா என்பதைத் தான் அவர்கள் சிந்திக்கவேண்டும். அவ்வளவு கியாகம் இன்றைக்குத் தேவையில்லை என்று நாம் அவர்களுக்குப் பணிவாகத் தெரிவிக்கவேண்டும். லட்சக்கணக்கான மாணவர்கள் வருஷத்திற்கு 365 நாட்களில் இத்தனை மனித நாட்களை வீரயம் செய்துவிட்டோமே என்று பின்னல் வருத்தப்படக் கூடிய நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது. ஒரு வருஷப் படிப்பு போய்விட்டதே என்று பின்னல் வருந்தத்தக்க நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது. ஆகவேதான், தமிழகத்தின் மாணவ மணிகளைப்பார்த்து நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்; நீங்கள் அரிய பெரிய கியாகம் செய்திருக்கிறீர்கள். உங்கள் பங்கு இல்லாவிட்டால் இந்த அளவிற்கு இந்த நாட்டில் இந்த நிலைமை வந்திருக்காது. அதை ஒப்புக்கொள்ளுவதில் எவருக்கும் தயக்கம் இருக்க முடியாது. ஆனால், இன்று மத்திய ஆட்சியில் உள்ளவர்களே உடைந்து வருகிறார்கள், நொறுங்கி வருகிறார்கள். அவர்கள் மத்தியிலேயே பிளவுகள் வளர்ந்து வருகின்றன. இன்றைக்கு நிலைமை என்ன? பதினான்கு மொழிகளும் சமம் என்ற நிலையை உருவாக்கி, அதை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

அதைக்குறித்து பயப்பட வேண்டாம். போய்விடும் என்று நினைக்கவேண்டாம். மாற்றிவிட முடியும். நம்மால் முடியும். அதற்கு வேண்டிய புதிய அரசு இருக்கிறது. அதற்கு வேண்டிய கட்சிகளின் அமைப்பு இருக்கிறது. அதற்கு வேண்டிய நிலைமை நாட்டில் உருவாகியிருக்கிறது என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை உருவாகியிருக்கும்போது, உணர்ச்சிவசப்பட்டு எதையும் செய்யக்கூடாது. ஒரு வாம்புக்குள்ளே செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கல்லூரிப் படிப்பு பாழாகும் வகையில், எந்தச் செயலுக்கும் இடம் அளிக்கக்கூடாது. அதற்கு மாறுக, இந்த அவையில் தரப்படும் கருத்துக்களை அவர்கள் மனத்திற்கொண்டு, இங்கே நாம் பேசும் பேச்சுக்களை நினைவில் வைத்துக் கொண்டு, தங்கள் படிப்பையும் பாதுகாத்துக்கொண்டு, அதே நேரத்தில், தமிழுக்குத் தாழ்ந்த நிலை வராமல் பாதுகாக்கும் முயற்சியில் அவர்களும் நம்மோடு சேர்ந்து பணியாற்றி, கட்டாயமாக இந்திய ஐக்கியத்தைக் கருத்திற்கொண்டு, இந்தியாவின் மொழிகளுக்கெல்லாம் சமத்துவ நிலை அளித்துப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்பதில் அவர்கள் மனத் திண்மை பெறவேண்டும். உறுதியாய் இருக்கவேண்டும். அந்த உறுதியை அவர்கள் பெறுவதற்கு எங்கள் கட்சியின் கருத்து ஓரளவுக்குப் பயன்படுமானால், அதுவே போதுமானது என்று நான் கருதுகிறேன்.

எங்களுடைய கட்சியின் சார்பிலுள்ள திருத்தத்தை நான் இந்த அவையில் பிரேரேபித்திருக்கிறேன். அந்தத் திருத்தம் கொஞ்சம் விரிவானதும் விவரமானதும் என்று நான் குறிப்பிட்டேன். சந்தேகத்திற்கு இடம் இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் விவரமாகக் கோடுத்துள்ளேன். ஆகவே, அந்தத் திருத்தத்தை இந்த அவையில் நான் வற்புறுத்துகிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** கனம் பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த சர்ச்சைக்குட்பட்டு, நாட்டிலே மிகுந்த உணர்ச்சி வசப்பட்டிருக்கும் இந்த நிலையிலே இந்தப் பேரவையின்கண் மொழி சம்பந்தமாக எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, இங்கு எனக்கு முன் பேசிய தலைவர்கள் எல்லோரும், தேசிய ஒருமைப்பாட்டைக் கருத்திற்கொண்டுதான் தங்களுடைய கருத்துக்களை வெளியிடுவதாகக் கூறினர்கள். இந்த அவையின்கண் இருக்கக்கூடிய எல்லோருமே, தேசிய ஒருமைப்பாடு வேண்டும் என்பதை எதிர்க்கவில்லை தேசிய ஒருமைப்பாடு வேண்டும் என்பதைத்தான் எல்லோரும் வலியுறுத்துகின்றார்கள். தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக, தேசத்திலே எற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளை, எந்த முறையில் அணுகித் தீர்க்க வேண்டும் என்பதிலே, உணர்ச்சி வசப்படக் கூடாது என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு அரசியலமைப்புச் சட்டம் அமைக்கின்றபோதே, இந்தியாவின் இணைப்பு மொழியாக ஒன்று இருக்க வேண்டும் என்று கருதி, இந்தியாவில் இந்தி மொழி

1968 சனவரி 23] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தான் இணைப்பு மொழியாக இருக்க முடியும் என்று அரசியலமைப்புச் சட்டத்திலேயே ஏற்பாடு செய்திருக்கிறார்கள், அரசியல் அமைப்புச் சட்டகர்த்தாக்கள்.

அதன் பிறகு, குறிப்பாக தமிழகத்திலே, இந்தியை நாங்கள் படிக்க மாட்டோம், இந்தி இங்கே நிணிக்கப் படக் கூடாது என்று கிளர்ச்சிகள் எழுந்தன. அப்பொழுது பிரதம மந்திரியாக இருந்த திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் 'இந்தி பேசாத பகுதி மக்களுக்கு, இந்தியின் மூலம் எந்தவிதமான சங்கடமும் ஏற்படாமல் இருக்கும் வகையில், ஆங்கிலமும் துணை மொழியாக இருக்கும்' என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற, அந்த வாக்குறுதிக்கு சட்டத்தில் இடம் கொடுக்க, பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டம், இந்தி பேசாத பகுதி மக்களுக்கு திருப்தியளிக்க வேண்டும் என்றே கொண்டு வந்திருந்த போதிலும், அதோடு கூட கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் அந்த எண்ணத்தைப் புறக்கணிக்கிறது, சிதற அடிக்கிறது. இந்தி பேசாத மக்களுக்கு வேலைவாய்ப்புக்கள் பெறுவதில் மிக்க சங்கடம் ஏற்படுகிறது. இதனால் மோசமான நிலைமைதான் உருவாக்கப்படும் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கார் சரியான முறையில் சிந்தித்து, ஒரு பக்கத்திலே இருக்கும் இந்தி பேசும் மக்கள் கட்டாயப் படுத்துகிறார்கள் என்று அந்தத் திருத்தத்தையும், தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் விட்டு இருந்தால் நாட்டிலே இந்தக் கொந்தளிப்பும், எழுச்சியும் ஏற்பட்டிராது. இன்றைக்கு தமிழகத்திலே இருக்கும் யதார்த்த நிலையைக் கருத்தில் கொண்டு, மத்திய சர்க்கார் பாராளுமன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானத்தை கைவிட்டு, மறுபடியும், நிறைவேற்றப்பட்ட சட்டத்தை, இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடங்களை நீக்கும் வகையில், புனர் பரிசீலனை செய்ய வேண்டும் என்று எங்கள் கட்சி சார்பில் கொடுத்திருக்கும் திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

சுதந்தரப் போராட்ட காலத்திலே, மகாத்மா காந்தியடிகள், போராட்டத்தின் தலைமையை ஏற்றுக்கொண்ட பிறகு, நாட்டிலே சாதாரண மக்களுடைய மொழி, ஆட்சிமொழியாக வரவேண்டும் என்கிற கருத்தை, மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப் படவேண்டும் என்கிற கருத்தை அப்பொழுதே தெரிவித்திருக்கிறார்கள். அதன் படி, அந்த அந்த பிரதேச மொழியும், ஆட்சி பெற வேண்டும், அந்த மொழியே அந்த மக்களுக்கு ஏற்ற மொழியாகும். அவர்கள் புரிந்து கொள்ள முடியும் என்று அமைத்தார்கள். மொழி வழி மாநிலங்கள் அமைந்த பிறகு, ஒரு இணைப்பு மொழி வேண்டும் என்றும், அதற்கு இந்தி மொழியே இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்றும் காந்தியடிகள் வலியுறுத்தி வந்தார்கள்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1968 சனவரி 23

இந்தி என்பது யாரோ, ஒரு பகுதி மக்கள் பேசும் மொழி என்ற எண்ணம் நம் இடையே ஒரு கருத்து இருக்கிறது. இந்தி யாரோ ஒரு பகுதி மக்கள் பேசும் மொழியல்ல. வடி நாட்டிலே பல பகுதிகளில் பேசப்படும் பல்வேறு மொழிகளிலிருந்து உருவான ஒரு மொழி தான், பீகார் மாநிலத்தை எடுத்துக் கொண்டால், அங்கே மைதிலி என்ற மொழியும், பிஜப்புரி என்ற மொழியும், மகாராஷ்டிரத்தில் மராத்தி என்றும் பல்வேறு மொழிகள் இருக்கின்றன. அப்படி பேசப்படும் பல மொழிகளுடைய வார்த்தைகள் ஒன்றோடொன்று கலந்து பழகிப்போய் உருவாகியுள்ள மொழிதான் இந்தி. அந்த இந்தி மொழியை எடுத்துக் கொண்டால், தமிகத்தைத் தவிர, மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களால் ஓரளவு புரிந்து கொள்ளப்படுகிறது என்று சொன்னால் அது சரியானதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்தியின் வளர்ச்சி வடமொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து ஏற்பட்டிருக்கிறது, சமஸ்கிருதம் கலந்த மொழிதான் வடபகுதிகளில் எல்லா மக்களாலும் பேசப்படுகிறது. தமிழகப் பகுதி தவிர, மலையாளம் கன்னடம் முதலிய பகுதிகளில் பேசப்படும் மொழியில் சமஸ்கிருதம் கலந்திருப்பதால், தமிழகத்தில் நாம் காட்டும் வேறு பாட்டை அவர்கள் காட்டுவது இல்லை. இந்தி மொழியையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், அந்த மாதிரியான மாநிலத்தில் இருக்கிறவர்கள், இந்தியை போதனு மொழியாகக் கொள்ளாவிட்டாலும், இந்தியை வெறுத்துத் தள்ளவில்லை, இந்தியையும் படிக்க வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அந்த நிலையில், தமிழ் நாட்டில், தமிழ் ஒரு பழமையான மொழி; வளர்ச்சி அடைந்திருக்கும் மொழி. என்றாலும், சமஸ்கிருதத்தோடு கலந்து போய்விடவில்லை. ஆகவே, இந்தியைப் புரிந்து கொள்ளும் நிலையை நாம் அடையவில்லை. நாம் புரிந்துகொள்ள முடியாத ஒரு மொழியாக இருக்கிறது இந்தி. ஆகவே, இங்கே இருக்கிறவர்கள் இந்தி கூடாது என்கிற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். மொழியை மட்டும் அடிப்படையாக வைத்துக் கொண்டு நிலைமைகளை ஆராய்வது சரியில்லை. தேசம் ஒன்று என்றும், தேசத்தில் இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன; அவைகளை எல்லாம் விட்டுவிட்டு, மொழியைமட்டும் வைத்து எதையும் தீர்மானிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பல்வேறு சாதனங்களில் மொழியும் ஒன்று; மனிதன் உயர மொழியும் ஒன்று. ஆகவே, மொழிபற்றி ஆலோசிக்கும்போது, தேசிய ஒருமைப்பாட்டையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும், குறிப்பாக சமீபத்திலே மாணவர்களுடைய எழுச்சி, கொந்தளிப்பு முதலான யதார்த்த நிலைகளைப் பார்க்கும் போது சங்கடப்பட வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னால், மாண்புமிகு முதல் அமைச்சரை பேட்டி கண்டபோது, 'தமிழை நாட்டின் பொது மொழியாக்க வேண்டும்; இல்லை என்றால் தமிழகத்தைப் பிரித்து விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று கேட்டார்கள். பின்னால், உப ஜனதிபதியைப் பேட்டி கண்டு, தமிழை பொது மொழியாக்க அவர்கள் உதவியளிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

1968 சனவரி 23] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

தேசம் ஒன்றுக இருந்து பொருளாதார வளர்ச்சி பெறவேண்டும் என்பதில் அக்கறை காட்ட வேணடும். அதை கருத்தில கொண்டு தான் எங்கள கட்சித் தலவர், ஆசாரிய நரேந்தர தேவ அவாகள ஆரம்பத்திலேயே மும்மொழித் திட்டம் வேணடும் எனறு குறிப் பிட்டார்கள். அதத அடிபபடையில 1955-ம் ஆணடிலேயே சோஷலிஸ்ட் கட்சியின் கொள்கை விளக்கத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தென்னகத்து மகக்ள் இததியையும், வட மாநில மகக்ள் தென்னக மொழி ஒன்றையும் கற்றுக் கொண்டால் மொழி வேற்றுமை ஏற்படாமல இருக்கும், தேச ஒற்றுமைக்கும் அது உறுதுணையாக இருக்கும் எனற கருத்தை ஆசாரிய தேவ வலியுறுத்தியிருக்கிறார்கள் அதன் பிறகு காங்கிரஸ் காரர்கள் மும் மொழித் திட்டத்தை வலியுறுத்தினார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, வடக்கே உள்ளவர்கள் இந்த மும்மொழித் திட்டத்தை அமுலாக்கவில்லை. அவர்களும் இந்த மும்மொழித் திட்டத்தை ஏறறுக் கொணடு செயல் பட்டால், திருப்திகரமாக இருக்கும்.

இன்றைக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் கொடுத்திருக்கும் திருத்தத்திலே ஆங்கிலமும, தமிழும் மட்டும் என்று குறிப்பிட் டிருக்கிறார்கள். அப்படி நாம் ஆங்கிலத்தையும், நம்முடைய பிரதேச மொழியையும் வைத்துக் கொணடால் போதுமா? பிரதேச மொழி வளர்ச்சியுற வேண்டும் என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. அந்தந்த மாநில அரசு, பிரதேச மொழியை ஆட்சி மொழியாக்கி, நீதிமன்றம் வரைக்கும் பயன்படுத்தலாம் என்பதில் யாருக்கும் எந்தவிதமான அபிப்பிராயபேதமும் இருக்க முடியாது. தமிழ் வளர்ந்த பிறகு, இணைப்பு மொழியாக ஆங்கிலம் இருக்காது; இந்தி இருக்காது. வடக்கிலே இருக்கின்ற மக்கள் உணர்ச்சிவசப்பட்டு ஆங்கிலத்தை அழிக்கிறார்கள்; அங்கேயிருப் பவர்கள் ஆங்கிலம் கூடாது என்று கூறி, போர்டுகளையெல்லாம் அழிக்கிறார்கள். அதை நான் நேரில் பார்த்தேன். இங்கே இருப் பவர்கள் இந்தி கூடவே கூடாது என்கிறார்கள். இதற்கு முடிவு தான் என்ன ? இந்த நிலை தேசப் பிரிவினையில்தான் முடியும். இன்றைக்கு நாம் ஆங்கிலம் வேண்டுமென்று ஒருபக்கத்தில் வலியு றுத்தி, மறுபக்கத்தில் இந்திதான் வேண்டுமென்று அவர்கள் வலியு றுத்தும்போது 'அவர்களோடு நாம் இருக்க முடியாது' என்று நாம் நினைக்க 'இவர்களோடு நாம் இருக்க முடியாது' என்று அவர்கள் நினைக்க, நாடு சிதறுண்டு போவதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதற்கான சூழ்நிலையை நாம் தோற்று விக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்தி நம் மீது திணிக்கப்படக் கூடாது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்தியே வேண்டாம் என்று சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது; எங்கள் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆங்கிலத்தை துணைமொழியாக வைத்துக் கொள்ளுங்கள் என்ற உறுதி அளிக்கப்படுமானால் ஏன் இந்தியைப் படிக்க விரும்புகின்றவர்களைத் தடுக்க வேண்டும்? இரண்டு மொழிகளோடு, மூன்று, நான்கு, ஐந்து மொழிகள் என்று

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1968 சனவரி 23

படிப்பதால் பன்மொழிப் புலவராக ஆகலாம். அதனால் அறிவு வளர்ச்சி குன்றிவிடாது. அதை நாம் ஏன் தடுக்க வேண்டும்? எங்களைப் பொறுத்தவரையில், ஆங்கிலம் மட்டும் தேசத்தின் இணைப்பு மொழியாக இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே ஆங்கிலம் வெகு நீண்டகாலம் நீடித்திருப்பதை நாங்கள் விரும்பவில்லை. நாம் படித்து இந்தியை உணர்ந்து கொள்ளும் வரையிலும் ஆங்கிலம் இருக்க வேண்டும். இந்தியே கூடாது என்ற கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மாணவர்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்பு கிளர்ச்சியால் இந்திப் படங்களைக்கூட பார்க்கக்கூடாது என்கிறார்கள்; இந்திப் பள்ளிக்கூடங்கள், தக்ஷிண பாரத் இந்தி பிரசார சபை போன்ற பள்ளிகள் கூடாது என்று உணர்ச்சிவசப்பட்டு சொல்லக்கூடாது. வடநாட்டில்–பம்பாயில், கல்கத்தாவில், டில்லியில் இருக்கின்ற தமிழ்ப் பள்ளிகள் எல்லாம் என்ன ஆவது? இதற்கெல்லாம் உணர்ச்சிவசப்பட்டால் என்ன ஆவது? தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் இருக்கக் கூடாது என்ற வகையில்தான் கூறுகிறேன். தமிழை தமிழகத்தின் ஆட்சி மொழியாக ஆக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். மத்திய ஆட்சிமொழியை அமல்படுத்துவதில் இடையூறுகள் இருக்கலாம். அதே சமயத்தில் தேசத்தினுடைய ஒருமைப்பாட்டைக் கருத்தில் வைத்து, நடந்துகொள்ள வேண்டும். இதற்கு முன்பு இந்தியை இஷ்ட பாடமாகப் படிக்கலாம் என்று கூறிவந்தார்கள். இப்பொழுது அது எடுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுடைய உணர்ச்சியை நாம் உணர்கின்றோம். இருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்லாமல் இருந்தால் தவறு செய்தவர்களாக ஆகிவிடுவோம். ஆகவே, மொழிப் பிரச்சினையைத் தேசம் முழுவதும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தீர்ப்பதற்கு தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கூறி, என்னுடைய திருத்தத் தீர்மானத்தை வலியுறுத்தி உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத் தீர்மானத்தை பேரவைமுன் கொண்டு வருகிறேன்:—

இறுதியில் கீழ்க்காணும் சொற்றொடர்களை இணைக்கவும்:

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழித் திருத்தச் சட்டமும், தீர்மானமும் தமிழக மக்களின் நலன்களுக்குப் புறம்பாகவும், ஐக்கியத்திற்கு ஆபத்தாகவும் இருப்பதால் நாட்டின் ஒற்றுமை, பல்வேறு மொழி பேசும் மக்களின் முன்னேற்றம் ஆகியவை கருதி மத்திய ஆட்சிமொழி திருத்தச் சட்டத்தையும், தீர்மானத்தையும் ஒத்தி வைக்க வேண்டுமென்று இம்மன்றம் கருதுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய ஆட்சிமொழியாகத் தமிழும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

1968 சனவரி 23] [திரு. க. ரா. நல்லசிவன்]

அதுவரையில், ஆட்சிமொழித் திருத்தச் சட்டத்தையும், தீர்மானத்தையும் நிறுத்தி வைக்குமாறு இம்மன்றம் கோருகிறது."

திருத்தம் வழிமொழியப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, நண்பர் கொடுத்திருக்கிற தீர்மானத்தில், "தமிழ் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்கிற வரையில், ஆட்சிமொழித் திருத்தச் சட்டத்தையும் தீர்மானத்தையும் நிறுத்தி வைக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். தமிழ் ஆட்சிமொழியாகிற வரையில், எது மத்திய ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. ரா. நல்லசிவன் : இப்போது இருக்கிற நிலைதான் நல்லது என்று கருதுகிறேன்.

தலைவர் அவர்களே, பதினைந்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகவேண்டுமென்று சொல்லும்போது, குஜராத்தி, மராத்தி போன்ற எல்லா மொழிகளையும் இந்தியைப் போன்ற அளவுக்கு மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பதினைந்து மொழிகளையும் ஆக்க வேண்டும் என்று நாம் ஏன் முன்னின்று சொல்லவேண்டுமென்று சொல்லலாம். இருந்த போதிலும் நமது மொழியை ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில் நாம் பின்தங்கிவிடக் கூடாது. இன்றைக்கு தென்னாகத்தில் எற்பட்டிருக்கக்கூடிய ஒரு புரட்சிகரமான சூழ்நிலையிருந்து இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும். இந்தியாவில் இருக்கக்கூடிய அத்தனைபேரும் அதைப்பற்றிச் சிந்தித்தாக வேண்டும். இன்றைக்கு நாம் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்திற்கு முன்னால் லத்தீன், பிரெஞ்சு மொழிகள் இருந்தன என்று நாம் சொல்கிறோம். இந்திய மொழிகளைப் பொறுத்தவரையில், மூத்த மொழி, முதல் மொழி தமிழ் என்ற முறையில், அனைத்துலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டினோம். நம்முடைய பெருமையை, பழமையை, பண்பாட்டைப் பற்றியெல்லாம் நம்முடைய மொழியிலே பல நாட்டு அறிஞர்களும் பேசிவிட்டுப் போனார்கள். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியை ஏன் மத்திய ஆட்சி மொழியாக ஆக்கக்கூடாது? அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால், எந்தத் துறையிலும், எந்தக் கோணத்திலும் இங்குள்ள பிரச்சினையை நிரந்தரமாகத் தடுக்க முடியும். இன்றைக்குக்கூட நாம் பெரிய அளவில் சில காரியங்களை தமிழகத்தைப் பொறுத்தவரையில் செய்தாக வேண்டும். இங்கே நம் மொழியை முழுமையாக ஆட்சிமொழியாக்க வேண்டும். இப்பொழுது சில நூல்கள் தமிழில் வந்திருக்கின்றன. ஓராண்டு, இரண்டு ஆண்டுகளுக்குள் பல நூல்கள் வேகமாக மொழிபெயர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. இதனால் தமிழை மத்திய ஆட்சி மொழியாக ஆக்க முடியும் என்று நம்பு வோமானால் அது நடக்காத காரியம் அல்ல என்பதைத் தெரி

[திரு. க. ர. நல்லசிவன்] [1968 சனவரி 23

வித்துக் கொள்கிறேன். அதுபோல் தமிழகத்தில் தமிழை. இரண்டாண்டுக்குள்ளாக போதனமொழியாக, சட்டமன்ற நிர்வாக மொழியாக, நீதி மன்ற நிர்வாக மொழியாக ஆக்க முன்வந்தால் அவர்கள் பயப்படுவார்கள். ஆங்கிலமே தொடர்ந்து இருந்தாக வேண்டும் என்ற நிலை கிடையாது. தமிழுக்கு நாம் பூரண அந்தஸ்தை முதற்படியாகக் கொடுத்தாக வேண்டும். அப்படிக் கொண்டு வருவதுதான் டெல்லி பாராளுமன்றத்திலே நம் கருத்தை எடுத்து வைக்க ஒரு அஸ்திவாரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பி.ப 1-31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமது பேரவை இப்போது கலைந்து மீண்டும் இன்றைய பிற்பகல் 2-30 மணி அளவில் கூடும். அப்போது திரு. நல்லசிவன் அவர்கள் தொடர்ந்து உரையாற்று வார்கள்.

(பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது)

பி.ப. 2-30

(இடைவேளைக்குப் பிறகு மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் பேரவை மீண்டும் 2-30 மணிக்குக் கூடியது.)

திரு. க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம் தமிழகத்திலே உள்ள அறிஞர்கள் வேற்றுமொழிகளைவிட தமிழை, நாம் இப்பொழுது நம்புவதைவிட இன்னும் தெளிவாக நம்புவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம்தான் விடிவு காலம் வரும். தமிழிலே எல்லாவற்றையும் கொண்டுவர முடியுமென்ற நம்பிக்கை இப்பொழுது ஏற்பட்டிருக் கிறது. அது உண்மை, அதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. மாற்றுமொழி ஹிந்தியாக இருக்கலாம் அல்லது ஆங்கிலமாக இருக்கலாம். தமிழகத்திலே இருந்து பாராளு மன்றத்திற்குச் செல்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளு மன்றத்திலே தமிழினுடைய வன்மையை, தமிழின் பழமையை நல்ல முறையில் ஸ்தாபிக்கக்கூடிய முறையிலே தமிழிலேயே பேசவேண்டுமென்ற உறுதியை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதன்மூலமாகத் தான் மத்தியிலே இருப்பவர்கள் தமிழின் பெருமையை உணரச்செய்து தமிழை ஆட்சிமொழி யாகச் செய்ய முடியும். அதோடு நாம் எல்லோரும் சேர்ந்து மாணவ மணிகளுக்கு ஒரு உத்திரவாதம் கொடுக்க வேண்டும். தமிழ் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஆக வேண்டுமென்ற தீர்மானத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். அந்தத் தீர் மானத்தை மத்திய அரசு நிறைவேற்றிவிட்டால் நாம் எல்லோரும் பதவியை ராஜினாமாச் செய்யத் தயங்கக்கூடாது. தயங்க மாட்டோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. தமிழை ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கிவிட்டால் அதற்காக நாம் சண்டை போட வேண்டும். கன்னியாகுமரி முதல் இமயமலை வரையில் நம்முடைய நாடு. அதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். மாணவ மணிகளுக்கு நாம் நம்முடைய சார்பிலே ஒரு பிரதான அம்சமாகத் தெரிவிக்க வேண்டியது என்னவென்றால் தமிழை ஆட்சி மொழியாக்கவேண்டும் என்பதுதான். அதற்கான சகல்

1968 சனவரி 23] [திரு. க. ர. நல்லசிவன்]

முயற்சிகளையும் நாம் எடுத்துக் கொண்டாக வேண்டும். முயற்சியிலே முட்டுக்கட்டைகள், தடங்கல்கள் வந்தால் நாம் பதவிகளை துச்சமென மதித்துத் தூக்கியெறிய வேண்டும். அந்த அடிப்படையிலே தான் நாம் மாணவ மணிகளுக்கு வாக்குறுதி கொடுக்க வேண்டும். அந்தந்த மாநிலத்திலே உள்ளவர்கள் தங்களுடைய மொழியை மத்திய ஆட்சி மொழியாகச் செய்துகொள்ளுவார்கள். நாம் அதற்காக வாதாட வேண்டிய அவசியமில்லை. தமிழை ஆட்சி மொழியாக அக்குவதற்கு ஒருமித்த கருத்தோடு சீர்மானம் கொண்டுவந்தால் நாங்கள் அதற்கு ஆதாவாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே. இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டுவந்துள்ள சீர்மானத்தின்மீதும் நாங்கள் கொடுத்துள்ள திருத்தச் சீர்மானத்தின் மீதும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதன்முதலாக நாம் இன்றைய பிரச்சினையை மிகச் சிட்டவட்டமாகப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மொழிக்கு ஆபத்து இருக்கிறது என்றால், அந்த ஆபத்து எந்த இடத்திலிருந்து வரக்கூடியது என்பதைப் பார்க்க வேண்டும். தமிழுக்கு ஆபத்து என்றால் அது இந்தி மூலமாகத்தான் வரும் என்ற உணர்ச்சி எற்பட்டால் இந்தப் பிரச்சினையிலே எந்தவிதமான குழப்பமும் இருக்காது. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், குறிப்பாக நம்முடைய தலைவர் ராஜாஜி அவர்கள் சொல்வது என்னவென்றால் தமிழுக்கு ஆபத்து இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு வேலியாக, பாதுகாப்பாக இருப்பது ஆங்கிலம்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இதனாலே ஆங்கிலத்திலே எங்களுக்குப் பற்று இருக்கிறது என்று யாராவது கருத்துத் தெரிவித்தால் அது உண்மையல்ல. ஆங்கிலத்திலே எந்தவிதமான பற்றுதலும் எங்களுக்கு இல்லை. தமிழுக்கு ஆபத்து வராமல் தடுக்கக்கூடிய முறையில் பாதுகாப்பாக இருப்பது ஆங்கிலமா இந்தியா என்பதைத்தான் யோசிக்க வேண்டும். தமிழுக்குப் பாதுகாப்பாக இருப்பது ஆங்கிலம்தான். நிர்மாணச் சட்டம் இருக்கிறது. அதைத் திருத்த வேண்டுமென்று சொல்வது முதல் கட்டம். மத்திய அரசாங்கம் கொண்டுவந்த வரக்குவேஷ் அக்ட் அமெண்மென்ட்தான் இரண்டாவது கட்டம். லாங்குவேஜஸ் அக்ட்டுக்குப் புதிதாக இந்திக்குப் பாதுகாப்பாக, இந்தியைத் திணிப்பதற்காக நிரொலியூஷன் கொண்டுவந்திருப்பது மூன்றாவது கட்டம். இப்படி மூன்று கட்டங்கள் இதிலே இருக்கின்றன.

மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் குற்றச்சாட்டு என்னவென்றால் நீங்களும் அண்ணாவும் ஒத்துப்போகவில்லையே. அண்ணா அவர்கள் சட்டத்தைத் திருத்தத் தயாராக இருக்கிறார்கள். அதைச் சுதந்திராக் கட்சி சொல்வது என்னவென்றால் நிர்மாணச் சட்டத்தையே திருத்தவேண்டுமென்று சொல்கிறது என்று சொல்லி

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1968 சனவரி 23

யிருக்கிறார்கள், ராஜாஜி ஏன் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்றால் இந்திக்காரர்களுடைய போக்கு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பல ஆண்டுகளாக பல துறைகளில் வேலை செய்திருக்கிற காரணத்தாலும், இந்தியத் தூணைக் கண்டத்திலேயே நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்டு வந்த காரணத்தாலும், மிகத் தெளிவாக, கொஞ்சம் இடம் கொடுத்தாலும் இந்தியைப் புகுத்தத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நன்கு உணர்ந்த காரணத்தால், நிர்மாணச் சட்டத்தையே திருத்த வேண்டும் அல்லது அந்த சாப்டரையே எடுத்துவிட வேண்டுமென்று ராஜாஜி அவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய நாட்டில் இணைப்பு மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கவேண்டும்.

நம்முடைய மாநிலத்திற்குள்ளே எல்லா வகையிலும் தமிழ் மொழிதான் இருக்கவேண்டும். பக்கத்திலே உள்ள ஆந்திரத்திலே தெலுங்கு மொழிதான் இருக்க வேண்டும், கன்னடத்திலே கன்னட மொழிதான் இருக்கவேண்டும், கேரளத்திலே மலையாள மொழி தான் இருக்க வேண்டும். சிலர் ஆங்கிலத்தை நீடித்தால் தமிழ் கொஞ்சங் கொஞ்சமாக கெடும் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு அரசாங்கத்தை எற்றுக் கொண்டிருக்கக்கூடியவர்கள் இணைப்பு மொழியாக ஆங்கிலம் வேண்டுமென்றுதான் கூறுகிறார்கள். அப்படிக் கூறுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தமிழ் வளர்ச்சியில், தமிழ் விஸ்தரிப்பில் அக்கறை காட்டாமல் இருந்தால் நிச்சயமாக அத்தகைய குற்றச்சாட்டை சுமத்தியிருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்க வேண்டுமென்று சொல்கிற அதே நேரத்தில் தமிழ் வளர்ச்சியிலே அக்கறை காட்டவில்லையே என்று யாராவது மனச் சாட்சியோடு கூற முடியுமா? ஆகவே, ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக வைத்துக் கொண்டால்தான் தமிழை வளர்க்க முடியும் என்பதைத் திட்டவட்டமாக கூற விரும்புகிறேன்.

சுதந்திராக் கட்சியைப் பற்றிக் குற்றம் சாட்டினார்கள். சுதந்திராக் கட்சி அகில இந்திய ரீதியில் ஒரு வகையாகவும், மாநிலத்தில் ஒரு வகையாகவும் பேசிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை எங்கு இருப்பவர்களாக இருந்தாலும் ஆங்கிலந்தான் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று கூறி வருகிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியை பொறுத்தமட்டில் தென்னாட்டில் இருப்பவர்களுக்கும், வட நாட்டில் இருப்பவர்களுக்குமிடையே எந்த விதமான ஒற்றுமையும் இல்லை யென்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பெருமதிப்பிற்குரிய முன்னாள் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ் அவர்கள், அண்ணா அவர்கள் என்ன சொன்னார்களோ அதே கருத்தைத்தான் சொன்னார்கள். சட்டத் திருத்தத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள், தீர்மானங்களைப் பாதுகாதீர்கள் என்று சொன்னார்கள். வட நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் அதை ஏற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை. திரு காமராஜ் அவர்கள் சொன்ன கருத்தை திருமதி இந்திரா காந்தி அவர்கள்

1968 சனவரி 23] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

ஏற்றுக் கொள்ளுகிறார. அல்லது திரு. சேத் கோவிந்ததாஸ் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறார என்று கேட்க விரும்பு கிறேன். இதைப் பற்றியெல்லாம் கேட்டால் 'கொரடா என்ன சொல்லுகிறாரோ அந்த முறையில்தான் சொல்ல முடியும்' என்று சொல்லுகிறார்கள். தென்னாட்டுக்கு ஒரு கொரடா, வட நாட்டுக்கு ஒரு கொரடாவா? சேத் கோவிந்ததாசும் கொரடாவுக்கு உட்பட்ட வர்தான். ஆனால் அவர் கொரடாவை எதிர்த்து 'இந்திதான் வர வேண்டும்' என்று கூறுகிறார். அந்தத் துணிச்சல் தமிழக காங் கிரஸ்காரர்களுக்கு வரவில்லை. அவர்களிலும் தமிழகத்தில் இருந்து மூன்று பேர் பாராளுமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். எப்படியோ போய்விட்டார்கள்.

சுதந்திராக் கட்சிக்கு ராஜாஜி அவர்கள் நமக்குத் தலைவராக இருக்கிற காரணத்தால ராஜாஜியின் பேச்சை வட நாட்டில் இருப்பவர்கள் கூட ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் இருக்கிறார்கள். எங்களுடைய கட்சி மூன்று மாநிலங்களில் வலிவுடன் இருக்கிறது. ஓரிசா சுந்திராக் கட்சித் தலைவர் சிங்தேவ் அவர்கள்—

"About the language controversy, the Orissa Chief Minister said they were frittering away their energies over the issue unnecessarily. It should not have been raised at all. From the beginning the language question could have been left alone.

English has served well and kept up the unity of the country. A mistake has been done by including the language provision in the Constitution. Framers of the Constitution could have left the issue untouched."

என்று கூறியிருக்கிறார். அவ்வாறு அவர்கள் எல்லாம் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்றால் அந்தப் பெருமை ராஜாஜி அவர்களைத்தான் சாரும். திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கோ மேலே இருந்து சக்தி பெறுவதாக' கூறினார்கள். எங்களுக்கு அந்த சக்தி இந்த மன்றத்திலேயே இருக்கிறது. (மன்றத்திலி லிருந்து திரு. ராஜாஜி படத்தைக் காட்டிக் கூறினர்). ஓரிஸ்ஸா மாகாண எம்.பி.-க்கள் அதை ஏற்றுக் கொண்டு பேசினர்கள். மைசூர் மாநில பிரதிநிதியாக பாராளுமன்றத்திற்குச் சென்ற திரு. லோபோபிரபு அவர்களும், ஆங்கிலம் நீடித்து இருக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் சொன்னர்கள். தமிழ் மாநிலத் தில் இருந்து சென்ற டாக்டர் சந்தோஷும் அவர்களும் அதே கருத்தைத்தான் சொன்னர்கள். ஆந்திராவில் இருக்கக் கூடிய சுதந்திராக் கட்சித் தலைவர் பேராசிரியர் என். ஜி. ரங்கா அவர்களும் மிகத் திட்டவட்டமாக ஆங்கிலந்தான் இருக்க வேண்டுமென்று சொன்னர்கள். திரு. கே. எம். முன்ஷி அவர்கள் சென்னையில் திரு. சர். ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசும்போது அதே கருத்தைத் தான் கூறியிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரை கொரடாவைக் கொடுத்து சாட்டையால் அடித்த பிறகும் கூட அவர்களுக்கிடையே இருக்கக்கூடிய பிளவு நிச்சயமாக

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1968 சனவரி 23

எங்களிடத்திலே இல்லை. ஆங்கிலந்தான் தொடர்பு மொழியாக இருக்க வேண்டுமென்பதை அகில இந்தியாவிலும் சுதந்திராக் கட்சியினர் திட்டவட்டமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

ரஷ்யா பற்றிக் குறிப்பிட்டார்கள், சைனு பற்றிக் குறிப்பிட்டார்கள். சைனுவில் எனை நடக்கிறதோ எனக்குத் தெரியாது. சைனு நமக்கு விரோதி. அவர்கள் பத்தாயிரம் இந்திய வீரர்களைச் சுட்டுக் கொன்றவர்கள். அவர்களோடு எந்த விதமான தொடர்பையும் நாங்கள ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. சைனுவைப் பொறுத்தவரை ஒரு மொழிதான்—பல மொழிகள் இல்லை. இங்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தமிழ் நன்கு வளர்ச்சியடைய வேண்டுமென்றுதான் நாங்கள் கூறுகிறோம். ஆகவே, சைனுவோடு நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதில் பொருள் இல்லை. ரஷ்யா பற்றிச் சொன்னார்கள். ரஷ்யாவில் இருப்பவர்கள் என்ன மொழி பேச வேண்டும்? உஸ்பெகிஸ்தான், டாஷ்கெண்டில் பேசப்படும் மொழி எல்லாம் கூட ரஷ்ய மொழிதான். குழப்பத்தை உண்டு பண்ணுகிற இணைப்பு மொழி இருக்கக்கூடாது. மாநில மொழிகள் வளர்ச்சியடைய வேண்டுமென்ற அதே நேரத்தில் இந்தியை இணைப்பு மொழியாக மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எங்களை ஆங்கிலத்திற்கு வால் பிடிப்பதாகச் சொல்லுகிறார்கள். நாங்கள திட்டவட்டமாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் மொழிதான இருக்க வேண்டுமென்று கூறுகிறோம்.

இங்கு பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டத்தின் திருத்த நகலும், தீர்மானத்தின் நகலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் 'An Act to amend the Official Languages, 1963, Act-ஐயே ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ராஜாஜி அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அமெண்ட்மெண்ட் ஆக்டில் என்ன போட்டிருக்கிறது, ... The English language may, as from the appointed day, continue to be used in addition to Hindi.' என்று இருக்கிறது. அதன்படி இந்தியும் படிக்கலாம், ஆங்கிலமும் படிக்கலாம் என்ற நிலைமை ஏற்படும். அதையும் நாங்கள ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நிர்மானச் சட்டத்தையே திருத்தினால்தான் பாதுகாப்பு ஏற்படும், இல்லாவிட்டால் பாதுகாப்பு ஏற்படாது என்று திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். முக்கியமான விஷயம் என்னவென்றால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில்,

'This House cautions the Government of India that immediate announcement of the total suspension of the recent Language Act and the appended resolution only can solve the disturbed conditions all over the country threatening a total deadlock and resolves that the Government of Tamilnad would launch on a programme of resistence if the Central Government does not so announce immediately.' என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம்.

1968 சனவரி 23] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

கம்யூனிஸ்ட் கட்சியில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்று சொல்கிறார்கள். அதை மிகவும் சந்தோஷத்தோடு வரவேற்கிறேன். முதல் அமைச்சர் அவர்களிடம் கேரளாவைக் குறித்து ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'Hindi training course for Secretariat staff' என்ற செய்தி என்னிடமிருக்கிறது. அதிலிருந்து ஒரு பாராவைப் படித்துக் காட்டுகிறேன்.

'The course will be conducted in the Secretariat premises and books will be made available to the trainees on a returnable basis.

There will be three courses of training, namely "Probodh", "Praveen" and "Pragya".' என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறது. கேரளாவிலும் இந்தியைப் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு வேண்டுகோள் விடவிரும்புகிறேன். தென்னக மாநிலங்களைப் பொறுத்த வரையில் அங்குள்ள சுதந்திராக் கட்சிக் கிளைகள்,

'English for the Centre and the regional language for the State' என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களின் கரங்களை அப்படி வலுப்படுத்த நாங்கள் தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் தென்னகத்திலுள்ள மைசூர், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்து—

'English for the Centre and the regional language for the State'. என்ற நிலையை எல்லோர் மனதிலும் உருவாக்கி வேண்டிய சக்தியைத் திரட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'Knowledge of Hindi and English essential for I.A.C. Air Hostesses'. என்ற ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. எவ்வளவு பயங்கரமான நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இந்த அமெண்ட்மென்ட் ஆஃப் தி ஆக்ட் என்பது அரை உயிர் போனதுமாதிரி, அந்த செல்யூஷனை ஒத்துக்கொள்வது என்பது பள்ளத்தில் விழுந்ததுபோல் இருக்கும். நமக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால், தமிழ் மொழிக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால் அது ஆங்கிலத்தினால்தான் முடியும். ஆகவே, அமெண்ட்மென்ட் ஆஃப் தி கான்ஸ்ட்டிட்யூஷன் இல்லாவிட்டால் அதிலுள்ள 17-வது பிரிவை ஸஸ்பெண்ட் செய்யவேண்டும் என்று ராஜாஜி அவர்கள் அடிக்கடி கூறுவது போல் அந்தக் கொள்கையைத் திட்டவட்டமாக ஏற்று பிராந்திய மொழிகள் வளர்ச்சி அடைய பாடுபட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பை நாங்கள் முழு மூச்சாகக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். அதற்கு வேலியாக எந்த மொழியும் இருக்க முடியாது. ஆங்கிலம்தான் இருக்க முடியும், இருக்க வேண்டும். அதை எடுத்து விட்டால் நன்றாயிருக்கும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆங்கிலத்தை எடுத்துவிட்ட அடுத்த விநாடி இந்தி வராமல் இருந்தால் எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று நினைக்

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1968 சனவரி 23

கலாம். அப்போது மற்ற மாநிலங்களில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடைத்து நமக்கு இந்தியும் தெரியாமல், ஆங்கிலமும் தெரியாமல் இரண்டாந்தர லிட்டிஸன்ஸ் ஆகிவிடுவோம்.

" We will be reduced to the state of second-class citizens '.

டாமீஸ் அரைகுறை இங்கிலீஷ் படித்து, பட்லர் இங்கிலீஷ் பேசி ஆதிக்கத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்கள். அதேபோல் இந்தி வெறிக்காரர்கள் அரைகுறை இந்தி பேசி ஐ.ஏ.எஸ். ஆபீசர்களாக வரமுடியும். மற்ற மாநிலங்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் பணத்தோடு ஆபீசர்களாக வந்து சம்பளம் வாங்க முடியும். இந்தி ஆதிக்கத்தை மறைமுகமாகக் கொண்டுவர இந்த அஃபிஷியல் லாங்குவேஜ் அமெண்ட்மெண்ட் ஆக்டே போதும், அதற்குமேல் செஸல்யூஷனும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நாம் ஒரு போராட்டத்தைத் துவங்கவேண்டும். அதில் அரசாங்கம் தான் இறங்கவேண்டும். மாணவர்கள் போராட்டத்தில் இறங்கக் கூடாது என்பதில் காங்கிரஸ்காரர்களும் ஒத்துழைப்பு தருவார்கள் என்று நினைக்கிறேன். மாணவர்களைத் தவறான போக்கில் இழுத்துச் செல்லக்கூடாது. ஆகவே, நாம் எல்லோரும் கட்சி வேறுபாடு இல்லாமல் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் சேர்ந்து போராடவேண்டும். அந்தப் போராட்டத்தில் நானும் வரத் தயாராயிருக்கிறேன். இதற்கு எல்லோரும் பூரண ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*** திரு. ப. மகாதேவன் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. பூவராகன் அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தின் பேரில் நான் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று இந்தப் போவையில் நிகழக் கூடிய ஒரு நிகழ்ச்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. நாம் இன்று இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பது 15 அல்லது 25 அல்லது 50 ஆண்டுகள் வாழப் போகும் நமக்காக அல்ல. வருங்கால சந்ததியினரை நினைத்து நாம் ஒரு முடிவு எடுத்தால் என்றென்றுமே நாம் போற்றப் படுவோம். இந்தப் பிரச்சினையை அணுகும்போது திரு. மாரி முத்து அவர்கள் சொன்னதுபோல் நாட்டின் ஒற்றுமை நம் மனதில் நிற்கவேண்டும் என்பதைப் பணிவுடன் கூறிக்கொள்கிறேன். அதில் யாருக்கும் மறுப்பு இருக்கமுடியாதென்று நான் உறுதியாக நம்புகிறேன். பாரத நாடு நம் நாடு என்று பாரதி கூறியுள்ளதை, அவருக்கு சிலைவைத்து போற்றுவதைப்போல், நாம் போற்ற வேண்டும். அந்தக் கட்டத்தில் இருந்து நாம் இந்தப் பிரச்னையை அணுகிப் பார்த்தால், அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிற இத் தீர்மானத்தின் முற்பகுதி மட்டும் இருந்திருந்தால் எங்கள் கட்சி சார்பாக அதை ஆமோதித்திருப்போம், வரவேற்றிருப்போம். எங்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்களைப் போன்றவர்களும் வராமல் இருந்தால் எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று

1968 சனவரி 23] [திரு. ப. மகாதேவன்]

நிலைக்கலாம், அப்போது மற்ற மாநிலங்களில் உள்ளவர்களுக்கு போன்றவர்கள், கேட்டு நமக்காக கொண்டுவரப்பட்ட சட்டம் அது. பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பங்கு கொண்டு அதற்கு வோட்டு போடாத நிலை இருந்தபோதிலும் அது நமக்காகக் கொண்டு வரப்பட்ட மாக்ன கார்ட்டா என்று எங்கள் தலைவர் சொன்னது பொருத்தமானதாகும். ஆனால் செல்யூஷன் என்ற முறையில் வந்த பகுதி நமக்கு சில பலுக்கலை, சில பயத்தை விளைவிக்கிறது என்று சொன்னல்--அதைத்தான் எங்கள் தலைவரும், முதல் அமைச்சர் அவர்களைப் போன்றவர்களும் அன்று கூறினர்கள் அது எங்களுக்கு உட்பட்டு வராது என்று. அதை மாற்றுவது என்பது இன்றையச் சூழ்நிலையில் அது க்ளோஸ்ட் சாப்டர் என்று பிரதமர் அவர்கள் சொல்லியிருந்த போதிலும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் அவர்களுடைய முயற்சியாலும், இங்குள்ள காங்கிரஸ்காரர்களின் முயற்சியாலும் அது மறு பரிசீலனை செய்யப்படும் என்ற நிலை இன்று வந்திருக் கிறது. மத்திய சர்க்கார் உத்தியோகங்கள், கம்யூனிக்கேஷன்ஸ் கரஸ்பாண்டன்ஸ் போன்ற சிறிய பிரச்னைகளை பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அதற்காக அரசு ஒரு தீர்மானம் போட்டிருந்தால் காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து அம்முயற்சியை வெற்றி பெறச் செய்திருக்க முடியும். இன்றையச் சூழ் நிலையில், மொழிப் பிரச்னை ஒரு சிக்கலான பிரச்னையாகிவிட்டது, ஒரு நண்பர் சொன்னது போல், சிக்கலான பிரச்னையாக ஆக்கப்பட்டு விட்டது என்றார்கள். எப்படியோ அது சிக்கலான பிரச்னையாகிவிட்டது. மத்திய சர்க்கார் பரீட்சைக்கு தமிழ் மட்டும் போதும் என்று சொன்னல் ஆங்கிலம்கூட இங்கு படிக்க வேண்டிய அவசியம் வராது. இணைப்பு மொழி ஒன்று வேண்டாமா? வட நாட்டில் இருந்து இங்கு ஒருவர் வரும்போது அவர் என்ன மொழியில் பேசுவார்? ஜாடை காட்டி பேச முடியுமா? இன்று முதல் அமைச்சர் அவர்கள் கேரளா விற்குப் போகும்போது கேரள முதல் அமைச்சர் அவர்களுடன் பேசுவது ஆங்கிலத்தில். ஆகவே இணைப்பு மொழி ஒன்று கட்டாயம் தேவை. வட நாட்டிலிருந்து இங்கு அல்லது இங்கிருந்து வட நாட்டிற்கு வர்த்தகத்திற்காக அல்லது வேறு காரியங்களுக்காகப் போகிறவர்களுக்கு பேசுவதற்கு ஒரு இணைப்பு மொழி வேண்டாமா? இந்தியை கட்டாயமாகத் திணிக்க நாம் ஒரு நாளும் ஒப்புக்கொள்ளமாட்டோம். இந்தியைப் படிக்க நம்மை வற்புறுத்த முடியாது என்பதுபோல் மற்றவர் களையும் ஆங்கிலம் படிக்க நாம் வற்புறுத்தமுடியாது. அதேபோல் சிறுபான்மையினர்தான் தியாகம் செய்யவேண்டும் என்று சொல்வதை ஒப்புக்கொள்ள மாட்டோம். அவர்களும் தியாகம் செய்யவேண்டும். தியாகம் என்பது எல்லோரும் செய்யவேண்டிய ஒன்றாகயிருப்பதால் அம்முறையில்தான் மும்மொழித் திட்டம் என்ற முறையில் நாம் இந்தி படித்து அவர்கள் ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம் முறையில் . . .

[1968 சனவரி 23

மு. ப. 3-00

மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை : மும்மொழித் திட்டம் வட மாநிலங்களால் சரியான முறையில் அமலாக்கப் படாமல் இருக்கிற நேரத்திலேயும் நாம் மும்மொழித் திட்டத்தை வைத்துக்கொள்ளவேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறாரா ?

திரு. ப. மகாதேவன் : மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கேட்ட கேள்வியைப் பொறுத்த வரையில், இப்போது நாம் தீர்மான வடிவமாக இனி என்ன செய்யவேண்டுமென்று யோசிக்கிறோம். மாணவர்கள், தலைவர்களிடத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிற நிலையில், எங்களுடைய நலனை நாங்களே பாதுகாத்துக் கொள்ளுகிறோம் என்று சொல்லும் நிலையில், இன்று இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மூலம் அவர்களை மும் மொழித் திட்டத்திற்கு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மும்மொழித் திட்டம் இங்கே இருந்துவந்த இத்தனை ஆண்டுகளில் வடக்கே உள்ளவர்கள் இதுவரையில் அதை அமலாக்காமல் இருந்ததற்கு நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

திரு. ப. மகாதேவன் : அதிலும் கூட எங்கள் கட்சி என்றே சொல்வீர்கள். நாமும் கட்டாயமாக இந்தி படித்துக்கொள்ள வில்லை. இந்தியில் பெயரளவுக்கு பரீட்சை, பெயரை எழுதி வைத்தாலே போதும் என்ற நிலைமைதான் இருந்தது. அப்படி யிருக்க அவர்களைக் கேட்க நமக்கு உரிமை ஏது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தியைக் கேலிக் கூத்தாக ஆக்குவதை விட, இந்தியை அடியோடு எடுத்து விடுவ தால் என்ன நஷ்டம் ?

திரு. ப. மகாதேவன் : இன்றைய நிலையில் கேலிக்கூத்தாக இருந்தாலும், நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காக்கும் முறையிலும், வருங்கால சந்ததிகளின் நலனையொட்டியும் கூறுகிறேன். நண்பர் அவர்கள் 14 மொழிகள் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆட்சேபனை இல்லை. எல்லாம் வளம் பெற்ற மொழிகள்—வளரட்டும். ஐக்கிய நாட்டு சபையில் கம்ப்யூட்டர் போன்ற சாதனத்தை ஏற்படுத்தி, ஒவ்வொருவரும் ஒரு கருவியைக் காதில் மாட்டிக்கொண்டு எந்த மொழியில் வேண்டுமானாலும் பேசுவதைக் கேட்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. அந்த முறையில் 14 மொழிகளில் எந்த மொழியில் பேசினாலும், அத்தகைய கருவியைக் காதில் மாட்டிக் கொண்டால், நமக்கு எந்த மொழி வேண்டுமோ அந்த மொழி கிடைக்கும் முறையில் வருங்காலத்தில் வரலாம்—வரும். திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூட சொல்லிக்கொண்டிருந்தார். இன்றைய தினம் மாணவர்கள் சொல்லலாம், 14 மொழிகளை ஒப்புக் கொள்ளுகிறீர்களே, பள்ளியில் எந்த மொழி படிக்கவேண்டும் ? தமிழைப் படிப்பதா ? வங்காளி மொழியைப் படிப்பதா ? ஒவ் வொருவரும் ஒரு மொழியைப் படித்தால் தொடர்பு மொழி

1968 சனவரி 23] [திரு. ப. மகாதேவன்]

என்னவாக இருக்கும் ? மாணவர்கள் 14 மொழிகளையும் படிக்க வேண்டுமோ ? என்று அச்சம் வரும் நிலை வருகிறது. ஆகவே, இது போன்ற விஷயங்களில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சொன்ன நாம், நமக்குப் பக்கத்தில் இருப்பவர்களை யாரோ என்று எண்ணுமல், 'யாவரும் கேளிர்' என்ற முறையில், அவர்களும் கேட்டு நாமும் கேட்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய குழப்பத்திலே மாணவர்கள் உண்மையாகத் தலைவர்கள் பேரில் நம்பிக்கையில்லை என்று சொன்னால், இதற்கு நாம் 10—20 வருஷங்களாகக் கொண்டிருந்த மனப்போக்கு என்று சொல்லலாம். ஏனென்றால், மும்மொழித் திட்டத்தை முன்னர் நண்பர் பூவராகன் பேசியது போல, அப்போது முதலமைச்சர் அவர்களும் ஆதரித்தார்கள். அதிலே, அதிகப் பங்கு இல்லை என்றாலும், சம பங்கு உண்டு என்று பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : *அடிக்கடி குறுக்கிடுவதற்கு வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது என்று விரும்புகிறேன். மும்மொழித் திட்டத்தை நான் ஆதரித்ததாக மற்றவர்கள் சொன்னதைக் கேட்டுச் சொல்லுகிறார் ? சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளைப் படித்துவிட்டுச் சொல்லுகிறார் ?*

திரு. ப. மகாதேவன் : *சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புகளை காலையில் கூட அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். வேறு பல தலைவர்களும் என்று கூறினேன்.*

நான் முதல் அமைச்சரைப்பற்றி மட்டும் சொல்லவில்லை. மற்றவர்களும்

"Third Memorandum on the Language Problem" *என்பதில்*

'A careful study of the relevant provisions convinced the Government that the Constitution conferred so much authority on State Governments in respect of the use and development of regional languages that there was no possibility whatever of the "imposition" of Hindi if the State Governments made full use of their own powers.'

என்று இருக்கிறது. அதோடு 48-வது பாராவிலே . . .

'Neither Sri A. Ramaswami Mudaliar nor any other South Indian Member of the Committee felt it necessary to express any dissent from any of the recommendations of the Parliamentary Committee. At the same time the note furnished by Sri Purushotham Das Tandon and Seth Govind Das also indicates that they too do not dissent from the conclusions reached on the issues by the Government of Madras.'

என்று இவ்வாறு மெமோராண்டத்தில் கூறியிருப்பது போல, தமிழக அரசு அன்று கொடுத்த அறிக்கையின் பேரில் நம்முடைய தலைவர்கள் யாரும் மாற்றுக் கருத்து தெரிவிக்கவில்லை.

[1968 சனவரி 28

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : புருஷோதம்தாஸ் டாண்டன் எல்லாம் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், அந்த இடத்தில் நான் இருந்ததே இல்லை. உறுப்பினர் அவர்கள் கூறியது நான் அதை ஆதரித்தேன் என்பது.

திரு. ப. மகாதேவன் : நான் சொன்னபோது முதலமைச்சர் என்று சொல்லவில்லை. மற்றவர்கள் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நண்பர் பூவராகன் அவர்கள் நல்ல பதில் கொடுத்தார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : திரு. பூவராகன் நல்ல பதில் கொடுத்தார் என்று இன்னும் 1½ மணி நேரம் வரையில் திருப்திப் பட்டுக்கொள்ளலாம். (சிரிப்பு)

திரு. ப. மகாதேவன் : 11—3—1958 ல் முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சை நண்பர் அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். 'நம் நாடு' ஏட்டில் வந்த ஒரு செய்தியை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

" இந்த இருமொழிக் கொள்கையை உருவாக்கியதில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமே பங்கில்லை. தமிழகச் சட்ட மன்றத்தில் இடம் பெற்றிருக்கின்ற கட்சிகள் அனைத்துக்கும் இம் முடிவில் பங்குண்டு.

இம்முடிவில் சட்ட மன்றத்தில் இடம் பெற்றிருக்கின்ற கட்சிகள் அனைத்துக்கும் பங்குண்டு என்கின்றபோது, சட்ட மன்றத்தில் இடம் பெற்றிருக்கின்ற நமது முன்னேற்றக் கழகத்துக்கு மட்டும் இதில் பங்கில்லாமல் இருக்க முடியுமா ? நிச்சயமாக உண்டு. கூடுதலாக இல்லை என்பதானாலும், ஆளும் காங்கிரஸ் கட்சி உட்பட மற்ற கட்சிகளுக்கு இருக்கக் கூடிய அளவு பங்கு, நமது முன்னேற்றக் கழகத்துக்கும் முக்காலும் உண்டு.

(நம் நாடு—3-8-1960)"

ஆகவே, இவ்வாறு அந்த மாறுபட்ட கருத்துக்கள் வந்த காரணத்தினால், இன்று மாணவர்கள், தலைவர்கள் பேரில் நம்பிக்கை இல்லை என்று சொல்லக் கூடிய நிலையில், என்ன செய்வது என்று ஆராய்ந்து நம் சட்ட மன்றம் சரித்திரப் பிரசித்தி பெறக் கூடிய தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, நாட்டுப் பிரிவினைக்கு வித்திடாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மூக்கையா தேவர் அவர்கள், வீட்டில் தவளை இருந்தால் பாம்பை விட்டு அகற்றிடலாம் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னது போல . . . (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நண்பர் மூக்கையா தேவர் அவர்கள் சொன்னதை உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். தவளைகளை வீட்டிலிருந்து விரட்ட பாம்பை அனுப்புவதா ? என்று தான் அவர் கேட்டார்.

1968 சனவரி 23]

திரு. ப. மகாதேவன் : அமைச்சர் அவர்கள் சொல்லுவதற்கு முன்னால் திரு. போஜன் அவர்களே சொன்னார்கள் தவிர்க்கமுடியாத அகற்ற பாம்பு தேவையில்லை என்ற முறையில், வருங்கால சந்ததிகளின் நலனைக் கருதி—நாடு தனித்து இயங்கும் என்று சொல்லலாம்—இங்கே வேலையில்லாத் திண்டாட்டம் வரும். இன்றைக்கே தமிழ்நாட்டில் என்ஜினீயர்களெல்லாம் வேலையில்லாமல் இருக்கிறார்கள், எல்லோரும் வேறு இடங்களுக்குச் சென்று வேலை தேடிக் கொள்ள வாய்ப்பு இருக்கும் முறையில் நன்கு ஆராய்ந்து செய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால், நமது சந்ததிகள் இங்கு இருக்கிறவர்களைக் குறைகூற வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக் கொண்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்கிறேன்.

" இறுதியில் கீழ்க்காணும் சொற்றொடர்களை இணைக்கவும்—

'அத்தகைய ஆய்வின் அடிப்படையில் மேற்படி சட்டமும் அதைச் சார்ந்த தீர்மானமும் அமல் செய்யப்படுவதை ஒத்தி வைக்க வேண்டுமென இப்பேரவை மத்திய அரசைக் கோருகிறது.

மேலும், ஆட்சி மொழிச் சிக்கலை விவாதித்து நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஏற்ற தீர்வுகாண சர்வ கட்சி மாநாட்டைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேணுமாய் இந்தியப் பிரதமரை இப் பேரவை கேட்டுக்கொள்கிறது. "

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆட்சி மொழி சம்பந்தமாக மத்திய அரசாங்கம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத் தீர்மானம் வழி மொழியப்படவில்லையே.

திரு. சோ. அழகர்சாமி : நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தால் சமீபத்தில் நிறைவேற்றிருக்கக்கூடிய ஆட்சிமொழித் திருத்தச் சட்டத்தின் மூலமாக இங்கு இருக்கக்கூடிய மக்களிடையே ஒரு பெரிய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமே இந்த ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தின் மூலமாக இந்தியாவைக் கூறுபோடக்கூடிய முறையில், இந்தியை ஆதரிக்கக் கூடிய மக்களுக்கும், இந்திமொழி பேசாத மக்களுக்கும் ஒரு பிளவு ஏற்படுகின்ற நீதியில் இன்று இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழகத்தை எடுத்துக்கொண்டால், தமிழகத்தில் நீண்ட நாட்களாகவே இந்தி மொழி கூடாது என்று எதிர்த்துக்கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் இன்று இந்தி பேசாத மக்கள்மீது வலுக்கட்டாயமாக திணிக்கக்கூடிய ஒரு நிலையை மத்திய அரசு எடுத்திருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் இம்மாதிரியாகத் திணிப்பதை

[திரு. ஆ. கு. சுப்பையா] [1968 ஜனவரி 23

நாங்கள் கடுமையாக எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆட்சிமொழியாக இருக்கும் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமா என்பது சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கிறது. ஆகவே எல்லா மக்களும் அந்தந்தப் பிரதேச மொழிகளுக்குப் போதுமான அந்தஸ்து கொடுத்து எல்லா மக்களும் விரும்பும் வரையிலே இன்று ஒரு துணை ஆட்சிமொழியாக ஆங்கிலம் இருப்பது தான் சரியாக இருக்க முடியும்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் அவருடைய திருத்தத்தில் இரு மொழிகள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆங்கிலம் தொடந்து இருக்க வேண்டுமா என்பதை யோசனை செய்ய வேண்டியிருக்கிறது. இன்று தமிழகத்திற்கு ஆட்சிமொழியாகத் தமிழ் இருப்பது என்பது ஒரு பொறுப்பாக இருக்க முடியும். ஆட்சிமொழியாக மாத்திரமல்ல, பயிற்சிமொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் இருந்தாக வேண்டும். அந்த வகையிலே நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது நமது நாட்டிற்கு உகந்ததாக இருக்க முடியும். மத்திய அரசாங்கத்திற்கு எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, தமிழகத்தில் இருக்கக் கூடிய எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுக உட்கார்ந்து ஒன்று பட்ட முடிவுகளின் அடிப்படையிலே மொழி சம்பந்தமாக ஒரு தகவலைக் கொடுப்பது சரியாக இருக்க முடியும். அதற்கு நமது மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள், மொழி சம்பந்தமாக ஆலோசிப்பதற்கு சகல பேர்களையும் அழைக்கவேண்டிய ஏற்பாடுகளை நடத்த முடியுமா என்று யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தமிழகத்தை எடுத்துக்கொண்டால், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கக்கூடிய மக்களிலேயே நூற்றுக்கு மூப்பத்தொன்பது பேர்கள்தான் தமிழில் எழுதவும், தமிழில் படிக்கவும் கற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் இன்னும் சரியாள முறையில் கற்றுக்கொள்ள இயலாத நிலையில்—கிராமப்புறங்களில் கோடிக் கணக்கான மக்கள்—இருக்கிறார்கள். தங்களுடைய தாய்மொழியைச் சரளமாகப் படிப்பதற்கும், பேசுவதற்கும், எழுதுவதற்கும் முடியாத நிலையில் மீண்டும் மற்றொரு மொழியைப் புகுத்துவது நியாயமாக இருக்க முடியாது. அந்த முறையில் தமிழ் நாட்டில் தமிழ் மொழியை ஆட்சிமொழியாக, நீதிமன்ற மொழியாகக் கொண்டு வரவேண்டும், தமிழிலே நன்கு பேசப் பயிற்சி பெற்றவர்கள் நமது நீதி மன்றத்திலே இருந்தார்கள் என்றால், அவர்கள் என்ன பேசுகிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அந்த நிலையிலே இன்று அந்த மொழிக்கு அதற்குரிய அந்தஸ்துகளை வழங்குவதுதான் சரியாக இருக்க முடியும்.

அதுபோலத் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்கும், மாணவர்களுக்கும், இந்தச் சபை உறுதியளித்தாக வேண்டும். இந்தியால் ஏற்பட்டிருக்கக்கூடிய ஆபத்தை அவர்கள் கடுமையாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு வாக்குறுதியைக் கொடுத்தாக வேண்டும். ஏகோபித்த தீர்மானத்தை நிறைவேற்றுவது சிறப்பாக இருக்கும்.

1968 சனவரி 23] [திரு. ஆ. கு. சுப்பையா]

. என்னுடைய திருத்தத்தில், மத்திய அரசு செய்திருக்கக்கூடிய சட்டத் திருத்தத்தை ஒத்தி வைக்க வேண்டும், அமலுக்கே கொண்டு வரக்கூடாது என்று தெரிவித்துள்ளேன். சகல கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி ஒருமைப்பாட்டிற்கு உகந்த ஒரு தகவலைக் கொடுப்பது தமிழ் மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் உகந்ததாக இருக்க முடியும் என்று ஆலோசனை சொல்லிக்கொள்வதோடுகூட, நமது முதலமைச்சர் அவர்கள் என்.சி.சி. முதலிய அணிகளில் பயன் படுத்தப்பட்டு வரும் இந்தி ஆணைச் சொற்களை நீக்கிவிடுவது பற்றி கூறி இந்திக்குக் கொடுத்திருக்கும் எதிர்ப்பை நானும் ஆதரிக்கிறேன் என்று கூறிக்கொள்ளுகின்றேன். அதை ஒருகாலும் அனுமதிக்க இயலாது, அனுமதிக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. HABIBULLAH BAIG : Mr. Speaker, Sir, our country is a big country. It is having a very huge population speaking various languages. During the twenty years of independence of this country, instead of solving the various more important problems like food, housing and water-supply the Government of India have unnecessarily introduced this problem of language which is not at all necessary. There are fourteen languages in this country. The Government of India wants to impose the Hindi language on us and we cannot tolerate this imposition at any time. The stand taken by the Government of Tamilnad is a very good stand and we fully support it. As far as Tamilnad is concerned, Tamil is the only language spoken by the people, and the official language of the State should be Tamil. English should be the link language between State and State and State and Centre, and Hindi cannot be the link language. All the fourteen languages must be developed. Till they are developed English should continue to be the link language of this country. If the Government of India spend the same amount of money as they are now spending for the development of Hindi, I think all the fourteen languages can be equally developed. But there is a stepmotherly feeling in that respect. They are not at all trying to develop the other languages; they want to develop the Hindi language alone. On behalf of the Muslim League I insist that all the fourteen languages of the country must be developed. Equal opportunities must be given for the development of all the languages. I fully welcome and endorse the motion moved by the Hon. Leader of the House with the amendment moved by me.

* திரு. என். சங்கரய்யா : சபாநாயகரவர்களே, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மார்க்சிஸ்ட் சார்பாகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்கள் மூன்று மொழிந்து விளக்கமாகவும், தெளிவாகவும் பேசியிருக்கிறார்கள். இந்தி மொழி தமிழ் மக்களின் மீதும், இதர இந்திமொழி பேசாத மக்கள் மீதும் வேகமாகத் திணிக்கப்பட்டு வருவதை எதிர்த்து, இந்த மாநிலங்களிலே வாழக்கூடிய மாணவர்களும், பொது மக்களும் பெரிய அதிர்ச்சியும், கிளர்ச்சியும் அடைந்திருக்கக் கூடிய

[திரு. என். சங்கரய்யா] [1968 சனவரி 23

நேரத்திலே இந்தப் பிரச்சினையை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நேரத்தில் நண்பர் பாலசுப்பிரமணியன் அவர்கள் காலையிலே குறிப்பிட்ட யோசனையைப் போல் நம்முடைய மாநில அரசாங்கம் சட்டமன்றத்திலே இருக்கக் கூடிய கட்சிகளுடைய பிரதிநிதிகளோடு கலந்து கொண்டு தமிழக சட்டமன்றத்தின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் கூடுமான வரை ஒன்றுபட்ட ஒரு முடிவை, ஒரு நிர்மானத்தை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி அதை வற்புறுத்த வேண்டும். அது தான் இந்தித் திணிப்பை தடுத்து நிறுத்துவதற்கும் நம்முடைய மாநிலத்தினுடைய மாணவர்களுடைய, இந்தி பேசாத மாநிலத்திலுள்ள மாணவர்களுடைய, மக்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கு இன்னும் வசதியாகவும் நன்றாகவும் இருந்திருக்கும் என்ற ஆலோசனையை நான் கூற விரும்புகிறேன். இன்று கூட இந்த விவாதத்தின் முடிவில் தமிழக அரசாங்கத்தினுடைய கொள்கையை ஒரு ஒன்றுபட்ட தீர்மானத்தின் மூலமும் சட்ட மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வது மிகவும் பொருத்தமானதாகும் என்று நான் மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று இந்தி மொழி திணிப்பை எதிர்த்து நாம் நடத்திக் கொண்டிருக்கிற ஒரு இயக்கம் இந்தி மொழி பேசாத மாநில மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் ஒரு உறுதியான அடிப்படையிலே நம்முடைய திட்டம் இருக்க வேண்டுமென்று நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இன்று இந்தியாவிலுள்ள 14 மொழிகளும் மத்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழிகளாக வேண்டும். 'தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள அப்பகுதியை நான் மனப்பூர்வமாகவும் உறுதியாகவும் வரவேற்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு) கருத்து நாடு முழுவதிலும் ஒன்றுதான் இருக்கிறது. தமிழகத்து நிலைமைகளுக்கு ஏற்றவாறு ஒரு கருத்து, வேறு ஒரு மாநிலத்திலே இருக்கிற நிலைமைகளுக்கு ஏற்றவாறு ஒரு கருத்து என்ற நிலையிலே இந்திய கம்யூனிஸ்டுகட்சி (மார்க்சிஸ்டு) இல்லை. அதைத்தான் இந்தியா பூராவிலும் உள்ள எங்களுடைய கட்சித் தலைவர்களும் கூறியிருக்கிறார்கள். அதன்படி தான் இன்று தமிழ் நாட்டில் இதை நாங்கள் வற்புறுத்துகிறோம். இதை வற்புறுத்துகிற நேரத்திலே யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குத் தேர்வு எழுதுகிறவர்கள்—மத்திய அசாங்கத்திற்கு வேலைக்குப் போக வேண்டுமென்று பரிட்சை எழுதுகிறவர்கள் ஆங்கிலம் அல்லது இந்தி ஆகிய மொழிகளிலே ஏதாவது ஒன்றிலே பாண்டித்தியம் பெற்றிருக்கவேண்டும் என்று பாராளு மன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிற நிர்மானத்தைக் கவனிக்க வேண்டும். இதன் மூலம் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், வெறும் அவர்களுடைய தாய் மொழியை மட்டும் படித்தால் போதும் என்ற நிலைமை இருக்கிறது. இது மிகவும் மோசமான,

1968 சனவரி 23] [திரு. என். சங்கரய்யா]

மிகவும் பாரபட்சமான, மிகவும் கீர்கேடு வாய்ந்த ஒன்று என்று நான் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தத் தீர்மானத்திலே, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சேர்வுகள் எழுதுகிறவர்கள் இந்திய தேசிய மொழிகளான 14 மொழிகளிலும் எழுதலாம் என்று சேர்த்துக் கொள்வது ஒரு முன்னேற்றமாக இருக்கும். இந்தியா பூராவிலும் உள்ள மக்கள் அந்த உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆங்கிலத்திலே மட்டும் தான் அல்லது இந்தியிலே மட்டும் தான் தேர்வு எழுத வேண்டுமென்று கூறுவது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமையைப் பறிப்பதாகும். அதில் 14 மொழிகளிலும் தேர்வு எழுதலாம் என்று ஒரு முடிவு எற்படுத்துவது நம்முடைய மக்களுக்கு ஒரு வெற்றியை அளிப்பதாகும். சமீபத்திலே, பாராளுமன்றத்திலே ஆட்சிமொழி சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் ஆங்கிலத்திலேயாவது அல்லது இந்தியிலேயாவது பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருப்பதனால் இந்தி மொழி பேசாதவர்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது. இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஒரு மொழியில் மட்டும் பாண்டித்தியம் பெற்றால் போதும். அதாவது அவர்களுடைய தாய்மொழியில் மட்டும் பாண்டித்தியம் பெற்றால் போதும். ஆங்கிலத்திலே பாண்டித்தியம் அடைய வேண்டியதில்லை. ஆனால் மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், மத்திய அரசாங்கத்தினுடைய உத்தியோகத்திற்குச் செல்ல வேண்டியவர்கள், தங்களுடைய தாய் மொழியைக் கற்றுக் கொள்ளுவதோடு, இந்தி ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் ஏதாவது ஒன்றில் பாண்டித்தியம் அடைய வேண்டுமென்ற பெரும் சுமை செலுத்தப்படடிருக்கிறது. 14 மொழிகளிலும் தேர்வு நடத்த வேண்டுமென்று நாட்டிலே உள்ள அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பலர் கூறி இருக்கிறார்கள். அந்த நிட்டத்தை கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தத்திலே சேர்த்துக் கொள்ளுவதன் மூலம் நாம் இந்த நாடு முழுவதிலும் உள்ள மக்களுடைய நன்றியதிதலைப் பெற்றவர்கள் ஆவோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தத்தின் மூன்றாவது பத்தியில் 'இந்தியா பிளவுபடவும் அரசாங்க நிர்வாகத்தில் இருப்பவர்களிடையே, வெறுப்பு, குழப்பம், வேதனைகள் மலிந்த இரு பிரிவுகளை உண்டாக்கவும் வகை செய்கிறது என்று கருதுவதோடு", என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்து, 'தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்' என்று நாம் கோருகிறோம். அப்படியானால் நாம் கோரக் கூடிய அந்த நிலைமைகள் ஏற்படுகிறபொழுது மத்திய அரசாங்கத்திலே வேலை செய்யக் கூடியவர்கள் ஒரு பிரிவினர் மட்டுமல்லாமல் 14 பிரிவினர் இருப்பார்கள். ஆகவே, இரண்டு பிரிவினர், ஆங்கிலம் தெரிந்தவர்கள், இந்தி தெரிந்தவர்கள் என்று இருப்பதே குழப்பம் ஏற்படுத்தும் என்று நாமே சொல்லுவோமேயானால், 14 மொழிகளும் மத்திய அரசாங்க மொழியாக ஆக வேண்டுமென்று

[திரு. என். சங்கரய்யா] [1968 சனவரி 23

விரும்பு முடியாது. இரண்டு மொழிகள் எதற்கு? ஒரே ஒரு மொழி தான் இந்தியாவினுடைய இணைப்பு மொழியாக, ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று இந்தி வெறியர்கள் கூறுகிறார்கள். அது எவ்வாறு சாத்தியமற்றது என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் மற்றொரு பிரிவினர் கூறுகிறார்கள், 14 மொழிகளிலும் கல்லூரிகள் நடத்துவதா? 14 மொழிகளிலும் நீதி மன்றங்கள் நடத்துவதா? 14 மொழிகளிலும் அரசாங்க நிர்வாகம் நடத்துவதா? என்று. அப்படி நடத்துவதுதான் மாநிலங்களை எல்லாம் திருப்தி படுத்துவது ஆகும். ஆனால் அவர்கள் என்ன கூறுகிறார்கள்? அப்படி நடத்தினால் குழப்பமாக இருக்கும். ஆகவே, ஒரே ஒரு மொழியில்தான் நீதிமன்றங்கள் நடத்தப்பட வேண்டும், கல்லூரிகள் நடத்தப்பட வேண்டும். மற்றவைகளும் நடக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆகவே, அந்தக் குழப்பத்தைப் போக்கவேண்டுமானால் ஒரே ஒரு மொழி தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், அது இந்தி தான் என்ற அளவுக்குப் பிரச்சினையைத் திருப்பப் பார்க்கிறார்கள். இந்த அரசாங்கத்தார் கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தத்திலே இரண்டாவது பிரிவு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. அதை ஏற்றுக் கொள்ளுகின்ற நேரத்தில் 14 மொழிகளிலும் 14 மாநிலங்களிலும் சாரியங்கள் நடக்கும். கல்லூரிகளில் 14 மொழிகளில் போதனை நடக்கும். ஆகவே, தவிர்க்க முடியாமல் மத்திய அரசாங்கத்தில் ஊழியம் செய்யக் கூடியவர்கள் 14 மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருப்பார்கள்.

அடுத்து, இந்த மூன்றாவது பாராவிலே இன்றைக்கு ஆங்கிலமும் இந்தியும் இரண்டும் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டு விடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் அந்நிய மொழி. அதை மட்டும் ஏன் ஆட்சி மொழியாகக் கொள்ள வேண்டும்? எல்லா பிரதேச மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டுமென்று கோருகிறபோது ஆங்கிலத்தையும் சேர்க்கக் கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன். 'வேதனைகள் நிறைந்த இரு பிரிவுகளை உண்டாக்கிடவும் வகை செய்கிறது என்று கருதுவதோடு', என்று இருப்பதை இந்த திருத்தத்திலிருந்து நீக்குவதன் மூலம் எங்களுடைய கட்சி இந்த திருத்தத்தை ஆதரிப்பற்கு வழி ஏற்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று, நாம் நம்முடைய மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்தியை எதிர்க்கின்ற அதே நேரத்தில் ஆங்கிலத்தை ஆதரிப்பது எப்படி பொருத்தமாக இருக்கும்? 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகும் வரை தொடர்ந்து ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்று இரண்டாவது திருத்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படிச் சொன்னால் இந்தி பேசக் கூடிய மாநிலத்திலே உள்ளவர்கள் ஏதோ நாம் அவர்கள் மேல் ஆங்கிலத்தைத் திணிப்பதைப் போல் நினைக்கிறார்கள். ஆனால் நாம் இந்தியை நம் மீது திணிப்பதாகக் கூறுகிறோம். ஆக இருவரும் இவர்கள் மொழியை அவர்கள் மேல் திணிக்கிறார்கள் என்று குறை கூறாமல் இருக்க வேண்டுமானால் 14 மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக

1968 சனவரி 23] [திரு. என். சங்கரய்யா]

வேண்டும். 14 மொழிகளும் தேசிய மொழிகளாக இருந்தால் தான் அந்தந்த மொழி பேசும் மக்களுடைய நலன்கள் பாதிக்காமல், அவர்கள் நலன்கள் பாதிக்கப்பட வேண்டுமென்ற காரணத்தாலே ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற கருத்தை இன்று திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமும் அந்த அரசாங்கத்தோடு அதைச் சேர்ந்த மற்ற தோழமைக் கட்சிகளும் ஒரு முழுத் தீர்மானத்தை இன்று சட்டமன்றத்திலே ஏற்படுத்த முடியும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசினர் தீர்மானத்தின் 4, 5, 6 பகுதிகளைப் பொறுத்த வரை எங்களுடையக் கட்சிக்கு முழுச் சம்மதம் இருக்கிறது. அதற்கு முழு ஆதரவும் கொடுக்கிறது.

இரண்டாவது பகுதியிலே குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதிகளிலும் எங்களுக்கு ஒரு திருத்தம் இருக்கிறது. அதாவது இன்று நாமே சொல்லுகிறோம், தமிழ் எங்கள் உயிர், தமிழ் எங்கள் மூச்சு என்று. டாக்டர் ஹாண்டே அவர்கள் சென்ற கூட்டத் தொடரில் ஆங்கிலமே கல்லூரிகளில் போதனு மொழியாக நீடிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதற்கு வகை செய்ய வேண்டுமென்றும் பேசும்போது சொன்னார்கள். அரசாங்கமும் அதற்கு ஆதரவு அளிக்குபடியும் கேட்டுக் கொள்ளப் பட்டது. நம்முடைய மாணவர்கள் இன்று தமிழின் மூலமாகத் தான் உயர முடியுமென்ற அளவு, போதனு மொழியாக, பயிற்சி மொழியாக தமிழ் வரவேண்டும்.

மும்மொழித் திட்டம் நிச்சயமாகத் தேவை இல்லை. தமிழ் நாட்டிலுள்ள மாணவர்களை, தமிழைத் தவிர வேறு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்ல நமக்கும் உரிமை கிடையாது. மற்றவர்களுக்கும் உரிமை கிடையாது. ஏனென்றால் அது அவர்களுடைய தாய் மொழி இல்லை. அதே போல் ஆந்திரா விலுள்ள மாணவர்களை தெலுங்கைத் தவிர வேறு ஏதாவது மொழி கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்வது நியாயம் அல்ல. ஆக, தாய் மொழியைத் தவிர, வேறு அண்டை மாநில மொழியைக் கூட நாம் கற்றுக் கொள்ளச் சொல்ல உரிமை இல்லை என்று சொல்லும்போது 6,000 மைல் தூரத்திலுள்ள ஆங்கில மொழியை நம்முடைய மாணவர்கள் கட்டாயமாக படிக்க வேண்டுமென்று நாம் ஏன் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்? இன்று அதைத் தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் தமிழைத் தவிர மற்ற மொழிகளைப் படிப்பதை அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு விட்டுவிடவேண்டும். இதற்கு நம்முடைய மாநில அரசாங்கமும் கல்வி இலாகாவும் எந்த அளவுக்கு ஏற்பாடு செய்துதர முடியுமோ அந்த அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அவரவர் தாய் மொழியைத் தவிர, வேறு ஏதாவது ஒரு மொழியைப் படிக்கலாம் என்று தான் சொல்ல வேண்டுமே தவிர, ஆங்கிலம் தான் படிக்க வேண்டுமென்றோ, இந்தி தான் படிக்க வேண்டுமென்றோ சொல்லக் கூடாது.

[திரு. என். சங்கரய்யா] [1968 ஜனவரி 23

பிற பகல் 3–30

ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று என் மாணவர்களைக் கட்டாயப் படுத்த வேண்டும். அவர்கள் மீது ஏன் அனுவசியப் பளுவை சுமத்த வேண்டுமென்பதை மிகவும் பணிவன்போடு உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். ஆகவே, இந்த மூன்று அம்சங்களிலும் இந்த அரசினர் கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானத்தில் தக்க திருத்தங்கள் ஏற்படுமேயானால், எங்களுடைய கட்சி அதைப் பூரணமாக ஆதரிப்பதற்கு இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி மற்ற பகுதிகளைப் பொறுத்தவரையில் எங்களுக்கு அதிலே கருத்து ஒற்றுமை இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன். நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தங்களை ஆழ்ந்து கவனித்தால், தமிழ் மொழி வளரவேண்டும் என்று நினைக்கிறவர்கள் அதில் எந்த அம்சத்தையும் எதிர்க்க முடியாது. அந்தத் திருத்தங்கள் மிகவும் நுணுக்கமாகவும், விரிவாகவும், எல்லா அம்சங்களையும் கொண்டதாகவும், எல்லா மொழிகளுக்கும் சமத்துவமான தீர்வு ஏற்படும் நிலைமையில் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

நமது மாநிலத்திலுள்ள மாணவர்களை பெரிதும் பாதிக்கக்கூடிய அளவில், இந்தி மொழியை திணிக்கக்கூடிய கட்டத்தில், இந்தி மொழியில் கட்டாயம் பாண்டித்தியம் அடைந்திருந்தால் தான், மத்திய அரசில் வேலை வாய்ப்புகள் கிடைக்கக்கூடும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள மாணவர்களுக்கு இதனால் பெரிய அளவுக்கு பயம் ஏற்பட்டிருக்கிறது. வேண்டா வெறுப்பாக இன்றைக்கு காங்கிரஸ் தலைமை பீடத்திலுள்ளவர்கள் பல மொழிகளிலும் யூனியன் சர்வீஸ் கமிஷன் பரிட்சை எழுதலாம் என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை. பிரதேச மொழிகளில் பரிட்சை எழுதலாம் என்று பெயர் அளவுக்குத் தான் கொண்டுவந்திருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. அப்படிச் செய்தால்தான் இந்தியை புகுத்துவதற்கு, அதைப்பற்றி மக்களிடையே பேசுவதற்கு முடியும். அப்பொழுதுதான் அதை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நோக்கத்தில்தான் பல மொழிகளிலும் யூனியன் சர்வீஸ் பரிட்சைகள் எழுதலாம் என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழும், மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும், அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு 14 மொழிகளும் இந்திய யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சைகள் எழுதுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். மற்றபடி வேறு எந்த ஒரு குறிப்பிட்ட மொழியிலும் பாண்டித்தியம் தேவையில்லை என்ற நிலைமை ஏற்படவேண்டும். இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ தான் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சை எழுதவேண்டும் என்ற நிலைமை தேவையில்லை. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானத்தை எதிர்க்கக்கூடிய வகையில், அதை ரத்து செய்யக்கூடிய வகையில் 14 மொழிகளில் எதாவது ஒரு மொழியை பயின்றால் போதும், அதில் பாண்டித்தியம் பெற்றால் போதும், யூனியன் அரசாங்கத்திலே வேலை வாய்ப்பு கிடைக்கும். வேலை பார்ப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்ற நிலை ஏற்படவேண்டும்.

1968 சனவரி 23] [திரு. என். சங்கரய்யா]

இன்றைக்கு, மொழிப் பிரச்னையை தீர்ப்பதில் ஒரு சிறிய சந்தேகத்தை சில நண்பர்கள் கிளப்பியிருக்கிறார்கள். தமிழ் மொழியை, தாய் மொழியை நீக்கிரமாகவே ஐந்து ஆண்டுகளுக்குள் எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்தவேண்டும், நம்முடைய அரசாங்கத்திலும் சரி, சட்டமன்றத்திலும் சரி, நீதிமன்றத்திலும் சரி, கல்வியின் எல்லா மட்டங்களிலும் சரி, தமிழைக் கொண்டு வருவதற்கு நாம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறோம். கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூட சில நாட்களுக்கு முன்பு மாணவர்கள் பிரதிநிதிகளை சந்தித்து எவ்வித தாமதமும் இல்லாமல் தமிழ் மொழி கல்லூரிகளில் எல்லா மட்டங்களிலும் பயிற்சி மொழியாக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். அது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழைக் கல்லூரியில் எல்லா மட்டங்களிலும் போதனை மொழியாக ஆக்க முடியுமா, மருத்துவக் கல்லூரியில் பொறியியல் கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாக்க முடியுமா, நீதிமன்றங்களில் நுணுக்கமான சட்ட வாதங்களைச் செய்ய முடியுமா, தீர்ப்புகளை தமிழில் எழுத முடியுமா என்ற கேள்வியை எழுப்பி, முடியாது என்று சொல்லி, ஆகவே ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளவேண்டும் என்று ஒரு சிலரும், அவ்வாறு பல மொழிகளை வைத்துக்கொள்ள முடியாது, இந்தியையே எல்லா நீதிமன்றங்களிலும் வைத்துக்கொள்ளவேண்டும் என்று மற்றும் சிலரும், வாதாடுகிறார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் எதிரும், புதிருமாக வாதாடிக் கொண்டிருக்கிறார்கள், என்று தோன்றிய போதிலும் 14 மொழிகளிலும் இவைகளைச் செய்ய முடியாது, ஆகவே ஒனறு இந்தி நீடிக்க வேண்டும் அல்லது ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்று தான் இவர்கள் கூறுகிறார்கள். நம்முடைய மொழியான தாய் மொழி தமிழ் வளர்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகமும், ஆட்சியினரும் அதற்கான பல வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய மொழி வளர்வதில் எந்தவிதமான தடையும் இல்லை. இந்தியை எதிர்ப்பதற்கு ஆங்கிலம் வேண்டும் என்று சொல்கிறார்கள் சிலர். ஆங்கிலத்தை எடுத்துவிட்டால் ஒரு சூன்யம் ஏற்பட்டுவிடும், அந்த சூன்யம் ஏற்படாமல் இருப்பதற்கு ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்று வாதாடுகிறார்கள். ஆங்கிலம் இருந்தால் இந்தியை தடுத்த நிறுத்திவிடலாம் என்று நினைப்பது தவறு. மாறாக ஆங்கிலம் 6,000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த மொழி, அதனால் இந்தியை எதிர்க்க முடியாது, ஆங்கிலத்தில் கால்கள் அவ்வளவு வலிவையுடையது அல்ல. மேலும் தமிழகத்தில் எந்தவிதமான சூன்யமும் இல்லை. தமிழ் மாநிலத்தில் எல்லாவற்றையுமே தமிழிலேயே நடத்த முடியும். சட்டமன்றத்திலும், நீதிமன்றங்களிலும், கல்வியின் எல்லா மட்டங்களிலும் தமிழைக் கொண்டுவர முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. வேறு எந்த மொழியும் வருவதற்கு அவசியமில்லை. ஆங்கிலமும் தேவையில்லை, இந்தியும் தேவையில்லை நமது நிலைமை வேறு. தமிழ் நாட்டில் எவ்வளவு நீக்கிரம் நீதிநிர்வாகம் கல்லூரி போதனை மொழி இவைகள் எல்லாவற்றிற்கும் தமிழைக் கொண்டு வருகிறோமோ அந்த அளவுக்கு இதர மொழிகளுடைய

[திரு. என். சங்கரய்யா] [1968 சனவரி 23

தாக்குதல் நம் மீது ஏற்படாது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நாங்கள் கொண்டு வந்துள்ள திருத்தங்களின் நல்ல அம்சங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு, அவைகளை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொழிப் பிரச்சினை பற்றி எனக்கு முன்பு பேசிய சகல கட்சிப் பெரியவர்களும் விளக்கமாகவும், தெளிவாகவும் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருத்தத் தீர்மானத்தை முதலில படித்து, அது ஆமோதிக்கப்பட்ட பிறகு பேசவேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தத் திருத்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் சொற்றொடர்களை இணைக்கவும் :

" (1) மத்திய அரசு நிறைவேற்றியுள்ள ஆட்சிமொழி (திருத்த) சட்டமும், அதைச் சார்ந்த தீர்மானமும், இந்தி பேசாத மக்களிடம் பீதியையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருப்பதால் மத்திய அரசு அவைகளைத் திரும்பப் பெறவேண்டும் என்று இச்சபை வலியுறுத்துகிறது.

(2) வட்டார மொழிகள் அனைத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என இச்சபை கோருகிறது.

(3) சர்வகட்சித் தலைவர்களையும் ஆதிகார பூர்வமாக அழைத்து கூட்டுக் கமிட்டி அமைத்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென மத்திய அரசை இச்சபை கேட்டுக் கொள்கிறது ".

திருத்தம் வழி மொழியப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கள் திருத்தத்தில் நான்காவது பகுதியை விட்டுவிடுகிறீர்களா? அப்படியானால் அதற்குப் பேரவையின் அனுமதியைக் கோரவேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : என்னுடைய திருத்தத்தில் நான்காவது பகுதியை விட்டுவிட இந்தப் பேரவையின் அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. எஸ். மணி அவர்களின் திருத்தத் தீர்மானத்தில் நான்காவது பகுதியை மட்டும் அகற்றிவிடுவதற்குப் பேரவையின் அனுமதி கோரப்படுகிறது.

பேரவையின் அனுமதியுடன் நான்காவது பகுதி அகற்றப் பட்டது.

1968 சனவரி 23]

திரு. கே. பி. எஸ். மணி : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மொழி மனிதனுடைய ஜீவநாடி என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்பேற்பட்ட மொழிப் பிரச்சினை வரும்பொழுது ஒரு தேசத்தில் இருக்கிற சகல கட்சிகளும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறுவதற்கு உரிமை உண்டு. அந்தந்த வட்டார மாநிலங்களிலுள்ள கட்சிகள் அனைத்தையும் ஒன்றுகூட்டி ஒரு நல்ல முடிவு எடுத்தால் நிச்சயம் இதில் வெற்றி காணமுடியும் என்பது என் போன்ற ஊழியர்களின் கருத்து. உதாரணமாக கடந்த காலத்தில்கூட அனைவரும் ஒன்றுகூடி, சிறுபான்மையாக இருக்கக்கூடிய கட்சியினர்களையும் அழைத்து ஒரு நல்ல முடிவு எடுத்து வேலையை தொடங்கினோம், வெற்றி கண்டோம். தேசத்திலுள்ள ஒரு பெரிய பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு, சிறு தரும்பும் பல் குத்த உதவும் என்பதுபோல, சிறிய கட்சிகளையும் கலந்துகொண்டு, ஒரு நல்ல முடிவை எடுத்து, அதைச் சபைமுன் கொண்டுவந்திருந்தால், நிச்சயம் இப்படிப்பட்ட மிகப்பெரிய சர்ச்சைக்குரிய விஷயங்களெல்லாம் இந்த சபைக்குள்ளே நாம் பேசியிருக்கவேண்டிய நிலைமை வந்திருக்காது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

மொழி என்பது மனிதனுடைய ஜீவாதார உரிமை. இந்த தேசத்தின் அரசியல் சட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட 14 மொழிகளையும் தேசத்தினுடைய பொது மொழியாக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அப்படி பொது மொழியாக்கப் படுவதன் காரணமாக பார்லிமெண்டில் பேசுவதற்கு அதை விளக்க ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் நிச்சயமாக, அதைச் சுமுக மாகச் செய்யமுடியும் என்பதை விளக்கமுடியும். இன்றைக்கு முதல் அமைச்சர் கொடுத்துள்ள திருத்தத் தீர்மானத்தை, அதிலுள்ள வார்த்தைகளைப் பார்க்கும்போது அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்கிற எண்ணம் என் போன்றவர் களுக்கு இல்லை. காரணம், இந்த இந்திப் பிரச்சினை மத்திய சர்க்கார் இன்றைக்கு ஏற்படுத்திய புதிய பிரச்சினை அல்ல. இந்தி ஆரம்ப காலத்திலிருந்தே சிறுகச் சிறுக நம்மீது திணிக்கப்பட்டு, நம்முடைய காலைப்பிடித்து, கையைப் பிடித்து, இடுப்பைப் பிடித்து, கழுத்தைப்பிடித்து, இன்றைக்கு தலையிலே வைக்கும் நிலைக்கு வந்திருக்கிறது. ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி டெல்லியிலிருந்து நம்மீது பெரும் சுமையை வைத்திருக்கிறார்கள். ஒன்று நாம் அதை உதறித்தள்ளவேண்டும். அல்லது அதைத் தாங்கிக் கொள்ளும் வலு நமக்கு இருக்கவேண்டும். அதைவிட்டு நாம் பிரச்சினையை மொழிகிப் போட்டுக்கொண்டே போவதில் எந்தவிதமான தீர்வும் நாம் காணமுடியாது என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தியைப் பொறுத்தவரையில் சிறுகச் சிறுக ஆரம்பித்து, என்.சி.சி.-யில் புகுத்தி, படிப்படியாக புகுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் நாம் அலட்சியமாக இருந்துவிட்டோம். அதன் காரணமாக இன்றைக்கு வேதனைப்படுகிறோம்.

[திரு. கே. பி. எஸ். மணி] [1968 சனவரி 23

இன்றைக்கு அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்திலே 'என்.சி.சி.-யை நிறுத்திவிடுவோம், ஹைஸ்கூல்களில் இந்திப் படிப்பை நிறுத்திவிடுவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் மத்திய சர்க்காருக்கு என்ன பாதகம் ஏற்பட்டுவிடும் என்று எனக்குப் புரியவில்லை. அவர்கள் கொடுக்கும் மானியத் தொகை நிறுத்தப்படும். ஆகையினால் அதனால் ஏற்படும் நட்டம் நமக்குத்தான் வரும். அதன் மூலமாக அவர்களுக்கு ஒரு நட்டமும் வருவதற்குக் காரணம் இல்லை. அப்படி படிப்பை நிறுத்துவதால், இங்கே இருக்கும் சில இந்தி பண்டிட்டுகள் வேலையில்லாமல் போவார்கள். ஆகவே, அதனால் ஒரு பெரிய பாதகம் வடவர்களுக்கு ஏற்பட்டுவிட முடியாது. நான் இப்படிச் சொல்லுவதற்குக் காரணம், இந்தி திணிக்கப் பட்டிருப்பதை நீக்க முடியாது. ஆரம்பகாலத்திலிருந்தே இவர்கள் யார் சொன்னதையும் கேட்டதில்லை. காந்திஜி காங்கிரஸை கலைத்துவிடு என்று சொன்னார். அதை நீடித்திக் கொண்டே இருக்கும் வடவர்களை நாம் பார்க்கிறோம். நேருஜி இந்தி பேசாத மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தார், உலகப் புகழ் எய்திய அந்த பெரிய மனிதனின், பெரிய பணக்காரர், பெரும் வசதிகள் படைத்தவன் என்பவருடைய வார்த்தைகளை இவர்கள் கேட்கவில்லை. அரசியல் சட்டத்தை நிறுவிய டாக்டர் அம்பேத்கார் சொன்னதையும் இவர்கள் கேட்கவில்லை. அப்படிப் பட்டவர்களெல்லாம் சொன்னதைக் கேட்காதவர்களா நாம் சொல்லி இப்பொழுது கேட்கப் போகிறார்கள்? இது சாதாரணமான பிரச்சினை அல்ல. அவர்கள் இந்தித் திணிப்பை நிறுத்திவிடலாம் என்று நினைத்தால், அப்படிச் செய்வார்கள் என்று மக்களிடம் சொன்னால், அது மக்களை ஏமாற்றும் ஒரு தத்துவம் என்றுதான் நான் கருதுகிறேன். நாம் துணிந்து செயல் பட்டாலொழிய இந்தித் திணிப்பைத் தடைசெய்ய முடியாது. ஆரம்ப காலத்தில் இந்த விதமான நடவடிக்கை எடுத்திருந்தால் அது பயன் கொடுத்திருக்கும். ஆனால் இன்றைக்கு முடிவான காரியம் அது. இறுதிக்கட்டம். அவர்கள் இன்றைக்குக் கத்தியைக் காட்டவில்லை; கழுத்தில் வைத்து அறுத்துக் கொண்டிருக்கிறார்கள், அறுத்து விடுவார்கள். ஆகவே, பிரச்சினையை ஒத்தி, ஒத்திப் போட்டுக் கொண்டு போவதில் லாபம் இல்லை. தீர்வு காணமுடியாது. முன்பு ஒரு சமயம் நான் முதல் அமைச்சரை, எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் உதவி செய்யவில்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறீர்களே, என்று கேட்டதற்கு அவர்கள் சொன்னார்கள், நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்தால் சாதிக்க முடியும் என்று. இன்றைக்கு ஒன்று சேர்வதற்கு வேறு வழி வகைகளை இறுதியில் சொல்லுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

இந்த நிலையில் பார்க்கும்போது, அவர்களே, பிரிவினை உணர்ச்சியைத் தூண்டுவதுபோலச் செய்கிறார்கள். வடவர்களே, தொலைந்து போகட்டும் என்று செய்யும்போது, நாம் ஏன் அதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கவேண்டும்? வடவர்கள் நினைக்

1968 சனவரி 23] [திரு. கே. பி. எஸ். மணி]

இருர்கள், 'அப்போது காமராஜர் தலைவராக இருந்தார், இன்றைக்கு நிஜலிங்கப்பா இருக்கிறார். தென்னவர்களேதான் நம்மை ஆண்டுகொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாம் இந்தியை அந்த மக்கள் பேரில் புகுத்தினால், தன்னாலே அவர்கள் பிரிந்து ஒழிந்து போவார்கள், நம்மில் ஒருவர் நமக்குத் தலைவராக இருப்பார்' என்று நினைக்கிறார்களோ என்னவோ. (ஆரவாரம்).

இப்பொழுது மதிப்பிற்குரிய காங்கிரஸ் சகோதரர்கள்கூட கட்சிக்காக வாதத்திற்காக ஏதாவது சொன்னாலும், அவர்களுடைய மனதில் தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும், இந்தி திணிக்கப்படக்கூடாது என்கிற எண்ணம் இல்லாமல் இல்லை. அவர்களே ஆட்சி பீடத்தில் இருந்தாலும் செய்கிறப்பார்களோ என்னவோ ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்றைக்கு முன்னேற்றக்கழகம் இருக்கிறது. 'காக்கை கருப்பு' என்றால் 'இல்லை இல்லை, அது வெள்ளை' என்று சொல்வது. (சிரிப்பு) அப்படி ஒரு பாலிஸி. சர்க்கரை தித்திக்கிறது என்று சொன்னால், 'ஹே, ஹே, யார் சொன்னது, அது கசப்புத்தான்' என்கிறார்கள். ஏனென்றால், பெரும் தலைவர்களாக இருப்பவர்கள், தங்களுக்குள் இருக்கும் விரோதம் காரணமாக, இளஞ்சிறார்களை, மாணவர்களை பலியிட்டு, ஏழையாக இருக்கும் எங்களை, கஷ்டப்பட்டு, சாப்பாட்டுக் இல்லாமல், சிரமப்பட்டு, பிள்ளைகளைக் கல்லூரிகளில் படிக்க வைக்கும் எங்களை பலி கொடுக்கும், இளஞ்சிறார்களைப் பலியிடும் பணியில் ஈடுபடவேண்டாம் என்று காங்கிரஸ் சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். இன்றைக்கு, நாம் இங்கே பிரித்து போகும் மனப்பான்மையில் இல்லை. ஆனால், வடவர்களே நம்மை பிரிந்து ஒழிந்து போங்கள் என்று சொல்வது போலச் செய்கிறார்கள். அவர்களே நம் கழுத்தைப் பிடித்து தள்ளுகிறார்கள். நாம் மாட்டோம் என்றாலும் விட மாட்டார்கள். ஏனென்றால், அவர்களே வெளியே போ என்கிறார்கள். அதே நேரத்திலே நான் நாட்டின் ஒற்றுமைக்கு எதிராகச் சொல்லவில்லை. செக்கிழுத்த சிதம்பரனார் சம்பாதித்த சுதந்திரத்தை கட்டிக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும் என்று சொல்லும்போது. அவர்கள் இப்பொழுது நம் நிலைமையை எவ்வளவு பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்வார்கள் என்பதுதான் கேள்வி, கேள்விக்குரிய விஷயம்.

இந்த விஷயத்தில் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம், தென் மாநிலங்கள் நான்கையும் ஒன்று சேருங்கள். அந்த அந்த மாநில முதல் அமைச்சர்களையும், மற்ற அமைச்சர்களையும் கூட்டி ஒரு முடிவு எடுங்கள் என்று தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறேன். அப்படி ஒரு முடிவு எடுத்தால், வடவர்கள் அதைப் புறக்கணிக்க முடியாத நிலை உருவாகும். அப்படிப்பட்ட கூட்டு முயற்சியில்லாமல், தென்னவர்களின் ஒருமித்த குரல் இல்லாத

[திரு. கே. பி. எஸ். மணி] [1968 சனவரி 23

வரையில் இந்தியை ஒழித்து விடுவோம், அது அழிந்து விடும் என்று கனவு காண்பது மக்களை ஏமாற்றக்கூடிய ஒரு சக்தியாகத் தான், சொல்லாகத்தான் இருக்குமே அல்லாது வேறு எதுவும் இல்லை என்பதுதான் என் போன்ற எளியவர்களுடைய கருத்து. இதைத்தான் எங்களுடைய தலைவர் முன்னதாகவே சொன்னார் மாகாணங்களுக்குச் சுயாட்சியைப் பூரணமாகக் கொடுத்து விடுங்கள், அவர்கள் இஷ்டப்படி ஓரளவு கூட்டு அமைப்பை மத்தியிலே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார், அந்த முறைப்படி மத்திய சர்க்கார் நடக்கவில்லை. ஆகவே, மத்திய சர்க்காரைக் கலைத்து விட்டு, கூட்டு அமைப்பை அங்கு ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை வந்தது என்று சொன்னார். அதையும் கேட்க வில்லை. ஆகவே, இந்தத் தேசத்திலே 14 மொழிகளையும் தேசிய மொழிகளாக ஆக்க வேண்டும். வேண்டுமானால் சிறிது காலத்திற்கு முறைப்படுத்தும் வகையில் ஆங்கிலத்தை தற்காலிக மொழியாக வைத்துக் கொள்ளலாம். அந்தக் காலவரையறைக்குள், எந்த மொழி நிர்வாகத்திலே முறைப்படுத்தப்பட்ட, இலக்கண இலக்கியங்கள் உள்ள, தரமுள்ள மொழியாக இருக்கிறதோ, அந்த மொழி பொது மொழியாக வரட்டும், உண்மையிலேயே அப்படிப் பார்க்கும் போது, ஆண்டவன் உண்டு, சாமி உண்டு என்ற நம்பிக்கை உள்ள வர்களைப் பொறுத்தவரையில் பார்க்கும்போது, பரமசிவன், பார்வதி எல்லோரும் பேசிக்கொண்டிருந்த மொழி தமிழ் என்று தான் சொல்லுகிறார்கள். ஆகவே, தமிழ்தான் பொது மொழியாக வந்தாகவேண்டுமே தவிர, வேறு இல்லை. ஆகவே, பின்னால் வரட்டும். அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. தமிழ் மொழி ஆதிக்க மொழியாக வருகின்ற காலத்தில், வேறு எந்த மொழியாக இருந்தாலும் வரட்டும். ஆனால், இந்த நேரத்தில் இந்தி எந்த நிலையில் இருக்கிறது, அது எவ்வளவு தரமுள்ள மொழி என்பதை நாம் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இந்தி ஒரு 'க்ராஸ் ப்ரீட்'. அதற்கு என்று சொந்த இலக்கணம் கிடையாது. மராத்தி மொழியிலிருந்து கொஞ்சம், குஜராத்தி மொழியிலிருந்து கொஞ்சம், வங்காள மொழியிலிருந்து கொஞ்சம், பஞ்சாபி மொழியிலிருந்து கொஞ்சம், இப்படி ஒரு மொழி பாக்கியில்லாமல், ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து, அவ்வளவும் சேர்ந்த கதம்பக் கட்சி என்ற முறையில் இந்தி இருக்கிறது. கதம்பத்தில் ஆடாதோடை முதல் மல்லிகைப் பூ வரையில் இருக்கும். இப்படி ஒரு தரம் இல்லாத மொழியைப்போய்ப் பொது மொழியாகக்கொண்டுவந்து, அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னால், இது எவ்வளவு நியாயம் என்று பார்க்கவேண்டும். தமிழை எடுத்துக் கொண்டால், அதற்கு சங்க இலக்கியங்கள் இருக்கின்றன. பெரிய பெரிய மகாராஜாக்கள், பெரிய பெரிய புலவர்களைப் பாராட்டித் தமிழை வளர்த்தார்கள். அப்படியெல்லாம் இந்தி வளரவில்லை. இந்தியில் பெரிய இலக்கியங்கள் இருக்கின்றனவா என்றால், இல்லை. அது ஒரு நாடோடி மொழி. அது ஒரு லம்பாடி லாங்க்வேஜ்

1968 சனவரி 23] [திரு. கே. பி. எஸ். மணி]

அதைக்கொண்டுவந்து தேசிய மொழியாக ஆக்கவேண்டும் என்று சொல்வது என்றால், அதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. 'லம்பாடி மொழி' என்று இந்தியைக் குறிப்பிட்டேன். (குறுக்கீடு) லம்பாடி மொழி என்பது பார்லிமெண்டரி மொழிதான் என்று முதலிலேயே வந்திருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு மொழியை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுதான் எங்களுடைய தீர்மானம். ஆகவே, 14 மொழிகளும் இந்தத் தேசத்திலே ஆட்சி மொழிகளாக ஆக்கப்படவேண்டும். ஒரு சிறிது காலம் நடை முறையில் பார்த்து, அந்த மொழிகளுள் எந்த மொழி தரமுள்ள மொழியாக வருகிறதோ, அதுவரையில் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கவேண்டும். அதற்காகப் பல கோடி ரூபாய் செலவழித்தாலும் பரவாயில்லை.

மதிப்பிற்குரிய மாணவ சகோதரர்களில் ஒருசிலரை நான் கேட்கும்போது, அவர்கள் சொல்லுகிறார்கள். மெடிகல் காலேஜிலோ, பொறியியல் காலேஜிலோ படிக்கும்போது, தமிழில் சரியாக வரவில்லை. ஆகவே, தமிழைத் தினிக்காதீர்கள் என்று மாணவர்களில் ஒருசிலர் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழ் சொந்த ஜீவன். அதைக் காப்பாற்றுவது நம்முடைய கடமை. அந்தக் கடமையிலிருந்து நாம் தவறுமல், நியாயமாக நம் முடைய தாய் மொழியைக் காப்பாற்றும் நிலைமை வரவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மனித சமுதாயத்தின் ஜீவநாடியாக இருக்கும் இந்த மொழி யைப் பொறுத்தவரையில் நாம் நியாயமான ஒரு முறையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்கான வழிவகையை மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் பரிசீலனை செய்து மறுமுறையும் இந்த சர்வ கட்சித் தலைவர்களையும் ஒன்றுகூட்டி, ஒரு முறையான வழிமுறையை வகுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. கே. விஜயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன், நண்பர் திரு. மணி அவர்கள் குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள். அதாவது, இந்திய ரிபப்ளிகன் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள். அவருடைய கட்சி, இந்த நாடு பிரிந்து போகவேண்டும் என்பதை, இந்த நாடு துண்டாக்கப்படவேண்டும் என்பதை ஆதரிக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன். இந்த நாடு பிரிந்து போகலாம் என்று சொன்னால், அவர் கட்சி அதை ஆதரிக்கிறதா? என்று கேட்க விரும்புகிறேன். அகில இந்திய கட்சியாக அவருடைய கட்சி இயங்குவதால், அவரிடமிருந்து இதுகுறித்து கருத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் விடை அளிக்க விரும்பினால் விடை அளிக்கலாம்.

[1968 சனவரி 29

திரு. கே. பி. எஸ். மணி : நாங்கள் அகில இந்தியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். பிரிந்து போகக்கூடாது என்ற நிலையிலே தான் பாபா அம்பேத்கார் அவர்கள் கான்ஸ்டிட்யூஷனை அமைத்தார்கள். ஆனால், அந்த கான்ஸ்டிட்யூஷன் தவறுனவர்கள் கையில் மாட்டிக்கொண்டு, தவருன முறையில் அதன் கருத்துக்கள் பிரயோகிக்கப்படுவதைப் பார்த்தபோது, அவரே சொல்லி விட்டார், இந்த கான்ஸ்டிட்யூஷனை எரித்துவிட்டால்கூடப் பரவா யில்லை என்று. 'பர்ன் தி கான்ஸ்டிட்யூஷன்' என்று அவர் சொல்லிவிட்டார். ஆகையால், நான் சொல்வதிலே தவறு இருக்காது என்று நினைக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Our Friend is preaching blasphemy against the Constitution. Is it in order ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தமிழில் கேட்டால் நன்றாக இருக்கும். (சிரிப்பு.)

திரு. கே. வினயகம் : நண்பர் திரு. மணி அவர்கள் கூறியபடி அரசியலமைப்புச் சட்டம் திரு. அம்பேத்கார் அவர்களால் எழுதப் பட்டதுதான். அது இப்பொழுது நாடு முழுவதும் எல்லாக் கட்சியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை நடைமுறையில் நடத்திக்கொண்டு வருகிறோம். அதை எரிக்கவேண்டும் என்று அவர் சொன்னதாக நான் எங்கும் படிக்கவில்லை. அப்படியிருக்க திரு. மணி அவர்கள் அதை எரிக்கவேண்டும் என்று சொல்லலாமா ? அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிக்கலாம் என்று நண்பர் அவர்கள் சொல்வது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் விரும்பினால் விடையளிக்கலாம். இல்லையென்றால், விடையளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதிவேண்டும் என்று பாபா அம்பேத்கார் அவர்கள் கேட்டார்கள். காந்திஜி கிளர்ச்சி செய்து, கூட்டுத் தொகுதி என்று முடிந்து போயிற்று. இந்தச் சட்டசபைக்கு வர முடியாமல் எப்படி எப்படியோ வந்து சேர்ந்து கொண்ருக்கிறார்கள் என்ற நிலையை பாபா அம்பேத்கார் அவர்கள் பார்த்தபோது, இந்தக் கண்ட்ராவியைப் பார்க்கும்படியான நிலை வந்ததே என்பதை நினைத்து, ரிசர்வ்டு லீட் கொண்டுவரவில்லையே, இவ்வளவு கீழ்த் தரமான நிலையிலே கைகாட்டிப் பொம்மை மாதிரி நான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறதே, அந்தப் புத்தகத்தை எரித்து விட்டால்கூடத் தேவலை என்று சொன்னார். அதைச் சகோதரர் பார்க்கவில்லைபோல் இருக்கிறது. மணியடிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : Sir, I request the permission of this House to move the amendment which stands in the name of Thiru P. K. Mookiah Thevar.

1968 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்களால் அறிவிக்கை கொடுக்கப்பட்ட திருத்தத் தீர்மானத்தை மற்றொரு உறுப்பினர், டாக்டர் ஹாண்டே அவர்கள், கொண்டுவருவதாக இருந்தால், பேரவையின் அனுமதி வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு, திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள் பெயரில் இருக்கும் திருத்தத் தீர்மானத்தைக் கொண்டு வரப் பேரவையின் அனுமதி கோரப்படுகிறது.

பேரவையின் அனுமதி அளிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : The amendment is—

Add the following at the end :

" and on such consideration this House cautions the Government of India that immediate announcement of the total suspension of the recent Language Act and the appended resolution only can solve the disturbed conditions all over the country threatening a total deadlock and resolves that the Government of Tamilnad would launch on a programme of resistance if the Central Government does not so announce immediately. "

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, திரு. மூக்கையா தேவர் அவர்களுடைய திருத்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

***திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய கல்வி—தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கு நான் கொடுத்துள்ள திருத்தத்தை வலியுறுத்திச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

உண்மையில், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவாலும், அதனோடு சேர்த்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தாலும் தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதிலுமே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். கொந்தளிப்புக்கான காரணங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை என்றாலுங்கூட, கொந்தளிப்பு இந்தியா முழுவதிலும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இதிலிருந்து, ஆளுகின்ற தரப்பினர், யாரையும், எந்த ஒரு தரப்பாரையும் கேட்டுச் செய்ய முடியாத ஒரு சட்டத்தை நிறைவேற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. நாம் சும்மா இருந்தாலுங்கூட, அந்தச் சட்டத் திருத்தத்தையும் தீர்மானத்தையும் அவர்கள் நிறைவேற்றி வைத்துக் கொண்டிருந்தாலும் நாளைக்கு அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத அளவுக்கு அவர்களுக்கே ஒரு சிக்கல் ஏற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அதனால் தென்னகத்து மாணவர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு மாணவர்கள் கிளர்த் தெழுந்து நாடு முழுவதிலும் கிளர்ச்சி நடத்திக் கொண்டிருப் பதைப் பார்க்கிறோம். இதுகாறும் 'மாணவர்கள் கிளர்ச்சி' என்றால்,

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 சனவரி 23

திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் நினைத்துக்கொள்ள. வேண்டிய நிலை இருந்தது. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கிளர்ச்சி, பிரச்சினையின் முழுத்தன்மையின்மீது ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் எதிரே உள்ள இந்தப் பிரச்சினைக்கு, அரசாங்கமே பொறுப்பேற்று, அதற்கான காரியங்களைச் செய்வதாக உறுதிகூறி, மாணவர்களை நம்பச் சொல்வது நம்பாத மாணவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது ஒரு வழி. அப்படியல்லாமல், மாணவர்களுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளித்து, அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்களின் உடன் பாட்டைத் தெரிவிக்கும் வகையில், இப்படி ஜனநாயக ரீதியில் பேரவையைக் கூட்டி, இங்கு எடுக்கப்படுகின்ற முடிவுகள் மூலம் மாணவர்களுடைய மனத்திலே ஒரு அமைதியை உருவாக்க நடவடிக்கை எடுப்பது மற்றொரு வழி. இரண்டாவது வழியைக் கடைப்பிடித்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். இப்படிப் பட்ட ஜனநாயகத் தன்மையை நான் வரவேற்கிறேன். இதே நிலையை 1965-ம் ஆண்டில் எடுத்திருந்தால், ஒருவேளை இந்தக் கூட்டம் அவசியம் இல்லாமல் போய் இருந்திருக்கலாம். எந்தக் கட்சி, எந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும், நாட்டிலே ஜனநாயகத்திற்கு மதிப்பு அளிக்கும் போக்கை நாம் பாராட்ட வேண்டும்.

பி.ற் பகல் 4–00

இங்கு வந்திருக்கின்ற தீர்மானத்திற்குத் திருத்தத்தைக் கொண்டு வந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் ஆங்கிலத்தில் பேசும் வழக்கத்தைவிட்டுத் தமிழில் பேசியதற்கு மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். காங்கிரஸ் தரப்பிலிருந்து வந்த தீர்மானம் ஆங்கிலத்தில் இருந்தது கண்டு வியப்புற்றேன். கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக வேண்டுமென்று நான் கூறுவதை ஆதரித்கின்ற அளவில் வளர்ந்திருக்கின்ற காங்கிரஸ் ஆங்கிலத்தில் தீர்மானத்தை எழுதிக் கொடுத்தது, அது இன்னும் பூரண நிலைக்கு வரவில்லையென்பதையே காட்டுவதாக இருக்கிறது. இனியேனும் தமிழிலே தீர்மானம் எழுதிக்கொடுத்து, தமிழ் மொழியை வளர்ப்பதில் நாமெல்லாம் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதைக் காட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, மூன்று மொழி நம்மீது திணிக்கப்பட்டிருக்கிறது. இந்திக்காரர்கள் ஒரு மொழிமட்டும் படித்தால் போதும் என்றிருக்கிறது. மொழிப் பிரச்சினையில் தோன்றியுள்ள பூசலுக்கு இது ஒரு காரணம். ஆனால், மூலநோய் வேறு. இந்த நாடு விடுதலைபெற ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த நாளிலேயே, மொழிவழி மாகாணங்களாக இந்தியாவை அமைக்க வேண்டும் என்று பாடுபட்டோம். இயற்கையில் இந்தியா பல மொழிவழி மாநிலங்களாக அமைந்திருக்கிறது. அந்த இயற்கை நியதிக்கு மதிப்புக் கொடுத்து, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் வரலாற்றை, பண்பாட்டை, நியதியை நினைநாட்ட மாநிலங்களை மொழிவழியாகப் பிரிப்பதை முதல் வேலையாகக் காங்கிரஸ் கைக்கொள்ளுமென்றும், மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்குவதை

1968 சனவரி 23] [திரு. ம. பொ. சிவஞானம்]

யடுத்து, அந்தந்தப் பிரதேசங்களின் பிரதேச மொழிகளே ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் ஏற்கப்படும் என்றும் விடுதலைப் போராட்ட காலத்தில் திட்டம் போடப்பட்டது. விடுதலைபெற்ற பின் அந்தத் திட்டத்தை அமல் நடத்தியிருப்பார்களேயானால், இந்தப் பிரச்சினை இன்று தோன்றியிருக்காது. ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிந்தபின்னர், அந்தந்தப் பிரதேச மொழிகள் ஆங்கிலத்தின் இடத்தைப் பெற்று வளர்ந்த பின்னர்தான் மத்திய ஆட்சி மொழி மாறுதல்பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும்.

இன்று ஏற்பட்டிருக்கின்ற மொழிச்சிக்கல், இந்தியா முழுவதற்கும் ஒரு பொதுமொழி தேவை, எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது பற்றியதாகும். நாடு முழுவதற்கும் ஒரு பொது மொழி தேவையென்றால், அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்க வேண்டும். அதுதான் நீதி, நியதி வட்டார மொழிகளிலொன்றை இந்திதான் இந்தியாவின் பொது மொழி என்று சொல்கிறபோது, இந்தி வழங்காத மாகாணங்களும் இருக்கின்றன என்பதை நாம மறந்துவிடுவதற்கில்லை. நான் காங்கிரசில் இருந்த காலத்தில் 1947-48-ல் இந்தி, தமிழகத்தில் திணிக்கப்படுவதை எதிர்த்தேன். அப்போது நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் இன்றைய முதலமைச்சருடன் நானும் கலந்து கொண்டேன். அதற்காக, 'ஏன் உன்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றக்கூடாது?' என்று காரணம் கேட்கும் நோட்டீசைத் தமிழ் நாடு காங்கிரசிடம் பெற்றவன் நான். அதிர்ஷ்டவசமாக ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து அப்போது தப்பினேன். 1947-ம் ஆண்டு நாடு விடுதலை பெற்ற காலத்தில் இந்தியைப்பற்றி என்ன கருத்து கொண்டிருந்தேனே அதே கருத்தைத்தான் இன்னும் கொண்டிருக்கிறேன். இந்தியா மொழிவழி ராஜ்யங்களாகப் பிரிந்து, தமிழகத்திலே தமிழ் ஆட்சிமொழியாக, பயிற்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக ஆவதற்கு முன்பு வேறு எந்த மொழி பொதுமொழியாக வந்து புகுந்தாலும் அதுவும் ஆங்கிலத்தைப்போல் ஆதிக்க மொழியாக வளர்ந்து விடும் என்று எண்ணினேன். அதற்காக, 1947 நவம்பரில் கூட்டிய தமிழரசுக் கழக முதலாவது மாநில மாநாட்டில், "நாடு மொழிவழியாகப் பிரிந்து, தமிழ் எங்கும், எதிலும் ஆதிக்கம் பெறுகின்றவரையில் பொதுமொழிப் பிரச்சினையை ஒத்தி போட வேண்டும்" என்று தீர்மானம் போட்டு நிறைவேற்றினேனும், இப்போது காங்கிரசில் பல புதியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நிலையைத் தெரிவிக்கத்தான் இதனைக் கூறுகிறேன். அந்தந்த மாநிலத்தில் மாநில மொழிகள் அது அதற்குரிய அந்தஸ்தை அடைந்து, ஆங்கிலத்தினுடைய இடத்தைப் பிடித்து விட்ட பிறகுதான் பொதுமொழியை மாற்றும் பிரச்சினையைப்பற்றி எண்ண வேண்டும். ஆம், ஆங்கிலத்திற்கு மாற்று மொழியாகப் பிரதேச மொழிகள் வந்த பிறகுதான் மத்தியில் ஆங்கிலத்தை நீக்க வேண்டும். ஆங்கிலத்தை விரும்பிப் படிப்பதை யாரும் எதிர்க்கவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தை ஒரு

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 சனவரி 23

மொழியாகப் படித்துக்கொண்டிருக்கிறோம். ஆங்கிலத்தில் திறமை பெற்ற பழைய தலைமுறை இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. பொதுமொழிப் பிரச்சினையை அவசரப்பட்டு மேலிடத்துத் தலைவர்கள் கொண்டுவந்ததன் மூலம் மத்திய ஆட்சி மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதிலே சிக்கல் ஏற்பட்டு, இந்திய ஒருமைப்பாட்டிற்கே ஊறு விளைந்திருக்கிறது. எந்த ஒருமைப்பாட்டிற்காக இந்தி மத்திய ஆட்சிமொழியாக வரவேண்டும் என்று விரும்புகிறார்களோ, அந்தக் கொள்கைக்கே தீங்கு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியானது, உத்திரப் பிரதேசம், பிகார், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், அரியானு, இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் பிரதேச மொழியாக இருந்து வருகிறது. இன்னமும் ஆங்கிலத்திற்கு மாற்றுமொழியாக அந்தப் பிரதேசங்களிலேயே இந்தி மொழி வரவில்லை. தமிழகத்தில் எந்த அளவிற்கு ஆட்சியிலே தமிழ் வந்திருக்கிறதோ, அந்த அளவிற்குக்கூட இந்தி அம்மாநிலங்களில் வரவில்லையென்று காலஞ்சென்ற டாக்டர் லோகியா என்னிடம் கூறியிருக்கிறார். சொந்த மாகாணத்திலேயே இந்தி இன்னமும் ஆட்சி மொழியாகாதபோது, மத்திய ஆட்சியிலே அந்த மொழிக்கு 'ஆட்சிமொழி' என்ற அந்தஸ்து கொடுக்க முயல்வதால் எமக்கு அச்சம் ஏற்படுகிறது. தமிழுக்கு நம் மாநிலத்தில் ஆட்சி மொழி, பயிற்சிமொழி அந்தஸ்து அளிக்கப்படாத நிலையில் இந்திக்கு 'மத்திய ஆட்சிமொழி' என்று பெயர் சூட்டி, எல்லோர் மீதும் திணிப்பது, அதன் பின்னே மறைந்துகிடக்கும், ஏகாதிபத்திய உணர்ச்சியைத்தான் எடுத்துக்காட்டுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்திலேயே "இந்தியை வளர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் பொறுப்பு ஏற்கும்; செலவுகளை ஏற்கும்" என்று விதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தி பேசப்படும் மாநிலங்கள் கூட்டுச் சேர்ந்து, இந்தியை வளர்ப்பதற்காக ஒரு கமிஷன் நியமித்து, அதற்காகும் செலவுக்குப் பொருள் கொடுத்து உதவலாம். அந்த அளவுக்குப் போட்டிபோடத் தமிழ்போன்ற மொழிகளுக்கு வாய்ப்பில்லாதிருக்க, மத்திய அரசு பொருளுதவி புரிவதில் என்ன நியாயம் இருக்க முடியும்? தமிழைப்போன்ற இன்னொரு மாநில மொழியான இந்தி பொது அரசின் பணத்தால் வளருவது என்பது தவறான காரியம் என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இது இந்திய மொழிகளிடையே பாராபட்சம் காட்டுவதாக அமையும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தியைப் போல பிற மொழிகளுக்கும் பாரபட்சமின்றி, சம அந்தஸ்து தரப்படவேண்டும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது ஆங்கிலத்திற்கு மாற்று மொழியாக இந்தி வருமானால், என்ன விளைவு ஏற்படும் என்பதைக் காங்கிரஸ் அன்பர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய ஆட்சியின் கையில், டெல்லி, பெனரஸ், உஸ்மானியா போன்றவிடங்களில் சர்வகலாசாலைகள் இருக்கின்றன. இதைத்தவிர, நாடு முழுவதிலும் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகள், தொழிலியல் கல்லூரிகள் மத்திய அரசி

1968 சனவரி 23] [திரு. ம. பொ. சிவஞானம்]

டம் இருக்கின்றன. அதனால் ஆங்கிலத்தில் விஞ்ஞானக் கலைகளை இந்தியில் மொழி பெயர்த்து, இந்தியை வளப்படுத்தும் வேலையில் மத்திய அரசு ஈடுபட்டிருக்கின்றது. விஞ்ஞான நூல்களை இந்தியில் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொள்கிறார்கள். இந்த அளவில் வளர்ச்சியடைந்துகொண்டுபோனால், சில ஆண்டுகளில் எல்லா விஞ்ஞான நூல்களும் இந்தியில் வந்துவிடும். இப்படி இந்தி பெறும் வளர்ச்சிக்குத் தகுந்தவாறு, பிரதேச மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்றவை வளராவிட்டால், இம் மொழிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். விஞ்ஞான நூல்கள் தயாரிக்க இவற்றிற்குப் பொருள் வசதி கிடைக்காது. அப்போது இந்தி பேசுவோர் நம்மைப் பார்த்து, "உங்கள் மொழியிலே ஒன்றும் இல்லை; விஞ்ஞானப் புத்தகங்கள் எல்லாம் இந்தியில் இருக்கின்றன. அவற்றை இலவசமாகத் தருகிறோம், எடுத்துக் கொள்ளுங்கள், பேசாமல் இந்தியைப் பயிற்சி மொழியாகவும் கற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லக்கூடிய அபாயம் இருக்கிறது. இந்த அபாயத்தை நான் ஏற்க முடியுமா? கல்லூரிகளில் தமிழை மட்டுமே பயிற்சி மொழியாக்கக் கோரி நான் நேற்றுவரை சகோதர காங்கிரஸ் கட்சியோடு போராடியவன். இன்று இருக்கும் சகோதரக் கட்சியையும் அதற்காகத் தூண்டிக் கொண்டிருப்பவன். தமிழகத்தில் தமிழ்தான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். இந்தி வந்து அந்த இடத்தைப் பிடித்துக்கொள்வதை நான் ஆதரிப்பதற்கில்லை. என்னுடைய தேசபக்தி காட்டுகின்ற நெறியில், என்னுடைய உள் உணர்ச்சி எடுத்துக்காட்டுகின்ற உணர்வில் நின்று பார்க்கிறபோது, அவசரம் அவசரமாக இந்தி திணிக்கப் படுகிறது, இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வேன். இதற்காக மத்தியில் உள்ளவர்களையே மட்டும் குறைகூறவில்லை. இதற்குக் காரணம் முன்னே தமிழகத்தின் ஆட்சியில் இருந்தவர்கள் தான். இந்தி திணிக்கப்படுவதை அவர்கள் உணர்ந்தும், அது தவறு என்பதை அவர்கள் மனச்சாட்சி உணர்த்தியும், தங்கள் மனச்சாட்சிக்கே விரோதமாக இந்தித் திணிப்பை ஆதரித்தார்கள். இத்தனை ஆண்டுகளுக்குள்ளாகத் தமிழ் ஆட்சி மொழியாக, போதனு மொழியாக, நீதிமன்ற மொழியாக வரும் என்று காலத்தை நிர்ணயித்துவிட வேண்டுமென்று நாங்கள் கேட்ட போது, தமிழக அரசினர் மறுத்தார்கள். தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் வந்து 11 ஆண்டுகள் ஆகிவிட்டன. பத்து ஆண்டுகளை அவர்கள் வீணே கழித்துவிட்டார்கள். இத்தனைக் காலத்திற் குள்ளாகத் தமிழ் கட்டாயம் எல்லாக் கட்டங்களிலும் நிர்வாக மொழியாக வந்தே தீரும் என்பதை நிர்ணயித்துக் கூற மறுத்தவர்கள், இந்திக்கு மட்டும் 1965 ஜனவரி 26-ஐ நிர்ணயித்தார்கள். அதன் பலனைக் கண்டோம். அந்தந்தப் பிரதேசத்தில் பிராந்திய மொழிகள் வளர்ச்சி பெறுவதற்குப் போதுமான ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்துவிட்டு, மத்திய அரசின் பொது மொழியாக எந்த மொழியை அல்லது மொழிகளை வைத்துக்கொள்ளலாம் என்று சிந்தித்திருந்தால், எந்தவிதமான சிக்கலுமே வந்திருக்காது. மாறாக, முதலிலே மத்திய அரசின் நிர்வாக மொழியாக

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 சனவரி 23

இந்தியைப் புகுத்தினர்கள். அதனால் வந்ததுதான் இவ்வளவு சிக்கல்களும்.

1947-இலே பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அவர்கள் புகுத்தியபோது இப்போதுள்ள முதல் அமைச்சர் அவர்களும், நானும், பெரியார் ஈ. வே. ரா. அவர்களும் சேர்ந்து எதிர்த்தோம். பிறகு நமது மாநிலத்திலே ஆட்சியில் இருந்த காங்கிரஸ் காரர்கள் கட்டாய பாடம் என்பதை மாற்றி விருப்பப் பாடம் என்று வைத்து விட்டார்கள். அதற்குப் பிறகும் அது ஒரு வகையில் கட்டாயப் பாடம்தான். தேர்வுக்குக் கட்டாயம் இல்லை என்று சொன்னார்கள். எப்படி இருந்தாலும் 1967-ஆம் ஆண்டுவரை யாருமே இந்தி படிப்பதில் ஆர்வம் காட்டவில்லை, படிக்கவும் இல்லை. ஆனால், அதுபற்றி இந்தச் சட்டசபையில் கேள்வி கேட்கிறபோது, ஆண்டுதோறும் இத்தனை லட்சம் பேர்கள் இந்தி படித்து வருகிறார்கள், இத்தனை லட்சம் பேர்கள் இந்தியில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதாகப் பொய்யாகப் புள்ளிவிவரங்களைக் கொடுத்து, டெல்லியை நம்பவைத்துக் கொண்டிருந்தார்கள். அதன் விளைவைத்தான் இப்போது நாம் அனுபவிக்கிறோம். இன்றைய தினம் தமிழகக் காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தபோதே, எவ்வித தயக்கமுமின்றி ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பத்திரிகையில் பகிரங்கமாக அறிக்கை விட்டார்கள். அதன் பிறகும் பலவிதமான திருத்தங்களோடு, தீர்மானத்தையும் சேர்த்து நிறைவேற்றினார்கள் என்றால், காரணம் பூர்வகர்மம்தான். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வற்புறுத்திச் சொல்லியும் கேட்காமல் செய்திருக்கிறார்கள் என்றால், நாம் அவர்களிடத்தில் வளர்த்துவிட்ட தவறான நம்பிக்கைதான். பிரதமரிடம் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரின் பேச்சு எடுபடவில்லை, திருமதி சுஜேதா கிருபளானியின் பேச்சு எடுபடுகிறது என்றால், நாம் வருந்துகிறோம். அதற்குக் காரணம், யாருமே இங்கே இந்தி படிக்காதிருக்கிறபோது பல்லாயிரக்கணக்கான பேர்கள் படித்துக்கொண்டு வருவதாகப் பொய்க்கணக்குக் கொடுத்து வந்ததுதான். அந்த பழைய கர்மம், இப்போது நம் தலையில் விழுந்திருப்பதைப் பார்க்கிறோம். வாழ்ந்தாலும் நாம் இந்த மண்ணில் தான் வாழ்ந்தாக வேண்டும், மடிந்தாலும் இந்த மண்ணில்தான் நாம் மடிந்தாக வேண்டும் என்பதனை உணருமாறு என் காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அகில இந்திய ஒருமைப்பாடு அவசியம். நாடு சிதறுண்டு போகவிடக் கூடாது. இதனை எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். இந்த அகில இந்திய ஒருமைப் பாட்டுக்காக நம்முடைய உரிமையைப் பறி கொடுக்க வேண்டுமென்றால்,

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ"

என்பதாகப் பாரதி பாடினானே, அந்த நிலைமைக்குத்தான் போய் விடுவோம். உரிமை காப்பாற்றப்படுவதோடு ஒருமைப்பாடு

1968 சனவரி 23] [திரு. ம. பொ. சிவஞானம்]

கிடைக்குமானால், அதுதான் நமக்கு வேண்டும். உரிமைகளைப் பறிகொடுப்பதன்மூலம் கிடைக்கின்ற ஒருமைப்பாடு ஏகாதிபத்திய ஒருமைப்பாடாக இருக்குமே தவிர, ஜனநாயக ஒருமைப்பாடாக இருக்காது. மதிப்புமிக்க நேருஜி அவர்கள் கொடுத்த உறுதிமொழி எந்த வகையில் இப்போது பறிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவோம். இதை மீண்டும் புனர் பரிசீலனை செய்யவும் அவர்கள் தயாராயில்லை என்று அறிவிக்கப்படுகிறது. ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்பட வேண்டும். சட்டத்தோடு நிறைவேற்றி வைத்துக்கொண்டிருக்கக்கூடிய தீர்மானம் உடனடியாகக் கைவிடப்படவேண்டும். நேருஜி அவர்கள் கொடுத்த உறுதிமொழிக்கே இந்த நிலை என்கிறபோது, இந்தத் தீர்மானத்தின் சாதக பாதகங்களைப் பார்த்து, இதன் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ள பின்னும் முயலலாம் என்று இப்போது பிரதமர் தருகிற உறுதியை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இந்தக் கூட்டம் இங்கே நடந்து கொண்டிருக்கிறபோதே பல லட்சக்கணக்கான மாணவர்கள் இதன் முடிவை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்; நாலுகோடி தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பால் வருங்காலச் சந்ததிகளின் வாழ்வு நசுக்கப் படுகிறது என்பதனால் மிக்க உணர்ச்சியோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆக, இன்றைக்கு நாம் சரியானபடி தீர்மானித்தாக வேண்டும். அடுத்து ஐந்தாண்டுக்களுக்குள்ளாகத் தமிழ் மொழியும், மற்ற பிரதேச மொழிகளும் அதனதன் பிரதேசத்தில் ஆட்சிமொழியாகவும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகவும், நீதி மன்றங்களில் நிர்வாக மொழியாகவும் வருவதற்கு ஆவன செய்தாக வேண்டும். பிரதேச மொழிகள் வளர்ச்சி அடைவதற்கு மத்திய ஆட்சியினர் எதுவும் செய்யாமல், பிரதேச மொழிகளில் ஒன்றுக உள்ள இந்தி மொழிக்கு மட்டும் ஆக்கம் அளித்துக்கொண்டு வருவது பாரபட்சம் காட்டுகின்ற பெரும் குற்றமாகும் என்பதை நாம் எடுத்து வலியுறுத்தியாக வேண்டும். இதற்காகக் கோர்ட்டிலேயே வழக்குத் தொடர்ந்திருக்க முடியும், துரதிருஷ்டவசமாக அரசியல் அமைப்பிலேயே அதற்கு இடம் கொடுக்கப்பட்டு விட்டது.

நாங்கள் எல்லாம் கேட்பது அரசியல் அமைப்பில் அங்கீகரிக்கப் பட்டுள்ள 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுதான். ஒரு ஆட்சேபணை எழுகிறது. அது, பதினைந்து மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக அங்கீகரித்துவிட்டால் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்த முடியுமா என்பதாகும். அதற்குத்தான் சொல்கிறேம், 'மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கு' என்று. இன்றைக்குள்ள நிலைமை என்ன? மத்திய ஆட்சியில் தேவைக்கும் அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டுவிட்டன. அதிகாரங்கள் குவிகின்றன என்றால், பதவிகள் அதிகரிக்கின்றன. இந்திதான் ஆட்சி மொழி என்றால், மத்தியில் பதவிபெற விரும்புவோர் அத்தனை

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 சனவரி 23

பேர்களும் இந்தி படித்துத்தான் ஆக வேண்டும். அதுதான் இந்தி எதிர்ப்புக்கு இப்போது காரணமாக இருக்கிறது. இன்னொன்று சொல்கிறேன். நாம் இந்தி படிப்பது என்றாலும்கூட இந்தியையே தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு அந்த மொழியில் கிடைக்கிற ஆற்றல் நமக்கு கிடைக்காது. நான் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருந்த அயல்நாட்டினர்களை எல்லாம் பார்த்தேன்; அவர்களோடு பழகினேன். அவர்களுடைய தமிழ் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். ஆயினும், எவ்வளவுதான் தமிழ் படித்தாலும் அவர்களால் அந்தத் துறையில் சிறப்புப் பெறவதிலே, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழரை விஞ்ச முடியாது என்பதனை உணர்ந்தேன். அதைப்போல எவ்வளவுதான் நாம் இந்தி படித்தாலும், அந்தத் துறையில் இந்தியையே தாய்மொழியாகக் கொண்டவர்களை நம்மால் விஞ்ச முடியாது. இந்தி போக வேண்டும் என்கிறபோது, என்றென்றும் நீடிக்க ஆங்கிலம் வேண்டும் என்று சொல்லவில்லை. நமக்கு ஆங்கில ஆதிக்கமும் வேண்டாம்; இந்தி ஆதிக்கமும் வேண்டாம். தமிழ் வளர வேண்டும்; தமிழ் ஆட்சி மலரவேண்டும். ஆகவேதான் இந்த மொழிச்சிக்கல் தீர, பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று பொறுப்புகளைமட்டும் மத்தியில் விட்டு, மற்ற அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு மாற்றித் தந்தாகவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். அப்போதுதான் உண்மையான மாநில ஆட்சி மலரும். அந்த அந்த மாநிலங்களிலே அவரவர்களது தாய்மொழி மலர்ச்சி அடையும். மத்தியப் பொறுப்புகள் குறைவதனால் பதினான்கு மொழிகளும் மத்தியில் ஆட்சி மொழிகளாக இருப்பதற்கு சங்கடங்கள் உண்டாகா. இன்றைக்குப் போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால், பன்மொழி நிலையில்தான் நடைபெற்று வருகிறது. ரயில்வேயில் பன்மொழி பயன்படுத்தப்பட்டு வருகிறது. வானெலியில் பன்மொழிகள் செயல்பட்டு வருகின்றன. வானெலி நிலையங்கள் அந்தந்த ராஜ்ய மொழிகளில் நடத்தப்படுகின்றன. நம்முடைய ராஜ்யத்தில் தெலுங்கோடு, சமஸ்கிருதத்தோடு தமிழிலும் நடத்தப்படுகின்றன. இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் டில்லி வானெலி நிலையத்தில் தனித்தனி இடங்கள் தரப்பட்டுள்ளன. எனவே, பிரச்சினை இல்லை. ரயில்வே போன்ற போக்குவரத்துத் துறையிலும் இப்போதே பன்மொழிகள் பயன்பட்டு வருகின்றன. அயல்நாட்டு உறவைப் பொறுத்தவரையில், அது ஆங்கிலத்தோடுதான் இனியும் இருக்கும். பாதுகாப்பைப் பொறுத்தவரையிலும், களத்திலுள்ள ராணுவ வீரர்களிடையே இந்தி பெருமளவு பயன்படுத்தப்படலாம். ஏழை சொல் வதற்காக எள்ளி நகையாட வேண்டாம். இதுதான் மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வழி.

நாம் சொல்கிறோம், 'இந்தியைத் திணிக்காதே' என்று. அவர்கள் சொல்கிறார்கள், 'எங்கள்மீது ஆங்கிலத்தைத் திணிக்காதீர்' என்று. இது சவாலுக்கு எதிர் சவால் போல ஆகிறது. ஆகவே, இரண்டு வழிகளையும் விட்டு மூன்றாவது வழி கண்டுபிடித்

1968 சனவரி 23] [திரு. ம. பொ. சிவஞானம்]

தாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. "உன்மீது இந்தியைத் திணிப்பது ஜனநாயகம் அல்ல என்றால், என்மீது ஆங்கிலத்தைத் திணிப்பதும் ஜனநாயகம் அல்ல" என்று சொல்கிறார்கள். ஆகவே நாம் நம்முடைய 14 மொழிகளையே நம்மீது திணித்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், அதிகாரங்கள் குறைக்கப்பட்ட மத்திய ஆட்சியிலே மொழிப்பெயர்ப்பு இலாகாவொன்று அமைப்பது பெரும் பாரமாக இருக்காது என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் முன்னோடியாக இருந்து வழி காட்டிய 14 மொழிகளும் ஆட்சிமொழிகள் என்ற கருத்தைத் தான் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. இது சாத்தியமா என்றால், கூடிப்பேசி ஆராய்வோம்; அதன்பின் முடிவெடுப்போம். எந்த அளவுக்கு அது சாத்தியமாகலாம் என்று பார்ப்பதற்கு இதைவிடச் சிறந்த உரைகல் இருக்கமுடியாது. மத்தியில் குவிந் திருக்கின்ற அதிகாரங்கள் குவிந்ததுதான், அவற்றைக் குறைக்க வழியில்லை என்று சொன்னால், அவை முன்புள்ள நிர்மானம் நிறை வேற்றப்பட வேண்டிய ஒன்றுதான்.

டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும் ஆங்கிலம் என் றென்றும் வேண்டுமென்கிறவர்கள். அவர்களுக்குள்ள கல்வி, அறிவு, சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்கலாம். ஆங்கிலம் அதிர்ஷ்டவசமாகவோ, துரதிருஷ்டவசமாகவோ, இந்த நாட்டில் படிப்பு மொழியாகத்தான் இருக்கிறது. மக்கள் பேசும் மொழி யாக இருக்கவில்லை.

ஒரு பொது மொழி எது எதற்கெல்லாம் தேவைப்படுகின்றது? மத்திய ஆட்சியின் நிர்வாகத்திற்காகவும், மாநில அரசுக்கும் மத்திய ஆட்சிக்கும் தொடர்புக்காகவும், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே தொடர்புக்கு ஆகவும், இந்த மூன்றோடு மட்டுமல்லாமல், ஒரு மாநில மக்களோடு மற்ற மாநில மக்கள் தொடர்பு கொள்வதற்காகவும், ஒரு பொது மொழி இருக்க வேண்டும். ஆங்கிலம் அப்படிப்பட்ட பொதுமொழியாக இல்லை. ஆங்கிலத்தை இந்தியப் பொதுமொழியாக அறுதியிட்டுவிடுவோ மானால், உயர்நிலையில் உள்ளவர்களிடையேயும், உயர் கட்டங்களில் உள்ளவர்களிடையேயும்தான் அது தொடர்பு மொழியாகப் பயன் தரும். மூன்றாவது நான்காவது பாரம் வரையில் படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்தவர்கள், துண்டைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு பம்பாய்க்குச் சென்று வேலைசெய்யக் கூடிய நிலையில் உள்ளவர்கள் எந்த வேலை பார்க்கமுடியும்? வடக்கே போய் எந்த மொழியில் பேசி வாழ்வது என்பது எனக்குப் புரியவில்லை. அப்படி, ஆங்கிலம் பொதுமொழியாக இறுதியிடப்படுமானால், ஒருமைப்பாடு பட்டதாரிகளிடையேதான் ஏற்படும். கிராஜுவேட்ஸ் இன்டக்ரேஷன்தான் ஏற்படுமே தவிர, பாமர மக்களிடம் ஒருமைப்பாடு ஏற்பட முடியாது.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 சனவரி 23

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றை இங்கே சொல்லவில்லை, ஆனால் பெரும் தலைவர்கள் எல்லாம் வெளியிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசுக்கும், மாநிலத்திற்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம்தான் என்றென்றும் இருக்க வேண்டுமென்றால், இங்கும் கல்லூரிகளிலே பயிற்சிமொழியாக அதுதான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிச்செய்தால், ஒரு தவறுக்குப் பதில் இன்னொரு தவறு செய்வதாகத்தான் இருக்கும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்தில், தேசம் முழுவதும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற இந்தக் கூட்டத்தில், பதினைந்து மொழிகளும் ஆட்சிமொழிகளாக வர வேண்டுமென்ற முறையில் முடிவெடுத்துத் தமிழக அரசு மத்திய அரசோடு பேசவேண்டும். இடைக்காலத்திற்கு மத்தியில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும். மொழிச் சிக்கல் தீருகிறவரை ஆங்கிலம் நீடிக்கவேண்டும். இங்கே அரசினர் தீர்மானத்திலே கொடுத்திருக்கிறார்கள், "மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும், தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும், தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ்—ஆங்கிலம் ஆகிய இருமொழிகளுக்கும் இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம் மன்றம் தீர்மானிக்கிறது" என்று. மத்திய ஆட்சியின் ஜனநாயக விரோதமான நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கையாகவே இதைக் கொடுத்திருக்கிறார்கள். இது இறுதி நடவடிக்கையாக இராது என்று நம்புகிறேன். காங்கிரஸ் தரப்பிலே இதைப்பற்றிச் சொல்லும்பொழுது ஒரு உறுப்பினர் சொன்னார், 'இப்படிச் செய்தால் வடக்கே போய் எப்படி வேலை செய்வது?' என்று. ஏதேனும் இப்படி ஒரு நடவடிக்கை எடுத்தாலொழிய, வேறு ஒன்றும் இந்தப் பிரச்சினையில் செய்யமுடியாது. ஆகவே, காங்கிரஸ் தரப்பிலுள்ளவர்களும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஒன்று, பள்ளிகளில் இந்தியை நீக்குவது; இரண்டாவது, என்.சி.சி. அணிகளில் இந்தியை நீக்குவது என்று கொடுத்திருக்கிறார்கள். தர்மசங்கடமான நிலையிலே, தற்காப்பு நிலையிலேனும் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வில்லையென்றால், என்ன ஏற்படுமென்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, நான் மீண்டும் வேண்டிக்கொள்வது, மத்திய ஆட்சியிலே இடைக்காலத்திற்கு ஆங்கிலம் நீடிக்கவேண்டும். ஆனால், அதே நேரத்தில் நான் மூதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இங்கே ஆங்கிலம் நீடிப்பதற்கு அவர்கள் இடம் கொடுக்கக்கூடாது. ஐந்தாண்டுகளுக்குள் தமிழ் ஆட்சிமொழியாகவும் பயிற்சி மொழியாகவும் இங்கே இடம்பெற வேண்டும். மத்தியிலே மூன்று அதிகாரங்களை வைத்து மற்ற அதிகாரங்களை மாநிலங்களுக்கு மாற்றிவிட்டால், அப்போது தமிழ்தான் கட்டாயமாகப் படிக்க வேண்டியிருக்கும். மூன்று மொழிகளையோ, இரண்டு மொழிகளையோ நாம் கட்டாயமாகக் கற்பது, வடவர் ஒரே மொழியைக் கற்பது என்ற ஏற்றத் தாழ்வான நிலை இரா.

1968 சனவரி 23] [திரு. மா. பொ. சிவஞானம்]

இதற்கு இந்த மாநில சுயாட்சியைத் தவிர வேறு வழியில்லை என்பதை நான் உறுதிப்படுத்தி, இவ்வளவு நேரம் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சுதந்திரக் கட்சியைப்பற்றி, குறிப்பாக, நான் குறிப்பிட்டதைப்பற்றி, அவர்கள் சொன்னார்கள். ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருந்தால் ஒரு மாநிலத்தின் மக்களுக்கும் மற்ற மாநிலத்தின் மக்களுக்கும் அது தொடர்பு ஏற்படுத்தாது, பட்டதாரிகளிடையேதான் தொடர்பு இருக்கும், மற்ற மக்களிடையே இருக்காது என்று அவர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்திற்கும், மற்ற மாநிலங்களுக்கும் இணைப்புமொழியாகவுள்ள ஆங்கிலத்தை விட்டால் இந்திதான் வரும். இந்தி வேண்டாமென்று சொல்கிற நாம், ஆங்கிலத்தையும் வேண்டாமென்று சொன்னால், பிறகு எந்த மொழி வரும் என்று எனக்கும் தெரியாது, ராஜாஜி அவர்களுக்கும் தெரியாது. இந்த மாநில மக்களுக்கும் மற்ற மாநில மக்களுக்கும் தொடர்புகொள்ள வேறு வழியிருந்தால், அதை அவர்கள் சொன்னால், அதை நான் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். திரு. ம. பொ. சி. அவர்கள் குறிப்பிடும் பொழுது, தமிழ் பாடமொழியாக இருக்க வேண்டாமென்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் ஆங்கிலத்தை முழுமையாகக் கைவிட்டுவிட்டால், தொடர்பு இல்லாமல் போய்விடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: ராஜாஜி அவர்கள் என்ன சொன்னார்கள் என்று எல்லாம், இந்த மன்றத்திலே இல்லாத ஒருவரைப் பற்றி நான் சொல்லவிரும்பவில்லை. தமிழ் மட்டுமே பயிற்சி மொழி என்று அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால், எனக்கு ஆட்சேபணையே இல்லை. அதைப்பற்றி நான் மீண்டும் கேட்பதற்கு ஒன்றும் இல்லை. ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் எது தொடர்புமொழி என்று எனக்கும் தெரியவில்லை. அகில இந்தியக் கட்சியை வைத்திருக்கும் அவர்களுக்கே அது தெரியவில்லை என்றால், மாநில அளவிலே உள்ள கட்சியைச் சேர்ந்த எனக்கு எப்படித் தெரியும்? மாநிலத்திற்கும் மாநிலத்திற்கும் தொடர்புமொழி எது என்பதைப்பற்றிய பிரச்சினையைத் தள்ளிப் போடவேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்பே நான் அரசியலுக்கு வந்தவன். அவர்கள் எதற்காக என்னை இடித்து இடித்துக் கேட்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அன்றும் கேட்டார்கள், இன்றும் கேட்டார்கள், 'இந்தியாவின் தொடர்பு மொழி எது?' என்று. தமிழ்மொழி வளர்ந்தபிறகுதான் சொல்லமுடியும். ஆங்கில ஆதிக்கத்தை ஆதரிக்கும் திரு. ஹாண்டே போன்றவர்களுடைய அபிப்பிராயத்திற்குப் பயந்துதான் நான் இவ்வாறு சொல்கிறேன். இப்பொழுது, தொடர்பு மொழி ஆங்கிலமா அல்லது தமிழா? என்ற கிளர்ச்சியை

[திரு. ம. பொ. சிவஞானம்] [1968 சனவரி 23

பிற்பகல் 4-30

விட்டுவிட்டு, முதலில் தமிழுக்கு உரிமை பெறப்படுகின்ற இளர்ச்சிக்கு மத்திப்பளித்துவிட்டு, பிறகு தொடர்புமொழிபற்றிய பிரச்னையை எடுத்துக் கொள்ளலாம்.

*திரு. டி. மார்டின்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திருத்தத் தீர்மானத்தை ஒட்டி என்னுடைய கருத்துக்களை சிலவற்றை இந்த அவையில் வைக் விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மொழிப் பிரச்சினையை தனனுடைய அரசியல் பிரசினையாக வைத்து, தேர்தலில் போட்டியிட்டு, இன்று ஆட்சி பிடத்தில் ஏறியிருக்கிறது. மொழிப் பிரச்சினையைத் தேர்தல் பிரச்சினையாக வைத்து வெற்றி பெற்ற ஒரு கட்சி, முதல முதலில் சட்டசபையில் அது பற்றி என்ன கூறியது எனபதைபபறறித் தமிழக மக்களும், குறிப்பாக மாணவர்களும், பெரிதும எதிர்பாரத்தார்கள். அதத விதமாகக் கவனித்த போது, முதல் முதலாக 28-3-1967-ல் இதே சட்ட மன்றத்தில் முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள் : 'மும் மொழித் திட்டத்தை இந்தச் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்பது இன்னும் தீர்மானம் ஆகவில்லை. சர்க்காரிலே இடம் பெற்றிருக்கிறவர்கள தனிப்பட்ட கருத்தாக, இரண்டு மொழிகள் இருந்தால் போதும் என்று பேசியிருக்கிறார்கள். தனிப்பட்ட கருத்தும் சர்க்கார் கருத்தும் பல வேளைகளில் ஒன்றுகப் போவதுண்டு. இதிலே, இரண்டும் ஒன்றுபடவில்லை. சர்க்கார் மும்மொழித் திட்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. மும்மொழித் திட்டம் நம்மால் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு நேர்மையான முறையில் எல்லா இடங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவது இப்போதுள்ள சர்க்காருடைய போக்கு' என்று கூறியிருக்கிறார்கள்.

அதறகு அடுத்தபடியாக, உண்மையிலேயே தமிழக அரசினுடைய கல்விக் கொள்கையைப்பற்றிப் பொதுமக்கள் மிக உன்னிப்பாகக் கவனித்தார்கள். மாணவர்கள், தமிழக அரசின் மொழிக் கொள்கையைப்பற்றி இன்னும் அதிகமாகக் கவனித்தார்கள். ஆகஸ்டு 1967-ல் தமிழக சர்க்காரால் "Memorandum on the study of Languages in the School Stage" என்று ஒரு மெமோரண்டம் தயார் செய்யப்பட்டது. அதனுடன் ஆகஸ்டு 11, 1967 என்ற தேதியில் ஒரு கடிதம். அந்தக் கடிதத்தில் கல்வியமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது :

" My dear Thiru Sen,

I thank you for your letter No. F.32-10/6714, dated 6th May 1967, on the question of teaching of Languages at the School Stage. The note sent along with your letter has been carefully examined by this Government. I enclose herewith a Memorandum on the above subject which gives the views of the Madras Government on the subject. I shall be grateful, if this Memorandum is placed before the Committee of State Education Ministers which has been constituted to examine this subject. "

1968 சனவரி 23] [திரு. டி. மார்டின்]

அவர்களால் மிகவும் கவனமாக பரிசீலனை செய்து கொடுக்கப்பட்ட அந்த மெமோரண்டத்தில் பக்கம் 9-ல் குறிப்பிட்டிருப்பதாவது—

'For the above reasons, the language policy as far as Madras State is concerned, has been—

(i) Mother-tongue will be the compulsory first language;

(ii) English should be the compulsory second language; and

(iii) Hindi will be optional third language in schools.

ஆகஸ்டு மாதத்தில் மூன்று மொழிகளைப்பற்றியும் மிகவும் திட்ட வட்டமாக இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அனுப்பிய மெமோரண்டத்தில் கூறியிருக்கிறது. அதற்கு அடித்தபடியாக, இன்னும் அந்த . . . .

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, அந்த மெமோரண்டத்தில் 1948-ல் எந்த வகையிலே கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது, ஏற்கனவே இருந்த அரசாங்கம் என்ன கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது என் பதையெல்லாம் கூறிவிட்டுக் கடைசியாக இந்த அரசாங்கத்தின் கொள்கைபற்றி வருகிறது.

திரு. டி. மார்டின்: Sir, I shall read again the letter including the Memorandum of this Government. The letter is signed by the Hon. Minister for Education. It reads as follows :

"I thank you for your letter No. F-32-10/6714, dated 6th May 1967 on the question of teaching of Language at the School Stage. The note sent along with your letter has been carefully examined by this Government. I enclose herewith a Memorandum on the above subject . . ."

அந்த நேரத்தில் காங்கிரஸ் இந்த ஆட்சியில் இருக்கவில்லை. மெட்ராஸ் கவர்ன்மென்ட் என்றால் அந்த நேரத்திலுள்ள சர்க்காரைக் குறிக்குமே தவிர, முன்னால் இருந்த அரசாங்கத்தைக் குறிக்காது. அப்படி முன்னால் இருந்த அரசாங்கத்தைக் குறிப் பதாக இருந்தால் 'ப்ரீவியஸ் மெட்ராஸ் கவர்ன்மென்ட்' என்று இருக்கவேண்டும். அதிலே கையெழுத்திட்டிருப்பவர் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள். அதிலே—

'I shall be grateful, if this Memorandum is placed before the Committee of State Education Ministers which has been constituted to examine this subject . . .'

என்றும் குறிப்பிட்டிருக்கிறது. எனவே, அது இன்றைய சர்க்கா ருடைய மெமோரண்டமே தவிர . . . .

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர் களே, முதலில் குறிப்பிடப்பட்ட கொள்கையில் இருந்து, ஏற்கனவே இருந்த அரசே மாறி வந்திருக்கிறது. ஏற்கனவே சொல்லப்பட்ட

"Hindi will be the optional subject . . ."

என்ற கட்டம் மாறி, "Hindi or any other Indian languages"

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1968 சனவரி 23

என்ற கட்டம் வந்து, அதற்குப் பிறகு இந்த ஆண்டு "Hindi or any other Indian languages or Advanced Tamil" என்று வந்திருக்கிறது. இது ஆகஸ்டில் இருந்து நடைமுறைக்கு வந்திருக்கிறது. இந்தக் கொள்கை முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலம் இருந்ததற்கு முன்னுல் "Hindi or any craft" என்று இருந்ததை மாற்றி 'Hindi or any other Indian languages" என்று மாறி, இன்று "Advanced Tamil" என்ற நிலையை அடைந்திருக்கிறது. இதுதான் இந்த ஆட்சியின் கொள்கை எல்பதைக் கூற விரும்புகிறேன்.

திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்குத் திரு. சென் அவர்கள் எழுதிய கடிதமும் இங்கு இடம் பெறுகிறது.

This is published on page 16 of the Memorandum. It runs as follows :

'Education Minister, India.

New Delhi, 6th May 1967.

My dear Shri Nedunchezian,

You will recall that the State Education Ministers' Conference appointed a committee to continue the discussion on the teaching of languages at the school stage and to evolve a consensus on the subject. The Committee is expected to report within one month.

Before convening a meeting of the Committee, I thought it would be useful if a note based on the discussions in the Committee of Members of Parliament on Education, the State Education Ministers' Conference, etc., could be circulated to the members of the Committee in advance and their views are elicited. Accordingly, a copy of a note prepared by the Secretariat is enclosed. This is only as a basis for consideration.

I would be grateful if you will kindly have this note examined and let me have your comments as early as possible, and preferably within about a fortnight.

This may kindly be treated as very urgent.'

அவருடைய கடிதத்தில் இங்குள்ள கல்வியமைச்சருடைய குறிப்பை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த மெமோரண்டத்தில் இன்னும் ஒரு பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

'The note circulated by the Education Ministry uses the word "link languages". It is obviously impossible to develop too many link languages, i.e., languages which will be spoken or understood by all the States in India. At present English is the only language which satisfied this definition of a link language. It is quite possible that in the fullness of time, perhaps after a century or two, Hindi may take the place of English as a link language. It is definitely not correct to say that "in practice, Hindi is already largely in use as a link language for the country".

1968 சனவரி 23] [திரு. டி. மார்டின்]

It is not possible to visualise any other language in India becoming a link language. It is, therefore, necessary, firstly, to retain English as a link language or an All-India language and secondly, to develop in due course Hindi as the other link language or All-India language, without exercising any compulsion on non-Hindi States, in a manner which will not put the Dravidian Groups in a disadvantageous position.'

THE HON. THIRU C. N. ANNADURAI: What is the lesson that the hon. Member draws from the quotation copiously given here?

THIRU T. MARTIN: From that I understand that this Government had continued three languages in the school stage and also it accepted the three-language formula.

THE HON. THIRU C. N. ANNADURAI: What prevents the Government from changing it?

திரு. டி. மார்டின்: அந்தக் கேள்வியின் காரணத்தைக்கான் இன்று நான் இந்த அவையில் கேட்கிறேன். மும்மொழித் திட்டம் பற்றித் தமிழக அரசு தன் மெமோராண்டத்தில் குறிப்பிட்ட பிறகு இன்று இக்கீர்மானம். அதுவும் அரசினர் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்ட திருத்தத் தீர்மானம், அதற்கு நேர்மாறாக உள்ளது. இத் தீர்மானம்பற்றி எனக்கு முன் பலர் பேசி விட்டார்கள். இன்று நாட்டிலுள்ள நிலைமையை யாரும் சிந்திக்காமல் இருக்க முடியாது. பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் மூடிவிட்டு இன்று பிள்ளைகளைத் தெருவில் படிக்காது நிற்க வைத்து விட்டு, இன்று அமைதியான நிலையிலிருந்து அதற்குப் பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பை இன்று தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரியதொரு பிரச்சினைக்கு அவர்கள் தாமாகவே ஒரு பரிகாரம் தேடுவதாக நினைத்து, அதாவது மொழிப்பிரச்சினையில் தங்கள் கருத்தைமட்டும் கொடுப்பதாயிருந்தால், அது பிரச்சினை தீருவதற்குக் காணக்கூடிய பரிகாரமாக இருக்குமா என்பதுபற்றி அவர்கள் கட்சியிலிருந்தும், சகோதரக் கட்சிகளில் இருந்தும்கூட சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார்கள். அதே சந்தேகத்தை நானும் எழுப்புகிறேன். இந்த நாட்டில் மொழிப்பிரச்சினை என்பது ஒரு சாரார் சார்ந்திருக்கக்கூடிய ஒரு கட்சியின் பிரச்சினையாக எடுக்காமல் இந்த நாட்டு மக்கள் அனைவருடைய பொதுப் பிரச்சினையாகக் கருதி, கட்சித் தலைவர்களை, பல நல்ல தலைவர்களை, நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்களை எல்லாம் அழைத்து ஆலோசிக்க வேண்டும். குறிப்பாக இன்று ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றிய நேரத்தில் அதோடு கொடுக்கப்பட்ட தீர்மானம் சரியல்ல என்றும் இன்றி பேசாத மக்களுக்கு அது பெரும் பாரத்தைக் கொடுத்திருக்கிறது என்றும் மதிப்பிற்குரிய எங்கள் தலைவர் திரு. காமராஸ் அவர்கள் கூறினார்கள். அடுத்தாற் போல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் அதைக் கூறினார்கள். அதுபற்றி ஒரு முறை முதல்வர் அவர்கள் குறிப்பிடும்போது, திரு. சுப்பிரமணியம் அவர்கள்

[திரு. டி. மார்டின்] [1968 சனவரி 23

மூதலமைச்சர் பக்கத்து மாநிலங்களோடு தொடர்புகொண்டு ஒரு முடிவு காணவேண்டுமென்று சொன்னபோது திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஆட்சிமொழிப் பிரச்னையிலிருந்து நழுவப் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். யார் நழுவினாலும் சரி, நழுவாவிட்டாலும் சரி இன்றுள்ள நிலையில் நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் சகல கட்சிகளையும் அழைத்து சகல தலைவர்களையும் அழைத்து இதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டும் என்பதுதான் என் விருப்பம். மேலும், இன்று தோன்றியுள்ள இந்தப் பிரச்னைக்கு அரசியல் பூர்வமான ஒரு தீர்வுகாண வேண்டுமேயொழிய, அதை விடுத்து, இன்று மாணவர்கள் மத்தியில் எற்பட்டிருக்கிற உணர்ச்சியைப் பெருக்கக்கூடிய அளவில் இவ்விதம் இத்தீர்மானத்தை நிறைவேற்றி விடுவோமானால் மாணவர்கள் இதயத்தில் எழுந்துள்ள கொந்தளிப்பை இது நிவர்த்தி செய்யுமா என்ற சந்தேகம் எழும்புகிறது. இன்று அரசியல் தலைவர்கள் அத்தனை பேர்களும் ஒரு சூரலில் மாணவர்களிடம் சொன்னால் அவர்கள் கேட்கலாம் அந்தச் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டு, திரும்பவும் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கோரும்போது, இன்றுள்ள நிலையில் அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாத ஒரு சூழ்நிலை மத்திய அரசுக்கு எற்பட்டிருக்கிறது என்பதை ஆட்சிப் பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் அறியாமல் இருக்கமாட்டார்கள். அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சூழ்நிலை இப்போதில்லை. அதனவே அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொன்னால் அது காலம் கடத்துவதாக ஆகுமே தவிர, பிரச்னைக்கு பரிகாரம் தேடுவதாகாது. அந்திர மாநில முதல் அமைச்சர் திரு. பிரமானந்த ரெட்டி அவர்கள், இந்தியை ஒழிக்கக் கட்டுவேன் என்று சொல்லி வோட்டு வாங்கவில்லை. திரு. நிஜலிங்கப்பா அவர்கள் இந்தியை ஒழிக்கக் கட்டுவேன் என்று கூறி வோட்டு வாங்கவில்லை. திரு. நம்பியாரிபாட் அவர்கள் மொழிப் பிரச்னையை வைத்து அட்சிக்கு வரவில்லை. இருந்தாலும், அவர்களை எல்லாம் கலந்து இந்த மொழிப் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவு காண்பது நன்றாக இருக்கும். மேலும், முதல் அமைச்சர் அவர்கள் கோள முதல் அமைச்சர் அவர்களுடன் நல்ல தொடர்பு உடையவராக இருக்கும் காரணத்தால் அவர்களை எளிதில் தம் பக்கம் இழுத்துக் கொள்ள முடியும்.

மாண்பமிகு திரு. சி. என். அண்ணாதுரை: எனக்கும் கோள முதல் அமைச்சர் அவர்களுக்கும் உள்ள தொடர்பைவிட எனக்கும் திரு. காமராஜுக்கும் திரு. சுப்பிரமணியத்திற்கும், திரு. மார்டினுக்கும் உள்ள தொடர்பு அதிகம்.

திரு. டி. மார்டின்: வாஸ்தவந்தான். எனக்கு வயது 35. முதல் அமைச்சர் அவர்களுக்கு 50 வயது தாண்டி விட்டது.

மாண்பமிகு திரு. சி. என். அண்ணாதுரை: விவரங்களைப் பேசுகிறபோது மனசுக்கு கொஞ்சம் தனைத்தில் வைத்துக்கொண்டால் பல பிரச்னைகள் தீரும். (ஆரவாரம்)

1968 சனவரி 23]

திரு. டி. மார்டின்: வயதையும் கவனத்தில் வைத்துக்கொண்டு தான முன்னுல் அவர்கள் கூறிய கூற்றுகளைப் படித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே வயது குறைவு காரணமாக முன்னுள் உள்ள நடவடிக்கைகளைப் படிக்க வேண்டாமென்று கருதினுல் அது நல்லதர்க்காது என்று கருதுகிறேன். நான் முதல அமைச்சர் அவர்கள் கேரள முதலமைச்சர் அவர்களுடன் நல்ல தொடர்பு உடையவர்கள் என்று ஏன் கூறினேன் என்ருல் இன்று தண்ணீர் தகராறை ஒரு சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்ளமுடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள், சொன்னர்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தீர்ந்து விட்டதாக இங்கு பேசினுல் கேரள சட்டமன்றத்தில் எதிரொலியைக் கிளப்பும். நமக்குத் தண்ணீர் வேண்டுமென்ருல் அதுபற்றி அதிகம் பேசாமல் இருப்பது நல்லது.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: முதல் அமைச்சர் அவர்கள் திரு. நம்பூதிரிபாத் அவர்களுடன் தொடர்பு கொள்வதை விட பிரதமரை சுப்பிரமணியம் அவர்கள் அடிக்கடி சந்திக்கிறார்கள். அவர்கள் தீர்வு காணலாம் அல்லவா ?

திரு. டி. மார்டின் : அதற்குத்தான் அடுத்தபடியாக வருகிறேன். காங்கிரஸ் ஆட்சியில் உள்ள ஆந்திர மாநிலத்தின் முதல் அமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்களையும், திரு. நிஜலிங்கப்பா அவர்களையும் எங்கள் தலைவர் திரு. காமராஜ், திரு. சுப்பிரமணியம் இவர்கள் சந்தித்து ஒரு முடிவு காண விரும்புகிறார்கள் என்ருல் அதற்கு உங்கள் ஒத்துழைப்பு கிடைக்கும் என்ருல் அவர்கள் முடிவை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று சொன்னுல் அவர்கள் நிச்சயமாக ஈடுபடுவார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : மொழிச் சட்டத்தை யொட்டி வந்த தீர்மானத்தால் ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை நீக்குவதற்கு அவர்கள் எடுத்துக் கொள்கிற முயற்சிகளுக்கு என் பரிபூர்ண ஆதரவு உண்டு. (ஆரவாரம்)

திரு. மார்டின்: பரிபூர்ண ஆதரவோடு இன்னென்று கேட்டேன். அவர்கள் முடிவை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: தெளிவாகக் குறிப்பிட்டேன். அவர்கள் எடுத்துக் கொள்கிற முயற்சியில், தீர்மானத்தின் மூலம் நம் மக்களுக்கு ஏற்படக் கூடிய சங்கடங்களை நீக்குவதற்கு அவர்கள் எடுத்துக்கொள்கிற முயற்சிக்கு, என் பரிபூர்ண ஆதரவு உண்டு. மற்ற விஷயங்களில் என் கொள்கைகள் என்னிடம், அவர்கள் கொள்கைகள் அவர்களிடம்.

திரு. டி. மார்டின்: தீர்மானத்தைப் பொறுத்தவரை எங்கள் தலைவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சிக்கு ஆதரவு உண்டு என்று சொன்னுல் இப்போது இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் அந்த முயற்சிக்கு அது ஒரு இடையூருக இருக்காதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

[1968 சனவரி 23

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: நன்றாக யோசித்துப் பார்த்து இடையூறு இருக்காது எனபது அட்டுமலல், உங்களுக்கு வலிவு அளிக்கும என்ற முறையில் சொலகிறேன்.

திரு. டி. மார்டின் : மக்கள் அப்படிக் கருதவில்லை, மாணவர்கள் அவ்வாறு கருதவில்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : திரு. மார்டின் அவர்கள் இனனும் மக்களிடம் போய்ப் பேசக் கூட இல்லை.

திரு. டி. மார்டின் : மக்களிடம் பேசித்தான் போட்டு வாங்கி இந்த அவைக்கு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அவர்கள் மக்களிடம் பேசி வோட்டு வாங்கி வந்தது ஃபாலதான் எல்லோரும் பேசி வோட்டு வாங்கி வந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப் பற்றி மக்களிடம் நீங்கள் இன்னும் பேசவில்லை.

திரு. டி. மார்டின்: நான் பேசாவிட்டாலும் நான் சார்ந்திருக்கும் கட்சித் தலைவர்கள் திரு. காமராஜ், திரு. சுப்பிரமணியம் இவர்கள் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மும்மொழித் திட்டத்தை நீக்கி விட்டு இருமொழித் திட்டம் என்று வரும் தீர்மானம் இப்போது விவாதத்தில் இருக்கிறது. ஆகவே அது பற்றி மக்களிடம் இன்னும் பேசவில்லை என்று சொல்கிறேன்.

திரு. டி. மார்டின் : ஆங்கிலமும் தமிழும் இருக்க வேண்டும் என்று கூறுகிற நேரத்தில் ஆங்கில அழிப்பு வேலை தமிழகத்தில் மிக வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. பாரீஸ் கார்னர் என்பது பாரி முனை என்றும் கெல்லிஸ் என்பது கிள்ளியூர் என்றும் திருத்தியாகிவிட்டது. ஆக ஆங்கிலத்தை வேகமாக அகற்றும் வேலையில் தமிழக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தை நீக்கிவிட்டால் இன்றைய மாணவர்கள் எந்த மொழியில் மத்திய சர்க்கார் பரீட்சையை எழுதுவார்கள் என்று சற்று சிந்திக்குமாறு நான் இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இன்று மொழிப் பிரச்னையை ஒரு பிரச்னையாக வைத்துக் கொண்டு அதைப் பற்றி அரசியல் பேசிக் கொண்டிருப்பதற்காகவே இந்தத் தீர்மானத்தை அரசினர் தாப்பிலிருந்து கொடுத்திருக்கிறார்கள் என்று கூறிக் கொண்டு எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்தையொட்டி என் கருத்துக்களைத் தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தத்தில் இரு மொழித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்.சி.சி.-யில் ஆணைகள் பிறப்பிக்கப்படுவது இந்தியில் இருக்கக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டையும் பற்றி உறுப்பினர் அவர்கள் என்ன கருதுகிறார் என்று கேட்கிறேன்? (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்)

1963 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு விடை கூறுவது உறுப்பினருடைய விருப்பத்தைப் பொறுத்தது. விருப்பமில்லை யென்றால் உறுப்பினர் அவர்கள் விடை கூறத் தேவையில்லை.

திரு. டி. மார்டின்: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் சொல்லுகிற பதில் என்ன என்றால், இந்த இரண்டும் மாணவர்களின் உள்ளத்தில் பீரிட்டு எழுந்திருக்கிற உணர்ச்சிகளே அதிகப்படுத்துமே தவிர, குறைக்காது என்பதை நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: மாணவர்கள் என்ன கருத்துக் கொள்கிறார்கள் என்பது அல்ல, உறுப்பினர் அவர்கள் என்ன கருத்துக் கொள்கிறார்கள் என்பதுதான் கேள்வி. (ஆளும் கட்சி தரப்பில் ஆரவாரம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது சட்டப் பேரவை நடைமுறை விதிகளில் 65-வது விதியின்படி உரையாற்றியவரிடமிருந்து விளக்கம் கோரினால் அதற்கு அவர் விடை அளிக்க விருப்பமில்லாவிட்டால், விடை அளிக்காமல் இருக்க உரிமை இருக்கிறது. உறுப்பினர் விரும்பாவிட்டால் விடை அளிக்க வேண்டியதில்லை.

***திரு. செ. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் சம்யுகத சோஷலிஸ்ட் சார்பாக திரு. நல்லசிவம் கொண்டு வந்துள்ள திருத்தத்தை ஆமோதித்துப் பேச விரும்புகிறேன்.

இந்த மாதிரி சிக்கல் வாய்ந்த பிரச்சினையில், சட்ட மன்றத்தில் இருக்கிற எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் அறிந்து, ஒரு முடிவிற்கு வருவதற்காக இந்தக் கூட்டத்தைக் கூட்டியதற்கு தமிழக அரசுக்குப் பாராட்டுதலை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்னை மிகவும் சிக்கலான பிரச்னை. இங்கே பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று அரசினர் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தம்; பிறகு காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தம்; பிறகு இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தம்; பிறகு சுதந்திராக் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தம்; பிறகு சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தம். இந்தத் திருத்தங்களை எல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, அவற்றில் இரண்டே கருத்துக்கள் தான் இருக்கின்றன என்று கூற ஆசைப்படுகிறேன். இந்தப் பிரச்னை பற்றித் தீர்வு காண சர்வ கட்சித் தலைவர்கள் கொண்ட கமிட்டி போட்டு அதன் மூலம் பேசித் தீர்வு காண்பது ஒன்று. இரண்டாவது நீண்ட காலத் தீர்வு என்ற அடிப்படையில் தீர்வு காண்பது. இந்த இரண்டில் காங்கிரஸ்காரர் கொண்டு வந்த திருத்தம் முதல் அடிப்படையில் தரப்பட்டது. நீண்ட காலத் தீர்வுக்குச் சட்ட மன்றம் என்ன சொல்லுகிறது என்று அதில் இல்லை. நீண்ட காலத் தீர்வு குறித்து காங்கிரஸ்காரர்கள்

[திரு. செ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

தெளிவாக இல்லை என்று கருதுகிறேன். நீண்ட காலத் தீர்வாக என்ன இருக்கவேண்டும் என்பதில் சுதந்திராக் கட்சியின் கருத்து எப்போதும் ஆங்கிலமே இந்த தேசத்தின் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்பது. இரண்டாவது கருத்து, அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநில மொழி—தமிழகத்தில் தமிழ் மொழி, ஆந்திரத்தில் தெலுங்கு மொழி, கேரளத்தில் மலையாள மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று நீண்ட காலத் தீர்வாகக் கொடுக்கப்பட்டுள்ள கருத்து. இப்படி இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. எது சரியான கருத்து என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசினர் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட கருத்து, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தில் வலியுறுத்தப்பட்ட கருத்து, கம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் கருத்தில் வலியுறுத்தப்பட்ட கருத்து என்ன வென்றால், அதாவது பிராந்திய மொழிகள் இந்த தேசத்தில் தொடர்பு மொழிகளாக இருக்க வேண்டும், இந்த தேசத்தில் மத்திய சர்க்கார் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதாகும். இதுதான் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் திட்டவட்டமான கருத்து. இதற்குச் சில ஆதாரங்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பாராளுமன்றத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர், இந்திப் பகுதியிலிருந்து வந்தவர், அந்த மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தியில் பேசிய போது, பத்திரிகைகள் கூட 'இந்தி வெறியர்கள் சம்யுக்த சோஷலிஸ்டுகள்' என்று போட்டுப் பொது மக்கள் மனதில் தவருன எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

மத்தியில் இருக்கிற அதிகாரங்கள் இன்றைய தினம் பரவலாக்கப்பட வேண்டும். மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே பரவலாக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல; கிராமப் பஞ்சாயத்து அளவில், ஜில்லா அமைப்பு அளவில் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். இப்படி இந்த நான்கு அங்கங்களுக்கும் எல்லா அதிகாரங்களும் பிரித்துக்கொடுக்கப்பட வேண்டும். மத்திய சர்க்காரின் அதிகாரத்தில் (1) வெளி நாட்டு விவகாரம், (2) போக்குவரத்து, (3) பாதுகாப்பு ஆகிய இம்மூன்றும்தான் இருக்க வேண்டும். மற்ற எல்லா அதிகாரங்களும், மாநிலங்கள் மட்டுமல்ல, ஜில்லா மட்டத்திலும், கிராமப் பஞ்சாயத்து அளவிலும் பிரித்துக் கொடுக்கப்பட்டு அரசியல் சட்டத்திலே அங்கங்களாகச் சேர்க்கப்பட வேண்டும் என்ற துணிச்சலான கொள்கையை வெளியிட்டவர் எங்கள் கட்சித் தலைவர் திரு. ராம் மனோகர் லோஹியா. அந்தந்த பிராந்தியத்தில் அந்தந்தப் பிராந்திய மொழியில் நிர்வாகம் நடைபெறவேண்டும். அப்படியில்லாமல் ஆங்கிலத்தில் அல்லது வேற்று மொழியில் இருக்கக் கூடாது என்று வலியுறுத்தி தேசமெங்கும் யுத்தகாட்டியது எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பாராளு மன்றத்தில் முதன் முதலாகக் கன்னடத்தில் பேசப் பணித்தது சம்யுக்த சோஷலிஸ்ட்; கேரளப் பகுதியிலிருந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர்களை மலையாள மொழியில் பேசப் பணித்தது சம்யுக்த சோஷலிஸ்ட்; அந்தந்தப் பிராந்தியத்திலிருந்து வந்தவர்கள் அந்தந்தப்

1968 சனவரி 23] [திரு. செ. பாலசுப்பிரமணியன்]

பிராந்திய மொழியில் பேசப் பணித்தது சம்யுக்த சோஷலிஸ்ட். இந்த தேசத்தில் மகாத்மா காந்தி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பிரகாரம் அதிகாரங்க ளெல்லாம் நான்கு அங்கங் களுக்குமிடையில் பரவலாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டால், தொடர்பு மொழி என்ற பிரச்னை, மதிப்பிற்குரிய ஐயா ம. பொ. சி. சொன்ன மாதிரி, பெரிய பிரச்னையாக இருக்காது—சிறிய பிரச்னை யாகத் தான் இருக்கும். மக்களுக்கு மக்கள் தொடர்பு கொள்ள ஒரு தொடர்பு மொழி தேவையாக இருக்கிறது என்றால், அது ஒரு மொழியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழ் நாட்டி லிருந்து ஒரு வியாபாரி அல்லது வேறு ஒருவர் ஆந்திர ராஜ்யத் திற்குச் சென்றால், இந்தியை வைத்துக் கொண்டு பேசலாம் என்றால் முடியாது; ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு பேசலாம் என்றால் முடியாது; தண்ணீர் வேண்டும், சாப்பாடு வேண்டும் என்றும் சொல்லுவதற்குக் கொஞ்சம் தெலுங்கு தான் தெரிந் திருக்க வேண்டும். அதே மாதிரி இந்தி பேசும் பகுதிக்குப் போனால் இந்தியில் தான் பேசியாக வேண்டும். இந்திப் பிரதேச மக்கள் தமிழ்நாட்டுக்கு வந்தால் தமிழைக் கொண்டு தான் காரியங்களை முடித்துக் கொள்கிறார்கள். இது தான் இன்றைய நிலை. மக்களுக்கு மக்கள் தொடர்பு கொள்ள எந்த மொழி தொடர்பு மொழியாக இருக்க வேண்டுமென்றால், அத்தனை மொழி களும் தொடர்பு மொழிகளாக இருப்பது நியாயமானது, மக்கள் சம்மதமானது என்று சொல்லிக் கொள்ளுகிறேன். ஆங்கிலம் என்றென்றைக்கும் இருக்க வேண்டும் என்பதற்குச் சொல்லப்படுகிற வாதம், நாட்டில் தவறுகப் பரப்பப்பட்டிருக்கிற வாதம். சொல்லுகிறார்கள்—ஆங்கிலம் உலகப் பொது மொழி; ஆங்கிலம் வளமான மொழி; விஞ்ஞானத் துறைக்கு முக்கியமான ஒரு மொழி—என்றெல்லாம். என்னைப் பொறுத்த வரையில் அத்தனையுமே தவறானது. ஆங்கிலம் படித்தவர்கள் ஆங்கிலம் படிக்காத மற்றவர்களை அடக்கி ஆள வேண்டுமென்று, அந்தக் கருத்து மக்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆங்கிலத்தைப்பற்றி பேராசிரியர் பெர்னட்ஷா—பெர்னட்ஷாவைப்பற்றிக் கூறத் தேவையில்லை—அவர் கூட பிக்மாலியன் என்ற நூலில் முன்னுரையில் எழுதியிருக் கிறார். ஆங்கிலம் பிரபஞ்சனம் அற்ற மொழி என்பதற்கு, 'ஒரு மொழியாக ஆங்கிலத்தை மதிப்பதற்கில்லை. ஒசையில் ஒருவரும் வெறுக்காத முறையில் ஆங்கிலத்தைப் பேசுவது என்பது முடியாது. ஜெர்மனி, ஸ்பானிஷ் முதலியவைகளை வெளிநாட்ட வர்கள்கூடக் கற்றுக்கொள்ள முடிகிறது. ஆங்கிலத்தை ஆங்கிலேயரே கற்றுக்கொள்ள முடிவதில்லை' என்று எழுதி யிருக்கிறார். ஆங்கிலமானது போக வேண்டுமென்று சொல்லும் போது அது 150 ஆண்டுகள் இருந்த பிறகும்கூட, சமூதாயத்தில் 5 சதவிகிதத்தினர்கூட ஆங்கிலம் கற்றுக்கொள்ள முடியாத பரிதாப நிலையில் இருக்கிறார்கள். கற்றுக்கொண் டவர்கள் பேசும் ஆங்கிலம்கூட உண்மையில் ஆங்கிலமா என்று

[திரு. செ. பாலசுப்பிரமணியன்] [1968 சனவரி 23

அச்சரியப்படுகிறேன். இங்கே திரு. ஹாண்டே அவர்களும், திரு. வினயகம் அவர்களும் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். அதைக் கூர்ந்து கவனித்தால் அதில் எவ்வளவோ பிழைகள் இருக்கின்றன.

திரு. கே. வினயகம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார், ஆங்கிலமே சரியாகத் தெரியாதவருக்கு ஆங்கிலம் பேசுகிறவர்கள் பிழையாகப் பேசுகிறார்கள் என்று எப்படிக் கண்டுபிடிக்க முடிகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

பி.ப. 5 00

திரு. செ. பாலசுப்பிரமணியன்: டாக்டர் ஹாண்டே அவர்களும், வினயகம் அவர்களும் பேசிய ஆங்கிலத்தைக் கேட்டுத் தானே என்னவோ வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை விட்டுப் போனார்கள் என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. ஆங்கிலம்தான் ஒற்றுமையாக இருப்பதற்கான மொழி என்று சொல்லுகிறார்கள். இது கேலிக்கூத்தான வாதம். அதற்கும் இந்த தேசத்தின் மக்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தேசத்திலே ஏதோ ஒருவிதத்திலே, பல்லாண்டுகளாக இராமன் காலத்திலே, பீமன் காலத்திலே, அசோகன் காலத்திலேயிருந்து, கன்னியாகுமரி முதல் காஷ்மீர்வரை ஒரு மனே ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. ஐந்து சதவிகிதம் ஆங்கிலம் தெரிந்தவர்களால் இந்த தேசத்திற்கு ஒற்றுமை யென்ருல் தயவு செய்து அந்த ஒற்றுமை இந்தத் தேசத்திற்கு வேண்டாம்.

நடந்த சம்பவம் ஒன்றை உதாரணத்திற்குச் சொல்கிறேன். சமீபத்திலே உலகத் தமிழ் மாநாடு நடந்தது. பொது மாநாட்டிலே தமிழிலேதான் நிகழ்ச்சிக ளெல்லாம் நடந்தன. ஆனல் சிறிப் பிட்ட கருத்தரங்கிலே ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்திலே நடத்தப்பட்டன. தமிழ் முன்னேற்றத்திற்கு நடத்தப்படும் விவாத ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்திலே. இந்த அளவிற்கு ஆங்கிலம் வேரூன்றிவிட்டது. தமிழின் முன்னேற்றத்திற்கு முதல் எதிரி இந்தி என்று சொல்லப்படுகிறது. ஆனல் முதல்படியாக இருக்கும் தடை ஆங்கிலம். அதை அகற்றியாக வேண்டும். அதேமாதிரி, இந்தி வருவதையும் ஆதரிக்கக் கூடாது. ஆங்கிலமும் வேண்டாம், இந்தியும் வேண்டாம். பாரத மொழிகள் எல்லாம் ஆட்சிமொழியாக்கப்பட்டு, மத்தியிலே உள்ள அரசாங்கம் 4 ஆண்கள் கொண்ட அரசாக அமையும்பொழுது நிச்சயமாகத் தீர்வுகாண முடியும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எனக்கு ஆங்கிலம் தெரியாது என்று சொன்னார்கள். எனக்கு ஹாஸ்தி ஆங்கிலம் தெரியாது என்று சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய பேச்சைக்கேட்டு வெள்ளைக்காரர்கள் போனார்கள் என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் உண்மையில், 1942-ஆம் ஆண்டு வெள்ளையர்கள்

1968 சனவரி 23] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

வெளியேற வேண்டுமென்று கூறியிருக்கிறேன். தனம் பால சுப்பிரமணியம் அவர்கள் முயற்சி இப்படியே இருந்தால் இந்தி நிச்சயமாக வரும். இணைப்புமொழி பற்றி அவர்கள் திட்ட வட்டமாக என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: டாக்டர் ஹாண்டே அவர்களின் ஆங்கிலத்தைப்பற்றி நான் கூறியது ஹாஸ்யத்திற்காகத்தான். அதற்காகத் தனிப்பட்டமுறையில் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவதாக, இணைப்புமொழி பற்றிக் கேட்டார்கள். இணைப்புமொழி என்பது ஒரு மொழியாக இருக்க முடியாது. தமிழ்நாட்டிலே உள்ள ஒருவர் வடநாட்டிற்குச் சென்றால் இந்தியைக் கற்றுக்கொண்டால்தான் பழக முடியும். உத்தரப் பிரதேசத்துக்காரர் தமிழ்நாட்டு மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் கமிழைக் [illegible]தான் அக வேண்டும். நடைமுறையில் அதுதான் [illegible]து. எல்லா மக்களும் அவரவர்களுக்குத் தெரிந்த மொழிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். ஆட்சிமொழியைப்பற்றி நாம் [illegible]த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. விஜயகம்: மாண்பிற்குரிய அவைத்தலைவர்களே, இந்தச் சிக்கலான மொழிப்பிரச்சினையிலே பேசுவதற்குச் சிக்கலான நேரத்திலே எழுந்து நிற்கிறேன். இப்பொழுது சரித்திர பூர்வமாக நடந்ததை யெல்லாம் [illegible]க்கொண்டு வருவது அதிகமாக ஒரு [illegible]தாது. இந்த நேரத்திற்கு எப்படியிருந்தால் நாம் ஒற்றுமையாக வாழ முடியும் என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நமது தேசம் பெரிய தேசம். 50 கோடி மக்கள் உள்ள தேசம். பல மொழிகள் பேசுபவர்கள் இருக்கிறார்கள். நாமும் அதிலே ஒரு அங்கம். இவைகள் சேர்ந்த ஒன்றாக இருக்க வேண்டும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேசத்தில் மொத்தம் 14 மாநிலத்திலுள்ளவர்கள் இருக்கிறார்கள். நம்மைப்போல் அவர்களும் தாய்மொழியிலே தீவிரமாக உள்ள வர்கள். நாம் இந்தி எனில் அவர்கள் "அங்க்ரேஸி ஹடா" என்பார்கள். இந்தச் சிக்கலிலே நாமும் வாழவேண்டும். அல்லது—சொல்லிவிடுங்கள் தைரியமாக, 'நாங்கள் பிரியப் போகிறோம்' என்று அதே நோக்கிலே 'சொல்லுகிறார்கள் ஒன்றாக இருக்கவேண்டும், ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஒருமைப்பாடாகச் செல்லவேண்டுமென்று, இப்படிப்பட்ட கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம் மக்கிய அரசாங்கத்திற்குப் போர்க் கொடி காட்டுவதாகத் தோன்றுகிறது. நாங்கள்தான் ஒற்றுமை யாக இருக்க வேண்டுமென்று சொல்வதைப்போலவும், இந்தியை நாங்களே வரவேண்டுமென்று சொல்வதுபோலவும் படம்பிடித்து, எங்களை விரோதிகளாக ஆக்கவேண்டுமென்று நினைத்தால் (சிரிப்பு). அதற்கு இது சாதகமாக இருக்கும்.

61426

[திரு. கே. விஜயகம்] [1968 சனவரி 23

மாணவர்கள், உங்களை—உங்களையென்றால் ஆட்சியாளர்களைப் பற்றிப் பேசிக்கொள்ளும்போது, இந்தச் சிக்கலான நிலைமை வந்த பிறகு அவசரமாகக்கூடி இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அவர்களைத் திருப்திப்படுத்தித் திரும்பவும் பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்கு அனுப்ப வேண்டுமென்ற முயற்சி என்று கூறுகிறார்கள். அவ்வாறு ஒரு சிலர் பேசிக்கொள்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஒருசிலர் பேச வேண்டியதில்லை. அப்படி ஒரு நோக்கம் இருக்குமானால் அது தவறு என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. விஜயகம் : மாண்புமிகு முதலமைச்சர் என்ன கருத்து வைத்துக்கொள்ள வேண்டுமென்ற உரிமையைப் பற்றிப் பேச வரவில்லை. பேச்சு வார்த்தை நடக்கிறது நாட்டிலே என்றுதான் சொன்னேன். கன்னியாகுமரி முதல் காஷ்மீர்வரை ஒன்றாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அவர்கள் தங்களுக்குச் சாதகமாகச் செய்துகொண்டு, நாம் இங்கே நமக்குச் சாதகமாகச் செய்து கொண்டு, ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டு நாட்டிலே எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படாமல் மொழியிலேயே காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிற நிலைமையிருக்கிறது.

சட்டம் வருகிறது என்று தெரியுமல்லவா? அதற்கு முன்னால் முதலமைச்சரவர்கள், இந்தச் சட்டசபையைக் கூட்டி இப்படி வருகிறதே, இதற்கு என்ன நீர்வு காண்பது என்று கேட்டிருக்க லாமல்லவா? நேற்றுவரை மும்மொழி என்று கூறினர்கள். இப் பொழுது இருமொழி என்று கொண்டு வருகிறேன் என்று சொல்கிறார்கள். இதிலே பார்லிமெண்ட் புரோசீடிங்க்ஸில் மனேகரன் அவர்கள்கூட,

"We are not against Hindi. We are against the imposition of Hindi and Hindi imperialism". என்று கூறியிருக்கிறார்கள். இப்படி யெல்லாம், பேசிவிட்டு, அதைப் பாடமொழியாக வைத்துக் கொள்ளலாம். இஷ்டமொழியாக வைத்துக் கொள்ளலாம், யார் விரும்பினாலும் படித்துக் கொள்ளுங்கள் என்றெல்லாம் சொல்லி விட்டு, பிறகு நாமே இளர்ச்சியைத் தூவக்கிவிட்டு இப்பொழுது நாமே அடக்க முடியாமல், அவர்களைத் திருப்திப்படுத்த நம் முடைய கொள்கையை மாற்றிக்கொள்வது என்பது சரியா?

எங்களைப் பொறுத்தவரையில் எங்களுக்குத் தமிழ் வேண்டும். சந்தேகமில்லை. அரசியல்வாதிகள் தமிழ் வேண்டும். தமிழ் வேண்டும், கல்லூரிகளில் தமிழ் வேண்டுமென்று சொல்கிறார்கள். உங்கள் ஆட்சியிலேயே, கல்லூரிகளில், குறிப்பாக ஆர்ட்ஸ் காலேஜில் படிக்கப்போகும் பிள்ளைகளில் பெரும்பாலான பிள்ளைகள் ஆங்கிலம்தான் வேண்டுமென்று சொல்கிறார்கள். 10 சதவிகிதம்கூட தமிழ் எடுத்துக் கொள்ளத் தயாராயில்லை.

(திரு. இராம. அரங்கண்ணல் எழுந்தார்.)

1968 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் உட்கார்ந்தால்தான் நீங்கள் பேசலாம்.

திரு. கே. விஞ்யகம் : அதுதான் உண்மை. தமிழிலே மாணவர்கள் சேரவேண்டுமென்று நாம் கூறுகிறோம். மாநாடு கூட்டுகிறோம்; ஊர்வலங்கள் வருகிறோம்; தமிழை எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறோம். பி.யூ.சி.-யிலே தமிழ் வகுப்பிலே எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் ? ஆங்கில வகுப்பில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ? கல்வாரி முதல்வரே கூறுகிறார், இழுத்து உட்கார வைத்தாலும் தமிழ் படிக்க மாட்டோம், ஆங்கிலம்தான் படிப்போம் என்று சொல்கிறார்கள் என்று.

" There are no proper incentives thrown before the students to learn Tamil "

ஆதலால், தமிழ் வளர வேண்டும். அதிலே யாருக்கும் அபிப்பிராயபேதம் இல்லை. தமிழ் வளர வளர நாம் வாழ்வோம். அதை வரவேற்கிறேன். ஆனால் நாம் ஏதோ தமிழ், தமிழ் என்று சொல்லிவிட்டு நம்முடைய பிள்ளைகளை மட்டும் தமிழ் வகுப்புகளிலே சேர்க்காமல், 'கான்வென்ட்' பள்ளிகளிலே சேர்க்கிறோம். அதையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது இந்தி தொடர்பு மொழியைப்பற்றி நான் பேசப் போகிறேன். ரொம்ப ரொம்ப நாட்களுக்கு முன்னால் நாம் அப்பொழுதிருந்த சூழ்நிலையைப் பார்க்க வேண்டும். நாம் எல்லாம் சட்டசபையிலே அப்பொழுது இல்லை. நாமெல்லாம் உலகமறியாதவர்கள் அப்பொழுது. பாராளுமன்றத்திற்குப் போவோம் என்ற எண்ணம் இல்லாதபொழுது, அப்பொழுதிருந்த சூழ்நிலையை அப்பொழுது இருந்த—'பொலிட்டிகல் பேக் கிரவுண்ட்'--அரசியல் சரித்திரத்தை நாம் கொஞ்சம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது இந்திதான் என்பதை எல்லாத் தலைவர்களும் ஒப்புக் கொண்டார்கள். அப்பொழுதிருந்த சூழ்நிலையில் (Circumstantial advantage) அது வந்துவிட்டது. அது சரியோ, தப்போ வந்துவிட்டது. வந்துவிட்ட பிறகு, இப்பொழுது திருத்த வேண்டுமென்பது நம்முடைய எண்ணம். இப்பொழுது இது சாத்தியக் கூறுதானு என்று யோசிக்க வேண்டும். அப்பொழுது அது சாத்தியக் கூறு இல்லை. இப்பொழுது அதில் திருத்தம் செய்ய வேண்டுமென்று சொன்னால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா. 'கான்ஸ்ட்டிடியூஷன் அமெண்ட் மெண்ட்' என்று சொன்னால் 2/3 'மெஜாரிட்டி' இருக்க வேண்டும். அது இப்பொழுது இருக்கிறதா? 'மெஜாரிடி' இல்லாதவர்களிடம் சொல்லிவிட்டு, பொது மக்களிடம் வந்து பிரச்சினையை அவர்களிடம் வைத்துவிட்டோம் என்று சொல்லி அவர்கள் திருப்பிபடுவார்களேயானால் நாமே திருப்பிபடலாமே தவிர, அது பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு வழி காட்டுவதாக இருக்காது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, 'கான்ஸ்ட்டிடியூஷன் அமெண்ட்

[திரு. கே. விஜயகம்] [1968 சனவரி 23

மெண்ட்' என்பதற்குத் தகுந்த சூழ்நிலை வர வேண்டும். அது அப்பொழுதே அந்தக் காலத்திலேயே செய்திருக்க வேண்டும் இப் பொழுது அது முடியாத காரியம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 'கான்ஸ்ட்டி டியூஷன் அமெண்ட்மெண்ட்'-க்கு 2/3 'மெஜாரிட்டி' உங்களுக்கு இருந்த நேரத்தில் நாங்கள் கேட்டிருந்தால் நீங்கள் ஒத்துக் கொண்டிருப்பீர்களா ?

திரு. கே. விஜயகம் : ஆமாம், யார் இல்லை என்றார்கள் ? மேலும், அது அப்போது இருந்தவர்களைக் கேட்க வேண்டியது. அவர்கள் பதில் சொல்ல வேண்டியது. என்னைக் கேட்டால் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்தக் கேள்வி யைப் பொழுதுபோக்காகக் கேட்கவில்லை. தெளிவாக மறுபடியும் கேள்வியை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பாராளு மன்றத்தில் 2/3 'மெஜாரிட்டி' கிடைக்கக் கூடிய சூழ்நிலை இருந்த நாட்களில் அந்த அரசியல் சட்டத் திருத்தத்திற்கு தங்களுடைய ஆதரவை நாங்கள் கேட்டிருந்தால் நீங்கள் கொடுத்திருப்பீர்களா என்று கேட்கிறேன்.

திரு. கே. விஜயகம் : பாராளுமன்ற அங்கத்தினர்களைப் பொறுத்த வரையிலே என்னால் எப்படிச் சொல்ல முடியும் ? நம் முடையவர்கள் நாம் சொன்னால் கேட்பார்கள். நம்மைவிட அதே மாதிரி தீவிரமான உணர்ச்சி உள்ளவர்களும் எதிர்க்கட்சியிலே இருப்பார்கள் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய சட்ட சபைக்குள்ளேயே கேட்கிறேன்.

திரு. கே. விஜயகம் : இது 'ஷைப்பதட்டிக்கல் க்வொஸ்டியன்'.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 'ஷைப்பதடிகல் 'க்வொஸ்டியன்' இல்லை. அப்படிப் பிரச்சினை வந்தபொழுது நீங்கள் எதிர்த்து இங்கே வோட்டளித்தது நடவடிக்கைப் புத்தகத்தில் உள்ளது.

திரு. கே. விஜயகம் : அது வேறு விஷயம். தலைவர் அவர்களே, 'ஜோக்கிங் அப்பார்ட்'. நேரு அவர்கள் உயிரோடு இருந்தபொழுது இந்த மாதிரி பிரச்சினையிலே அரசியல்வாதிகள் எடுத்துச் சொன்னதை யெல்லாம் ஒத்துக் கொண்டு அவர் வாக்குறுதி அளித் தார்கள். வாக்குறுதி தந்து விட்டுச் சட்டத்தை மாத்திரம் திருத்தவில்லை. அதனாலே தான் இந்தத் திருத்தம் வந்தது. அதாவது 'மே' என்று போட்டார். அதை மாற்றிவிட்டு 'ஷல்' என்று போடவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அவர் விளக்கம் சொல்லி, 'மே ஆல்சோ மீன்ஸ் ஷல்' என்று அப்பொழுது சொன்னார். எல்லாம் நடந்து போன பிரச்சினை. அந்த வகையிலே இப்பொழுது ஆட்சியிலே இருப்பவர்கள், நேரு அவர்கள்

1968 சனவரி 23] [திரு. கே. விஜயகம்]

கொடுத்த வாக்குறுதியைச் சட்டமாக ஆக்கினால் போதும் என்று சொன்னார்கள். அதைத் தான் கேட்டோமே தவிர, வேறு எதையும் கேட்க வில்லை. அந்த வகையிலே தான் பாராளுமன்றத்திலே இப்பொழுது சட்டம் வந்தது. ஆனால் அதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. சிக்கல் இருக்கிறது. அது என்ன வென்றால் ஆங்கிலமே தொடர்ந்து இருக்க வேண்டுமென்பது தான். அப்பொழுது 15 ஆண்டுகளுக்குப் பின்னால் இருக்க வேண்டுமென்று சொன்னது போய், இப்பொழுது ஆங்கிலம் காலவரையறையின்றி இருக்கும் என்று சட்டம் இருக்கிறது. அதை நமது முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்களா ? 'அலாங் வித் இந்தி இங்கிலிஷ் மே பி கன்டின்யூ' என்று இருக்கிறது. அதை ஏற்று கொள்கிறார்களா என்பது தான் பிரச்சினை. அதை மொத்தமும் எதிர்க்கிறேன் என்று சொன்னால் உங்களுடைய 'ஸ்டாண்ட்' தெளிவாகும். அதை விட்டுவிட்டு இதை ஏற்றுக் கொள்ளுகிறேன், 'சேசனுஷன்' தவறு என்று நீங்கள் சொல்கிறீர்களே . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: *1963 இறுதியில் இதற்கான ஆட்சிமொழித் திருத்தச் சட்டம் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தபொழுது கொண்டுவரப்பட்ட நேரத்தில் நம்முடைய எதிர்க்கட்சிகள்—அதாவது அப்பொழுதிருந்த நாங்கள்—அதை மொத்தமாகவும் எதிர்த்தோம், 'க்ளாஸ் பை க்ளாஸ்' ஆகவும் எதிர்த்தோம்.*

திரு. கே. விஜயகம் : *இப்பொழுது என்ன நிலைமை என்பதுதான் பேச்சு. இந்த ஆக்ட் இருக்கிறதே அதை நான் அப்பொழுது எதிர்த்தேன் என்று . . .*

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: *இப்பொழுது என்ன நிலைமை என்பதை காலையிலே எடுத்துக் காட்டினேன். இதை எங்களுடைய திட்டவட்டமான கொள்கை என்று கூற விரும்புகிறேன்.*

திரு. கே. விஜயகம் : *இன்று நாட்டிலே இருக்கிற சூழ்நிலையில் மாணவர்கள் நம் பேச்சைக் கேட்க மாட்டேன் என்கிறார்களே . . .*

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : *1963-லே அந்தச் சட்டம் வந்தபொழுது நாங்கள் அதைப் போதுமான அளவு எதிர்த்திருக்கிறோம். பாராளுமன்றத்தில் அதை எதிர்த்து ஓட்டளித்தோம். வெளி நடப்பும் செய்தோம். அதே கொள்கையில்தான் இன்றும் செயல்படுகிறோம். ஆனால் இதுவரையிலே நான் இதைச் சொல்லத் தேவை இல்லை என்று கருதினேன். ஆட்சி மொழிச் சட்டத்தோடு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தையும் சேர்த்துத்தான் உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் ஆதரித்து ஓட்டளித்தார்கள். லோக் சபாவில் ஆறுமுகம், ராஜ்ய சபாவில் செங்கல்வராயன், ஆனந்தன்; சாம்பசிவம் எல்லோரும் ஆதரித்துத்தான் வாக்களித்தார்கள்.*

[1963 சனவரி 23

திரு. கே. விஜயகம் : ஆதலால் (சிரிப்பு) இன்று நம் எதிரிலே இருப்பது இந்த ஆட்சிமொழி சட்டத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுவதா என்பது. பிறகு அதற்கு ஓட்டி இருக்கிற 'ரெசலூஷன்'. 'ரெசலூசனைப்' பொறுத்த வரையிலே நமக்கு தமிழகத்திலே எந்தவித அபிப்பிராய பேதமும் இல்லை. நான் இதைக் கொஞ்சம் நன்றாக அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஆங்கிலத்திலே சொல்ல அனுமதிக்க வேண்டும்.

'The villain of the entire piece is in this resolution. It does the greatest havoc to the Tamilians.'

திரு. கே. விஜயகம் : அவருக்கே புரியாது

'The villain of the entire piece is in this resolution. It does the greatest havoc to the Tamilians.

ஆதலால், சபாநாயகர் அவர்களே இதிலே இருக்கிற 'ரெசலூஷன்' சரியாக இல்லை. இது நமக்குப் பாதகம் அளிக்கிறது. 'unequal burder and extra strain on non-Hindi people' இதைக் கருதி நாம் யோசிப்பதை விட நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். இன்று விவாதம் செய்து என்ன முடிவுக்கு வருகிறோமோ அதைத் தான் நாம் மக்களுக்கும் மாணவர்களுக்கும் சொல்லுகிறோம். ஆதலால் அந்த வேலை ஒரு புறம் நீடிக்கட்டும். அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று நினைக்கிறதா? அல்லது பொது மக்களிடம் போய் எங்களிடம் குறை இல்லை, அவர்கள் தான் எதிர்த்தார்கள். ஆகவே, எங்களைப் பொறுத்த வரையிலும் செய்து விட்டோம். எதிர்த்த கருத்திருமனையும் விஜயகத்தையும் அடுத்த தேர்தலில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, அதை விட்டுவிட்டு நமது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாக தெரியும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அடுத்த தேர்தலில் நீங்கள் காங்கிரசிலேயே நிற்கப் போகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன் (சிரிப்பு)

திரு. கே. விஜயகம் : இது பழைய சரக்கு. இதை தினமும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் you are spelling the issue நீங்கள் அதைச் சொல்ல சொல்ல நான் இன்னும் அழுத்தம் திருத்தமாக இருக்கிறேன். நீங்கள் சொல்லச் சொல்ல இன்னும் உறுதியாக இருக்கிறேன். நீங்கள் இப்படிச் சொல்லிச் சொல்லி உங்கள் கட்சியில் என்னை இணைத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறீர்கள். ஆனால் நான் இன்னும் அதிகமாக எங்கள் கட்சியில் ஈடுபடுகிறேனே தவிர, நீங்கள் நினைப்பது நடக்காத காரியம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் நான் இதை எல்லாம் கேட்பதாலே, ஏதோ தர இருக்கிறேன் என்று ஆசைப்படவேண்டாமென்று முன்கூட்டியே சொல்லி விடுகிறேன்.

1968 சனவரி 23]

திரு. கே. விஜயகம் : ஆதலால், இந்தப் பிரச்சினையிலே என்ன செய்கிறோம் என்பது எங்களுடைய நிர்மானத்திலே கூடத் தெளிவாக இருக்கிறது. முதலில் நாம் முக்கியமான தலைவர்களையும் சட்ட சபைத் தலைவர்களையும், குறிப்பாக வெளியிலே இருக்கிற பெரும் தலைவர்களையும் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் உள்பட எல்லாத் தலைவர்களையும் அழைத்து, அவர்களை எல்லாம் போட்டு ஒரு குழு அமைத்து, ஆராய்ந்து அதற்கு ஒரு முடிவு காண வேண்டும். பக்கத்திலே இருக்கிற இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்களுடனும், வங்காளம், உள்பட எல்லா இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்களுடனும் எடுகேஷனிஸ்ட்ஸ் போன்றவர்களோடும் பேசி, ஒரு பப்ளிக் ஒப்பினியன், ஒரு பொதுவான எண்ணத்தை உண்டாக்க வேண்டும். அவர்கள் எடுக்கும் முடிவை சென்ட்ரல் கவர்ன்மென்ட்டுக்கு அனுப்பினால் இதற்குத் தீர்வு காண முடியும். ஏனென்றால் எங்களுக்குத் தெரியும் உங்களுடைய திறமையை பற்றி---நன்றாகத் தெரியும், எனக்குத் தெரியும். உங்களுடைய திறமையைப்பற்றி. இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்தவர் என்று தான் நினைக்கிறேன். அல்லது, நிலைமை இப்படியே இருக்கட்டும் இந்தச் சிக்கல் நீடித்துக் கொண்டே இருக்க வேண்டும், அப்பொழுது தான் நமக்குச் சரியாக இருக்கும், பரவாயில்லை, நாமும் அரசியலே நடத்திக் கொண்டிருக்கலாம், அரசியலே நடத்துவதற்கு லாபமாக இருக்கும் என்று நினைத்தால், அது உங்களுடைய இஷ்டம். பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற நல்லெண்ணம் இருக்க வேண்டும். எங்களுடைய தலைவர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள், "அதிகாரத்தில் இருப்பவர் அல்லவா இதில் முன்வரவேண்டும். அதிகாரத்தில் இல்லாத ஒரு சாதாரணக் கட்சியை வைத்துக் கொண்டிருக்கிற நான். அதுவும் 50 பேர்களை சட்டமன்றத்தில் வைத்துக் கொண்டிருக்கிற நான் என்ன செய்ய முடியும், அதிகாரத்தில் இருக்கிற தாங்கள் தான் முதலில் முன்வந்து ஏதாவது பரிகாரம் தேடவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். அப்படி முதல் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்தபிறகு, நாங்கள் அதிலிருந்து நழுவி ஓடிவிட்டால், பிறகு எங்களைக் குற்றம் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த மொழிப் பிரச்னையைப்பற்றி காலையிலே எடுத்து நாங்கள் விளக்கியிருக்கிற திட்டங்களை யெல்லாம் அப்படியே நிறைவேற்றிக் கொடுப்பதாக எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் ஒப்புக்கொண்டால், அவரையே முதல் அமைச்சராக ஏற்றுக் கொள்வதற்கு எங்களுடைய கழகம் எப்பொழுதும் சம்மதிக்கிறது.

திரு. கே. விஜயகம் : நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் எப்படியாகிலும் 'னசட்டிராக்' செய்வார்கள் என்று எனக்குத் தெரியும். நான் அப்படிச் சொல்கிறேன் என்று அவர்கள் வருத்தப்படக் கூடாது, இப்படிப்பட்ட பிரச்சினையை யெல்லாம் நேரடியாக அணுகாமல், எப்படிச் சொன்னாலும், திரும்பிப் போய், அப்படிப் போய், இப்படிப் போய் பதில் சொல்வார்கள். உங்களுக்கு மேலே ஒருவர் இருக்கிறார் என்று (திரு. ராஜாஜி

[திரு. கே. விஜயகம்] [1968 சனவரி 23

படத்தைச் சுட்டிக்காட்டி) அவரை அல்லவா நாங்கள் சுட்டிக் காட்டினோம். அதைவிட்டு 'இங்கே இருக்கிறது' என்று சிலேட்டாக (தம் தலையைக் காட்டி) சுட்டிக் காட்டினார். கொஞ்ச நாட்கள் அரசியல் பழக்கம் உள்ளவர்களுக்கு இந்தச் சாமர்த்தியம் தானாகவே வந்துவிடும். இடத்தைப் பொறுத்தும் அந்தச் சாமர்த்தியம் வரும். நாங்களும் அந்த இடத்திற்கு வந்தால் அதைத்தான் சொல்வோம். இடத்தைப் பொறுத்து சாமர்த்தியமும் ஏற்படுகிறது. இந்தப் பிரச்னையில் தீர்வு காணவேண்டும் என்று முக்கிய கவனம் செலுத்தினால் தான் தீர்வு காண முடியும். ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்திருந்தால், நான் ஒன்று சொல்வேன். அப்பொழுது தான் பிரச்னைக்கு தீர்வு காண முடியும். நம் பக்கம் நமது நாட்டிலிருக்கிற நமது மக்கள் இருக்கிறார்கள், அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்குத் தயார், என்றால் தண்டித்துக் கொள்வதில்தான் இந்த நீலை கடைசியில் கொண்டு போய்விடும். you are indirectly making the situation worse and then trying to create cessation from the union of India அப்படித் தானே கொண்டுபோய்விடும் ? மறுத்து லாபம் இல்லை. ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒற்றுமையைப் பற்றி பேசுகிறார்கள். ஜயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் இவர்கள் பேசுவது பற்றி நல்லது என்று சொல்லிவிட்டார்கள் என்று சொன்னால், அதற்கு வழி வகை செய்யவேண்டாமா, அதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டாமா, அதை முதல் அமைச்சர் அவர்கள் ஆராயவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, எங்களுடைய திருத்த தீர்மானத்தை நான் வற்புறுத்துகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலையிலே இருந்து அவசரமாகக் கூட்டப்பட்ட சட்டசபை கூட்டத் தொடரில் இந்த பாஷைப் பிரச்னை பற்றி கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வர, முதல் அமைச்சர் அவர்கள் அரசினர் சார்பில் அதற்குத் திருத்தங்கள் கொண்டுவர, எங்கள் கட்சியின் சார்பில் நாங்களும் திருத்தப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறோம். இப்பொழுது இருக்கும்படியான பிரச்னை என்ன வென்றால், திடீரென்று ஒரு வார காலத்தில் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டி மிகவும் முக்கியமான ஒரு பிரச்னையை—பாஷை பிரச்னையை—விவாதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பாஷைப் பிரச்னை என்பது சாதாரண பிரச்னை அல்ல. ஒரே நாளில் விவாதித்து, ஒரே நாளில் தீர்மானம் போட்டு, தமிழக மக்களுக்கு இது தான் மொழிப் பிரச்சினைமீது தீர்மானம் என்று காட்ட வேண்டிய நிலை வருமானால், மிகவும் அவசரப்பட்டு செய்யக்கூடிய காரியமாக அது அமையும் என்பதைத் தான் நான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டமன்றத்தை இப்படி அவசர அவசரமாக கூட்டுவதை விட, சட்டமன்றத்தை கூட்டுவதற்கு முன்னால் எல்லாக் கட்சியினரையும் அழைத்து, ஆலோசனை செய்து அதிலிருந்து ஒரு முடிவுக்கு வந்து, அந்த முடிவின் அடிப்படையில் இந்த மன்றத்

1968 சனவரி 23] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

தின் முன்னால் ஒரு தீர்மானத்தை வைத்திருந்தால், அது நல்ல முறையில் அமைந்திருக்கும். சட்டமன்றங்களிலும் சரி, பாராளுமன்றத்திலும் சரி, மொழி பற்றிய தீர்மானம் வரும்போதெல்லாம் ஏற்கனவே ஒரு தீர்மானம் செய்து, எல்லாக் கட்சியினர்களையும் கூட்டி அழைத்து, தீர்மானம் செய்து, பிறகு ஒரு தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டுவருவது தான் முறையாக இருக்குமே தவிர, திடீரென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவது அவ்வளவு பொருத்தமல்ல. அவ்வளவு நல்லதுமல்ல. நமது நாட்டு மக்களுக்கு நல்ல காரியத்தைச் செய்து தருவதற்குத் தவறிவிட்டோம் என்று நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது ஒரு கொந்தளிப்பான் நிலைமை, கொந்தளிப்பான நிலைமைக்குக் காரணம் மொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது தான் என்று சர்க்கார் சார்பில் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே மாதிரி இங்கே கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏற்கனவே இருக்கும்படியான கொந்தளிப்பு நிலைமையை மேலும் குழப்பமடையச் செய்யக்கூடிய நிலைமையில் அரசின் தீர்மானம் அமைந்திருக்கிறதே தவிர, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இல்லை. அரசினர் கொடுத்துள்ள தீர்மானம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வகையில் அமையவில்லை என்பதை நான் வருத்தத்துடன் கான் சொல்லிக்கொள்கிறேன். நாட்டில் மொழிப் பிரச்சினை ஒரு பக்கம் இருந்தால் கூட, தேசிய ஒருமைப்பாடு, தேசத்தில் உணவு இல்லாமல் இருக்கிற பிரச்சினை இப்படி எத்தனையோ பல பிரச்சினைகள் இருந்தால்கூட, துரதிருஷ்டவசமாக மொழிப் பிரச்சினை நம் மக்களிடையே மனத்தாங்கலையும், மனக் கசப்பையும், மனதில் எத்தனையோ விதமான அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இப்பொழுது இருக்கும்படியான மொழிப் பிரச்சினையை வன்முறையிலே தீர்க்க முடியாது, அல்லது கிளர்ச்சியினால் தீர்க்க முடியாது. கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதால் தீர்க்க முடியாது. எல்லோரும் அமைதியாக ஆர அமர்ந்து யோசித்து ஒரு நல்ல முடிவை எடுத்து, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு தீர்வு கண்டால், அதை எல்லோரும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இப்பொழுது சட்டமன்றத்தை ஆளும் கட்சியினர் அவசரம் அவசரமாகக் கூட்டினர்கள். அவர்கள் கூப்பிட்டதற்கு இணங்க நாங்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கிறோம். சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வார்களோ, மாட்டார்களோ என்ற எண்ணத் தேவையே யில்லை. ஜனநாயக முறையில் எப்பொழுதெல்லாம் சட்டமன்றம் கூட்டப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அதில் கலந்துகொள்வோம். சட்ட மன்றத்தை 2, 3 வார நோட்டீஸ் கொடுத்தும் கூட்டலாம், அவசரமாக இருந்தால் ஒரு வார நோட்டீஸ் கொடுத்துக் கூட கூட்டலாம். அதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. திடீரென்று காலையிலே அரசினரின் தீர்மானத்தைக் கொண்டு வராமல், ஏற்கனவே அரசினர் தீர்மானத்தை வெளியிட்டிருந்தால், மக்கள் அதைப்பற்றி ஆராய்ந்து அபிப்பிராயத்தைச் சொல்வதற்கு அவகாசம் இருந்திருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவகாசம் இருந்திருக்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 சனவரி 23

கும். திடீரென்று இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவது நடைமுறைக்கு நல்லது அல்ல இப்படிப்பட்ட ஒரு முக்கியமானப் பிரச்னையில் பொதுமக்களுடைய கருத்து என்ன, நாட்டிலுள்ள மக்கள் போக்கு என்ன, இதர பகுதியில் இருக்கும்படியான மக்கள் கருத்து என்ன, என்று எல்லோரும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளித்திருக்க வேண்டும். அத்தகைய வாய்ப்பு இப்பொழுது இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதைப்பற்றிச் சாவகாசமாக சிந்திக்க, ஆராய அவகாசம் கிடையாது. ஒரு வாரத்திற்கு முன்பு அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னால் சர்க்காருடைய தீர்மானத்தை வெளியிட்டிருந்தால், யோசனை செய்து அதைப்பற்றிய கருத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். இவ்வளவு முக்கியமான ஒரு மொழிப் பிரச்னையைப் பற்றி இப்படி அவசர அவசரமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது, ஜனநாயக முறைக்கு ஏற்றது அல்ல என்பதைத் தான் நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசினர் தீர்மானத்தில் இருக்கும்படியான சில வாசகங்கள் நாட்டினுடைய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் அளவில், நாட்டினுடைய தேசிய ஒற்றுமைக்கு ஊனவைக்கும் அளவில் அமைந்திருக்கிறதே தவிர, தேசத்தின் ஒருமைப்பாட்டைக் காக்கின்ற அளவில் தீர்மான வாசகங்கள் அமையவில்லை. உணர்ச்சிகளைத் தூண்டி விடக்கூடாது. எந்தக் காரியத்திலும் மாணவர்கள் அரசியலிலே ஈடுபடுத்தக் கூடாது என்று ஒரு சர்வகட்சி ஏற்பாடு இருந்த போதிலும், மாணவர்கள் சொல்வதற்கு ஏற்பத்தான் நாங்கள் நடந்துகொள்வோம் என்ற முறையில் தீர்மானம் அமைந்திருக்கிறது. வேறு ஏதாவது கேட்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம், அதற்காக உடனே சட்டமன்றத்தைக் கூட்டி, அவசரமாக தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் என்ற முறை இருந்தால், பொது மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாம் நம்முடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டோம் என்ற நிலைமை தான் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது' என்று தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த மொழியையும் பலவந்தமாகத் திணிக்கக்கூடிய நிலைமை வருமானால், அதை நாங்களும் தான் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம். பலவந்தமாக எந்த மொழியையும் திணிக்க முடியாது, எந்த மொழியும் தானுகவே வளர வேண்டும். அதற்கேற்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

அடுத்து, 'மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும், தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும் தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது'

1968 சனவரி 23] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

என்று தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த சர்க்கார், இந்தச் சர்க்காருக்கு முன்னுல் இருந்த சர்க்கார், மும் மொழித் திட்டத்தைக் கொண்டுவரும்போது, ஒரு கட்சியின் சார் பாக மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வரவில்லே. சர்வகலா சாலே நிபுணர்களேயும், கல்வியில் தேர்ந்தவர்களேயும் இந்த மன்றத் தில் இருக்கக்கூடியவர்களேயும் ஆலோசனே கேட்டு, மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை யெல்லாம் பரிசீலனே செய்து நடைமுறையிலே இருக்கும் தொல்லேகளேக் கவனித்துச் செய்ய வேண்டும். அதைவிட்டு விட்டு, 'ஒன் ஃபைன் மார்னிங்' என்று சொல்வார்களே அம்மாதிரி திடீரென்று காலேயிலே தீர் மானத்தைக் கொடுத்து, நிறைவேற்றுவது முறையா என்று கேட் கிறேன். 'இந்தியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது.' என்று தீர்மானத்திலே போட்டு விடலாம், தீர்மானத்தையும் நிறை வேற்றலாம், சர்க்காருக்கு இருக்கும் தெம்பையும், பலத்தையும் வைத்துக் கொண்டு நிறைவேற்றலாம். அதற்கு ஒன்றும் தடங்கல் இருக்கவில்லே. நாம் இங்கே இந்தியை நீக்கிவிட வேண்டும் என்றால், வடக்கே இருக்கிறவர்கள், ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டால், இந்த அரசினரின் தீர்மானம் தேசத்தின் ஒருமைப்பாட்டை, ஐக்கியத்தைக் குலேக்க வழி தேடு கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். திராவிட மூன் னேற்றக் கழகம் முன்னுல் கைவிட்டிருந்த திட்டத்தைத்தான், இந்தத் தீர்மானத்தின் மூலம் அறிவித்திருக்கிறார்கள் என்று வருத்தத்துடன் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் ? என். சி. சி. ஆணேச் சொற்கள் இந்தியில் இருப்பது நீக்கப் பட வேண்டும் என்கிறார்கள். இதெல்லாம், ஒரு 'டிசிப்ளின்' ஒழுங்கு முறை கட்டுப்பாடு இவற்றிற்கு உட்பட வேண்டும். ஒழுக்கக் கேடான காரியத்தை நாம் செய்யக் கூடாது. ஆணேச் சொற்களே நீக்கிட வேண்டும். இல்லாவிட்டால் என். சி. சி. யையே கலேத்து விடுவோம் என்கிறார்கள். எல்லேயிலே தொல்லே ஏற்பட்டு இருக்கும் நேரத்தில், ராணுவத்தினர் இம்மாதிரி மொழிக் கிளர்ச்சியில் ஈடுபட்டால், நம் தேசம் எந்த நிலேக்குப் போகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே நாம் இந்தியை நீக்க வேண்டும் என்று சொல்வதை போல, அங்கே அவர் கள் ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்றால், ராணுவத்தின் நிலே என்ன, அவர்களுடைய கட்டுப்பாடு, ஒழுங்கு இவை யெல்லாம் சீர்கெட்டுப் போகாதா ? அப்படிப் போவதற்கு வழி செய்வதை நினேத்தால்தான் வருத்தமாக இருக்கிறது. அதை நான் வருத்தத் தோடு தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பி.ப. 5-30

இப்பொழுது அவையுன் இருக்கும் அரசினர் தீர்மானத்தைக் கொடுத்திருப்பதற்கு ஆட்சேபம் இல்லே. ஆனுல், அதன் பேரில் பொது மக்கள் அபிப்பிராயம் என்ன, படித்தவர்கள், கற்றவர்கள் கல்வித் தொடர்பு உள்ளவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை யெல்லாம் ஆராய்ந்து ஒரு இறுதி முடிவு எடுக்கப்பட்டால்தான் நல்லது. இவையெல்லாம் விவாகிக்கப்பட்டு, வரிசையாக எல்லாக் கட்சித் திருத்தங்களேயும் விவாதித்து, அந் திருத்தங்களின் பேரில் பொது மக்கள் அபிப்பிராயம் என்ன என்பதையெல்லாம் க்வனத்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 சனவரி 23

தில் எடுத்துக் கொண்டு, ஒரு இறுதி முடிவுக்கு வரக்கூடிய வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று மிக மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வினயகம் பேசும்போது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 'எங்கள் தீர்மானத்தை அப்படியே ஒத்துக் கொள்வதானால், திரு. சுப்பிரமணியம் ஏற்றுக்கொள்வார்கள் என்றால், அவர்களை முதல் அமைச்சராக்க நாங்கள் தயார்' என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இந்தத் தீர்மானத்திலே இருக்கக் கூடிய விஷயத்தைப் பார்த்தால், முதல் அமைச்சராகப் பதவி கொடுத்தால் கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நாட்டின் சுதந்திரத்திற் காக, ஒருமைப் பாட்டிற்காக, மக்களின் நல்வாழ்விற்காக தியாகங்கள் செய்து புடம் போட்டவர்கள் நாட்டின் பிரிவினைச் சக்திக்கு இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதைத் திட்டவட்ட மாகச் சொல்ல விரும்புகிறேன். இதைச் செய்ய, இல்லாவிட்டால் பிரிந்து போவோம் என்று செல்லும் மிரட்டல் வார்த்தைக்குப் பணிந்து, பதவிக்கு ஆசைப்பட்டுச் செய்பவர்கள் எங்கள் கட்சி யில் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்பு கிறேன். இதைப்போல பத்துப் பங்கு கொடுத்தாலும், மக்கள் நலத்திற்காகத் தியாகம் செய்வோமே தவிர, அந்த நலங்களை அழிக்க, மக்கள் ஒருமைப்பாட்டைக் குலைக்க, தேசப் பிரிவினைக் காக நாங்கள் ஒருநாளும் எதையும் செய்ய மாட்டோம். அதைத் தவிர்க்க எந்தத் தியாகத்தையும் நாங்கள் செய்யத் தயார் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, ஒரு மொழியை வைத்து, மாணவர்களை வைத்து, ஆட்சியை நடத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். முன்பு இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்த காலத்தில், 'எங்களுக் கும், மாணவர்களுக்கும் சம்பந்தம் இல்லை, வன்முறையில் ஈடுபட் டிருப்பவர்கள் காலிகள்' என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள் செய்த தியாகத்திற்கு, விடுமுறை விடத் தயார் என்கிறார்கள். இப்பொழுது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளலாம், ஆனால் அப்படி மாற்றிக் கொள்ளும் அபிப்பிராயம் மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் இருக்க வேண்டும். அன்றைக்குச் செய்யும் போது, 15 வருஷங்களுக்குப் பிறகு இந்தி வரவேண்டும் என்று அரசியல் சட்டத்திலே செய்தார்கள். வேண்டா பர்கள் வேரூன்றியதற்குக் காரணம் என்ன ? ஆங்கிலத்தைப் பலாத்காரமாகச் செய்து, அப்பொழுது ஒரு குறிப்பிட்ட இனத்த வர்கள் அதைப் படித்துவிட்டு எல்லா உத்தியோகங்களிலும் அமர்ந்து கொண்டார்கள். அப்பொழுதெல்லாம், வேண்டாம், வேண்டாம் என்று தள்ளிவிட்டு, நாம் பிற்போக்குச் சமூகமாகப் போய்விட்டோம். ஆகவே நாம் இன்றைக்குச் செய்யும் காரியம் நம்முடைய எதிர்கால சந்ததியார்களுக்குப் பாதகம் இல்லாமல், அவர்கள் நம்மைப் பழிக்காமல் இருக்கவேண்டும். ஆகவே, இப் பொழுது இருக்கும் நிலையில், அறவே நீக்கவேண்டும் என்று சொன் னால், பிற்காலத்தில் அதனால் பெரிய ஆபத்து இருக்கிறது என்ப தைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் கிணற்றுத் தவளைகளாக

1968 சனவரி 23] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

இருக்க வேண்டுமா ? தமிழகத்திலேயே எல்லோருக்கும் வாழ்க்கை வசதிகள் செய்ய முடியுமா ? இன்றைக்கு 10 லட்சம் மக்கள் வெளிப்பகுதிகளில் நாகப்பூரில், டெல்லியில், பம்பாயில் வேலை பார்க்கிறார்கள். அவர்களெல்லாம், தமிழ் மட்டுந்தான் படிக்க வேண்டும், ஆங்கிலம் மட்டும் தான் படிக்க வேண்டும் என்றால், அவர்களுக்கெல்லாம் இங்கேயே வாழ்க்கை வசதிகள் ஏற்படுமா என்பதையும் சற்று சிந்திக்க வேண்டும். இந்தியே கூடாது என்கிற நிலை ஏற்பட்டால், அங்கே இருப்பவர்கள் எதிர் நடவடிக்கை எடுத்தால், அதற்கான தீர்மானம் போட்டால், அங்குள்ள தமிழர்களெல்லாம் இங்கே திரும்பி வந்தால் அவர்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளும் சக்தி நமக்கு இருக்கிறதா? வேலை வாய்ப்புக் கொடுக்கும் சந்தர்ப்பம் இருக்கிறதா ? வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு நாட்டின் ஒருமைப்பாடு குலைந்து பல கஷ்டங்களும் ஏற்படும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சொல்லுகிறேன்,

" யாதும் ஊரே யாவரும் கேளிர்." என்று,

ஆகவே, எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதே நேரத்திலே,

'நாமார்க்கும் குடியல்லோம்'

என்று கூறியிருப்பதையும் மறக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மற்றதையும் சொல்ல முடியும்.

" நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்.
நரகத்தில் இடர்ப் படோம், நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம், பணிவோம் அல்லோம்,
இன்பமே எந்நாளும் துன்பம் இலீ."

ஆகவே ஒருமைப்பாட்டைக் குலைக்கும் வகையில் செய்யக் கூடாது. மக்களின் நல்வாழ்வை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏற்படக் கூடிய கசப்பைப் போக்க வேண்டும். எதையும் உணர்ச்சி வசத்தால் செய்யக் கூடாது. மொழிப் பிரச்சினை ஒரு சாதாரணப் பிரச்சினை அல்ல. அது மிகவும் சிக்கலான பிரச்சினை. சுலபமாகத் தீர்க்க முடியாது. ஆட்சிமொழிச் சட்டத்தை நிறைவேற்றினர்கள். இந்தி பேசாத மக்களுக்கு ஏற்படுகின்ற சங்கடங்களைத் தீர்க்க வேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதைத் தீர்க்கும் முறையில் பரிகாரம் காண வேண்டும். அதற்கு எத்தகைய ஒத்துழைப்பு வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். எந்த எந்த நல்ல காரியங்களில் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமோ அப்படிப்பட்ட நல்ல காரியங்களில் ஒத்துழைக்கத் தயார். அது எந்த சர்க்காராகயிருந்தாலும் சரி ஆதரவு கொடுக்கத் தயார் என்பதை வலியுறுத்திச் சொல்லத் தயாராகயிருக்கிறேன். இந்தப் பிரச்னையில் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதுபோல் இருக்கிறது. திரு. சுப்பிரமணியம் அவர்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 சனவரி 23

கள் ஒரு வழியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ரிடயர் ஆகிவிட்ட தாசில்தார் போலத்தான். வேறு முறையில் அணுகவேண்டும். அப்படி அணுகுவதற்கு திட்டமிருக்கிறதா என்றால் இல்லை. அந்தத் திட்டத்தை இல்லை என்றாலாவது பாதகம் இல்லை. இனிமேலாவது அதை நினைத்து, இனிமேலாவது அதை உணர்ந்து, அந்த வகையிலே கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். நான் சொல்லுவது இதுதான். இப்பொழுது கொண்டுவந்திருக்கும்படியான அரசினர் தீர்மானத்தைப் பொது மக்களுடைய அபிப்பிராயத்திற்கு, மக்களுடைய ஒரு நல்ல எண்ணத்திற்கு அனுப்பி, மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்கு ஒரு சரியான வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும். இதற்கென்று சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட பொறுக்குக் கமிட்டி என்ற முறையில் ஒரு கமிட்டி போட்டு, நாட்டு மக்களிடையே சென்று, அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொது மக்களுடைய அபிப்பிராயத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருத்தத்தை விடுகிற நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதையும் கலந்து விட்டால்தான் நலமாக இருக்கும். ஆகவே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதைக் கூறுவாரா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : என்னுடைய அபிப்பிராயத்தைத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இங்கே முன்மொழியப்பட்டிருக்கும் அரசினர் தீர்மானம், அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பல்வேறு கட்சிகளின் திருத்தங்கள், அரசினர் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தம் ஆகிய எல்லாவற்றின்மீதும், இன்க்ளுடிங் லீடர் ஆஃப் தி அப்போசிஷன்'ஸ் அமெண்ட்மென்ட்டின் மீதும் நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன். அதாவது மொழிப் பிரச்சினை சிக்கலான பிரச்சினை ஆகும். இந்தப் பிரச்சினை ஒரே நாளில் தீர்க்கப்பட முடியாத பிரச்சினை. இதுதான் என்னுடைய அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தை, திடீரென்று இப்பொழுது ஆளும் கட்சியில் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்களே அதுபோல் கொண்டுவந்து நிறைவேற்றும் நிலை எனக்கு இல்லை. ஏனென்றால், இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக அணுகிச் செய்யப்படவேண்டிய பிரச்சினையாகும்.

முன்பு ஒரு முறை முதல் அமைச்சர் அவர்கள், நேருஜி அவர்கள் கொடுத்த வாக்குறுதியை மொட்டிச் சொன்ன கருத்தைப் பத்திரிகையில் படித்ததை வைத்துச் சொல்ல விரும்புகிறேன். நேருஜி அவர்கள் கொடுத்த வாக்குறுதியைக் கொண்டு undi uted ஆக அப்படியே சட்டமாக வருமானால், அதை ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். நேருஜி சொன்ன அந்த வாக்குறுதி என்ன ? இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர்ந்து இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அளித்த வாக்குறுதி அப்படியே

1968 சனவரி 23] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

வருமானால் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதற்குப் பின் சட்டமும் தீர்மானமும் வந்திருக்கின்றன. அந்தத் தீர்மானத்தில் இருக்கும்படியான பிரச்சினை என்ன என்று பார்க்க வேண்டும். அந்தச் சட்டத்தை எப்படி அமல் செய்வது என்னும் படியான நிலையில் தீர்மானம் இருக்கிறது. ஆனால், பஸ்ஸில் கண்ட படி எழுதுவதினாலோ, பெரம்பூரிலே தீ வைப்பதினாலோ, போகும் படியான இடங்களிலே பயந்து கல்லூரிக்குப் போகமாட்டேன் என்று சொல்லுவதினாலோ, காலவரம்பின்றி கல்லூரி மூடப்பட்டுப் பதனாலோ பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இதையெல்லாம் ஆழ்ந்து ஒரு சூழ் நிலையில், நல்ல அமைதியானதொரு சூழ்நிலையில், எல்லோரும் கூடி, அமர்ந்துதான் தீர்மானம் செய்யவேண்மே தவிர, ஏதோ உணர்ச்சி வசப்பட்டோ, உணர்ச்சியைத் தட்டிக் கொடுத்தோ, ஒன்றை ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்வதிலோ ஒன்றுமில்லை. மதிப் பிற்குரிய அமைச்சர் அவர்கள் எல்லாம் கூட உணர்ச்சிவசப்பட்டுப் பேசும்படியான பேச்சுக்களை யெல்லாம் நிறுத்தவேண்டும். இது வருமானால் நாங்கள் ராஜினாமா செய்துவிட்டுப் போகிறோம் என்று பேசுவதிலே பயன் இல்லை. இதுதான் எங்களுடைய கொள்கை என்று ஒரு அமைச்சர் சொல்வது, வேறு ஒரு அமைச்சர் ஒரு விதமாகச் சொல்வது என்ற நிலை இருக்கலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் பணிவன்புடன் அவர் களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவேதான், இந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பதில் உணர்ச்சிவசப்படத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். வெறித்தனத்தில் இந்தி வேண்டாம் என்று சொன் னால், பங்களூரில் தமிழ் வேண்டாம் என்று நீ வைக்கிறார்கள். இங்கு இந்தி வேண்டாமென்றால், பம்பாயில் தமிழர்கள் இருக்கும்படி யான இடங்களில் தவறு நடந்துகொண்டிருக்கிறது. கல்கத்தாவில் தமிழர் இருக்கும்படியான இடங்களில் ஒன்றும் நடைபெறவில்லை. ஆகவே, நமக்குப் பொறுப்பு இல்லையா? மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும்படியான நாம் சில சமயங்களில் சில தியாகங்களைச் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுமானால், செய்யத்தான் வேண்டும். இதிலே நாம் பொறுமையாக இருக்கவேண்டும், எல்லையற்ற பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும். மக்களுடைய பிரச்சினை யை அணுகும்போது நமக்கு நலமிகு நிலை இருக்கவேண்டும்.

இப்பொழுது கொண்டுவந்திருக்கும்படியான அரசினர் தீர் மானத்தையும், அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந் திருக்கும்படியான திருத்தங்களையும் பார்க்கும்போது, இந்தத் தீர்மானத்திலே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. சந்தேகம் என்னவென்றால்—பிரிந்து போகவேண்டும் என்ற கொள்கையை விட்டுவிட்டோம், நாடு சேர்ந்து ஒருமையாக இருக்கவேண்டும் என்று அவர்கள் முன்னால் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது இருக்கும்படியான தீர்மானம் எதைக் குறிப்பிடுகிறது என்றால், தெள்ளத் தெளிவாக எதைப் புகுத்துகிறது என்றால், நாங்கள் பழைய கொள்கையை விடவில்லை என்று குறிப்பிடுவதைப் போல் சந்தேகத்தை அளிக்கிறது. பி.டபிள்யு.டி. அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன் ஒரு கூட்டத்திலே பேசியபோது ஒன்று

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1963 சனவரி 23

சொன்னார்கள். "காங்கிரஸ்காரர்களின் முகத்திரை 23-ந் தேதி கிழிக்கப்படும்" என்று சொன்னார்கள். மிகப் பணிவோடு அவர்களுக்கு நான் சொல்லுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் திரைதான் இப்பொழுது கிழிக்கப்பட்டிருக்கிறது என்று தீர்மானத்தைப் பார்க்கும்போது, அதிலுள்ள கருத்தைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றாலும், மத்திய சர்க்காரோடு போராட்டம், எதற்கும் தயாராக இருக்கிறோம் என்ற நிலையெல்லாம் அந்தத் தீர்மானத்தில் மறைமுகமாக இருப்பதைப் பார்க்கிறோம். என்ன என்ன விபரீதங்களையெல்லாம் செய்யப்போகிறோம் என்று அதில் குறிப்பிடவில்லையென்றாலும், மறைமுகமாக இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலையில் . . . (திரு. டி. எஸ். ஆதிமூலம் : ப்ரசிடென்ஸ் சூல் - - - அதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலையில் நான் கொடுத்திருக்கும் சாதாரண திருத்தத்தை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்றால் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

'and on such consideration the Assembly views with grave concern the outbreak of language agitation in the various parts of the country undermining the very unity and integrity of the country and setting at naught the democratic processes to which we as a nation are committed in the solution of our national problems and therefore the Assembly calls upon the Government of India to constitute a high-level committee including representatives of all political parties, to consider the problems relating to the Union Official Language, and particularly to formulate proposals to set at rest the apprehensions in the minds of the non-Hindi people with regard to the imposition of Hindi and the disadvantages which the non-Hindi people are likely to suffer by the implementation of the language resolution passed recently by the Parliament in regard to recruitment to Union Services.'

இதுதான் என்னுடைய திருத்தமாகும். இந்தத் திருத்தத்தைச் சர்க்கார் தரப்பில் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்தத் திருத்தத்தின் வாசகம் ஆங்கிலத்தில் இருப்பதைக் குறித்து மதிப்பிற்குரிய திரு. ம. பொ. சி. அவர்கள் பேசும்போது, தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிற நிலையில் ஆங்கிலத்தில் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்களே என்று சொன்னார்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது இதுதான். கவர்ன்மெண்ட் அப் இந்தியாவிற்குத் தமிழ் தெரியாது. ஆங்கிலத்தில் போட்டால்தான் அவர்களுக்குத் தெரியும். அதனால் நான் ஆங்கிலத்தில் திருத்தம் கொடுக்கப்பட்டது. தமிழில் போட்டு அதை மொழிபெயர்ப்புச் செய்வதைவிட, நேரடியாக ஆங்கிலத்திலேயே கொடுத்துவிட்டால் மத்திய சர்க்காருக்கு இதன் விவரம் தெரியும். தெரியவேண்டும் என்ற நிலையிலேதான் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டது. இது வேண்டாம் அது வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அவது ? தமிழ் தெரிந்தவர்கள் மூன்று கோடி பேர்கள்தான்.

1968 சனவரி 23]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசில் உள்ளவர்களுக்கு இந்தி கூடத் தெரியும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர்களுக்கு இந்தி கூடத் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சர்க்காருடைய பொறுப்பு. ஆங்கில வாசகத்தையும், அத்துடன் இந்தி வாசகமாக மொழி பெயர்த்து அதையும், இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அனுப்பிவிடலாம். இப்பொழுது புரியும்படியான வகையிலே என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தத்தில் நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால்—இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலையில், அரசினருடைய இந்தத் தீர்மானத்தையும், அதற்கு அரசினர் சார்பில் கொடுத்திருக்கும் திருத்தங்களையும் சேர்த்துப் பொது மக்களுடைய அபிப்பிராயத்திற்கு விட்டு, பொதுமக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று அவர்களுடைய கருத்தைத் தெரிந்து பின்னர் முடிவு செய்துகொள்ளலாம். இவ்வளவு அவசரம் இல்லாமல், இவ்வளவு ஆத்திரப்படாமல், என்ன என்னவோ காரியத்திற்காக இல்லாமல், பின்னர் சட்டசபை கூட இருக்கும்படியான நிலையில், திட்டவட்டமாக முடிவு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்தில் என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையின் தொடக்கத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பேரவையைக் கூட்டிய முறையில் ஏதோ குற்றங்குறை இருப்பதுபோலவும். ஏதோ அவசரமாய்ச் செய்தது போலவும் அவர்கள் சொன்னார்கள். எனவே, நான் இந்தப் பேரவைக்கு அறிவிக்கவேண்டியது ஒன்று இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர், இந்திய ஜனாதிபதி அவர்களுக்கும், கவர்னர் அவர்களுக்கும் இக் கூட்டம் பற்றிக் கடிதம் எழுதியுள்ளார். அக் கடிதத்திற்கு ஆளுநர் அவர்கள் விடை எழுதி, அந்த விடையின் சுவடு ஒன்றை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர் அவர்களுடைய கடிதத்திற்கு அனுப்பப்பட்ட விடை பின்வருமாறு :—

'The Governor has received a copy of your letter, dated 18th January 1968, addressed to the President of India, in regard to the summoning of the Assembly on 23rd January. Apparently you are under the impression that the Governor has summoned the Assembly under Article 174 of the Constitution. I am directed to correct your impression at once and to say that since the Assembly has not yet been prorogued after the last session, it is within the powers of the Speaker to summon the Assembly.

I hope I have made the position clear to you.'

இது கவர்னர் அவர்கள் எழுதியது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: பேரவையை ஏன் கூட்டவேண்டும், ஏன் கூட்டக் கூடாது என்பதைக் குறித்துத் தங்களுக்குள்ள சக்தியையோ உரிமைகளையோ நான் கேள்வி கேட்கவில்லை.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1968 சனவரி 23

இவ்வளவு அவசரமாகக் கூட்டவேண்டும் என்பது இல்லையே என்றுதான் சொன்னேன். பேரவையை நீங்கள் ஏன் 'ப்ரோரோக்' பண்ணவில்லை என்று நான் கேட்கவில்லை. சபாநாயகர் செய்தது தவறு என்றும் நான் சொல்லவில்லை. பேரவையைத் தாங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் கூட்டலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருத்தம் கொண்டுவரவேண்டியது இருந்தால் பேரவையின் அனுமதியுடன் கொண்டுவரலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத் தீர்மானத்தில் கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்துகொள்ள பேரவையின் அனுமதியை நான் கோருகிறேன் :—

"மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதியையும், சங்கடத்தையும், புதிய பளுவையும் உண்டாக்குகிறபடியால், அந்தத் தீர்மானம் அமுலாக்கப்படக் கூடாது என்பதில் பல அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்து தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசு உடனடியாக அந்தத் தீர்மானத்தை நீக்கி வைத்து இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடமும், பளுவும் ஏற்படாத ஒரு முறையை வகுக்கவேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது."

என்ற பகுதியுடன் கீழ்க்கண்டவற்றை இணைக்கவேண்டும் :—

"மொழிப் பிரச்சினைப்பற்றி ஆய்ந்தறியவும், மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் விளையும் சிக்கை அகற்றும் வழி காணவும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு மேல்மட்ட மாநாட்டை இந்தியப் பேரரசு கூட்ட வேண்டும் என்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருத்தத் தீர்மானத்துடன் இந்தத் திருத்தத்தையும் இணைத்துக் கொள்ளலாமா என்பதைக் குறித்து பேரவையின் அனுமதி கோரப்படுகிறது.

பேரவையின் அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத் தீர்மானத்தோடு புதிதாக பின்வரும் திருத்தத்தையும் இணைத்துக்கொள்ள பேரவையின் அனுமதியைக் கோருகிறேன் :—

"தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான தரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது."

1968 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத் திருத்தத்தையும் மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய திருத்தத் தீர்மானத்துடன் இணைத்துக்கொள்ள பேரவையின் அனுமதி கோரப்படுகிறது.

பேரவையின் அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, இன்றைய தினம் இதுவரையில் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டு தத்தமது கருத்துக்களை மிகத் தெளிவான முறையில் விளக்கியிருப்பதைக் கேட்டு, நான் மிகுந்த பலன் அடைந்திருக்கிறேன் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதிலும், மொழிப் பிரச்சினையிலே தொடங்கிய விவாதம் வேறு பல பிரச்சினைகளையெல்லாம் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. நமது நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, "எல்லையற்ற பொறுமை நமக்கு வேண்டும்" என்ற முறையில் கூறினார்கள். எல்லையற்ற பொறுமை மட்டுமல்ல; என்னைப் பொறுத்தவரையில் தங்குதடையற்ற நட்பையும் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். இந்தத் திருத்தத் தீர்மானத்தின் மூலம் நாங்கள் முன்னாலே கொண்டிருந்த பிரிவினைத் திட்டத்தை மீண்டும் மறைமுகமாகப் புகுத்த இருக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துச் சொன்னார். இதை விவாதத்திற்காகப் பயன்படுத்தியிருப்பார்களேயானால், அவருடைய சாமர்த்தியத்தைப் பாராட்டுகின்றேன். உண்மையில் அவர் நம்புவதாக இருந்தால் அவருடைய தவறான கருத்தைத் திருத்த விரும்புகின்றேன். காரணம், எங்களுக்கு உள்ளபடியே பிரிவினையிலே நாட்டம் இருக்குமானால், இந்தக் குழப்பம் வளர்வதற்குத்தான் ஆக்கம் கொடுத்துக் கொண்டிருப்போம்; இந்தக் குழப்பத்தைத் தீர்ப்பதற்கு முன் வந்திருக்க மாட்டோம். நண்பர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் எடுத்துச் சொன்னபடி, 'நாம் பிரிவினை கேட்க வேண்டியதில்லை; அவர்களே பிரித்துவிடுவார்கள்' என்ற நிலை வட நாட்டில் இருந்து வருகிறது. அவர் வட நாட்டிற்குச் சென்று பார்த்து வந்ததாகக் கூறினார். இப்படிப்பட்ட நேரத்தில் நாடு பிரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நான் இந்தக் காரியத்தைச் செய்கிறேன் என்று கருதுவார்களானால், உள்ளபடி நாடு பிரிவினையாவதற்காக, இந்தக் குழப்பத்தை வளரச் செய்வதில் தான் அக்கறை காட்டியிருப்பேனேயன்றி, குழப்பங்களைத் தீர்ப்பதில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. அவர்கள் பேசும்போது, 'நாடு பிரிவினையாவதை காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் விட மாட்டோம். காங்கிரஸ்காரர்கள் இதைத் தடுத்தே தீருவார்கள்' என்று கூறினார்கள். நானே அந்த நிலைக்கு வராதபோது, 'வந்தால் தடுத்து நிறுத்துவோம், வந்தால் தடுத்து நிறுத்துவோம்' என்று கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஒன்று நினைவிற்கு வருகிறது. ஓர் ஊரிலே, கால் இழந்த ஒருவன் 'டோல் கேட்'டிலே இருந்த இடத்திலே உட்கார்ந்துகொண்டு, 'வந்தால் விடமாட்டேன், வந்தால் விடமாட்டேன்' என்று அவ்வழியே

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

செல்லும் வண்டிக்காரர்களைப் பார்த்துக் கூறிக் கொண்டு இருந்தான் என்று சொல்வார்கள். அதைப்போல், 'வந்தால் விடமாட்டோம்' என்பது நகைப்பிற்குத்தான் இடமாக இருக்கிறது. எங்களுக்குப் பிரிவினைக் கிளர்ச்சியை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை; எந்த இடத்திலேயும் அந்த எண்ணம் எனக்கு இல்லை. இந்திய அரசு மேற்கொள்ளுகிற மொழிக் கொள்கை நாட்டுப் பிரிவினைக்கு வழி கோலும் என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறேனே தவிர, நான் இந்தப் பிரிவினையை ஆதரிப்பதாக இருந்தால், அது வரலாற்றுப் புத்தகத்தில் அச்சேறும்படி ஒரே வரியில் செய்யலாம். நான் இந்த மாமன்றத்தைக் கூட்டி, "இன்று முதல் தமிழகம் தனிநாடாக ஆகிறது, தமிழ் வாழ்க" என்று சொல்லிவிட்டு வெளியேறலாம். (பலத்த ஆரவாரம்) அதிலிருந்து நான் அரசியல் வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்தப் படலாம், பொது வாழ்க்கையிலிருந்தும் வெளியேற்றப்படலாம். ஆனால் சரித்திரத்தில் என் பெயர் இடம் பெற்றுவிடும். ஆனால், அப்படிப்பட்ட கட்டத்தில் நாம் இல்லை. நாம் என்கிறபோது, என்னையும் இணைத்துக்கொண்டுதான் இதைச் சொல்கின்றேன். ஆகவே, இது பிரிவினைக்காகப் பேசப்படுவது என்று அவர்கள் குற்றம் சாட்டத் தேவையில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பிரிவினையைத் தடுக்க ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான தோழர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லுகிறபோதுதான் சில காரணங்களைக் காட்ட வேண்டியிருக்கிறது.

நான் பிரிவினைப் பிரசாரம் செய்த நேரத்தில், அது மக்கள் செவியில் விழக்கூடாது என்று நீங்கள் பலமான எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தீர்கள். அதில் நீங்கள் வெற்றி காணவில்லை. நான் பிரிவினையைப்பற்றி விளக்கிக் கொண்டிருந்த நேரத்தில் நாளுக்கு நாள் எங்களுக்கு ஆதரவு பெருகி வந்தது. அதன் காரணமாக, இந்தியப் பேரரசு இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தம் செய்தது. லோக் சபையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. என். சாப்ரு அவர்களும், நாகபுரியிலிருந்து வந்த திரு. ஏ. டி. மணி அவர்களும் ராஜ்யசபையில் பேசிய பேச்சு கனம் எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரியும். 'ஒருவருடைய பேச்சுக்காக இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டது இதுதான் முதல் முறை' என்று கூறியுள்ளார். இது எங்கள் சாமர்த்தியத்திற்கு அடையாளம் என்றோ, அவர்களது திறமைக் குறைவுக்கு அடையாளம் என்றோ வரவில்லை. பிரிவினைப் பேச்சு மக்களுடைய செவியில் விழக்கூடாது என்று அரசியல் சட்டத்தைத் திருத்தி விட்டீர்கள். ஆனால் அறிவு பூர்வமான முறையில் மக்களை உங்கள் பக்கம் இழுக்கத் தவறிவிட்டீர்கள் (சிரிப்பு). அது என்னுடைய சாமர்த்தியத்திற்கு அடையாளம் என்று நான் கொள்ளவில்லை. நாம் எல்லாம் ஒருவருக்கொருவர் நெருங்கிய நண்பர்கள். நாங்கள் பிரிவினைப் பிரசாரம் செய்துகொண்டிருந்த நேரத்தில் 'நாங்கள் கூறுவது நியாயம்' என்று நாட்டு மக்களில்

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

ஒரு பகுதியினர் உணர்ந்தனர். நீங்கள் எதிர்த்த நேரத்தில், 'இது நியாயம் அல்ல' என்று கண்டார்கள். ஆகையால் எங்கள் பிரசாரத்திற்கு வலிவும், உங்களுக்கு வலிவற்ற தன்மையும் கொடுத்தது. அது உங்கள் திறமைக் குறைவு என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையில், அவரவரைப்பற்றி ஒரு மனமயக்கம் வரும். நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், மனமாச்சர்யம் எதுவுமின்றி, மிகக் கண்ணியமான முறையில் நாம் நடத்திக்கொண்டு வருகின்றோம். கொஞ்சம் கேலியாகப் பேசினாலும்கூட, ஒருவருக்கொருவர் சிரித்து மகிழுவோமே தவிர, ஆத்திரப்பட்டுக்கொள்வதில்லை. நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசியதைக் கேட்டேன். அவர்கள் பேசும்போது, 'பெர்னர்ட்ஷாவே ஆங்கில மொழியைப் படிக்கவில்லை' என்று கூறினர். பெர்னட்ஷா ஆங்கிலேயர் அல்ல; அவர் ஐரிஷ்காரர். அவர் தமது நாடகத்தில், ஆங்கிலேயர்களைக் கேலி செய்வதையே பொழுதுபோக்காக வைத்திருந்தார். 'அவரே வெறுத்துவிட்ட ஆங்கிலத்தை' என்று சொல்லாமல் எங்களுடைய கட்சி வெறுக்கிறது என்று நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் சொல்லியிருக்கலாம். எப்படியும் அவர் தங்களுடைய நிலையை திட்டவட்டமான வகையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆனால் நண்பர் திரு. கருத்திருமன் அப்படிச் சொல்ல முடியாமல் இருப்பது, அவருக்கே உள்ள சங்கடம் என்ன என்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது. நண்பர் திரு. கருத்திருமன் சொல்லிக் கொண்டதெல்லாம், அவர் சொன்ன வாசகத்தையே எழுதி வைத்துக்கொண்டிருக்கிறேன், "ஏன் சட்டப் போவையை மிக அவசரமாகக் கூட்டினீர்கள்? கற்றவர்களும், பொதுமக்களும் என்ன கருதுகிறார்கள் என்று அறிவோம்" என்றார். நீங்கள் எல்லாம் பொதுமக்களுடைய பிரதிநிதிகள்—மக்களின் கருத்தை எடுத்துத் தெரிவிப்பீர்கள் என்று அழைத்திருக்கிறேன். நண்பர் திரு. கருத்திருமன் அவர்களிடத்தில் நான் கேட்டுவிட்டு, "உங்கள் கருத்து இருக்கட்டும்; கற்றவர்களிடம் கொஞ்சம் கேட்டு வருகிறேன்" என்றால் அது அவருக்கே இழிவைத் தரும். நீங்கள் எல்லாம் கற்றவர்கள் இல்லையா? தனியாகப் பொதுமக்களுடைய அபிப்பிராயத்திற்கு அனுப்ப வேண்டுமென்ற நிலைமை இதில் ஒன்றும் இல்லை.

மொழிப்பிரச்சினை 1937-லிருந்து, 1967-ம் ஆண்டு வரையில் ஒவ்வொரு வடிவிலேயும், ஒவ்வொரு கோணத்திலேயும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. இதைப்பற்றிய எல்லா பூனைகளும் எல்லோருக்கும் தெரியும். எல்லா நிலைமைகளையும் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். புதிதாக யாரும் புதிய நிலைமைகளைத் தெரிந்து 6—00
கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அந்த அளவுக்கு இந்தப் பிரச்சினை புரிந்து இருக்கிறது. ஆகையால் பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தை விடவேண்டும் என்ற கருத்துக்கு இணங்க முடியாத நிலைமையில் நான் இருப்பதற்கு வருந்துகிறேன். அவர்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 ஜனவரி 23

கேட்டு ஒத்துக்கொள்ள முடியாத நிலைமை வந்ததே என்று வருந்து கிறேன். அவரது கருத்தை நான் ஒத்துக்கொள்ள மறுக்கிறேன் என்று சொல்ல முடியாது. அவரது தீர்மானத்தில் உள்ள மிக முக்கியமான கருத்தை நான் என்னுடைய திருத்தத் தீர்மானத் திலேயே இணைத்துக்கொண்டிருப்பதில் இருந்து அவருக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்பதில் நான், தயக்கம் காட்டவில்லை என்பது தெரியும். ஆனால் பிரச்சினையை ஒத்திப்போட வேண்டும் என்ப தற்கு நான் இணங்குவதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். மற்ற பல உறுப்பினர் களும் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மெம்பர்கள் 'ஒருமைப்பாடு முக்கியமா? மொழிப் பிரச்சினை முக்கியமா?' என்று கேட்டார்கள், அதைத்தான் நானும் திருப்பித் திருப்பிக் கேட்கிறேன். பார்க்கிற உங்களை எல்லாம் கேட்கிறேன். வருகிற மக்களை எல்லாம் கேட்கிறேன். என்னுடைய குரல் நெடுந் தூரம் வரைக்கும் எட்டும் என்றால் டெல்லியில் உள்ளவர்களை எல்லாம் கேட்கிறேன். தேச ஒருமைப்பாடு முக்கியமா ? மொழி முக்கியமா ? தேச ஒருமைப்பாடுதான் முக்கியம் என்றால் இவ்வளவு மனக்கிலேசத்தை உண்டாக்குகின்ற மொழிப் பிரச்சினையை ஏன் கிளப்பினீர்கள் ? அந்த மொழிப் பிரச்சினையை கிடங்கில் போட்டுவையுங்கள், பின்னால் பார்த்துக் கொள்ளுங்கள், ஒரு அமைதியான சூழ்நிலையில் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துக்கொள்ளலாம் என்று கனம் ராஜாஜி அவர்கள் சொன்னார்களே, ஏன் நீங்கள் அதைக் கேட்கவில்லை? உண்மை யிலேயே ஒருமைப்பாடு முக்கியம் என்று நீங்கள் கருதுவீர் களானால் கனடா நாட்டில் உள்ளவர்களைப் பார்க்க வேண்டும். பிரஞ்சு மொழி பேசுகின்ற மக்களும், ஆங்கில மொழிபேசுகின்ற மக்களும் இன்று அல்ல, நேற்று அல்ல, கடந்த 300 ஆண்டுகளாக அங்கே சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே நிர்வாகத்தின்கீழ் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அந்த நாட்டில் க்யூபெக் பகுதியில் உள்ளவர்கள் மட்டுந்தான் பிரஞ்சு மொழி பேசுகின்றார்கள். மற்ற எல்லா இடங் களிலும் ஆங்கில மொழி பேசுகின்ற மக்கள் தான் மிக அதிகமாக இருக்கிறார்கள். 150 ஆண்டுகளுக்கு மேல் ஒரே நிர்வாகத்தின் கீழ் பிரஞ்சு மொழி பேசுகின்றவர்களும், ஆங்கிலமொழி பேசுகின்றவர் களும் இருந்து வந்திருக்கிறபோது இன்றைக்கு ஆங்கில மொழி பேசுகின்றவர்கள், பிரெஞ்சு மொழி பேசுகின்றவர்களைப் புறக் கணிக்கிறார்கள், ஆதிக்கம் செலுத்த முன் வருகிறார்கள் என்கிற போது அங்கே மொழிக் கிளர்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக அந்தச் சர்க்கார் என்ன செய்தது ? உடனே ஒரு ராயல் கமிஷனை நிறுவி, அந்த ராயல் கமிஷனும் பிரஞ்சு மொழி, ஆங்கில மொழி ஆகிய இரண்டு மொழிகளுக்குமே சமஉரிமை தரப்படவேண்டும், சம அந்தஸ்து தரப்படவேண்டும் என்பதாகத் தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்வோமானால், நீங்களும் தெரிந்துகொள்வீர்களானால் தேச ஒருமைப்பாடுதான் தேவை என்பதை நீங்கள் மனப்பூர்வமாக நம்பினால் விட்டுக்

1968 சனவரி 23] [திரு. சி. என்: அண்ணாதுரை]

கொடுக்கும் மனப்பான்மை வரவேண்டாமா? அதைத்தான் நானும் சொல்கிறேன் என்று நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் சொல்வார்கள். கொஞ்சம் விட்டுக் கொடுக்கலாம். விட்டுக் கொடுப்பது நாமேதானே? தியாகம் செய்யவேண்டும் என்பது நமக்கு மட்டும் தானே? எல்லாக் காலத்துக்கும் நாம் விட்டுக் கொடுத்து வந்திருக்கிறோமே, மற்றவர்கள் எதையாவது விட்டுக் கொடுத்திருக்கிறார்களா? நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். தேச ஒருமைப்பாட்டுக்காக நாம் இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும், கொஞ்சம் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையுடன், என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லலாம். சரி, நாம் விட்டுக் கொடுக்கலாம், அவர்கள் விட்டுக் கொடுப்பது என்ன? தேச ஒருமைப்பாட்டுக்காக அந்த மக்கள் செய்கிற தியாகம் என்ன? ஏற்கிற கஷ்டம் என்ன? இழந்துவிட்ட நன்மை என்ன? தேச ஒருமைப்பாட்டுக்காக நாம் பொறுமையுடன் விட்டுக்கொடுக்க, விட்டுக்கொடுக்க அவர்கள் செய்துகொண்டு போகிற காரியங்கள் என்ன? நம் மீது இந்தியைத் திணிக்கிற துணிவைத்தான் பெற்றார்கள், நாம் எந்த அளவுக்கு தொடர்ந்து விட்டுக்கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை காங்கிரஸ் வரலாற்றைப் பார்த்தாலும் சரி, மற்ற மற்ற கட்சி வரலாறுகளை எடுத்துப் பார்த்தாலும் சரி நன்றாகத் தெரியும். நாம் எவ்வளவோ தியாகங்களைச் செய்து வந்திருக்கிறோம். நம்முடைய சுதந்திரங்களை எல்லாம், வாழ்வு, தாழ்வுகளை எல்லாம் இழக்கத் தயாராய் இருந்து வந்திருக்கிறோம். இரும்பாலைகளை வட நாட்டிலே பிலாயிலும், துர்க்காபூரிலும், ரூர்கேலாவிலும் ஆரம்பித்தார்கள். அதுவும் நம்முடையது தானே என்று நம்மை நாமே சமாதானம் செய்து கொண்டோம். நம்முடைய சேலம் இரும்பாலைத் திட்டம் தூங்கிக்கொண்டிருப்பதை நாம் உணராதவர்கள் அல்ல. பெரும் பெரும் தொழிற் சாலைகளை திடீர், திடீர் என்று அந்தப் பகுதிகளிலேயே ஆரம்பித்துக்கொண்டார்கள். இருந்தும் அந்தப் பகுதியும் நம்முடைய தேசத்தைச் சேர்ந்ததுதானே என்று நம்மையே நாம் ஆறுதல் செய்து கொண்டோம். கான்ட்லா துறைமுகத்தை ஏற்படுத்திக் கொண்டு அதை சுங்கத்தீர்வை இல்லாத துறைமுகம் என்று அறிவித்துக் கொண்டார்கள். நம்முடைய தூத்துக்குடி துறைமுகம், சேதுசமுத்திரத் திட்டம் ஆகியவை ஒன்றுக இணைக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும் என்று நாமும் 25 வருடங்களாகக் கோரி வருகிறோம். இருந்தும் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதைச் செயலாற்ற முடியாத பொறுமையோடு நாம் இருந்து கொண்டிருக்கிறோம். எதற்கும் ஓர் எல்லை உண்டு. பொறுமைக்குத்தான் எல்லை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற எல்லாவற்றுக்கும் எல்லை உண்டு. எல்லை கடவாமல் நாமும் பொறுமையோடுதான் இருந்து கொண்டு வருகிறோம். பொறுமையின் கடைசி எல்லைக்கே, அந்த எல்லையின் விளிம்புக்கே நாம் வந்து விட்டோம் என்பதை எப்படித் தெரிவிப்பது? இதுவரை நம் முடைய துயரத்தையும், துன்பத்தையும், மனக் கொதிப்பையும் உணராமல் இருந்து கொண்டிருக்கிற அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் உணர்த்த வேண்டும் என்பதற்காகத்தான்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

மும்மொழித் திட்டத்தை இருமொழித் திட்டம் என்று மாற்றுகிற முறையில், இந்தி அகற்றப்படும் என்ற முறையில் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

காலியில் காங்கிரஸ் கட்சியில் இருந்து பேசியவர்கள், குறிப்பாக முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் 'நீ வேறொக்கு ஒரு பேச்சுப் பேசுகிறாய்? முன்னாலே மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டாய், இப்போது மும்மொழித் திட்டத்தை எதிர்க்கிறாய், இந்தி வேண்டாம் என்கிறாய்' என்பதாகச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவர்களுக்கு இருக்கிற நோக்கம் எல்லாம் 'நான் ஒரு நிலையான கொள்கையைக் கொண்டவன் அல்ல, திடமான உறுதி படைத்தவன் அல்ல, எந்த எந்த நேரத்தில் எதை எதைப் பேசினால் சாதகமோ அதை அதைப் பேசுகின்றவன்' என்பதாகப் பொது மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும் என்பதுதான். நான் கடந்த மூப்பத்தைந்து வருடங்களாகப் பொது மக்களிடத்தில் பழகி வருகிறேன். இனிமேல் இவர்களுடைய நற்சாட்சிப் பத்திரத்தை—இவன் உறுதியாக இருப்பவன்தான்—என்பதான அத்தாட்சியைப் பெற்றுப் போகவேண்டும் என்பதில்லை. 'மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக நீ சம்மதித்ததோடு அல்ல, அதற்குச் சம்மதித்துக் கையொப்பமும் போட்டுள்ளாய்' என்பதாக இந்த மாமன்றத்திலேயே முன்பு என்மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

திரு. பூவராகன் அவர்கள் 'மும்மொழித் திட்டத்தை நீங்கள் தான் ஏற்றுக் கொண்டீர்களே' என்று கேட்டபோது திரு. கருத்திருமன் அவர்களும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவருக்கும் கூட விந்தையாக இருந்திருக்கும். இந்த அவையில் 1958-ஆம் வருடம், பிப்ரவரி மாதம் 28-ம் தேதி உரையாற்றிய திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் 'மும்மொழித் திட்டத்தை ஒத்துக் கொண்டுவிட்டு, கையெழுத்தும் போட்டுவிட்டு வெளியே வந்து வேறுவிதமாகச் சொல்கிறீர்களே?' என்று குற்றம் சாட்டினார்கள்

அதற்கு நான். 'அதிலே கையெழுத்துப் போடப்பட்டது என்று சொல்வது தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டேன்.

மீட்டும் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் 'அந்தக் கூட்டத்திற்கு யார் யாரெல்லாம் வந்திருந்தார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகக் கையெழுத்து வாங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்' என்று குறிப்பிட்டார்கள்.

நான் உடனே, 'அவ்விதமும் கையெழுத்து வாங்கவில்லை என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுச் சொன்னேன்.

என்னுடைய நண்பர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் "நான் எந்தக் கூட்டத்திலும் கையெழுத்துப் போட்டதாகச் சொல்லவில்லை" என்று விளக்கம் தந்தார்கள்.

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

உடனே நான் எழுந்திருந்து, 'நிதி அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையில் வந்தது. பத்திரிகையிலே வந்தது மட்டுமல்ல, நேற்றைய தினம் பேசிய கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு இப்போது இல்லை என்று சொல்கிறாரே என்று ஆழ்ந்த வருத்தத்தோடு கேட்டார்கள்' என்பதை அவர் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

உடனே திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இந்த மாமன்றத்திலேயே எழுந்திருந்து, 'திருத்திக்கொண்டேன் என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி தான் செய்த தவறைத் திருத்திக்கொண்டதற்கு ரிகார்டு இருக்கிறதே தவிர மும்மொழித் திட்டத்தை நான் ஆதரித்ததற்கு ரிகார்டு இல்லை. ஆலமரத்தடியில் உள்ள ஜோஸ்யன் 'வெள்ளிக் கிழமை போய் வியாழக்கிழமை வந்தால் எல்லாம் சரியாக இருக்கும்' என்று சொல்வதைப்போல் திரு. பூவராகன் சொல்வது சரியல்ல (சிரிப்பு).

திரு. கோ. பூவராகன்: நான் படித்துக் காண்பித்தது 1958-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திய நடவடிக்கைக் குறிப்பில் 121-ஆம் பக்கத்தில் இருக்கிறது. அதை வேண்டுமானால் படித்துக் காட்டுகிறேன். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் கொடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கையெழுத்துப் போடாதது மட்டுமல்ல. மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்குத் தீர்மானம் கொடுத்தோம். இந்திய அரசியல் சட்டத்தினுடைய 17-வது பிரிவை நீக்கவேண்டுமென்று பேசுவது புரட்சிகரம் என்று இன்று கருதப்படுகிறது. 1958-ஆம் ஆண்டிலே மார்ச் மாதம் 11-ஆம் தேதியன்று,

and this House is of the firm opinion that Part XVII of the Constitution of India should be suitably amended so as to retain English as the official language of the Union Government without any time limit.

என்ற தீர்மானத்தை எங்கள் கட்சித் தோழர் திரு. அன்பழகன் கொடுத்தார். அது வாக்குக்கு விடப்பட்டு 14 பேர்கள் அதை ஆதரித்தும், 121 பேர்கள் எதிர்த்தும் வாக்களித்தார்கள். அந்த 121 பேர்களிலே திரு. வீரையகம் அவர்களும் ஒருவர். அவர்கள் இப்பொழுது சொல்கிறார்கள், திருத்துவதற்கு முன்பில் இரண்டு பங்கு வாக்கு வேண்டாமா என்று. ஆனால் 1958-ஆம் ஆண்டிலே அந்த வாக்கு அளவு இருந்தது. 1958-இல் இந்தியப் போராசு அரசியல் சட்டத்தைத் திருத்தி மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்று விரும்பியிருந்தால். அப்பொழுது மெஜாரிட்டி இருந்தது. நாங்கள் அப்பொழுது சபாரிசு செய்த தீர்மானத்தை 14 பேர்கள் ஆதரித்தும் 121 பேர்கள் எதிர்த்தும் வாக்களித்ததால் அது தோற்கடிக்கப்பட்டது. மும்மொழியை இருமொழியாக்கு கிறோம், இது திடீரென்று எற்பட்ட முடிவு என்று எல்லாம் பேசு

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

கிறார்கள். 1958-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் தேதி ஒரு தீர்மானம் போடப்பட்டது. அதாவது—

and this House recommends that students in schools in the non-Hindi regions should not be compelled to study three languages as it amounts to discrimination when compared with the students in the Hindi regions who are required to study only two languages. என்று இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தவர் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பரும், இப்பொழுது அவர்களோடு உள்ள வருமான நம்முடைய நண்பர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள். அது மட்டுமல்ல, மத்திய சர்க்கார் பரீட்சையிலே தமிழ் ஒரு மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்று தீர்மானம் நாங்கள்தான் முதலில் கொடுத்தோம், யாரோ பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். திரு. சங்கரய்யா என்று நினைக்கிறேன், பொது மக்கள் போராட்டத்திற்குப் பிறகுதான் இந்த நிலை வந்தது என்று குறிப்பிட்டார்கள். 1965-ல் ஆகஸ்டு மாதம் 5-ஆம் தேதி—நான் அப்பொழுது இங்கு இல்லை—என்னுடைய நண்பர்கள் எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்திலே இப்படியொரு தீர்மானம் தரப்பட்டது.

'That this House recommends to the Government to urge on the Government of India the need to include Tamil also as one of the media for writing the various competitive examinations conducted by the Union Public Service Commission.'

அதற்கு ஆதரவு 34, எதிர்ப்பு 77. ஆகவே 17-வது பிரிவு திருத்தப்படவேண்டுமென்பதும், தமிழ் பரீட்சை மொழியாக ஆக வேண்டுமென்பதும், மும்மொழித் திட்டம் நம்முடைய மாணவர்களுக்குக் கேடு செய்யும் என்பதையும் இன்றல்ல, நேற்றல்ல; 1958-லிருந்து வலியுறுத்தி எடுத்துக் காட்டியிருக்கிறோம். இங்கே யார் யார் எல்லாம் எதிர்த்து ஓட்டுப்போட்டார்கள் என்றெல்லாம் இருக்கிறது. அதிலே பலர் இப்பொழுது இங்கே இல்லை. அதிலே இருக்கிற சிலர் இங்கே இருக்கிறார்கள். திரு. சிதம்பரநாத நாடார், அவர் இங்கு இப்பொழுது இல்லை என்று நினைக்கிறேன், என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் வினயகம் அவர்கள் . . .

திரு. கே. வினயகம்: ராங், நானும் இல்லை, அவர்களும் இல்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: 1958-லே இருந்தார்கள், இருந்தும்கூட அவரே இல்லையென்று மறுத்தால் அதை மறைத்துவிட முடியாது. இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் அவ்வப்பொழுது நாங்கள் மொழிப் பிரச்னையைப்பற்றித் தெளிவாகப் படித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான். காங்கிரஸ் நண்பர்கள் சொல்கிறார்கள், அவர்கள் சொன்னதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். கொள்கையைத் திட்டவட்டமாகச் சொல்லுங்கள் என்று கேட்டதாகப் பார்த்தேன். அவர்களுடைய கொள்கை திட்டவட்டமாக என்ன என்று பார்த்தேன். ஒன்றும் காணோம். இந்தி வேண்டாம், ஆங்கிலம் போதும் என்று சொல்கிறோம், அவர்களுடைய அபிப்பிராயம் என்ன? என்.சி.சி.-யில் இந்தி ஆணைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

மேலும் இந்தி மறைமுகமாக திணிக்கப்படுவதால் இந்திச் சொற்களை நீக்கவேண்டுமென்றும். அப்படி நீக்காவிட்டால் என்.சி.சி. அணிகளைக் கலைத்துவிடவேண்டுமென்றும் சொல்கிறோம், உங்களுடைய அபிப்பிராயம் என்ன ? அதைக் கேட்கிற நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் 'பொதுமக்களிடம் கேளுங்கள்' என்றுதான் சொல்கிறார்களே தவிர, இல்லை இல்லை, இந்தி படிக்கத்தான் வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்வதற்கு அவர்களுக்குத் துணிவு இல்லை என்று சொல்லமாட்டேன், எனக்கே இவ்வளவு துணிவிருக்கிறது என்றால் அவர்களுக்கு இல்லையென்று சொல்ல மாட்டேன். எவ்வளவு கதரைப் போட்டாலும் தமிழ் உணர்ச்சி கதறிக்கொண்டு வருகிறது. நாம் செய்யவில்லையென்றாலும் அந்தப் பயலாவது செய்கிறானே என்ற திருப்தியோடுதான அவர்கள் இருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவர்களில் யாருக்கு இந்தி தெரியும்? நாங்கள் இரண்டு மூன்று ஆண்டுகள் டில்லியில் இருந்தபொழுது எத்தனை பேர்கள் படித்தோம்? தமிழ் வார்தையுடன் 'ஹை' போட்டுவிட்டால் அதுதான் இந்தி என்று சொன்னோம். தொடர்புமொழி வேண்டாமா என்று கேட்டார்கள். பரந்த இந்தியாவிலே ஒரு பகுதி மக்களுக்கும் இன்னொரு பகுதி மக்களுக்கும் எந்த எந்த அளவில், எந்த எந்த முறையில், எந்த எந்த இடத்தில் தொடர்பு இருக்கும் என்று கருதுகிறீர்கள்? ஒரு வீட்டிலே இருக்கிறவர்கள் தொடர்பு இல்லாமல் இருக்கக்கூடாது. மாதக் கணக்கில் மாமியாரும் மருமகளும் பேசவில்லையென்றால் அதனாலே கணவனுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. கன்னியாகுமரியிலிருந்து 20 பேர்கள் கிளம்பி கான்பூருக்குப் போய் அங்கே பாஷை தெரியாமல் கலங்குகிறார்கள் என்று கருதுகிறீர்களா ? திருநெல்வேலிச் சீமையில் உள்ள சில கிராமத்திலிருப்பவர்கள் சென்னைப்பட்டணத்தைப் பார்த்ததேயில்லை எனபதை நீங்கள் அறியமாட்டீர்களா ? சென்னைக் கடற்கரையைப் பார்க்காமல் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாததா ? தொடர்பு, தொடர்பு என்று சொல்கிறீர்கள். திரு. ஹாண்டே அவர்கள் சொல்கிற தொடர்பு புரிகிறது. படித்தவர்களிடையே உள்ள தொடர்பு, அது புரிகிறது. நிர்வாகம் நடத்துகின்றவர்களிடையே உள்ள தொடர்பு, அதுவும் புரிகிறது. அரசியல் வாதிகளிடையே தொடர்பு, அதுவும் புரிகிறது. வியாபாரிகளிடையே தொடர்பு, அதுவும் புரிகிறது. யாத்திரிகர்களிடையே தொடர்பு, அதுவும் புரிகிறது. பொதுமக்களிடையே தொடர்பு என்கிறீர்களே, அது என்ன பொருளில் ? புரியவில்லையே. 100-க்கு எத்தனை பேர் இங்கே திண்டாடுகிறார்கள்? எந்தத் தவிப்பு ஏற்பட்டு அவர்கள் யாரிடத்திலே மனுப்போட்டார்கள்? ஏதோ இங்கிருந்து அணி அணியாக அங்கே செல்வதைப் போலவும், அங்கிருந்து அணி அணியாக இங்கே வருவதைப் போலவும் அவர்கள் எல்லாம் தொடர்பு மொழி இல்லாத காரணத்தால் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற முறையிலே கற்பனை செய்துகொண்டிருக்கிறார்களேதவிர, வேறு ஒன்றும் இல்லை. தொடர்பு மொழி என்று பேசுகிறீர்களே, வாருங்கள் 1937-க்கு. அப்பொழுது இந்திக்கு தொடர்பு மொழி என்ற பெயர்? மகிப்பிற்குரியவர், எல்லாத் தகுதிகளும் உடையவர் என்று ஒப்புக்கொள்ளப்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

பட்டவர், பட அளவிலே இங்கே பார்த்துக்கொண்டிருக்கிறோமே. அவர், ராஜாஜி அவர்கள், அன்று இந்தியைத் தேசிய மொழி என்று சொன்னார்கள். கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்றார்கள். அதைப் படிக்காவிட்டால் இந்தியனுக்கு வாழ முடியாது என்றார்கள். அதைப் படித்தால்தான் இந்தியாவிலே வாழலாம் என்றார்கள். அதைப் படிக்காதவன் தேசத் துரோகி என்றார்கள். அப்போதுதான், மதிப்புமிக்க ம.பொ.சி. அவர்கள் சொன்னபடி, நாங்கள் எதிர்த்தோம். என்னே முதல் முதலாகச் சிறைச்சாலைக்கு அனுப்பியவரும் ராஜாஜிதான். முதல் முதலாக மந்திரிப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படியான நிலையை உண்டாக்கியவரும் ராஜாஜிதான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சிறைச்சாலைக்கு அனுப்பினார் என்பதால் கோபமோ, மந்திரிப் பதவியை அடையச் செய்தார் என்பதால் அவரிடத்தில் அளவு கடந்த சந்தோஷமோ எனக்கு இல்லை. ஏனெனில் அவர் அதை விரும்பவில்லை. பிறருடைய கோபம், பிறருடைய சந்தோஷம் இவற்றை வைத்துக்கொண்டு அவர் தம்முடைய கொள்கைகளை வகுத்துக் கொள்ளவில்லை என்பது என்னைவிட அவரிடத்தில் நெருங்கிப் பழகுகிறவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதே மன்றத்தில் 1958-ல் "ராஜாஜி புளிய மரம்; அந்த நிழலிலே எதுவும் வளராது; அண்ணாதுரை நீ போகாதே" என்றார்கள் நம்முடைய நண்பர்கள்! அந்த மா நிழலிலே வளர்ந்து இவ்வளவு பெரிய தேக்கு மரங்களாகிவிட்ட பிறகு என்னை மட்டும் அங்கு போக வேண்டாம் என்றார்கள்! ஏதோ நான் போனேன், நல்லபடியாகத் தான் வளர்ந்தேன். (சிரிப்பு)

1957-ம் ஆண்டில் தேசிய மொழி என்று கருதப்பட்ட இந்தி. காங்கிரசினாலே புகுத்தப்பட்டது. உங்களால் ஏன் அதிலிருந்து விலக முடியவில்லை என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்தியை சுய ராஜ்யம் வருவதற்கு முன்னாலே இருந்தே ஆதரித்து வந்திருக்கிறீர்கள். சுய ராஜ்யம் வருவதற்கு முன்னாலே இருந்து ஆதரித்து வந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்லும்போது நண்பர் வினயகம் அவர்கள் என்னைப் பார்க்கவேண்டாம்; சொம்ப நாள் காங்கிரசாருக்குச் சொல்லுகிறேன். மகாத்மாகாந்தியின் தேசிய நிர்மாணத் திட்டங்களில் ஒன்று அது. அப்போது நான் எட்டாவது, ஒன்பதாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது 'இந்தி-தமிழ் சுயபோதினி' என்ற புத்தகம் இருக்கும். அதன் விலை ஆறணா அல்லது எட்டணா இருக்கும். அதைக் கையில் வைத்துக் கொண்டிருப்பதும், ஒரு காலணாவில் ஓட்டை போட்டு ஒரு சுச்சியைச் சொருகி தக்ளிவைத்துக் கொண்டிருப்பதும் நம்மான தேசபக்தி என்று கருதி மாணவர்கள் எல்லாம் வைத்துக் கொள்வார்கள்; நானும் வைத்துக் கொண்டேன்.

தமிழ் நாட்டுப் புலவர்கள். பெரும் பேராசிரியர்கள், மறைந்த சோமசுந்தர பாரதியார், மறைந்த சேதுப்பிள்ளை, மறைந்த உமாமகேசுவரம் பிள்ளை, மறைந்த மறைமலையடிகள், இன்றும் நல்ல வேளையாக நம்மிடையே இருந்து வரும் பெரியார் ராமசாமி ஆகிய இப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து அந்த நாட்களில்

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

இந்தியை எதிர்த்து ஆயிரம் பேர் சிறை சென்றார்கள். அதிலே இரண்டு பேர் மருத்துவ மனையில் இறந்துபட்டார்கள். அதற்குப் பிறகு கட்டாய இந்தி என்பது எடுபட்டு விருப்பப்பாடம் என்று ஆயிற்று. விருப்பப்பாடம் என்று ஆனபின் இந்தி ஆபத்து இல்லை யென்று வேறு வேலைகளைப் பார்த்தோம். மறுபடியும் ஓமந்தூர் ராமசாமி செட்டியார் அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் முதலமைச் சராக வந்தபோது மறுபடியும் இந்தி புகுத்தப்பட்டது. நாங்கள் மறுபடியும் போராட்டத்தைத் துவக்கினோம். அந்தப் போராட் டத்தில் பல கஷ்டங்களை மேற்கொண்டோம். பலர் சிறைச் சாலைக்குச் சென்றார்கள். பின்னர் இந்திக்கு இந்திய அரசியல் அரசாங்கத்தில் தேசிய மொழி என்று சொல்வதற்குப் பதிலாக ஆட்சி மொழி என்ற பெயர் கொடுக்கப்பட்டது. 'ஆட்சி மொழி' என்றால் இந்திக்காரர்கள்தான் எங்கள் ஆளவேண்டுமென்ற அர சியல் கிளர்ச்சி எழுந்த காரணத்தால் ஆட்சி மொழி என்பதையும் மாற்றி 'இது ஆட்சி மொழி என்பதுகூட அல்ல; இது இணைப்பு மொழி' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இப்போது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்தி மட்டும்தான் இணைப்பு மொழி என்று சொல்லவில்லை; 'இந்தி இந்தியாவுக்குள் இணைப்பு மொழி; ஆங்கிலம் உலகத்திற்கு இணைப்பு மொழி' என்று இணைப்பு மொழியை இரண்டாகச் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தை மாற்றங்கள் எல்லாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஒவ்வொரு கட்டத்தைக் குறிப்பதாகும்; வெறும் வார்த்தை ஜாலங்கள் அல்ல.

நாங்கள் அதற்காகப் பாடுபட்டவர்கள் என்ற முறையில், நொந்து போனவர்கள் என்ற முறையில், கொடுமைகளைத் தாங்கிக் கொண்டவர்கள் என்ற முறையில், இன்றைய தினம் 'இந்திப் பாடம் இனி இல்லை' என்று நான் நிர்மாணத்தைப் படித்தபோது அதிலே எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை எவ்ளவ்தான் உணர்ந்து கொள்ள முடியுமே தவிர, அதற்காகக் கஷ்டப்படாதவர்களால் உணர்ந்துகொள்ள முடியாது.

இந்திய அரசியல் சட்டத்தில் இந்தியைப் புகுத்தியது காங்கிரசு. அன்று முதற்கொண்டு எதிர்த்துக்கொண்டு வரு கிறோம். அதுபற்றி நேரு உறுதிமொழி அளிக்க வேண்டுமென் பதை வற்புறுத்துவதற்காக அப்போது வர இருந்த குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும்; நம்முடைய மனக் கொதிப்பைத் தெரிவிக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு, உடனே அப்போது என்னோடு இருந்த, இன்று உங்களுக்கு உதவி யாக இருக்கிற—உதவியாகத்தானே இருக்கிறார்—சம்பத், குடி யரசுத் தலைவரைப் பார்த்து, உறுதி மொழி தருவதாக அவர் சொல்லிய பிறகு, நாங்கள் அதற்கு மேல் அந்தக் காரியத்தில் ஈடு பட வேண்டாமென்று முடிவு செய்தோம். அதற்குப் பிறகு நேருவி னுடைய உறுதி மொழி சீனப் படையெடுப்பு நேரத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. அப்போது கொண்டு வரப்பட்ட சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சென்னைக் கடற்கரையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதிலே

[திரு. சி. என். அண்ணாதுரை] [1963 சனவரி 23

கலந்து கொள்வதற்காக நான் டில்லியில் இருந்து விமானம் மூலம் வந்தேன். ராஜாஜியும் நானும் சேர்ந்து கலந்து கொண்ட பொதுக் கூட்டத்தில் பேசுகிற போது அவர்கள் சொன்னார்கள்—அப்போது எனக்கும் ராஜாஜி அவர்களுக்கும் இன்று இருக்கிற நெருக்கம் கூட இல்லை—" பல பேர் ஆச்சரியப்படுகிறார்கள்; நானும் காமராஜரும் ஒன்றாக உட்கார்ந்திருக்க வேண்டியதுக்க, நானும் அண்ணாதுரையும் பகைத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு ஊரே ஆச்சரியப்படுகிறது; ஆனால் அதிலே உண்மையானபாடம் இருக்கிறது; அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் English unites and Hindi divides என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று ராஜாஜி அவர்கள் சொன்னார்கள். 'இந்திப் பிரச்சினையில் காமராஜர் பிரிய வேண்டிவந்தது; ஆங்கிலம் எங்கள் இருவரையும் ஒன்றாகச் சேர்த்தது' என்றார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள், நாங்கள் எல்லாம் 'may' 'shall' என்பதற்காகத் தகராறு இட்டுக் கொண்டிருந்த நேரத்தில், டில்லிப் பட்டணத்திற்கு வந்து பத்திரிகை நிருபர்களைச் சந்தித்த போது 'may' என்று இருந்தாலே போதும்; அதுவே பரிபூரண திருப்தியை அளிக்கிறது என்று சொல்லிவிட்டுப்போய் விட்டார்கள். அப்போது கருத்திருமன் போன்றவர்கள் என்னைத் தனியாகச் சந்தித்து 'என்ன இவர் இப்படிச் செய்து விட்டுப் போய்விட்டாரே!' என்று வருத்தப்பட்டுக்கொண்டது என் நினைவுக்கு வருகிறது. (சிரிப்பு)

அதைத் தொடர்ந்து 1965-ல் மாணவர்கள் கிளர்ச்சி நடை பெற்றது. மாணவர்கள் கிளர்ச்சி என்றவுடன் 1965-ல் நடந்த மாணவர்கள் கிளர்ச்சிக்கும் இப்போது நடப்பதற்கும் இடையே இருக்கின்ற வேற்றுமைகளை நாம் மறந்து விடுகின்றோம். 1965-ல் மாணவர்கள் கிளர்ச்சி நடத்தப் போவதாக அறிவிக்கவில்லை. ஜனவரி 25-ம் தேதி மட்டும் இந்தி புகுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் துக்க நாளாகக் கொண்டாட வேண்டுமென்று அறிவித்தார்கள். நாங்கள் ஜனவரி 26-ம் தேதி குடியரசு தினமாக இருந்தாலும் அன்றைய தினந்தான் இந்தி புகுத்தப்பட்ட காரணத்தால் அந்த ஆண்டு அந்த நாள் துக்க தினமாக கொண்டாடப்பட வேண்டுமென்று பகிரங்கமாகச் சொன்னோம்.

அப்போது காங்கிரசில் இருந்த தலைவர்கள் என்ன பேசினார்கள்? சட்ட மன்றத்தில் என்ன பேசப்பட்டது? முதலமைச்சராக இருந்த சமயம் பக்தவத்சலம் அவர்களை, புலவர் கோவிந்தன் என்று நினைக்கிறேன், 'என்ன செய்வீர்கள்?' என்று கேட்டதற்கு, செய்யும் போது பார்த்துக்கொள்' என்று சொன்னது, அதிலே இருந்த கம்பீரம், அதற்குப் பின்னால் இருந்த பொருள் எல்லாம் நமக்குத் தெரிகிறது. அதுவும் மறந்துவிடவில்லை. எங்களுடைய வீடுகள் தாக்கப்பட்டன. எங்களுடைய பத்திரிகை நிலையங்கள் சூறையாடப்பட்டன. ஒரு குற்றமும் சுமத்த முடியாத நிலையில் கருணாநிதி அவர்களைப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்தார்கள். லாரியில் அழைத்துச் சென்றதாகத் திரு. ஆதிமூலம்

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

அவர்கள் சொல்லுகிறார்கள், மோட்டார் இல்லாத குறையாக இருக்கலாம்; அல்லது அவர் அவ்வளவுக்குத்தான் லாயக்கு என்று எண்ணியிருக்கலாம்; இப்போது நான் அதற்காகக் குறைபட்டுக் கொள்ளவில்லை. லாரிகூட ஒரு வாகனந்தான். நமது சட்ட மன்றத் தலைவர் அவர்கள் கோவைச் சிறையிலே தள்ளப்பட்டார்கள். இதற்கிடையில் 25-ம் தேதியன்று மாணவர்கள் மதுரையில் ஊர்வலமாக வந்தபோது அர்பன் காங்கிரஸ் கமிட்டி ஆபீசில் இருந்து ஒருவர் ஓடிவந்து கத்தியால் குத்தினார். இதம்பரத்தில் மாணவர்கள் ஊர்வலமாக வந்தபோது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு ராஜேந்திரன் என்ற மாணவர் சுட்டுக் கொல்லப் பட்டார். சென்னையில் மாணவர்கள் ஊர்வலமாக வந்து முதல மைச்சர் பக்தவத்சலத்தைப் பேட்டி காணவேண்டுமென்று வந்த நேரத்தில், அவர், பார்ப்பதற்கில்லை என்று சொல்லிவிட்டார். வேறு ஒரு அமைச்சர், திரு. வெங்கட்டராமன் என்று கருதுகிறேன், அவர்களைத்தான் பார்க்க முடிந்தது. இதற்கிடையில் ஒவ்வொரு ஊரிலும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள்—என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால்—குறைந்தது ஐயாயிரம் பேராவது சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள்.

முதல் நாளே துப்பாக்கிப் பிரயோகம். முதல் நாளே வேட்டை ஒரு வாரத்திற்குள் 4,000, 5,000 தோழர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். அப்போது நம் மாணவ நண்பர்கள், திரு. பக்தவத்சலம் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னதற்குப் பேட்டி கிடைக்கவில்லை. எனக்கிருக்கிற நிலை—இல மாணவர்களைப் பார்க்கவேண்டுமென்று நினைக்கிறேன், அவர்கள் எவருக்குப் பேட்டி கொடுக்க மறுக்கிறார்கள். இது திரு. கருத்திருமனுக்குத் தெம்பாக இருக்கும். ஆஹா! அப்படியா! அப்படியா! என்று இருக்கலாம். ஏன் அவர்களிடம் பணிந்து செல்கிறேன் என்றால் அவர்கள் உணர்ச்சிக்கு நான் மதிப்பு அளிக்கிறேன். அவர்கள் நிரந்தரமாகக் கலவரம் செய்யவேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் உள்ளத்தில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. நம் மதிப்பு மிக்க அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த காமராஜ் அவர்கள் பெரியோர்கள் சரியாக வழி காட்டாவிட்டால் மாணவர்கள், பாவம், என்ன செய்வார்கள்? என்று என்னிடத்தில் கேட்டார்கள். அந்த முறையில் அவர்கள் செல்வதால் அவர்கள் விஷயத்தில் மிகுந்த பரிவோடு மிகுந்த அக்கறையோடு நடந்து கொள்ளவேண்டுமென்று, இது வரை ஐந்து இரவுகளாவது, மாணவர்களிடம் பேசுவதில் செலவழித் திருப்பேன். பெறும் திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் மேடையில் பேசும் மாணவர்கள் எல்லாம்கூட வந்தார்கள். 20, 25 மாணவத் தோழர்கள் வந்தார்கள். வந்தவர்கள் என்னைப் பார்த்து 15, 20 ஆண்டுகள் அமைச்சராக இருந்து டிபார்ட்மெண்ட் தலைவர்களைக் கூப்பிட்டு அது என்னவாயிற்று, இது என்னவாயிற்று என்று கேட்பது போல், உங்கள் மொழிக் கொள்கை என்ன? இதுபற்றி உங்கள் நிலைபாடு என்ன? தெளிவாகச் பி.ப 6-30

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

சொல்லுங்கள் என்றீர்கள். நான் ரொம்ப சந்தோஷப் பட்டேன். ஏனென்றால் அவர்கள் நாளைக்கு ஒரு வேலைக்குப் போய் அவர்களே மேலதிகாரிகள் இதே கூரலில் கேட்டால் அன்று இது நினைவிற்கு வரும் என்று நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு என்னுடைய விளக்கங்களைக் கொடுத்தேன். இது தான் 65-ல் இருந்த நிலைக்கும் 67-ல் இருக்கிற நிலைக்கும் உள்ள வித்தியாசம். அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காகவா மாற்ற வேண்டும்? என்று கேட்கிறார் திரு. கருத்திருமன் அவர்கள். மூம் மொழித் திட்டம் என்று சொல்கிறீர்கள். மாணவர்களுக்காகவா இதைச் செய்வது? என்று கேட்கிறார்கள். மாணவர்கள் யார்? அவர்கள் நம் ரத்தத்தின் ரத்தம். அவர்கள் நம் சுடும்பத்துப் பிள்ளைகள். அவர்கள் நம் எதிர்காலத்தின் உருவங்கள். அவர்கள் ஒன்றை விரும்புகிறார்கள் என்றால் என்னால் நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு நான் நிறைவேற்றிக் கொடுக்கமுடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டியது ஜனநாயகக் கடமை என்று கருதுகிறேன்.

அரசியல் சட்டத்தின் 17-வது மொழிப் பிரிவை மாற்றும் வலிவு என்னிடமில்லை. இங்கு நாங்கள் இருப்பது 138 பேர்கள் இதை விரும்பாத காங்கிரஸ் நண்பர்கள் 49, பாராளுமன்றத்தில் நாங்கள் 25 பேர்கள், காங்கிரஸ்காரர்களின் எண்ணிக்கை 300-க்கு மேல், இந்தக் கணக்கு மாணவர்களுக்குத் தெரியாதா? 25 பேர்கள் எதிர்த்து வோட்டுப் போடாமல் இருந்தார்களா என்றால், எதிர்த்து வோட்டுப் போட்டார்கள். ஆக அவர்கள் அவர்களது கடமையைச் செய்தார்கள். இனி எல்லோருமாகச் சேர்ந்து தங்கள் கடமையைச் செய்தால் மத்திய அரசைப் பணிய வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அப்படியானால், நீங்கள் இந்தி படிக்கமாட்டேன் என்று சொன்னால் அவர்கள் கோபித்துக் கொள்வார்களே, நம்மோடு பேச மாட்டார்களே என்று கருத்திருமன் பயப்படுகிறார். அவர்கள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். போராட்டத்தில் பல முனைகள் இருப்பதுபோல், காதலில்கூட பல முனைகள் இருக்கின்றன. சில காதல் ராட்சஸக் காதல். ராட்சஸக்காதல் என்று சொல்வது காதைப் பிடித்து இழுப்பது, கிள்ளுவது, குத்துவது என்று இப்படிச் செய்தால் வரும். என் அனுபவத்தில் இந்த வட நாட்டுக் காதல்—அரசியல் காதலைச் சொல்கிறேன்—வட நாட்டுக் காதலில் அவர்களே மீறி நாம் நடப்போம் என்று தெரிந்தால்தான் கொஞ்சம் அவர்கள் இறங்கி வருவார்களே தவிர, வேறு வழியில்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்த காரணத்தினால்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தவுடன் வட நாட்டவர்கள், இவர்கள் கட்டு மீறிப் போய் விட்டார்களே என்று எண்ணிக்கொண்டு பயப்படுவார்கள் என்று நான் சொல்லவில்லை. திரு. கருத்திருமன் அவர்கள் பேசுகின்றபோது எனக்கு ஒரு இடத்தில் சங்கடமாக இருந்தது. பிரிவினையைப் புகுத்துகிறேன், என்று அவர்கள் சொன்னபோது சங்கடமாக இருந்தது. மற்ற கணம் அதில்கூட எனக்குச் சந்தோஷம். ஏப்படியாவது இந்தச்

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

செய்தி டெல்லிக்கு எட்டாதா அப்படி எட்டி, பிரிவினை கேட்கிறார் களாமே என்று அவர்கள் வழிக்கு வர மாட்டார்களா என்று அற்ப ஆசை, ஆகவே, என்னைக் கண்டிப்பதாக நினைத்துக்கொண்டு சொல்வதைக்கூட அது நம் பிரச்சினைக்குப் பரிகாரமாகப் பயன் படுமானால் அதை மிக்க திருப்தியோடு வாவேற்கத் தயார். இதை மொழிச் சட்டத்தோடு வந்த தீர்மானம் இருக்கிறதே அந்தத் தீர்மானத்தில் சங்கடங்கள் இருக்கின்றன என்ற ஒன்றுதான் நம் அவையில் உள்ள எல்லோரும் சேர்ந்து ஒத்துக்கொண்டிருக்கிற கருத்து. மற்றவற்றில் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை. அந்த அபிப்பிராய பேதங்களை உடனடியாக யாராலும் மாற்றிக் கொள்ள முடியாது. இந்த ஒன்றில் ஒருமித்த கருத்து இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது எல்லா அரசியல் கட்சித் தலைவர்களை யும் அழைத்து ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அதிலிருந்து நல்லதோரு பரிகாரம் கிடைக்குமானால் என்னைவிட மகிழ்ச்சிஅடையக் கூடியவர்கள் வேறு இருக்கமுடியாது. மகிழ்ச்சி அடைவேன் என்று சொல்லும்போது மறுத்திருப்பதி அடைவேன் என்று நான் சொல்லத் தயாராகயில்லை. எனெனில் நாங்கள் அடையவேண்டுமென்று கருதுகிற லட்சியத்தில் ஓளவுதான் அது தருகிறது எங்கள் லட்சியம்---நிராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய ஏடுகளையெல்லாம் காங்கிரஸ் நண்பர்கள் இப் போது படிக்கிற பழக்கத்திற்கு வந்திருக்கிறார்கள்---பழைய "நம் நாடு", "முரசொலி" இவற்றைப் படித்தால் நாங்கள் சொல்வதைப் புரிந்து கொள்வார்கள். எங்கள் கழகத்தின் நிர்மானம்— அப்போது தேசிய மொழிகள் 14-ஆக இருந்தன—இந்தியாவின் தேசிய மொழிகள் அத்தனையும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும், அப்படி ஆக்கப்படுகிற காலம் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து அட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என்பது எங்கள் கழகத்தின் திட்டம். அது நிறைவேறுகிற வரையில் நாங்கள் மறுத் திருப்தி அடைவோம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இப்போது வந்திருக்கிற சட்டம் இருக்கிறதே அது உங்களுக்கு எப்படிப் படுகிறது? என்று கேட்டார்கள். அது எனக்கு எப்படி படுகிறதென்றால், மழை பெய்கிறபோது குடை கிடைக்காவிட்டா லும் மேல் துணியை வைத்துக்கொண்டு பிடித்துக் கொள்வதுபோல் உடனடியாக இந்தி வந்து விடாமல் ஆங்கிலத்தை வைத்துத் தடுக் கிறோம். அப்படித் தடுத்துக் கொண்டிருக்கும்போது 14 மொழி களுக்காகவும் பாடுபட்டு அவற்றை வளரச்செய்து—திரு பால சுப்பிரமணியம், திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதுபோல்— இந்திய அரசு இந்திக்கு மட்டும் சலுகை காட்டுகிற அந்தத் திட்டத்தை மாற்றி எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்து எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் உரிய சலுகைகளைக் கொடுத்து வளரச் செய்வார்களானால் நாம் அந்த நிலைக்கு வரமுடி யும். அதுவரை கொஞ்சம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பொறுத்துக்கொள்கிற நிலையில்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

இந்தி நுழைந்துவிடுமானால் பிறகு நாம் தலை தூக்க முடியாது என்பதால் இந்த மொழிச் சட்டம். இந்தி வரும் வேகத்தைத் தடுக்கிறது. அதுவரையில் நாட்டு மக்களுக்கு ஒரு ஆதாயம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. நான் அதுபற்றி அபிப்பிராயம் சொன்னதாக இங்கு குறிப்பிட்டார்கள். நான் மிகுந்த ஜாக்கிரதையோடு அபிப்பிராயம் சொன்னேன். பிரதம மந்திரி அவர்கள் என்னைக் கேட்டபோதும் சொன்னேன். பத்திரிகை நிருபர்கள் கேட்டபோதும் சொன்னேன், எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் கழகத்தின் லட்சியம், தேசிய மொழிகள் எல்லாம் ஆட்சி மொழியாவதுதான். அதைத்தான் எங்கள் லட்சியமாகக் கருதுகிறோம். அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கவேண்டும். ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டுமென்ற அளவிற்கு சட்டம் வருகிறது என்ற முறையில் நாங்கள் திருப்தி அடையாவிட்டாலும் 'sizable section in Tamil Nad'— ஒரு குறிப்பிடத்தக்க பகுதி மக்கள் திருப்தி அடைவார்கள் என்று சொன்னேன். அதற்குப் பிறகு தீர்மானத்தைப் பார்த்தவுடன் நான் தகுந்தவர்கள் மூலம் சொல்லி அனுப்பினேன். 'இந்தத் தீர்மானம் இந்தச் சட்டம் கொடுப்பதைப் பறித்துக் கொள்வதாக இருக்கிறது. இது இந்திக்காரர்களின் எதிர்ப்புக்குப் பயந்து நீங்கள் போடுவதாக இருந்தாலும் இது உள்ளபடியே இந்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிற பலனை பறித்துவிடும். இதோடு இணைந்து அது வரும் என்றால் எங்கள் கழகம் வாக்களிக்காது என்று பிரதம மந்திரியிடம் நான் தெளிவுபடுத்தியும் அவர்கள் தள்ளிவிட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது நிறைவேற்றப்படாத நாளில், பங்களூர் என்று கருதுகிறேன், அப்போது அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் தெளிவாக பத்திரிகைக்கு ஒரு அறிக்கை கொடுத்தார்கள். இத்தீர்மானம் சரியல்ல, இந்தத் திருத்தத்தோடு நிறைவேற்றக் கூடாது என்று அவர்கள் அறிக்கை கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் டெல்லிக்குப் போய்ச் சேருவதற்குள் அதை நிறைவேற்றி பத்திரிகைகளில் செய்தியைப் போட்டு அதைப் படிக்கும்படியாகத்தான் அவர்கள் செய்தார்களே தவிர, அவர்கள் வார்த்தைக்கு உரிய மதிப்பு அளிக்கவில்லை. உள்ளபடியே அரசியல் கட்சி வேறுபாடுகள் எப்படியிருந்தாலும், தமிழன் என்ற முறையில், மிக எளிய குடும்பத்தில் பிறந்து, இந்தியா முழுவதும் பாராட்டத் தக்க நிலையைப் பெற்ற ஒரு பெருமகன் இழிவுபடுத்தப்பட்டார் என்ற வகையில், அதை மிகப் பலமாகக் கண்டிப்பதற்கும், வருத்தப்படுவதற்கும் எல்லாத் தமிழர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் இதில் வருந்தத்தக்கது என்னவென்றால், ஆச்சரியப்படத்தக்கது என்னவென்றால், அவருடைய வார்த்தையை பிரதமர் கேட்காதது மட்டுமல்ல, காங்கிரசிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருக்கிற இரண்டு-மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள்—நல்லவேளையாக இரண்டு-மூன்று பேர்கள். இன்னும் அதிகம் போயிருந்தால் இந்த அசிங்கம் அதிகமாகத் தெரிந்திருக்கும்—பாராளுமன்றத்தில் இரண்டு-மூன்று பேர்கள்.

1968 சனவரி 23] [திரு. கி. என். அண்ணாதுரை]

ராஜ்ய சபையில் இரண்டொருவர், இவர்கள் பேச்சுகளைப் படித்துப் பார்த்தீர்களானால், செஸலுஷனையும் சேர்த்துத்தான் ஆதரித்திருக்கிறார்கள். தீர்மானத்தையும் ஆதரித்திருக்கிறார்கள்; சட்டத்தையும் ஆதரித்திருக்கிறார்கள். நல்லபர் கருத்திருமன் அவர்கள் கேட்கிறார்கள்—சட்டம் வந்தவுடனே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களைக் கூட்டிப் பேசியிருக்கக் கூடாதா? . . . தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூடிற்று? பாராளுமன்றத்தில் எதிர்த்து ஓட்டுப் போட்டார்களே, ஒரு கேள்வி கிளம்பிற்று? காமராஜ் அவர்கள் சொல்லியிருப்பதை எதிர்த்து ஓட்டு போட்டார்களே, கேட்டீர்களா? கேட்காதது மட்டுமல்ல, நான் சொல்லுகிற வரையில் அப்படிச் சிலர் ஓட்டுப் போட்டு விட்டார்கள் என்று வருத்தம் தெரிவித்தீர்களா? இனியாவது தெரிவியுங்கள். எனென்றால் இன்றைக்கு ஒரு தொடர்பு இல்லாமல் போய்விட்டது. ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் தொடர்பு இல்லாதது மட்டுமல்ல ஒரு கட்சிக்குள்ளேயே தொடர்பு இல்லாமல் போய்விட்டது. காமராஜ் அவர்கள் ஒரு அறிக்கை விடுகிறார்; அவருடைய கட்சியைச் சேர்ந்த பிரதமர் அதைக் கேட்காமல் தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்; அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களே அவர் சொல்லியிருப்பதை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் ஓட்டுப் போடுகிறார்கள். இவ்வளவும் நடந்த பிறகு இப்போதுதான் சொல்லுகிறீர்கள், "ஓஹோ; நிறையத் தவறு இருக்கிறது; தீது இருக்கிறது, சங்கடம் இருக்கிறது" என்று காலம் கடந்து நீங்கள் கண்டு பிடித்தாலும், கண்டு பிடித்தீர்களே என்று பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இவைகளை நீக்க நீங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு என் முழு ஒத்துழைப்பு உண்டு; அப்படி நான் ஒத்துழைப்புத் தருகிற நேரத்தில், மற்றதை விட்டு விட்டு ஒத்துழைப்பைக் கொடு என்று கேட்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் தங்கள் கொள்கை எப்படி சிலாக்கியமானது என்று கருதுவார்களோ, அதேமாதிரி நானும் கருதுவதற்கு எனக்கு உரிமை அளிப்பார்கள் என்று நினைக்கிறேன். தீர்மானத்தைப் பொறுத்த வரையில் ஏற்பட்டிருக்கக் கூடிய சங்கடங்களை நீக்க யார் முயற்சி எடுத்துக்கொண்டாலும், அதற்குத் துணை நிற்கத் தயாராக இருக்கிறேன். நண்பர் கருத்திருமன் சொன்னார்—"திரு. சுப்பிரமணியம் இவரைக் கையைக் காட்டுகிறார்; இவர் அவரைக் கையைக் காட்டுகிறார்; எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்று. ஒன்றும் புரியவில்லை என்பது அல்ல அவருக்கும் சில சங்கடங்கள். இப்போதுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக வந்திருக்கிறார்; அவர் இலிமேல்தான் காலை ஊன்றி நிற்கவேண்டும்.; நிற்பார் என்று கருதுகிறேன்; நிற்க விடுவார்கள் என்று எண்ணுகிறேன்; நிற்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அப்படி நின்ற பிறகு என்னிடத்தில் கூடக் கேட்காமல் பலகாரியங்களைச் செய்யமுடியும். ஆகையால்தான் இன்றைய தினம் நான் செய்ய வேண்டுமென்று கருதுகிறார். அதோடு மட்டுமல்ல, முதல் அமைச்சர் அல்லவா இதைச் செய்ய வேண்டும் என்று கருதுகிறார். முதல் அமைச்சர் பதவியை நான் எப்படிக் கருதுகிறேன் என்பதற்கும் அவர் எப்படிக் கருதுகிறார் என்பதற்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது. நான் முதல் அமைச்சர் என்பதால் உடனே நான் சொல்லுவதை எல்லோரும் கேட்பார்கள் என்ற எண்ணம் எனக்கு இல்லை. நான் சொன்னதைக் கேட்டுக் கொண்டு இருந்தவர்கள் தொகை மார்ச் 5-ம் தேதி இருந்ததை விட மார்ச் 6-ம் தேதியிலிருந்து குறையும். ஆட்சிக்கு வந்தால் அந்தச் சரிவு ஏற்படத்தான் செய்யும். உள்ளத்தில் பட்டதை எடுத்துச் சொல்ல கட்சித் தலைவரால் முடியும் அளவுக்கு ஆட்சித் தலைவரால் முடியாது. ஆகையால்தான் கட்சித் தலைவராக இருப்பதை வாய்ப்பாகக் கருதி நீங்கள் சொல்லலாமே; என்னைவிட உங்களுக்கு திரு. பிரமானந்த ரெட்டி அவர்களும் திரு. நிஜலிங்கப்பா அவர்களும் நீண்ட நாள் நண்பர்களாயிற்றே!" என்று சொன்னேன். நம் நண்பர் மார்டின்—இளைஞர்—33 வயது. அவர் சொன்னார்—"உனக்கும் திரு. நம்பூதிரிபாத் அவர்களுக்கும் சிநேகமாமே!" என்று. திரு. நம்பூதிரிபாத் இடது கம்யூனிஸ்ட். நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகம், ஜாண்டையும் கொக்கி போட்டுப் பார்க்கிறார், திரு. நம்பூதிரிபாத் அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்களும் ப்ரிவி கவுன்சில் வரை போய் வழக்காடினார்களா என்ன? (சிரிப்பு) பரம்பிக்குளம், ஆளியாறுத் திட்டம் குறித்து முதல் ஒப்பந்தம் ஏற்பட்டதே சுப்பிரமணியம் காலத்தில்தான்—ஏதோ மரியாதைக் குறைவாகச் சொல்லுவதாக எண்ணக் கூடாது. எனது நெருங்கிய நண்பர் என்ற முறையில்தான் சொல்கிறேன். நான் முதலமைச்சர் ஆனவுடன் பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம் சம்பந்தமாக கேரள முதலமைச்சரை இரண்டு தடவைகள் சந்தித்தேன்—ஒன்றும் தேர் நகரவில்லை. இந்தப் பிரச்னையில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் செய்ய வேண்டிய காரியம் இன்னும் நிரம்ப இருக்கிறது என்று மறுபடியும் வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

"எவேடிங் தி இஷ்யூ" என்று சொன்னதை, நழுவி விடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு வரும் போது கொஞ்சம் நழுவிப் போய் விடுகிறோம். "நழுவி விடுகிறோம்" என்றால் கொஞ்சம் தப்பு அர்த்தம் ஏற்படும். "எவேடிங் தி இஷ்யூ" என்றால் தப்பு அர்த்தம் கொடுக்காது. திரு. மார்டின் அவர்கள் தன் வழக்கை எடுத்து வாதாடும்போது தனக்கு பலஹீனமான குறிப்பைப் படிப்பாரா?—அதை எதிரி வக்கீல் அல்லவா கிளப்புவார்? "ஆர் யூ எவேடிங் தி இஷ்யூ" என்று சொன்னதால் தான் பலன் கிடைத்தது. ஒரு வாரத்தில் சொல்லுகிறார்—"நான் ஒன்றும் நழுவவில்லை; அப்படி நழுவும் பழக்கம் எனக்கு இல்லை. இன்னும் சொன்னால் நான் எல்லாவற்றிலும் தலையிடுகிறேன் என்று எனது நண்பர்கள் குறை சொல்லுகிறார்கள். அது வளராமல் இருக்கவேண்டும்"—இப்படிக் குறிப்பிட்டு விட்டு மகிழத் தக்க செய்தி சொன்னார்—"திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்களையும், திரு. நிஜலிங்கப்பா அவர்களையும் நான் பார்த்துக் கொள்கிறேன்; திரு. நம்பூதிரிபாத் அவர்களை நீ பார்த்துக்கொள் . . ."

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

எனக்கு மூன்றில் இரண்டு பங்கு பளு குறைந்தது. நான் எப்போதும் திருவள்ளுவரைப் பார்த்து விட்டுத்தான் வார்த்தை கூறப் பயன்படுத்துகிறேன். வார்த்தைக்குப் பயன் இருந்தால் தான் பயன்படுத்துவேன்; இல்லாவிட்டால் பயன்படுத்த மாட்டேன். திரு. மார்டின் அவர்கள் கூட அந்தமாதிரித் தான் என்று நினைக்கிறேன். சட்டமன்றத்தில் யார் யார் எந்தெந்தப் பேச்சு பேசுவது என்று பிரித்துக் கொள்ளுவது எங்களுக்குப் பழக்கம் இல்லை. உங்களுக்குள் அந்தப் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டு முறைபோட்டுக் கொண்டீர்களோ என்னவோ—அதில் தவறு இல்லை. திரு. சுப்பிரமணியம் அவர்கள் இன்னும் பங்கு கொள்ள நிரம்ப இடம் இருக்கிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், தீர்மானத்தினுல் ஏற்படுகிற சங்கடங்களைப் பொறுத்த வரையில், இவர்கள் அவற்றை நீக்குவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த தமிழ் பாட மொழி—பயிற்சி மொழி என்ற பிரச்னையைப் பொறுத்த வரையில் பல்வேறு கருத்துக்களெல்லாம் சொல்லப் பட்டன. நான் ஆங்கிலத்தைப் புறக்கணிக்கிறவன் அல்ல. ஆனால், ஆங்கிலம்தான் இருக்க வேண்டும், தமிழ் அதற்கு உரிய இடத்தைப் பெறவேண்டாம் என்ற எண்ணம் கொண்டவனும் அல்ல. ஆங்கிலம் எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அந்தக் காரியங்களுக்கு இந்தியாவில் உள்ள மொழிகளில் எது தகுதி உள்ள மொழி என்றால், அது 'தமிழ், தமிழ்' என்று சொல்லத் தயக்கப்படமாட்டேன். அவ்வளவு வளம் உள்ள மொழி அது. சென்ற முறை பேசியபடி எல்லாக் கல்லூரிகளிலும் பாடப் புத்தகங்கள் தயாரிப்பது, ஆசிரியர்களைத் தயாராக்குவது ஆகிய இந்தக் காரியங்களில் கொஞ்சம் தயக்கம் காட்டப்பட்டு வருகிறது, என்னுடைய திருத்தத்தில் அவர்கள் குறிப்பிட்ட அதையும் இணைத்திருக்கிறேன். ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழகத்தின் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது மட்டுமல்ல, அடுத்த ஆண்டிலேயே சர்க்காரக் கல்லூரிகள் அத்தனையிலும் தமிழ் பாட மொழி ஆகும் என்பதை இன்றைய தினம் அறிவிக்க விரும்புகிறேன். நண்பர் வினுயகம் குறைபட்டுக் கொண்டார் "மாணவர்களைப் பிடித்துப் பிடித்து இழுக்கிறீர்கள், அவர்கள் ஓடி ஓடிப் போகிறார்கள் உங்கள் ஆட்சியில்" என்று ஊரில் இருக்கிற எல்லாத் தொல்லைகளையும் நாங்கள் வந்தவுடன் எங்கள் மேல் போடுகிறீர்கள். ஆனால் புள்ளிவிவரம் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் 1966-67-ல் இருந்தீர்கள்—அந்த ஆண்டு பி.யூ.வி.-யில் தமிழைப் பாட மொழியாகக் கொண்டு படித்தவர்களின் எண்ணிக்கை 1,600. 1967-68-ல் பாவிகள் நாங்கள் வந்தோம். குறைந்து விட்டது என்று அல்லவா சொன்னீர்கள்? ஆம்; 4,600 ஆக இருந்தது 6,364 ஆகக் குறைந்து போய் விட்டது! (சிரிப்பு).

[1968 சனவரி 23

திரு. கே. விஜயகம் : எண்ணிக்கையைப் படித்துக் காட்டியதில் உயர்ந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் அது எவ்வாறு உயர்ந்தது? அவர்களுக்கு வேறு வருப்புகள் தரமாட்டோம் என்று முதல்வர் பிரட்டி, நீங்கள் தமிழ் எடுத்துக்கொள்ள வில்லையென்றால் போய்விடுங்கள் என்று சொன்னதினாலே அந்தப் பிள்ளைகள் வேறு வழியில்லை என்று சேர்ந்திருக்கிறார்கள் எனபது தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அவர்கள் குற்றச் சாட்டு என்று கருதிக்கொண்டு இதனைச் சொன்னார்கள். ஆனால், அதே முறையை எல்லா முதல்வர்களும் கையாளவில்லையே என்றுதான் நான் வருத்தப்படுகிறேன். அடுத்த வருடம் சர்க்கார்க் கல்லூரிகளிலே தமிழ் பாடமொழியாக இருக்கும் என்பது மட்டுமல்ல; ஆங்கிலப்பிரிவு அகற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆனால் அதேநேரத்தில் நமக்கு ஆங்கில அறிவுப்புலமை வராமற் போனால் உலகத்திற்கும் நமக்கும் இருக்கும் தொடர்பு நல்ல விதத்திலே இருக்காது. இதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதை வரவேற்கிறேன். திரு. ம. பொ. சி. அவர்கள்கூட ஆங்கிலத்தை 'ஒரு' மொழியாகப் படிப்பதை மறுக்கவில்லை என்கிறார்கள். ஆகையால், விரைவில் பல்கலைக் கழகத் துணைவேந்தரைக் கலந்து, தமிழைப் பாடமொழியாகவும் பயிற்றுமொழியாகவும் ஆக்கி, அதனால் ஆங்கில அறிவு குறையும் என்று கருதினால் ஆங்கில அறிவை அதிகப்படுத்த என்ன வழிகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி ஆராய்ந்து, ஆங்கில அறிவும் கெடாமல், தமிழ் உரிமையும் பாதுகாக்கப்படக்கூடிய அளவில் நம்முடைய கல்வித் திட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றபடி முன்னாலே அப்படிப் பேசினேம், இப்பொழுது இப்படிப் பேசுகிறோம் என்று, பத்திரிகைகளிலே இங்குமங்கும் பார்த்துவிட்டு அதைக்கொண்டு அப்படிப் பேசுகிறார்கள். ஒன்றை நம்முடைய நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அது இத்துடன் தொடர்புடையது அல்ல என்றாலும். அவ்வளவு சுலபத்திலே பிடி கிடைக்குமாறு நான் தவறுகள் செய்யமாட்டேன். ஏனென்றால் சுயமரியாதைக் காலத்திலேயிருந்து எதையும் துருவித் துருவி ஆராய்ந்து பழக்கப்பட்டவன் நான். மற்றவர்களும் துருவித் துருவிப் பார்ப்பார்கள் என்று எனக்கும் தெரியும். ஆகையால் என்னுடைய வார்த்தைகள் 'Everything will be qualified ; nothing will be assertive.' என்பதுபோல்தான் இருக்கும். அதை நம்முடைய விஜயகம்தான் புரிந்துகொண்டு சொன்னார், "நீங்கள் நேரடியாத வர மாட்டேன் என்கிறீர்களே" என்று. (சிரிப்பு) அதுமட்டும் அல்ல. சொம்பப் பெரிய பந்தயங்கள் போன்ற இவைகளிலெல்லாம் கூட இப்பொழுது

1963 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

சுற்றிச்சுற்றி வருகிறார்களே நான்கு சுற்று, ஐந்து சுற்று என்று அங்கிலே இரண்டாவது சுற்றிலே மெதுவாக இருப்பவன் நான்காவது சுற்றிலே முதலிலே வருவான்.

ஆனால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறவன் என்று என்னைக் கருதாதீர்கள். எதைப்பற்றியும் ஒரு கட்டம் வைத்துப் பேசுகிறேன். எங்களுடைய இறுதி லட்சியம் 14 மொழிகள். ஆங்கிலமே நீடித்திருக்க வேண்டுமானால் நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்படவேண்டும். அதற்கு, கொண்டுவரப் பட்டிருக்கும் ஆட்சிமொழிச் சட்டம் தடையாக உள்ளது. அதனால் ஏற்படும் சங்கடங்களைத் தடுத்து நிறுத்துவதற்கே இத்திர்மானத்தைக் கொண்டு வருகிறோம்.

இதிலேயே திருப்தியடைந்து விடுவோமா என்றால் மாட்டோம். நம்முடைய கம்யூனிஸ்ட் நண்பருக்குத் தெரியும், தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் தெரியும். முதலாளிகளிடம் கோரிக்கைகளை வைக்கும்பொழுது 25 கோரிக்கைகளை வைப்பார்கள். ஆனால் அவர்களுக்குள் பேசிக்கொள்ளும்பொழுது முதலாளி 7, 9, 11 டிமாண்டுகளை ஏற்றுக்கொண்டால் போதும் என்று சொல்வார்கள். 7, 9, 11-ஐ மட்டும் வைத்தால் முதலாளி 9-வது டிமாண்டை மட்டும் ஏற்றுக்கொண்டு 7-வது டிமாண்டையும், 11-வது டிமாண்டையும் தள்ளி விடுவாரே என்பதற்காக கோரிக்கைகளை வைக்கும்பொழுது நிறைய கோரிக்கைகளை வைத்துவிடுவார்கள். அதுபோல் நம்முடைய கோரிக்கைகளை வைக்கும் பொழுது நிறைய கோரிக்கைகளை வைத்து, அவைகளில் எதில் எதிலே வெற்றி கிடைக்கும் என்று பார்த்து, பிறகு மற்றவற்றுக்கு வர வேண்டும். இதை சொம்பர் பெரியவர்கள் செய்தால் ராஜதந்திரம் என்பார்கள். சாதாரண அள் செய்தால் நெளிகிறான், வளைகிறான் என்கிறார்கள். நீங்கள் பெரியவர்களாகி இத்தகைய காரியங்களைச் செய்து உலகம் உங்களை ராஜதந்திரி என்று பாராட்டினால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். ஏமாற்றுவதற்காகச் செய்யப்படுவதே அல்ல. உள்ளத்திலே ஒரு தளியும் வஞ்சக நினைப்பில்லாமலேயே திட்டங்களையும், கொள்கைகளையும் வரையறுத்துக்கொண்டு வருகிறோம்.

நம்முடைய நண்பர் திரு. பூவராகன் அவர்கள் நிரம்பப் பேசினார்கள். பட்ஜெட் கூட்டத்திலேயும் நிரம்பப் பேசுவார்கள். பதில் சொல்லாமல் விட்டுவிட்டிருந்தால் அந்தச் சந்தர்ப்பத்திலே மொழியைப்பற்றிப் பேசலாம். இன்றே முடிந்துவிடுகிற பிரச்னை அல்ல இது. பட்ஜெட் விவாதத்திலே பேசப்போகிறோம்.

திரு. கே. விஜயகம் : ஸ்டாம்பு பற்றிய விளக்கம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஸ்டாம்பு பற்றி எனக்கும் இலாக்காக்களுக்குமிடையே கருத்துப்போக்குவரத்துக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலெழுந்தவாரியாகச் சொன்னால் நம்முடைய இலாக்காவிலேயும் தவறு ஏற்பட்டிருக்

[திரு. சி. என். அண்ணாதுரை] [1968 சனவரி 23

கிறது. இந்திய அரசியலேயும் தவறு ஏற்பட்டிருக்கிறது. 'நீங்கள் என்ன அனுப்பினீர்களோ அதைத்தான் போட்டோம்' என்கிறார்கள். நாங்கள் அனுப்பியதில் இந்தி வாசகமே கிடையாது. ஆங்கிலத்தில் வாசகம் அனுப்பப்பட்டிருந்தது. இந்த இரண்டு தவறுகளுக்கும் நான் பொறுப்பாளி அல்ல. என்னுடைய ஒப்புதலுக்கு அது வரவில்லை. பத்திரிகைகளிலே வெளிவந்தது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று பூவராகன் அவர்கள் தன்னுடைய மந்திரி அனுபவத்தைச் சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் பார்ப்பது இல்லை. ஒருக்கால் 'இன்பர்மேஷன் டிபார்ட்மெண்ட்' டிற்கு அன்ருடம் வருமோ என்னவோ தெரியவில்லை. எங்களுக்கு வருவதில்லை. இந்தி மொழிபெயர்ப்பை எல்லாவற்றிற்கும் போடுகிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்தி எழுத்து இல்லாமலேயே வெளியிடப்பட்ட ஸ்டாம்புகள் நிறைய இருக்கின்றன. எழு, எட்டு அதில இந்திய ஸ்டாம்புகளில் இந்திமொழி இல்லாமலேயே ஸ்டாம்புகள் போடப்பட்டிருக்கின்றன. உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகின்ற காலத்திலே, தமிழ் மொழி விஷயத்திலே கட்டுக்கடங்காத ஆர்வம் கொந்தளிக்கும் சமயத்திலே, மாணவர்கள் இந்தி திணிக்கப்படுகிறது என்று கூறிக்கொண்டிருக்கும் அந்த நேரத்திலே இந்த விழா நடத்துவது நல்லது அல்ல என்ற முறையிலேதான் அது நிறுத்தப்பட்டது. திரு. சுப்பிரமணியம் அவர்கள் என்னிடம் அதிகமாக அத்திரம் அடைந்தார்கள். ஆனல் அவர்கள் டெல்லிக்குப் போய்ப் பார்த்துவிட்டு, 'நீங்கள் அனுப்பியதைத் தான் போட்டிருக்கிறார்கள்' என்று கூறினர்கள். அதனல் 'You should express regret' என்று சொன்னர்கள். தமிழ்ப் பத்திரிகைகளிலே அண்ணாதுரை மன்னிப்பு கேட்க வேண்டுமென்று போட்டார்கள். 'ரெக்ரெட்' தெரிவிப்பதிலே எனக்குக் கூச்சம் கிடையாது. இதைத்தான் கருத்திருமன் அவர்கள் சங்கரி தேர்தலில் தாழ்ப்புச் சீட்டு என்று கருதினர்கள். 'என்னிடத்தில் எத்தனையோ தடவைகள் மன்னிப்பு கேட்டவர்தான் இந்த அண்ணாதுரை' என்று சொன்னர்கள். உடனே அங்கிருந்தவர்கள் 'இந்தப் பிள்ளை தவறு செய்தால் மன்னிப்பு கேட்குமாமே' ஆகையால் அதற்கே ஓட்டுப் போடலாம்' என்றுதான் எண்ணினர்கள். ஆகவே, இதைப்பற்றி விசாரித்துக்கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. கே. விஜயகம் : தமிழிலே மாத்திரம் வாக்கியம் எழுதி அனுப்பவில்லையா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அச்சிடப்பட்ட காகிதம். ஆங்கிலத்திலேயும் இருந்தது. தமிழிலேயும் அச்சிடப்பட்டிருந்தது. ஆனல் கவரிலே போடும்பொழுது ஆங்கிலம் அச்சிடப்பட்ட காகிதம் அனுப்பப்பட்டு விட்டது. இப்படிச் செய்தவர் யார் என்று விசாரித்துப் பார்க்கிற நேரத்தில், கவரை எடுத்து வைத்தவர் ஒரு அதிகாரி. அதை எடுத்துப் போட்டவர்

1968 சனவரி 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

ஒரு அதிகாரி, ஆணையிட்டவர் ஒரு அதிகாரி என்று தெரிகிறது. (சிரிப்பு) அந்த முறை திரு. பூவராகனுக்கும் தெரியும். அதைப் பற்றியெல்லாம் விசாரித்துக்கொண்டிருக்கிறேன். எனவே இதிலே யெல்லாம் ஒரு பெரிய காரியம் நடந்துவிடுமென்று கிளறிக் கொண்டிருக்க வேண்டாம். அவைகள் பெரிய காரியங்கள் அல்ல. தவறு என்று தெரிந்ததால் விழா நிறுத்தப்பட்டது. அதற்கு நான் விளக்கங்களை அளித்தேன்.

நான் கொண்டுவந்திருக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு, என்னுடைய நண்பர்கள் தங்களுடைய திருத்தங்களை வலியுறுத்தாமல் என்னுடைய திருத்தத்தோடுகூடிய, தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்களையும், எல்லாக்கட்சித் தலைவர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துக்கும் இதிலே இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அவரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எதிர் பார்க்கிறேன். ஒருமித்த கருத்தோடு இதை அனுப்புவிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I wish to have a clarification from the Hon. Chief Minister.

முதலமைச்சர் கொண்டு வந்த திருத்தத்திலே முதல் பக்கத்திலே 'மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்' என்று இருக்கிறது. அதிலே ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். 'மொழித் திருத்தச் சட்டமும் அத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமும்' என்று கொஞ்சம் மாற்றல் செய்தால் நன்றாக இருக்கும் என்று யோசனை கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: என்னுடைய திருத்தத்தில் நான் மூன்று நான்கு 'ஸ்டேஜஸ்' சொல்லி இருக்கிறேன். முதலிலே இருக்கிற 'பாரா'—விலே கழகத்தினுடைய 'அப்ஜக்டிவ்' இருக்கிறது. இரண்டாவது, ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். அதற்குத் தகுந்தபடி இந்திய அரசியல் சட்டத்தில் மொழிப் பிரிவு திருத்தப்பட வேண்டுமென்பது. அதற்குப் பிறகு இப்பொழுது நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டத்தைப் பற்றிய கருத்து.

DR. H. V. HANDE: In the Act to amend the Official Languages Act, 1963, நமக்கு ஒரு பயங்கரமான நிலைமை இருக்கிறது.

இரவு 7-00

This is a very important thing and I will just explain it. According to section 3 (1) of the Official Languages Act, 1963, as amended by the Amendment Act of 1967 "the English language may, as from the appointed day, continue to be used, in addition to Hindi". According to section 3 (3) (i) of the

same Act. Notwithstanding anything contained in sub-section (1), both Hindi and the English language shall be used for resolutions, general orders, rules, notifications, etc."

The motion should be such as to express clearly that we are against not only the resolution but also against the Act.

THE HON. THIRU C. N. ANNADURAI: If we say that we are against the Act also and if it is repealed, what remains is the position as in 1965 and that is, imposing Hindi. Therefore in the committee proposed in the amendment by Thiru P. G. Karuthirumun and accepted by me, the entire official language question will be thrashed out.

தலைவர் அவர்களே, இந்த அரசினர் திருத்தத்தில் மற்றொரு உறுப்பினருடைய ஒரு திருத்தத் தீர்மானத்தை இணைக்க விரும்புகிறேன்.

'அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித்திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிறமொழிகளுக்கு இப்போது அளிக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா இந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில் திருத்தப்பட வேண்டும்' என்ற திருத்தத் தீர்மானத்தையும்

'8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும், மத்திய அரசு சமமாக நிதி வசதிகளை வழங்க வேண்டும்' என்ற திருத்தத் தீர்மானத்தையும் இணைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சொற்களை இந்தத் திருத்தத் தீர்மானத்தோடு இணைத்துக் கொள்ளுவதற்குப் பேரவை அனுமதி கொடுக்கிறதா? . . . பேரவை அனுமதி அளிக்கிறதென்று கருதுகிறேன்.

பேரவையின் அனுமதி அளிக்கப்பட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாம் கொண்டு வந்துள்ள திருத்தத்தை நாட்டினுடைய பிரிவினையை மனதாலும் கூட நினைக்காமல் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு என்னுடைய நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் எங்களுடைய கட்சியின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அதாவது, இந்தத் திருத்தத் தீர்மானத்தை பொது மக்கள் அபிப்பிராயத்திற்கு விடவேண்டும் என்பது. ஆகவே, இதைப் பொது மக்கள். . .

1968 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நீங்கள் கேட்பது என்ன, நடைமுறைக் கேள்வியா? எதாவது ஒரு விதியின் கீழ் தான் பேச வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: முதலமைச்சர் அவர்கள் பேசிய தற்கு விளக்கம் கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசியதற்கு நீங்கள் விளக்கம் கொடுக்க முடியாது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்களுடைய அபிப்பிராயம் என்ன என்று கேட்டதற்குத்தான் நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை பொது மக்களுடைய அபிப்பிராயத்திற்கு விட வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. அரசினர் இதைப் பொது மக்களுடைய அபிப்பிராயத்திற்கு விட வேண்டுமென்று நினைக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்த மன்றமே பொது மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட, பொது மக்களாலே தேர்ந்தெடுத்த அனுப்பப்பட்டவர்களைக் கொண்ட, மன்றமாக இருப்பதால் இங்கு நிறைவேற்றப்பட்ட பிறகு மறுபடியும் இந்தப் பிரச்சினையிலே பொது மக்களுடைய அபிப்பிராயத்தைப் பெறத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மசோதாவாக இருந்தால் தான் பொது மக்களுடைய கருத்தை அறிவதற்கென்று தள்ளி வைக்கலாம். இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை பொது மக்களின் கருத்து அறிவதற்காகத் தள்ளிப்போட இடம் இல்லை. சட்டப் பேரவையின் விதிகளில் இடம் இல்லை. எனவே, இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தத் தீர்மானம்—திருத்தப்பட்டுள்ள திருத்தத் தீர்மானம்—வாக்கெடுப் பிற்கு விடப்படுகிறது.

(ஓர் உறுப்பினர்: முதலில் மற்றவர்கள் கொண்டு வந்த தீர் மானத்தை வாக்கெடுப்பிற்கு விட்டபிறகு தான் அரசினர் தீர்மா னத்தை வாக்கெடுப்பிற்கு விட வேண்டும்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதை முதலில் வாக்கெடுப் பிற்கு விட வேண்டும், எதை இரண்டாவது வாக்கெடுப்பிற்கு விட வேண்டுமென்பதை நான் தான் முடிவு செய்ய வேண்டும்.

(ஓர் உறுப்பினர்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.)

திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுந்தார் . . .

[1968 சனவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாக்கெடுப்பு நேரத்தில் "பாயிண்ட் ஆஃப் ஆர்டர்" எழுப்ப முடியாது. யாராவது ஒருவர் மட்டும் கேட்டாலும், வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று விதியிலே இருக்கிறது. ஆகையால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்து பிறகு முடிவு செய்ய வேண்டும்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: மிஸ்டர் ஸ்பீக்கர், சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், நடைமுறை சம்பந்தமாக அவைத் தலைவர் அவர்களுடைய அந்தஸ்தையும் அதிகாரத்தையும் நான் கேள்வி கேட்கவில்லை. அரசினர் தீர்மானத்தை முதலில் வோட்டுக்கு விட்டு விட்டால், மற்ற தீர்மானங்களை எல்லாம் இங்கு வைப்பது சாத்தியப்படாது. அவசியம் இல்லாததாக ஆகி விடும். ஆகையால் மற்ற தீர்மானங்களை முதலில் வோட்டுக்கு விட்டு விட்டு, பின்னர் அரசினர் தீர்மானத்தை வோட்டுக்கு விடுவது முறையாக இருக்கும் என்று ஒரு அபிப்பிராயத்தைத் தங்களுக்குக் கூறிக்கொள்கிறேன். ஏனென்றால், திருத்தத்திலுள்ள அம்சங்களில் எங்களுக்கு உடன்பாடு இருந்தாலும் பூராவாக நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சில அம்சங்களில் 'ரிசர்வேஷன்' இருக்கின்றன. முழுக்கமுழுக்க அதை அப்படியே வாக்கெடுப்புக்கு விட்டால், நாங்கள் நடுநிலைமை வகிக்க வேண்டிய நிலைமை இருக்கும். அதற்கு இடம் இல்லாத வகையில் இந்தப் பிரச்னைக்கு விளக்கம் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தத் தீர்மானம் இருக்கிறதே, அதை முதலிலே நான் வாக்கெடுப்புக்கு விடுகிறேன். இன்னர் இன்னர் எதிர்த்து வாக்களித்தார்கள், இன்னர் இன்னர் ஆதரித்து வாக்களித்தார்கள் என்று இருக்க வேண்டுமா? அல்லது ஒருமனதாக நிறைவேறியதாக இருக்க வேண்டுமா என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, அதற்குத் தான் நான் ஏற்கனவே எங்களுடைய கட்சியினுடைய கொள்கையை, அதாவது பொது மக்களுடைய வாக்கெடுப்பு வேண்டுமென்ற கொள்கையைத் தெரிவித்து விட்டேன். அதற்கு முதலமைச்சர் அவர்களும் பொது மக்களுடைய அபிப்பிராயம் தேவை இல்லை என்று தெரிவித்துவிட்டார்கள். என்னுடைய தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை. அதே சமயத்தில், இந்த ஓட்டெடுப்பிலிருந்து நாங்கள் கலந்து கொள்ளாமல் விலகிக் கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய திருத்தத் தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

1968 சனவரி 23]

. மாண்புமிகு பேரவைத் தலைவர் : மான்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தத் தீர்மானத்தின் மீது நடக்கப் போகிற வாக்கெடுப்பில் நீங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை, நடுநிலையாக இருக்கப் போகிறீர்கள். அப்படித்தானே ?

THIRU P. G. KARUTHIRUMAN : Yes, we are abstaining from voting.

THIRU RAMA. ARANGANNAL : Then I want a poll. I press for division.

திரு. வி. எஸ். கோவீந்தராஜன் : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதை நான் ஆமோதிக்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : நடைமுறையில் அநேக தீர்மானங்கள் வந்தாலும், தீர்மானத்திற்குத் திருத்தங்கள் வந்தாலும், அதிகார பூர்வமில்லாத் தீர்மானங்கள், திருத்தங்கள் முதலில் ஓட்டுக்கு விடப்பட்டு, அதற்குப் பின்னால் அதிகாரபூர்வமான தீர்மானமும், திருத்தங்களும் வோட்டுக்கு விடப்படும். ஆகவே, அந்த முறை தான் சரியாக இருக்கும். இதில் சபாநாயகர் அவர்களுடைய கருத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பலவித திருத்தங்கள், தீர்மானங்கள் இருக்கும்பொழுது எதை முதலில் வாக்கெடுப்புக்கு விடவேண்டும், எதை இரண்டாவதாக வாக்கெடுப்புக்கு விட வேண்டும், எதை மூன்றாவதாக வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்பது நம்முடைய விதிகளிலே தெளிவாக இருக்கிறது. அதன் படியே வாக்களிப்புக்கு விடுகிறேன்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : கனம் சபாநாயகர் அவர்களின் தீர்ப்புக்குப்பின் அரசினர் சபை முன்பு வைத்திருக்கும் தீர்மானத்தின் பேரில் என்னுடைய கட்சி நடுநிலைமை வகிக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : அரசினர் தீர்மானத்தின்பேரில் வோட்டு எடுப்பில் என்னுடைய கட்சி கலந்துகொள்வதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : என்னுடைய கட்சியும் அரசினர் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் நடுநிலை வகிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தத் தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன். (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்).

திரு. ஆ. கு. சுப்பையா : முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சி சார்பில் இருக்கக்கூடியவர்கள் நடுநிலைமை வகிக்கிறோம்.

திரு. ம. பொ. சிவஞானம் : நான் கொடுத்த திருத்தத் தீர்மானத்தில் கண்டுள்ளபடி ஐந்தாண்டு காலத்துக்குள் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாக்குவது குறித்து துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற திருத்தத்தை முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய திருத்தத்தில் சேர்த்துக் கொண்டிருப்பதாலும், ஆட்சிமொழிச் சட்டத்துடன் நிறை வேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் விளையும் தீங்கை அகற்றும் வழிகாணவும், மொழிப்பிரச்னை பற்றி ஆய்ந்தறியவும் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தி அதைப் பற்றி முடிவு காண வேண்டும் என்ற திருத்தத்தையும் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதால், நான் என்னுடைய திருத்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன், வற்புறுத்தவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய திருத்தத்தை வரவேற்கிறேன்.

DR. HABIBULLAH BAIG : I beg leave to withdraw my amendment in view of the amendment moved by the Hon. Chief Minister. I support the amendments of the Hon. Chief Minister.

திரு. கே. பி. எஸ். மணி : என்னுடைய திருத்தத்தை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால், முதல் அமைச்சர் அவர்களுடைய திருத்தத்தை நான் வரவேற் கிறேன்.

திரு. இசாம. அரங்கண்ணல் : நான் போலுக்கு பிரஸ் செய்ய வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தந்தக் கட்சியினர் அவரவர்களுடைய நிலைமையை விளக்கிவிட்டனர். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தத் தீர்மானங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆதரிக்கிறார் கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் நடுநிலை வகிப்பதாகவும், அதேபோல இடதுசாரி, வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியினர் நடு நிலை வகிப்பதாகவும், சுதந்திராக்கட்சியைச் சார்ந்த வர்கள் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும், ஏனையவர்கள் அவரவர்கள் குறிப்பிட்டபடி நடப்பதாகவும் தெளிவுபடுத்திவிட்டதால், வாக்கெடுப்பில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதாவது 'டிவிஷன்' எடுக்க வேண்டிய தேவை இப்பொழுது இல்லை. எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் கொண்டுவந்துள்ள கீழ்க் கண்ட திருத்தங்களை பேரவையின் குரல்வாயிலான வாக் கெடுப்புக்கு விடுகிறேன்.

1968 சனவரி 23] [பேரவைத் தலைவர்]

பேரவையின் முன் உள்ள கேள்வி :—

" தீர்மானத்தின் மூடிவில் கிழ்க்கண்ட சொற்கள் சேர்க்கப் பட வேண்டும் :—

'அத்தகைய ஆய்வுக்குப் பிறகு, கீழ்க்கண்டபடி பேரவை முடிவு செய்கிறது:—

பல்வேறு மொழி-பண்பாடு-நாகரீகங்களைக் கொண்ட இந்தியாவில், ஒரு வட்டார மொழியை மட்டும் ஆட்சி மொழி யாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சூலீத்து, ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமை கொள்ளச் செய்திடும் என்று உணரப்படுவதால்,

தமிழும், மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழி களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதுவரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு திருத்தப்படவேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது.

இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள மொழிச் சட்டம் இந்த இலட்சியத்துக்கு ஒத்ததாக அமையவில்லை என்று கருதுவதுடன், இந்தியா பிளவுபடவும் அரசாங்க நிர்வாகத்தில் இருப்பவர் களிடையே, வெறுப்பு, குழப்பம், வேதனைகள் மலிந்த இரு பிரிவு களை உண்டாக்கிடவும் வகை செய்கிறது என்று கருதுவதோடு, மூதலில் குறிப்பிட்ட மொழி உரிமை இலட்சியம் நிறைவேறுவதற் கான முறையில் தொடர்ந்து வலியுறுத்தி வருவது எனத் தீர்மானிக்கிறது.

மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அதிருப்தியையும் சங்கடத்தையும், புதிய பளுவையும் உண்டாக்குகிறபடியால், அந்தத் தீர்மானம் அமூலாக்கப்படக் கூடாது என்பதில் பல அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்து தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசு உடனடியாக அந்தத் தீர் மானத்தை நீக்கி வைத்து இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடமும், பளுவும் ஏற்படாத ஒரு முறையை வகுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது. மொழிப் பிரச்னைபற்றி அய்ந்தறியவும், மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் விளையும் தீங்கை அகற்றும் வழி காணவும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு மேல்மட்ட மாநாட்டை இந்தியப் போராசு கூட்டவேண்டும் என்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதியினருக்கு பளுவையும், சங்கடத்தையும் தரு வதுடன், மும்மொழித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று

[பேரவைத் தலைவர்] [1963 சனவரி 23

வலியுறுத்துவதன் மூலம் இந்தித் திணிப்பை நடத்தி, இறுதியில் இந்தியையே ஆட்சிமொழியாக ஆக்கிவிடுவது என்ற நோக்கத்துடன் அமைந்திருக்கிறது என்று இந்த மன்றம் கருதுகிறது.

மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.

மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல் படுத்த மறுக்கிற வகையிலும் தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும்,

தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழி களுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது.

என். சி. சி. முதலிய அணிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் இந்தி ஆணைச் சொற்களை நீக்கிவிடுவது என்றும், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்தால், என்.சி.சி. போன்ற அணிகளைக் கலைத்துவிடவும் இந்த மன்றம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாடமொழியாக வும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறை களிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற் கான தீரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது.

அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித்திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிற மொழிகளுக்கு கீழ் நிலை அளக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா இந்திய மொழி களுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில் திருத்தப்படவேண்டும்.

8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும், மத்திய அரசு சமமாக நிதி வசதிகளை வழங்க வேண்டும்.'

'ஆம்' என்பவர்கள் அதிகம் என்று கருதுகிறேன். மேற்கண்ட தீருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று அறிவிக் கிறேன். (பலத்த ஆரவாரம்).

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாக்கெடுப்பு நடக்கும் பொழுது பாயிண்டு அப் அர்டர் எழுப்ப முடியாது. மூன்று நேரங்களில் பாயிண்டு அப் அர்டர் எழுப்ப முடியாது. ஒன்று, வோட்டு எடுக்கப்படும் நேரத்தில், இரண்டு, பேரவைத் தலைவர் நின்றுகொண்டிருக்கும்பொழுது (when the speaker is on the feet) மூன்று, ஆளுநர் உரையாற்றும் போது பாயிண்டு

1968 சனவரி 23] [பேரவைத் தலைவர்]

ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது. ஆகவே, இந்த நேரத்தில் நடை முறைக்கேள்வி எழுப்ப முடியாது. வோட்டெடுப்பு முடிந்தவுடன் பாயிண்டு ஆப் ஆர்டர் இருந்தால் எழுப்பலாம். அதற்கு நேரம் தருகிறேன்; அதற்கு முன் பேரவையை ஒற்றிவைக்கிறேன் என்று சொல்லிவிடமாட்டேன்.

அடுத்து, மற்ற திருத்தங்களெல்லாம் ஒவ்வொன்றாக பேரவையின் வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

THIRU K. VINAYAKAM : Since it has been incorporated in the main motion, we do not press our amendment.

நாங்கள் வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் திரு. பி. ஜி. கருத்திருமன், திரு. கே. வினயகம் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தம் திரும்பப்பெற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : அரசினர் திருத்தங்கள் நிறை வேற்றப்பட்டுவிட்டதால், என்னுடைய திருத்தத்தை வற்புறுத்திப் பயனில்லை என்பதால் வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தம் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படுதப்படாமல் இருக்கும்பொழுது, பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும். வற்புறுத்தப் படவில்லை என்றாலும் அதுதான். பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும் என்றாலும் அதுதான்.

DR. H. V. HANDE : As we are fully satisfied with the assurances given by the Hon. Chief Minister, we do not press our amendments.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் வற்புறுத்தவில்லை என்று சொல்லுகிறார்கள். திரு. எ. ஆர். மாரி முத்து அவர்கள் வற்புறுத்தவில்லை. டாக்டர் றைபெல்லா பேத் அவர்கள் ஏற்கனவே வற்புறுத்தவில்லை என்று தெரிவித்துவிட்டார்கள். திருவாளர்கள் பூவராகன், மகாதேவன் பிள்ளை, மார்டின் அவர்களும் தங்களுடைய திருத்தத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை என்று நினைக்கிறேன். திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் அவர்களுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை என்று தெரிவித்துவிட்டார்கள். அடுத்து திரு. நல்லசிவம் அவர்களும், திரு. கே. பி. எஸ். மணி அவர்களும், திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் தங்களுடைய திருத்தங்களை வற்புறுத்தவில்லை என்று அறிவித்

[பேரவைத் தலைவர்] [1968 சனவரி 23

திருக்கிறார்கள். திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள் சுதந்திராக் கட்சியின் நிலையை ஏற்கனவே விளக்கியிருக்கிறார்கள்; மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய திருத்தங்களுக்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அவர்களும் திருத்தத்தை வற்புறுத்தவில்லை என்று தெரிகிறது.

ஆகவே, மற்றைய திருத்தங்களெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

இப்பொழுது மூலத்தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய திருத்தங்களுடன் சேர்த்து பேரவையின் வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

பேரவையின் முன்புள்ள கேள்வி :

"1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தையும், அதைச்சார்ந்த தீர்மானத்தையும் இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியதின் விளைவாக இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் நிலைமை குறித்து ஆய்வு செய்தல்வேண்டும்.

அத்தகைய ஆய்வுக்குப் பிறகு, கீழ்க்கண்டபடி பேரவை முடிவு செய்கிறது :—

பல்வேறு மொழி—பண்பாடு—நாகரீகங்களைக்கொண்ட இந்தியாவில், ஒரு வட்டார மொழியை மட்டும் ஆட்சி மொழியாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து, ஒரு மொழிப்பகுதி மற்ற மொழிப்பகுதிகளை அடிமை கொள்ளச் செய்திடும் என்று உணரப்படுவதால்,

தமிழும், மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதுவரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவு திருத்தப்படவேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது.

இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள மொழிச்சட்டம் இந்த இலட்சியத்துக்கு ஒத்ததாக அமையவில்லை என்று கருதுவதுடன், இந்தியா பிளவுபடவும் அரசாங்க நிர்வாகத்தில் இருப்பவர்களிடையே, வெறுப்பு, குழப்பம், வேதனைகள் மலிந்த இரு பிரிவுகளை உண்டாக்கிடவும் வகை செய்கிறது என்று கருதுவதோடு, முதலில் குறிப்பிட்ட மொழி உரிமை இலட்சியம் நிறைவேறுவதற்கான முறையில் தொடர்ந்து வலியுறுத்தி வருவது எனத் தீர்மானிக்கிறது.

1968 சனவரி 23] [பேரவைத் தலைவர்]

மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதியையும் சங்கடத்தையும், புதிய பளுவையும் உண்டாக்குகிறபடியால், அந்தத் தீர்மானம் அமுலாக்கப்படக்கூடாது என்பதில் பல அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்து தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசு உடனடியாக அந்தத் தீர்மானத்தை நீக்கிவைத்து இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடமும், பளுவும் ஏற்படாத ஒரு முறையை வகுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது. மொழிப் பிரச்னைபற்றி ஆய்ந்தறியவும், மொழிச்சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் விளையும் தீங்கை அகற்றும் வழிகாணவும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு மேல்மட்ட மாநாட்டை இந்தியப் பேரரசு கூட்டவேண்டும் என்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

மொழிச்சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதியினருக்கு பளுவையும், சங்கடத்தையும் தருவதுடன், மும்மொழித் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று வலியுறுத்துவதன் மூலம் இந்தித் திணிப்பை நடத்தி, இறுதியில் இந்தியையே ஆட்சி மொழியாக ஆக்கிவிடுவது என்ற நோக்கத்துடன் அமைந்திருக்கிறது என்று இந்த மன்றம் கருதுகிறது.

மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.

மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல் படுத்த மறுக்கிற வகையிலும் தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக்கிற முறையிலும்,

தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம் மன்றம் தீர்மானிக்கிறது.

என். சி. சி. முதலிய அணிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் இந்தி ஆணைச் சொற்களை நீக்கிவிடுவது என்றும், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்தால், என்.சி.சி. போன்ற அணிகளைக் கலைத்துவிடவும் இந்த மன்றம் தீர்மானிக்கிறது.

தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாடமொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது.

[பேரவைத் தலைவர்] [1968 ஜனவரி 23

அரசியல் சட்டத்தில் இந்திக்கு பிரத்தியேக அந்தஸ்து அளித் திருப்பது அகற்றப்பட்டு, நாட்டின் பிறமொழிகளுக்கு கீழ்நிலை அளிக்கும் ஷரத்துக்களெல்லாம், எல்லா இந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து நல்கும் வகையில் திருத்த படவேண்டும்.

8-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும், மத்திய அரசு சமமாக நிதி வசதிகளை வழங்க வேண்டும்."

மூலத்தீர்மானமும், இந்தத் திருத்தங்களும் சேர்ந்து நிறை வேற்றப்படவேண்டும் என்று ஆதரிப்பவர்கள் ஆம் என்று கூறவும்.

'ஆம்' என்பவர்கள் அதிகம் என்று நினைக்கிறேன். எனவே, மூலத் தீர்மானம், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தங்களுடன், நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று அறிவிக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்க ளுடைய கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் வாக்கெடுப் பிலேயிருந்து 'அப்ஸ்டைன்' செய்கிறோம். கலந்துகொள்ளப் போவதில்லை என்பதுதான் நிலை. நடுநிலை வகிக்கிறோம் என்று சொல்வது தவறு. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றுதான் தெரிவித்தோமே தவிர, இதில் எந்தக் கட்சியையும் சாராத ஒரு நிலையை, நடுநிலைமையை வகிக்கிறோம் என்று நாங்கள் சொல்லவில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஏற்கனவே நான் சொன்னபடி 'வி அப்ஸ்டைன் ஃப்ரம் வோட்டிங்'.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமமூர்த்தி தமிழில் சொன்னதை தாங்கள் ஆங்கிலத்தில், 'அப்ஸ்டைன் ஃப்ரம் வோட்டிங்' என்று சொல்கிறீர்கள். இரண்டும் ஒன்றுதான். வாக்கு அளிக்கும்பொழுது மூன்று வகையான நிலைகள் உண்டு. ஒன்று, தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிப்பது, இன்னொன்று எதிர்ப்புத் தெரிவிப்பது, மூன்றாவது, 'நியூட்ரல்', 'அப்ஸ்டைன்' அல்லது 'ரெஃப்ரைன் ஃப்ரம் வோட்டிங்' என்று சொல்வது. எல்லாம் நடு நிலையாக இருப்பதுதான்.

இரவு 7-00. இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் கூடுகின்ற நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை மீண்டும் கூடுகின்ற நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.